வழிப்

பாலகுமாரன்



ion

பப்ளிகேஷன்ஸ்

அந்த வேதனைதான் மிகப் பெரிய தண்டனை. அது வேறு தண்டனையும் கொண்டு வந்து கொடுக்கிறது. அமைதியாக நடைபெற வேண்டிய மரணம் அலறலாய் முடிகிறது.

இந்த நாவல் படிக்கிறபொழுதே இது நிஜமா என்ற கேள்வி வருகிறது. உங்கள் எல்லா நாவல்களிலும் எனக்கு அப்படித்தான் கேள்வி வரும். ஆனால், நான் அதற்கு பதில் தேடுவது கிடையாது. எங்கோ ஏதோ நடந்திருக்கும். நிச்சயமாக உங்களை பாதித்திருக்கும். அதுதான் நாவலாகப் பொங்கி வெளியே வந்திருக்கிறதென்று நானே பதில் சொல்லிக் கொள்வேன்.

இந்த இரண்டு நாவல்களும் இரண்டு அனுபவங்கள். உள்ளுக்குள்ளே என்னைப் பற்றி அசைபோட வைக்கும் செய்திகள். உற்சாகமான டானிக்குகள்.

என் குடும்பத்தை பேணிக் காப்பது மட்டுமல்லாது, என்னுடைய ஆழ்மனதில் பல்வேறு நல்ல விதைகளை விதைத்து வருவதற்கும் நான் மனமார நன்றி சொல்கிறேன். என் சிறிய குடும்பம் உங்கள் குடும்பத்தோடு நட்பாக இருப்பது மிகப்பெரிய பாக்கியம்.

உங்கள் அறுபதாம் கல்யாணத்தில் மொத்த சத்சங்கமும் தகதகவென்று, மகிழ்வோடு உட்கார்ந்திருந்தது உங்களை நாங்கள் கொண்டாடுவதற் குண்டான சாட்சி. நீங்கள் ஒரு நியாயவாதி. தர்மசிந்தனையாளர். சத்சங்கத்தி லுள்ள ஒவ்வொரு அங்கத்தினர்களையும் மிகப் பிரியமாக நடத்துகிறீர்கள். அவர்கள் மகுடிக்கு கட்டப்பட்ட நாகம் போல் உங்கள் அன்பில் மயங்கிக் கிடக்கிறார்கள். சத்சங்கம் மட்டுமல்ல உங்களைப் படிக்கின்ற அத்தனை வாசகர்களிடமும் நீங்கள் பிரியமாய் இருப்பதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன்.

உங்களைப் பற்றி உங்கள் வாழ்க்கையைப் பற்றி ஒரு நாவல் எழுத வேண்டும் என்பது என் அவா. ஆனால் இதை யார் எழுதுவது. நீங்கள்தான் எழுத வேண்டும். தயவு செய்து யோசியுங்களேன்.

என்றும் அன்புடன்,

இந்திரா பாஸ்கர்

வண்ணாரப்பேட்டை
சென்னை.
14.12.06



எழில்

வெள்ளை அட்டையை முன்னால் வைத்து கேமராவின் கூர்மையை அதிகப்படுத்தி ஒயிட் பேலன்ஸ் எனப்படுகின்ற நிதானத்தை கேமராவுக்கு ஏற்றி எழில் மெல்ல கேமராவை நாலு பக்கமும் சுழற்றி பார்வையிட்டான்.

இருள் இன்னும் பிரியவில்லை. சிறிது நேரத்தில் பிரிந்து விடும்.

நாதஸ்வரக்காரர்கள் மேடையில் உட்கார்ந்து விட்டார்கள். மிகக்குறைவான மனிதர்கள் கல்யாண மண்ட பத்தில் நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

அவன் உடம்பிலிருந்து சந்தன சோப் வாசனை வீசிற்று. இடுப்பு பெல்ட்டில் செல்போன் பௌச்சை மாட்டி, கேமரா மைக்குக்கு உண்டான ட்ரான்ஸ் மீட்டரை அதில் சொருகி, மறுபடியும் கேமராவைத் தோளில் பொருத்தி மேடைமீது ஏறினான். மேடையிலிருந்து அவன் முதலாளி மதுசூதன னைப் பார்த்தான். அவரை ஃபோகஸ் செய்தான். அவர் நிமிர்ந்து அவனைப் பார்த்தார். அவருடைய உதடு, முகவாய், மூக்கு எல்லாம் கேமராவில் பெரிதாய் தெரிந்தன. அதைச் சரியான அளவிற்குக் கொண்டு வந்தான். மார்பளவு புகைப்படம் போல மதுசூதனன் உட்கார்ந்திருந்தார்.

"என்னடா காலங்கார்த்தால என் மூஞ்சியைப் படம் பிடிச்சுகிட்டிருக்கற..."

மைக்கில் முணுமுணுப்பாய் கேட்டார்.

''இங்கேயிருந்து பார்த்தா நல்லாயிருக்கீங்க ஸார். உங்களுக்கு என்ன ஸார் வயசு.''

''ஹா... என் வயசு கேட்கறியா. என் பொண்டாட்டி வயசை சொன்னாலும் சொல்லுவேனே தவிர, என் வயசை சொல்ல மாட்டேன். உன்னால் கண்டுபிடிக்கவும் முடியாது.'' என்று உரத்த குரலில் சொல்ல, அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

''கேமராவுல எதுவோ பார்த்துகிட்டே சிரிக்கறாங்கப்பா.''

பந்தலுக்கு சிறுசிறு அலங்கார மின்விளக்குகள் போடுகின்ற இரண்டு பேர் அவனைப் பார்த்து வியப்போடு பேசினார்கள்.

''கேமராவுல பார்த்து சிரிக்கலைண்ணா, காதுல கேட்டு சிரிக்கறேன்.''

அவன் காதில் மாட்டிக் கொண்டிருந்த ஹெட்போனைத் தட்டிக் காண்பித்தான்.

அவர்கள் அருகே வந்து ஆவலோடு பேசினார்கள்.

''இந்த ஒயர் வந்து எங்க போகுது.''

''இது ஒயர் இல்ல. ஒயர்லெஸ்.''

''அப்படின்னா...''

''இதுக்கு ஒயர் வேணாம். முதுகுல ஒண்ணு மாட்டிகிட்டிருக்கேன் பாருங்க. இதுதான் டிரான்ஸ் மீட்டர். இது வழியா அவரு பேசறது கேட்கும்.''

''எவரு பேசறது.''

''அதோ அங்க இருக்காரே.''

அவன் தொலைவில் இருக்கிற மதுசூதனனைக் காண்பித்தான்.

மதுசூதனன் சகல பேச்சுக்களையும் கேட்டு விட்டு அவர்களைப் பார்த்துக் கையசைத்தார்.

அவர்கள் வியப்போடு பார்த்தார்கள்.

''ஆனா, கேமராவுக்கு மட்டும் ஒயர் வேணுமா. அங்கங்க ஒயர் போட்டிருக்கீங்களே.''

''கேமரா ஒயர் இல்லாம எப்படி ஆபரேட் ஆகும். மின்சாரம் வேணுமில்ல.''

''பேட்டரியில் போகாதுங்களா.''

''போகும். பத்து நிமிஷம், பதினஞ்சு நிமிஷம் போகும். அப்புறம் அடங்கிடும். கல்யாணத்துல வந்து அந்த மாதிரி ரிஸ்க் எடுத்துக்க முடியுமா. அதனாலதான் குறுக்கவும் நெடுக்குமா ஒயர் போட்டு கேமராவுல பிக்ஸ் பண்ணிடறேன்.''

''ஆறு மணி நேரம் தாங்கும் ஏழு மணி நேரம் தாங்கும்னு பேட்டரி இருக்கே. அந்த மாதிரி பேட்டரி போட முடியாதுங்களா.''

''இருக்குங்க பேட்டரி. அதை என் முதுகு தூக்காது. தூக்கறதுக்கு மூணு பேர் வேணும்.''

''ஆமாம்.. ஆமாம்... அது லாரி பேட்டரி. அது பெருசு.''

அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

''நீங்க பார்க்கறீங்களே கேமரா. அது வழியா நான் பார்க்கட்டுங்களா.''

''பாரேன்.'' அவன் சட்டென்று பூவின் இதழைப் பிரிப்பது போல் கேமராவின் ஒரு பகுதியைப் பிரித்துக் காட்டினான்.

உள்ளங்கை அளவு ஒரு சின்ன ஸ்க்ரீன் அதில் தெரிந்தது. அவன் பார்க்கிற விஷயங்கள் அதில் தெரிந்தன.

''அடடே... கண் வச்சு பார்க்காத. இப்படி வெளிய நின்னும் பார்க்கலாமா.''

''ஆமாம். உன்னையே நீயும் பார்க்கலாம்.''

''எப்படிங்க.''

''எதிர போய் நில்லு.''

அவன் எதிரே நின்று கொண்டான்.

அந்தப் பூ மடல் அவனை நோக்கித் திரும்பியது. கேமரா அவனைப் படம் பிடித்தது. அந்த பூ மடலில் அவன் முகம் சிரித்தது. அவன் சிரித்தான். அதுவும் சிரித்தது. அவன் இன்னும் சிரித்தான். அது அதிகம் சிரித்தது. அவன் வாய் விட்டுச் சிரித்தான். தன்னையே தன் முகத்தையே ஒரு கேமராவில் பார்த்துக் கொண்டிருப்பது மிகமிக சந்தோஷ மான விஷயமாக இருந்தது.

''எழில் போறும். வேலையிருக்கு.'' மதுசூதனன் முணுமுணுத்தார்.

அவன் சட்டென்று மடலைத் திருப்பி மூடினான். கேமரா வைத் திசை திருப்பினான்.

அமைதியாய் இருந்த அக்னி குண்டத்தை, பின்னாலிருந்த வெங்கடாஜலபதி, அலமேலு மங்கைத் தாயார் படத்தை, பூக்கள் தொங்குகிற கூடையை, ஹாலின் பிரமாண்டத்தைக் காட்ட ஹாலையெல்லாம் சுற்றி வந்தான்.

யாரோ காரிலிருந்து இறங்கினார்கள். ஒரு குழந்தையை இறக்கி விட்டார்கள். மூன்று வயதுக் குழந்தை பச்சைப் பாவாடையுடன், அரக்குக் கலர் சட்டையுடன் ஆண்டாள் கொண்டையும், கை நிறைய வளையலும், முகம் முழுவதும் சிரிப்புமாய், இரண்டு நாற்காலிகளுக்கு நடுவே தடதட வென்று ஓடிவந்தது.

''டேய்... எழில் என்னா அவுட் ஆஃப் போகஸாவே அந்தக் குழந்தைய ஃபாலோ பண்ற.''

மதுசூதனன் கேட்டார்.

''இல்லையே ஸார். போகஸ்லதானே இருக்கு.''

இவன் சட்டென்று மடல் பிரித்து அந்த ஸ்கிரீனில் அந்தக் குழந்தை வருவதைப் பார்த்தான்.

ஃபோகஸ் துல்லியமாக இருந்தது.

''இல்லைடா.. அவுட் ஆஃப் போகஸ் இருக்கு.''

''ஸார். போன தடவையும் இப்படிச் சொன்னீங்க. இன்னிக்கும் இப்படிச் சொல்றீங்க.'' கனெக்ஷன்ல ஏதாவது தப்பு இருக்கா.''

''இல்லை. கண்ணுல தப்பு இருக்கும்னு நினைக்கிறேன்.''

''உங்க கண்ணுதானே. உங்களுக்கு வயசாயிடுச்சு ஸார்.''

''இல்லை கண்ணா. உன் கண்ணுல ஃபோகஸ்னு வைக்கற அது அவுட் ஆஃப் போகஸ்ல இருக்கு. நான் ஏற்கெனவே கண்ணாடி போட்டிருக்கேன். அதனால எந்தப் தப்பும் வராது. உன் கண்ணை நீ செக் பண்ணனும்டா கண்ணு.''

''ஏன் ஸார் பயமுறுத்தறீங்க.''

அவன் மறுபடியும் இணைப்புகளைச் சரிபார்த்து ஃபோக ஸைத் துல்லியமாக வைத்தான்.

''இப்போ எப்படி ஸார் இருக்கு.''

''கொஞ்சம்... கொஞ்சம் பிசிறு அடிக்குது.''

''ஸார். இப்போ எப்படி ஸார் இருக்கு.''

அவன் மறுபடியும் ஃபோகஸை மாற்றினான்.

''இப்போ கரெக்ட்டா இருக்கு.''

''ஸாரி ஸார். எனக்கு கொஞ்சம் க்ளார் அடிக்குது. நான் இந்த க்ளாரையே வச்சு ஆப்ரேட் பண்றேன். ரொம்ப அவுட் ஆஃப் போகஸா எடுத்தா கஸ்டமர் திட்டப்போறாங்க.''

''இல்லைடா நீ க்ளோஸ் ஸ்டேஜ்ல ஓர்க் பண்ணு. அப்போ தப்பு தெரியாது. நீ லாங் ஷாட் எடுக்கற போதுதான் அவுட் ஆஃப் போகஸ் ஆகுது. அப்படியே வெங்கடாஜலபதி கிட்ட போ.''

அவன் திரும்பினான்.

"அப்படியே கீழ இறங்கு. அந்த ஹோம குண்டம் பாரு. மணைப்பலகை பாரு. அப்படியே ஒரு யூ டேர்ன் எடு ஃபர்ஸ்ட் ரோவுக்கு போ. நாற்காலி பாரு. செகண்ட் ரோவுக்குப் போ. மூணாவது ரோவுக்குப் பா. நாலு போ.. அஞ்சு... அவுட் ஆஃப் போகஸ் லாங் ஷாட் போகும்போது அவுட் ஆஃப் போகஸ் ஆகுது. உன் கண்ணை நீ பார்க்கணும். க்ளோஸ் ரேஞ்ஜ்லயே ஓர்க் பண்ணு. மேடையை விட்டுக் கீழ இறங்காத. உன்னைக் கொண்டு போய் கூட்டத்துக்கு நடுவுல உட்கார வச்சா சொதப்பிடுவ. மேடையிலேயே இரு."

"அங்க புகை பொசபொசன்னு முட்டுது ஸார்."

"அதைப் பார்த்தா முடியுமா. ஆடவந்துட்டோம். கூடம் கோணல்னா விடுவாங்களா. ஆடத்தான் சொல்லுவாங்க. அதனால மேடையிலேயே ஆடறா கண்ணு."

தோளிலிருந்து கேமராவை மெல்ல இறக்கி கையில் பை தூக்குவதுபோல வைத்துக் கொண்டான்.

மதுசூதனன் வாசலில் இருக்கின்ற கேமராமேனோடு மல்லாடிக் கொண்டிருப்பது தெரிந்தது.

இன்னொரு கேமராமேன் கூடத்திற்கு நடுவே வந்த வர்களைப் படம் எடுத்துக் கொண்டிருப்பான்.

அவன் இன்னும் வரவில்லை. வரும் நேரம்தான்.

நேற்று இரவு இதே திருமண ஹாலில் எல்லாம் முடித்து பூட்டி விட்டுப் படுக்க பதினொன்றரை மணி ஆகிவிட்டது. அவர்களுக்கென்று கொடுக்கப்பட்டிருந்த அறையில்போய் அவர்கள் தங்கிக் கொண்டார்கள். மதுசூதனன் உட்பட நாலு பேரும் ஒடுங்கிக் கொண்டார்கள். மதுசூதனன் கட்டிலில் படுத்துக்கொள்ள, மற்ற மூன்று பேரும் தலையணை வாங்கி தரையில் படுத்துக் கொண்டார்கள்.

காலையில் எழுந்து முகம் கழுவி, காபி குடித்து, ஒவ்வொருவராய் குளித்து ஆறு மணிக்கு விடியும் நேரத்தில் ஹாலுக்கு வந்துவிட்டார்கள். பெட்டிகளைத் திறந்து மடமடவென்று ஒயர்களை இழுத்து நாலாபுறமும் பரப்பி மிக்ஸரிலிருந்து மூன்று கேமராக்களுக்கும் கனெக்ஷன் கொடுத்தார்கள்.

கேமராவில் இருக்கின்ற மைக் சரியாக இருக்கிறதா என்று பேசிப் பார்த்துக் கொண்டார்கள். அதைத்தவிர காதுக்கு இயர்போன் பொருத்தி வாய்க்கு சிறிய மைக் வைத்து மதுசூதனனோடு அல்லது மிக்ஸரை யார் வைத்து இயக்கு கிறார்களோ, அவர்களோடு எல்லா வசதிகளையும் செய்து கொண்டார்கள்.

காமிராவுக்கு ஒயிட் பேலன்ஸ் பார்த்துக் கொண் டார்கள்.

இனி ஒவ்வொருவராகப் போய் சாப்பிட்டு வரலாம். மிக்ஸரில் யாராவது உட்கார்ந்தால், மதுசூதனனோடு சாப்பிடப் போகலாம்.

அவன் கேமராவில் கையை வைத்தபடியே மதுசூதன னைப் பார்த்தான். இரண்டாவது கேமராவுக்கு அவர் கனெக்ஷன் பற்றிய குறிப்புகளைக் கொடுத்துக் கொண் டிருந்தார். மைக் சரி செய்து கொண்டிருந்தார்.

மதுசூதனனுக்கு மந்தைவெளியில் மிகப்பெரிய கடை இருக்கிறது. ஒரேயொரு கேமராவில் ஆரம்பித்த கடை இன்று இருபது கேமராக்களும் ஏழெட்டு மிக்ஸர்களும், இரண்டு எடிட்டிங் டேபிள்களும் இருக்கின்றன. இருபத்து மூன்று பேர் வேலை செய்கிறார்கள். மதுசூதனன் இப்படி கல்யாணக்கூடத்திற்கு வந்துவிட்டால், அவர் மனைவி கடையைப் பார்த்துக் கொள்வார். வேறொரு உறவுக்காரப் பெண் ஸ்டோர்ஸைக் கவனித்துக் கொள்வார்.

அடித்தட்டிலிருந்து மேலே வந்ததால் மதுசூதனன் அலட்டல் இல்லாமல் நிதானமாய் வேலை வாங்குவார். தவறு செய்தால் அமைதியாய்க் கண்டிப்பார். தொடர்ந்து தவறு செய்தால் எனக்கு நீ சரிப்பட மாட்ட கண்ணா.. போயிட்டு வா என்று அழகாகக் கழட்டிவிட்டு விடுவார். வேற இடத்துல வேலை வாங்கித்தரேன். அங்க போய்க்கோ. அவன் நல்லா வச்சுப்பான் உன்னை என்று சரியான முரட்டு ஆளிடம் அவனை அனுப்பிவிடுவார். இங்க இவரைப் புரிந்து கொண்டு இவரோடு ஒட்டிக் கொண்டவர்கள் அழகாக மேலே வந்துவிடுகிறார்கள்.

"ஒரு வருஷம் ஓயர் தூக்கு. கேமராவைக் கையில் வச்சுக்கோ. ஃபோகஸ் பண்ணாத. ஒரு வருஷம் இதுல என்னா பண்றோம்னு புரிஞ்சு போயிடுச்சுன்னா மெல்ல மெல்ல உனக்கு கேமரா தரேன். கேமராமேன் ஆகறதுக்கு படிப்பு வேணாம்டா. நீ எத்தனாவது படிச்சுருக்க.."

"அஞ்சாங் க்ளாஸ் ஸார்."

"அதிகம். ரொம்ப அதிகம். அஞ்சாங் க்ளாஸ் படிச்சா என்னை மிரட்டுவியே." என்று அவனிடம் சொல்ல, அவன் வெட்கப்பட்டு சிரிப்பான். சுற்றியுள்ளவர்கள் வாய்விட்டுச் சிரிப்பார்கள். அவன் சந்தேகமாக அவரைப் பார்ப்பான்.

"இல்லைடா. அஞ்சாங் க்ளாஸ் போறும். கொஞ்சம் கொஞ்சம் இருக்கற இங்கிலீஷ் வார்த்தைங்க தானா கத்துப்ப. ஜூம் பேக்னா என்ன."

கிராமத்திலிருந்து வந்து மலங்க மலங்க முழித்துக் கொண்டிருக்கிற ஒரு பையனை அவர் தேர்வுக்காகப் பேசினார்.

"பேக்னா இது." என்று அவன் பின் பக்கத்தைத் தட்டிக் காட்டினான்.

"அப்படியா... அப்படின்னா இதுக்கு என்ன சொல்லுவ."

அடி வயிற்றைக் குத்தினார்.

அவன் பொத்திக் கொண்டு இன்னும் பெரிதாக விழித்தான்.

கூடியிருந்த கூட்டம் வாய்விட்டு அலறலாய் சிரித்தது.

"இந்தக் கேமரா இப்படிப் போறது ஜூம். இப்படி வரது பேக்."

கையை முன்னுக்கும், பின்னுக்கும் கொண்டு போய் காட்டினார்.

"இது பேன் லெஃப்ட். பேன்னா என்ன."

"மின் விசிறி."

"அது ஃபேன். நான் சொல்றது பேன்."

மதுசூதனன் மனைவிக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. அவள் சுவரிலும், மேஜையிலும் முட்டிக்கொண்டு சிரித்தாள்.

"சிரிக்காதம்மா. அவன் கேட்ட கேள்விக்கு பட்பட்டுன்னு பதில் சொல்றான். தப்பா பதில் சொன்னாலும் பதில் சொல்லணும்னு சொல்றான். எனக்கு அது ரொம்ப பிடிச்சுருக்கு. தெரிஞ்சாப்போல அழுத்தமா இல்லாத ஒப்பனா இருக்கான். இவனுக்குச் சொல்லிக் கொடுத்துடலாம்."

அவன் தோளில் கை வைத்துப் பாராட்டினார்.

"பேன் என்றால் திருப்பு. பேன் லெஃப்ட் இடப்புறம் திருப்பு. பேன் ரைட். வலப்புறம் திருப்பு. எது ரைட். எது லெஃப்ட்."

அவன் மிகச்சரியாகத் தவறாய்க் காட்டினான்.

மறுபடியும் கூட்டம் சிரித்தது.

"ரைட்டுன்னா சோத்துக்கை. லெஃப்ட்டுன்னா பீச்சாங்கை. பீச்சாங்கைன்னா என்ன."

"தெரியாது ஸார்."

"ஆமா. இவன் நாட்டுப்புறத்தான். இவனுக்கு பீச்சாங்கைன்னா தெரியாது. ரைட்டுன்னா வலது கை. லெஃப்ட்

டுன்னா இடது கை. பேன் லெஃப்ட் அப்படின்னா எப்படித் திரும்புவ.'' அவன் இடப்புறம் திரும்பினான்.

''பேன் ரைட்.''

அவன் வலதுபுறம் திரும்பினான்.

பேன் லெஃப்ட்.

''ஒரு பத்து தடவை பண்ணு.''

இடதும் வலதும் திரும்பிக் கொண்டேயிருந்தான்.

''சத்தம் போட்டுச் சொல்லு. பேன் லெஃப்ட்.''

''பேன் லெஃப்ட்.''

இடதுபுறம் திரும்பினான்.

''பேன் ரைட்.''

அவன் சொல்லியபடியே வலதுபுறம் திரும்பினான்.

அப்படியே போ'' என்று சொல்ல அவன் உரக்கச் சொல்லிக் கொண்டே பேன் லெஃப்ட், பேன் ரைட் என்று இடதும் வலதும் சுற்றிக் கொண்டிருந்தான்.

கூடியிருந்த கும்பல் இப்போது கதறலாய்ச் சிரித்தது.

ஆனால், மதுசூதனன் சிரிக்காமல் இருந்தார். மதுசூதனன் சிரிக்காமல் இருப்பதைப் பார்த்து, அந்தப் பையனும் சிரிக்காமல் இருந்தான்.

''இவன் மரியாதையான பையன். இத்தினி பேர் சிரிச்சும் கேலி பண்றீங்கன்னு தெரிஞ்சும் அவன் இடதும், வலதும் திரும்பறத நிறுத்தலை. டேய்... இந்த மரியாதை போறும்டா, நான் உனக்கு வேலை கத்துக் கொடுத்துடறேன். என்னை விட்டு ரெண்டு வருஷத்துக்குப் போவாத. உனக்கு என்ன சம்பளம் வேணும்.''

அவனைப் பார்த்துக் கேட்டார்.

இது அடுத்த பொறி. என்ன பதில் சொல்லப் போகிறான் என்று எல்லோரும் ஆவலாகக் காத்திருந்தார்கள்.

''எனக்கு பசி பொறுக்காது ஸார்.''

அவன் அடிக்குரலில் தழுதழுப்பாய் பேச ஆரம்பித்தான்.

''பசி வந்ததுன்னா திருடறதோ. அடிதடி ரகளையோ நான் பண்ணிடறேன் ஸார். அப்படித்தான் சில விஷயங்கள் பண்ணிட்டேன். அதனாலதான் எங்க ஊர்லேர்ந்து என்னைத் துரத்திட்டாங்க. எனக்குக் காலையில் எழுந்த வுடனே பசிக்குது ஸார். மத்தியானம் பசிக்குது ஸார். இந்த ரெண்டு வேளையும் சாப்பிட்டேன்னாக்கா நைட் ஒண்ணுமே இல்லாத தண்ணி குடிச்சு கூட நான் படுத்துக்கு வேன் ஸார்.''

''சம்பளம் எவ்ளோடா.''

''சாப்பாடு போடுங்க ஸார் போதும்.''

''காலையில் சாப்பிட்டியா.''

''இல்லை ஸார். டீ தான் குடிச்சேன்.''

''நேத்து சாப்பிட்டியா.''

''இல்லை ஸார். தண்ணிதான் குடிச்சேன்.''

சட்டென்று எல்லார் சிரிப்பும் அங்கே அடங்கிப் போயிற்று.

வறுமை என்பதை மனிதர்களில் பலர் வெவ்வேறு கால கட்டங்களில், வெவ்வேறு விதமாய் உணர்ந்துதான் இருக் கிறார்கள். வறுமை என்றால் என்ன என்று தெரியாதவர் மிகச் சிலரே. வறுமையை அனுபவித்திராதபோதும், வறுமை யைப் பார்த்துத் தெரிந்து கொண்டிருப்பவர்கள் உலகத்தில் பலபேர் உண்டு.

ஆனால், அந்தக் கடையில் சகலருக்கும் வறுமை பற்றி தெள்ளத் தெளிவாகத் தெரிந்திருந்தது. உடனடியாக அவனுக்கு உணவு கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் எல்லோர் மனதிலும் எழுந்திருந்தது. எல்லோருடைய உடல் அசைவும், பரபரப்பும் அதை வெளிக்காட்டின. ஒரு கணம்

அந்தப் பரபரப்பை ரசித்துவிட்டு தான் ரசிப்பதை எழிலுக்கு சட்டென்று கண்கள் மூலம் மதுசூதனன் காட்டினார். எழிலும் புரிந்து கொண்டான்.

"எழில், எல்லோருக்கும் டீ சொல்லுப்பா. நண்பர் பேர் சொல்லி நாமெல்லாம் டீ சாப்பிடலாம்."

"ஸார் அவர் டிபன் சாப்பிடலேன்னு சொன்னாரு."

"எடுத்தவுடனேயே அவனுக்கு டிபன் கொடுத்தா நல்லாயிருக்காது. டீ குடிச்சு கொஞ்சம் பசி ஆறின பிறகு டிபன் சாப்பிடட்டும். அப்போதான் உடம்புல ஒட்டும். எடுத்தவுடனேயே இட்லியும், தோசையும் போட்டா கொஞ்சம் எதுக்களிக்கும். அவர் பேச சகலரும் பார்வையால் மதுசூதனனைப் பாராட்டினார்கள்.

"நீ ஆந்திராகாரனா."

"ஆந்திரா இல்லை ஸார். தமிழ்நாடுதான். உப்பரப்பள்ளி ஒரு சின்ன கிராமம் ஸார். ஆந்திரா பார்டர்ல."

"உப்பரப்பள்ளியில் உனக்கு என்ன வேலை."

"ஒரு வேலையும் இல்ல ஸார்"

"உங்க ஐயாவுக்கு என்ன வேலை."

"விவசாயம்தான் ஸார்."

"என்ன விவசாயம்."

"நெல்லு, கரும்பு, தோட்டப்பயிரு."

"தோட்டப்பயிருன்னா."

"எல்லாந்தான் ஸார்."

"யப்பா.. எனக்கு விவசாயம் தெரியாது. தோட்டப் பயிருன்னா என்னான்னு சொல்லு."

"ஒரு கிணறு சுத்தி நாலு ஏக்கர் இருக்கு ஸார். ஒரு கால் ஏக்கர்ல கத்தரிக்காய் போட்டிருக்கோம். கொஞ்சம் வெண்டைக்காய் போட்டிருக்கோம். கொஞ்சம் தள்ளி மல்லிச் செடி போட்டிருக்கோம். கொஞ்சம் தக்காளி போட்டிருக்கோம். பூசணி போட்டு காய் அறுத்திருக்கோம். இன்னும் ஒரு ஏக்கர் தர்ப்பீஸ் மட்டுமே போட்டிருக்கோம்."

"ஏங்க.. ஏங்க.. இவன் உங்களைவிட பணக்காரங்க."

யாரோ ஒரு பையன் மதுசூதனனைப் பார்த்துக் கூவினார்.

மதுசூதனன் திகைத்துப் போனார்.

"ஏண்டா நாயே, சாப்பாட்டுக்கு இல்லைன்னு சொல்ற நீ. ஏழைன்னு நினைச்சேன். இவ்ளோ பெரிய நிலப்பரப்பை வச்சுகிட்டு இங்க ஏண்டா ஓடிவந்த."

"சண்டை போட்டுட்டு வந்துட்டேங்க."

"என்ன சண்டை யாரோ சண்டை."

"அம்மாவோட சண்டை."

"எதனால."

"வீட்ல துட்டு திருடிட்டேன். எதிர வரும்போது அம்மா செருப்பால் அடிச்சிட்டாங்க. எழுந்து அம்மாவை ரெண்டு அறைவிட்டேன். கீழ விழுந்துடுச்சி. அப்படியே ஓடியாந்துட்டேன்."

"என்னடா இவன் கொலைகாரனா இருப்பான் போலிருக்கு."

"இப்போ அங்க எப்படியிருக்கா அம்மா."

"அப்புறம் போன் பண்ணி கேட்டேன். அம்மா நல்லாயிருக்காங்க. ஒண்ணும் ஆவலை."

"பின்ன ஏன் ஓடிவந்த."

"சும்மா, அங்க ஒரே போரடிக்குது. விவசாயம் பண்றதுக்கு எனக்கு இஷ்டமில்ல. மெட்ராஸ் போனா எதுனா பிழைச்சுக்கலாம் அப்படின்னு வந்தேன்."

"இவனை எனக்குப் புரிய வைங்க."

மதுசூதனன் ஒரு கூவலாய் பேசினார்.

"எனக்குப் புரியுது."

மதுசூதனின் மனைவி நிதானமாய் பதில் சொன்னாள்.

"என்ன"

"அவனுக்கு இடுப்புல அரை டிராயரோட மண்ணு கொத்தி அழுக்குல, சேத்துல, வெயில்ல வேலை செய்ய முடியலை. தளுக்கா ஏ.சி. ரூம்ல வெள்ளை சட்டை போட்டுகிட்டு வெள்ளை பேண்ட் போட்டுகிட்டு லட்ச லட்சம் சம்பாதிக்கணும். சினிமாவுல எத்தினி பேர் எப்படி சம்பாதிக்கறாங்க. சினிமாவுல யாராவது விவசாயம் பண்றாங்களா, கல்லு உடைக்கிறாங்களா அப்படியே உடைச்சாலும் அடுத்த அரை மணி நேரத்துல பெரிய பணக்காரனாயிடலையா. இவனுக்கும் அதான் ஆசை."

"அது மட்டுமில்லைங்க."

வேறொரு பையன் முன் வந்து பேசினான்.

இந்த மாதிரி கிராமத்துப் பசங்களுக்கெல்லாம் அவங்க ஊர் பொண்ணுங்கள பிடிக்கலை. சினிமா பார்த்துட்டு அதுல வந்து இருக்கற பொண்ணு மாதிரி பட்டணத்துலதான் இருக்கும் அப்படின்னு அவங்களுக்குள்ள பேசிகிட்டு பட்டணத்துல போய் வாழறது நல்லதுன்னு வந்துட்டாங்க. அங்க கருப்பா வத்தக்குச்சியா பொண்ணுங்க இருக்கும். மெட்ராஸ்ல இங்கிலீஷ்ல பேசிகிட்டு தலை விரிச்சுகிட்டு, சுடிதார்ல, பேண்ட்ல நிறைய பொண்ணுங்க இருக்கும். ஹான்னு வேடிக்கை பார்த்துகிட்டு இருக்கலாமே. அந்த மாதிரி ஆசையும் இருக்கும்.

"ஏண்டா... அப்படியா."

மதுசூதனன் அதட்டினார்.

அவன் சற்று யோசித்தான். ஆமாம் என்று மெல்ல தலையசைத்தான்.

அந்தக் கும்பல் கை தட்டி வாய்விட்டுச் சிரித்தது.

"ஒண்ணு புரியுதுப்பா. பட்டணத்துல இருக்கறவனெல்லாம் வெகுளி. நாட்டுப்புறத்துல இருக்கறவனெல்லாம் என்னத்த சொல்றது. கேட்கக் கேட்க ஒவ்வொன்னா எடுத்து விடறான். கண்ணுக்கு எட்டின வரைக்கும் வயல், விவசாயம் வச்சுகிட்டு, பட்டணத்துல வந்து பிச்சை எடுத்துக்கிட்டிருக்கான். கிரித்துருவம்னு சொல்வாங்களே அது இதுதான்."

மதுசூதனன் வியப்பு குறையாத வகையில் பேசினார்.

"இல்லை ஸார். நீங்க தப்பு. இவன் கிரித்துருவமெல்லாம் இல்லை. கிராமத்துல சுறுசுறுப்பா வேகமா இருக்கறவனுக்கு வாழ்க்கை ரொம்ப அயர்ச்சியா இருக்கும். பன்னெண்டு மணி நேரத்தை எப்படித் தள்றதுன்னு தெரியாம தவிப்பான். எத்தனை, நேரம் மண்ணுகொத்திகிட்டே இருக்கறது. எத்தனை நேரம் தண்ணி ஊத்திகிட்டே இருக்கறது அதுக்கொரு அமைதி வேணும். அந்த அமைதியில்லாமல் அடுத்தது அடுத்ததுன்னு வேகமா வேலை செய்யணும்னு நினைச்சாக்க அவனுக்கு கிராமம் சரிப்படாது. இவன் சுறுசுறுப்பான பையன் ஸார். வேகமான பையன். இவனுக்கு கிராமம் சரிப்படலை. இவனுடைய வேகத்துக்கு பட்டணம்தான் ரைட். அதுதான் ஓடிவந்துட்டான்."

"கரெக்ட்டுங்க. சரியா என்னைக் கண்டுபிடிச்சிட்டீங்க."

அவன் உற்சாகமாக எழிலைப் பார்த்துக் கூவினான்.

"வேலை இருக்குங்க. இல்லைன்னு சொல்லலை. ஆனா அந்த வேலை செய்யறதுக்கு ஒண்ணும் புத்திசாலித்தனம் தேவையில்லை. நாலு ஏக்கரும் குத்தி களைப்பிடுங்கணும்னா ரெண்டு மணி நேரத்துல பண்ணிடலாம். நாலு ஏக்கர் மடை திறந்து தண்ணிப் பாய்ச்சணும்னா ஒரு மணி நேரத்துல பண்ணிடலாம். காலையில் எழுந்து காய்கறி பறிச்சுடலாம். மூணு பேர் வயல்ல இறங்கினோம்னா முக்கா மணி

நேரத்துல எல்லாக் காயும் பறிச்சு கொண்டு வந்துடலாம். நான் பட்டணத்துக்கு வர ஆசைப்பட்டதுல இன்னொரு காரணம் இருக்குங்க. இங்க கத்திரிக்காய் கிலோ எட்டு ரூபா. அங்க எங்ககிட்ட ரெண்டு ரூபாய்க்கு வாங்கறான். தர்ப்பீஸ் ஒரு பீஸ் ஒரு ரூபா. அங்க மொத்தப்பழமுமே அஞ்சு ரூபா. அஞ்சு ரூபாய்க்கு பழம் வாழ்கிட்டு வந்து பதினஞ்சு பீஸ் போட்டு பத்து ரூபா லாபம் சம்பாதிக்கறான்.''

''அது இல்லைடா. அது நாலு கை மாறி வரது. உனக்குத் தெரியாது. நாட்டுப்புறத்தை விட்டு வந்தது தப்புடா. திருப்பி போயிடு அங்க.''

''இல்லைங்க நான் போகமாட்டேன்.''

''அது இருக்கட்டும். இவனை வச்சுகிட்டு என்ன பண்ணப்போறீங்க. இவன் சரிப்படுவானா. இவங்கிட்ட ஒரு முரட்டுத்தனம் இருக்கும். கடப்பாரையை எடுத்து ஓங்கி குத்தற வேகமிருக்கு. நம்ம கேமராவுக்கும், மிக்ஸருக்கும், லைட்டுக்கும், உயரத்துக்கும் இவன் சரிப்படுவானா. இடிச்சுட்டான்னாக்க நாப்பதாயிரம், அம்பதாயிரம் டக்குனு போயிடும்.''

''அப்படி இல்லைங்க. உடனே கேமரால்லாம் கொடுக் காதீங்க. எல்லாத்தையும் தூக்கிட்டு வர வேலை கொடுங்க. பொட்டிய தலையில் வச்சு எடுத்துட்டு வரேன். வேன் லேர்ந்து சாமானை இறக்கறேன். சாமானைத் திருப்பி கொண்டு வந்து அடுக்கி வைக்கறேன். நான் சரின்னு பிறகு நீங்க எனக்கு கேமராவைக் கொடுங்க. எனக்கு இந்த இடம் பிடிச்சுருக்குங்க. ஐயாவை ரொம்பப் பிடிச்சுருக்கு. இந்த அண்ணன் எனக்கு வேலை சொல்லித் தருவாருங்க. நான் இப்ப சொல்றேன்.''

அவன் எழிலை நோக்கிக் கை காட்டினான்.

அவர்கள் எல்லோரும் வியப்போடு அவனைப் பார்த்தார்கள்.

''எப்படி இவ்ளோ அழுத்தம் திருத்தமா சொல்ற.''

''நான் உள்ளுக்குள்ள வலது காலை வச்சபோது பல்லி கத்துச்சு. பல்லி கிழக்கால இருந்தது. பல்லி கிழக்கால இருந்து கத்தினா ஜெயம். வடக்க கத்துனா வாழ்வு. மேற்க கத்தினா நாசம். தெற்க கத்தினா மரணம். அதுவும் தவிர..'' அவன் நிறுத்தினான்.

''என்னா சொல்லு.. அதுவும் தவிர..''

மதுசூதனனின் மனைவி அவன் வாயைக் கிளறினாள்.

''இந்த அண்ணனை ராத்திரி கனவுல பார்த்துட்டேன். கனவுல பார்த்த ஆளே நேரா வந்திருக்காரேன்னு அதிசயமா நிக்கறேன். எனக்கு அப்படித் தோணுங்க.''

''போச்சுய்யா... அடுத்த பீலா விட ஆரம்பிச்சுட் டாம்ப்பா. ப்பா... பெரிய திருடனா இருப்பான் போலிருக்கு.''

''நான் மறுபடியும் சொல்றேன். பட்டணத்துல இருக்கறவ னெல்லாம் வெகுளி. நாட்டுப்புறத்துல இருக்கறவ னெல்லாம்...'' மதுசூதனன் கத்தினார்.

''வேணாம்யா. அப்படிச் சொல்லாதீங்க. நான் ஒண்ணும் கெட்ட எண்ணத்துல இந்த இடத்துல நுழையலை. என் மேல சாமி வருங்கய்யா. எங்க ஊர் முத்தாரம்மன் வந்து உட்கார்ந்துக்கும். நான் கொஞ்சம் அசந்து தூங்கிட்டிருக்கும் போது தான் முத்தாரம்மன் தொட்டு எழுப்பிச்சு. இங்க உட்கார்ந்து என்ன பண்ற. பட்டணத்துக்குப் போடான்னு சொல்லிச்சு. அதான் அம்மாகிட்டேயிருந்து துட்டு திருடி எடுத்துட்டு வந்துட்டேன்.''

''இவனை எவ்ளோ தூரம் நம்பறதுன்னு தெரியலை. எப்படி பேசினாலும் ஒரு கதை சொல்றான் பார்.''

அவனை ஆவலோடு மதுசூதனன் பார்த்தார். டீ வந்தது.

''எனக்கு இரண்டு டீ கொடுங்க.''

அவன் கெஞ்சலாகக் கேட்டான்.

"ஏண்டா."

"ரொம்ப பசிக்குது."

"டிபன் சாப்பிடலாண்டா."

"இருக்கட்டுங்க. எனக்கு ரொம்ப பசிக்குது. ரெண்டு டீ குடிச்சுட்டு நான் நல்லா டிபன் சாப்பிடுவேங்க. நான் நல்லா செய்யற வேலையே டிபன் சாப்பிடறதுதான். சாப்பாடுகூட எனக்கு பிடிக்கலைங்க. இட்லின்னா நான் பன்னெண்டு இட்லி சாப்பிடுவேன்."

அவன் குணவானா, கோமாளியா ஒன்றும் புரியவில்லை. டிபன் சாப்பிட்டுவிட்டு பாக்கியைக் கொண்டு வா என்று சொன்னபோது, அவன் பத்து ரூபாய் ஐம்பது பைசா என்று பாக்கி கொண்டு வந்து கொடுத்தான். மிச்சம் முழுவதும் டிபன் சாப்பிட்டுவிட்டேன் என்று சொன்னான்.

"பொய் சொல்லாத.."

"சோத்து மேல சத்தியமா சொல்றேன். பசி தாங்கலை. நல்லா சாப்பிட்டேன். ரொம்ப நன்றி ஐயா."

"மூப்பத்தொன்பது ரூபா அம்பது பைசான்னு இப்படி டிபன் சாப்பிட்டா கட்டுப்படி ஆவாது."

"இன்னிக்கு ஒருநாள்தான்யா. டிபனும் நல்லாயிருந்தது. எனக்கும் பசியா ஒரு கட்டு கட்டிட்டேன்."

அவன் பெயர் கேட்டபோது தமிழ்வளவன் என்று அவன் சொல்ல எல்லோர் முகமும் மெல்ல மலர்ந்தது.

"நல்லாயிருக்கே பேரு. உங்கம்மாவா வச்சாங்க."

"இல்லை. எங்க பள்ளிக்கூட வாத்தியாரு. எனக்கு முன்னாடி ரெண்டு பேர் செத்துப் போனதுனால வீட்டுல எனக்கு குப்பைன்னு பேர் வச்சாங்க. பள்ளிக்கூடத்துல போய் குப்பைன்னுதான் சொன்னாங்க. ஆனா, வாத்தியார்

தான் அப்படியெல்லாம் பேர் வைக்காதீங்கன்னு சொல்லி, தமிழ்வளவன்னு மாத்திட்டாரு."

"நீ வளவன் தான். ஏன் சொல்லு. உனக்கு வளவன்னு பேரு."

"தெரியலையே."

"வளவளவளன்னு பேசற இல்லை. அதனால உனக்கு வளவன்னு பேரு."

மறுபடியும் கூட்டம் மதுசூதனன் பேச்சுக்குச் சிரித்தது.

அவனும் சிரித்தான்.

என்ன கேலி செய்தாலும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள எவரால் முடிகிறதோ அவரால் எளிதில் ஜெயிக்க முடியும்.

அந்தத் தமிழ்வளவன் டிபன் சாப்பிட அடுக்களைக்குப் போயிருக்கான். அவன்தான் எழிலுக்குப் பின்னால் மின்சார கேபிள்களைத் தூக்கிக் கொண்டு வரவேண்டும். அதன்மீது யாரும் இடித்துவிடாதபடி பாதுகாப்பாக இருக்க வேண்டும். வளவன் வராமல் வேலை ஆரம்பிப்பது நல்லதல்ல. வளவன் வந்தால்தான் மனம் நிம்மதியாக கேமராவுக்குள் ஊடுருவிப் பார்க்கும். இல்லையெனில் பின்னால் சற்று நிழலாடினும் திடுக்கிடும். ஒரு கேமராமேனின் கவலை இது. அவன் பின்னால் அவனுக்கு நம்பிக்கையான ஆள் ஒருவர் நிச்சயம் இருக்க வேண்டும். பின்னால் ஒரு கண்ணும், முன்னால் ஒரு கண்ணும் யாராலும் இருக்க முடியாது. கவனம் முழுவதும் வியூபைண்டரில் அல்லது சிறிய உள்ளங்கை ஸ்க்ரீனில் இருக்கும். உருவங்களின் மீது பதிந்திருக்கும்போது அவருடைய நகர்வை இன்னொருவர் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும். தமிழ்வளவன் மிக நன்றாகக் கவனித்துக் கொள்வான்.

அண்ணே லெப்ட்ல போவாதீங்க. தாம்பாளத்துல மஞ்ச அரைச்சு வச்சுருக்காங்க என்று எச்சரிப்பான். சிலசமயம் திடீ

ரென்று சம்பவ இடத்தில் வேகமாக நகர வேண்டியிருக்கும். அதனால் அவனுக்குப் பின்னால் இருக்கின்ற தமிழ்வளவன் கையில் மூன்று சுருள் அளவுக்கு ஒயர் சுருட்டி வைக்கப் பட்டிருக்கும். அந்தச் சுருள் பிரியப் பிரிய மறுபடியும் அதை அவன் அதிகப் படுத்துவான். தோளும், கையும் வலிக்கும் போது, ஒருமுறை பார்த்தால்போதும் சட்டென்று கை நீட்டி கருவியை வாங்கிக் கொள்வான். கருவியை வாங்கிய யாருக்கும் தானும் தோளில் வைத்துக் கொண்டு ஃவியூ பைண்டரில் பார்க்க வேண்டும் என்று தோன்றும். ஆனால், மதுசூதனனுக்கு அது பிடிக்காது.

பரதநாட்டியத்திற்கு காலில் சலங்கை கட்டுவதற்கு முன்பு சலங்கை பூஜை செய்வது என்பதுபோல, அரங்கேற்றம் என்று ஒன்று நடத்துவது போல, இந்த விஷயத்திற்கும் ஒரு மரியாதையான ஆரம்பம் இருக்க வேண்டுமென்று மதுசூதனன் விரும்புவார்.

''பொண்ணு பார்க்கறதுக்கு கூப்டா அவகன்னத்துல முத்தம் கொடுத்துடுவியா. அறிவுகெட்ட முண்டம். உனக்கு கல்யாணம் ஆனபிறகு முத்தம் கொடு. புரியுதா. எப்போ வந்து கேமராவைத் தோள்ல தூக்குன்னு சொல்றனோ அப்போ வந்து வியூஃபைண்டர்ல பாரு. கல்யாணம் பண்ற துக்கு முன்னால கன்னத்துல முத்தம் கொடுத்தா உனக்கும் மரியாதை இல்லை. அந்த பொண்ணுக்கும் மரியாதை இல்லை. கீழ வைடா கேமராவை'' என்று வேகமாக அதட்டுவார்.

தமிழ்வளவன் வரும்வரையில் இங்கு எந்த வேலையும் இல்லை. ஆனாலும், நிகழ்ச்சிகள் இப்பொழுது ஆரம்பிப்ப தாகவும் தெரியவில்லை.

வாசல் பக்கத்தில் பசவராஜ் கேமராவோடும், உதவியாள ரோடும் நிலை நின்று விட்டான்.

இரண்டு கல்யாண மண்டபங்கள் அருகருகே இருந்தன. எதிரே ஸ்டேடியம் இருந்தது. கல்யாண மண்டபங்களைச் சுற்றி நிறுத்த கார்பார்க்கிங் வசதி இருந்தது. மிகமிகப் பணக்காரர்களாக இருந்தாலொழிய இந்தக் கல்யாண மண்டபத்தில் கல்யாணம் செய்ய முடியாது. ஒரே நேரத்தில் நானூறு, ஐநூறு பேர் சாப்பிடக்கூடிய பெரிய டைனிங் ஹாலும் ஐநூறு பேர் உட்காரக்கூடிய மிகப்பெரிய மணி மண்டபமும் இருக்கின்றன. உள்ளே குளுகுளுவென்று காற்று வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மண்ட பத்திற்கு வரவேண்டிய வழிநடை அகலமாக இருக்கிறது. மிக உயர்ந்த கூரை. தூண்களில்லாத மண்டபம். சமையல் வாசனை ஹாலுக்கு வராது, ஹாலின் கூச்சல் சமைலறையில் கேட்காது. அது தவிர மண்டபத்தைச்சுற்றி பல அறைகள் மாடியில் இருந்தன. எல்லா அறைகளும் குளிரூட்டப் பட்டிருந்தன. அப்படிக் குளிரூட்டப்பட்டிருந்ததாலேயே நேற்று இரவு நிம்மதியாகத் தூங்க முடிந்தது. வெந்நீரில் குளித்துவிட்டு தலைவாரி புதிய உடை உடுத்திக் கொள்ளும் போது சந்தோஷமாக இருந்தது.

அது அந்தணர்கள் வீட்டுக் கல்யாணம், அதுவும் பணக் கார அந்தணர்கள் போலிருக்கிறது. மலையாளத்து வாடை பேச்சில் அதிகமிருந்தது.

சிவந்த தோலும் உயரமும், அகலமுமான பெண்கள் அதிகம் இருந்தார்கள். வேகமாக ஆங்கிலத்தில் பேசிக் கொண்டார்கள். கொஞ்சம் கொஞ்சம் கொஞ்சம் தமிழில் பேசினார்கள். ஹிந்திகூட அவர்களுக்கு சரளமாக வந்தது.

''அவா பாம்பேலேர்ந்து வரணுமோன்னோ. அவாளுக்கு ஒரு ரூம் போட்ருங்கோ ப்ளீஸ்'' என்று உரத்த குரலில் பேசி தங்கள் வாழ்க்கை இந்த தென்னிந்தியாவோடு எந்த சம்மந்த மும் இல்லாதது என்பதுபோல் வெளிப்படுத்தினார்கள்.

''ஏன் மெட்ராஸ்ல வெயில் இவ்ளோ தகிக்கிறது. பாம்பேல இந்நேரத்துல என்ன மழை பெய்யும் தெரியுமா.''

நேற்று மாப்பிள்ளை அழைப்பு முழுக்க இப்படி விதம் விதமான பேச்சுக்களையும் பெண்களையும் படம் பிடித்துத் தீர்த்தான். சினிமாவில் டான்ஸ் ஆடுகிற பெண்ணைப் பார்த்து எழிலுக்கு ஒரு வியப்பு வரும்.

எல்லோரும் அழகாக இருக்கிறார்களே எப்படி? ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு ஹீரோயின் அல்லவா.. ஏன் ஹீரோயினாக இல்லாமல் நடனமாடிக் கொண்டிருக் கிறாள். எத்தனை நாள் நடனமாடுவாள். அதற்குப் பிறகு யாரை திருமணம் செய்து கொள்வாள். எப்படிக் குடித்தனம் செய்வாள் என்றெல்லாம் அவர்களைப் பற்றி வியந்து வியந்து யோசித்திருக்கிறான்.

அந்த நடன பெண்களைப் போல சில சமயம் அவர்களை விடவும் அதிக கம்பீரமான ஒரு முகத்தோற்றத்தோடும், உடையோடும் இந்தக் கல்யாணத்தில் பெண்கள் இருந் தார்கள். நேற்று புடவை உடுத்தியவர்கள் மிகக் குறைவு. டீ ஷர்ட்டும், ஜீன்ஸ் பேண்ட்டும், சுடிதாரும், மிகவும் வேறு ஏதோ வினோதமான உடைகளுமாய் பெண்கள் வலம் வந்தார்கள். உடம்பு முழுவதும் ஜிகினா தைத்து, பாவாடை யும், சோளியும் மேலே ஒரு தொங்குகின்ற துணியுமாய் சுற்றித் திரிந்தார்கள்.

''இந்தப் பொண்ணு தாவணிபோட மறந்துடுச்சா இல்ல. இப்படித்தானா.''

''இதுக்கு பேரு சோக்ராடா.''

ஓயர்லெஸ்ஸில் மதுசூதனன் பதில் சொன்னார்.

''வடக்க டில்லி, பாம்பேல எல்லாம் இது ரொம்ப பிரபல்யம். நம்மூர்ல அவ்ளோவா வரலை. ஆனா, இப்போ வந்துடுச்சி. அதுக்காக இடுப்பையே ஃபோகஸ் பண்ணாத. இடம் மாத்து.''

அந்தப் பெண்ணிலிருந்து கவர்ச்சி பிதுங்கித் தெறித்தது. அவன் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளைப் பார்க்கும்போதும் எண்ணம் தோன்றியது.

இவளை யார் திருமணம் செய்து கொள்வான். எப்படிக் குடித்தனம் செய்வாள். சமைப்பாளா பெருக்குவாளா. வீடு துடைப்பாளா. குழந்தைகளைக் குளிப்பாட்டுவாளா. இல்லை, வீட்டிலும் இப்படியே வலம் வந்து கொண்டிருப் பாளா. கோதுமை மாவில் செய்த பொம்மை போல என்ன நிறம். உதட்டில் ரசம் ஊறும் கனிவு. கண்களில் ஒரு அலை யல். கன்னத்தில் ஒரு செழுமை. கழுத்தில் ஒரு வழவழப்பு. கூந்தலில் ஒரு அலட்சியம் உடம்பு முழுவதும் அழகின் ததும்பல்.

அவள் இடுப்பை எல்லோரும் பார்க்கிறார்கள். என்று அவளுக்குப் புரிந்து போயிருக்க வேண்டும். எப்பொழுதுமே அவள் கை தூக்கியோ இடுப்பசைத்தோ நின்று கொண்டிருந் தாள். ஆண்களைக் கூச்சமின்றி தொட்டாள். உரசினாள். கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டாள்.

''தமிழ் இங்க ஒரு ஐயிட்டம் பார்.'' என்று திரும்பிப் பார்க்கும்போது தமிழ் அங்கு இல்லை. அவனுக்கு பக்கென்று இருந்தது.

''ஸார். தமிழ் எங்க போயிட்டான்.''

மைக்கில் மதுசூதனனிடம் விசாரித்தான்.

''எங்கிட்ட சொல்லிட்டுத்தாண்டா போனான். ரூமுக்குப் போய் கைகால் கழுவிட்டு வரேன்னுதான் போனான்.''

''எங்கிட்ட சொல்லிட்டுப் போகக்கூடாது'' வேகமாக எழில் பேசினான்.

''நீ ஒண்ணும் நகர வேணாமே. ஒரே பொளிஷன்தானே. அதனாலதான் நான் போயிட்டு வாடான்னு சொல்லிட் டேன்.''

பின்னால் ஆள் இல்லாததால் இன்னும் கவனமாக இருக்க வேண்டுமென்று அவன் புத்தியைத் தயார் செய்து கொள்ளும் நேரத்தில் தமிழ்வளவன் அருகே வந்துவிட்டான்.

"மயிரு. போகும்போது சொல்லிட்டுப் போக வேண்டியதுதானே."

எழில் தமிழைத் திட்டியது மதுசூதனனுக்கும் கேட்டது.

"விடுடா. வேலைய கவனிங்கடா."

மதுசூதனன் சொன்னார்.

"நீங்க சும்மாயிருங்க ஸார். அவருகிட்ட பர்மிஷன் கேட்டு போயிடுவியா. அப்போ நான் என்ன புடுங்கறதுக்கா இருக்கேன். எங்கனா தப்பா காலை வச்சு விழுந்தேன்னாக்க என்னை வேலையை விட்டு வெளியே அனுப்பிடுவாரு. அப்புறம் உள்ள புகுந்துடலாமான்னு பார்க்கறயா. நான் இங்க இல்லைன்னா நீயும் இங்க இருக்க மாட்ட. ஞாபகம் வச்சுக்கோ."

சீறலாய்ப் பேச, தமிழ் எந்தவித முகமாறுதலும் காட்டாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு மெல்லச் சிரித்தான்.

"கருப்பு பனியன் போட்டுகிட்டு ஒரு பாப்பா இருந்தது இல்ல. அதை மேல ஒரு பையன் தள்ளிகிட்டுப் போனான். என்னாதான் பண்றாங்கன்னு போய்ப் பார்த்தேன். ஒருத்தரை ஒருத்தர் துண்றாங்கண்ணா."

"என்னாது. என்னா சொல்ற."

கேமாரவை மூடி மைக் மட்டும் ஒப்பன் செய்து அவனுக் கருகே கேமராவை வைக்கும்போது, இதைச் சொன்னான். இந்தப் பேச்சு மதுசூதனனுக்கும் கேட்டது.

"ராஸ்கல். வயித்த வலிக்குது. போயிட்டு வந்துட றேன்னா. இப்போ வேற கதை சொல்றான் பார்த்தியா."

அவர் குரல் ஹெட்போனில் கேட்டது. எழிலுக்குக் கேட்ட குரல் தமிழுக்குக் கேட்கவில்லை.

"அந்தப் பொண்ணு என்ன கேட்குது தெரியுமா. என்னைக் கல்யாணம் பண்ணிக்கறியா. என்னைக் கல்யாணம் பண்ணிக்கறியான்னு கேட்குது. அவன் காரியத்துலயே கண்ணா இருக்கறான். நம்ம ரூம் சுத்தி பால்கனி போகுது. பால்கனி அங்க டொக்கா முடியுது. அங்க போயிட்டாங்க. நான் என்ன பண்ணேன். ரூமுக்கு போய் ஸ்டூல் போட்டு வென்ட்டிலேட்டர் வழியா பார்த்தேன். கையத் தூக்கச் சொல்லி பனியனை கழட்டிட்டாம்ப்பா. ஜீன்ஸ் பேண்ட்டும், வெறும் மாருமா நிக்குது செத்துட்டேன் போயேன்."

"எழில் அவனைத் தலையில் அடிச்சு வெளிய அனுப்புடா."

மதுசூதனன் அவன் பேசுவதைக் கேட்டுவிட்டுக் கத்தினார்.

ஆனால், அவர் கத்துவது தமிழுக்குக் கேட்கவில்லை.

"ஏன், எழிலு இந்தப் பொண்ணுங்களெல்லாம் உன்னைத் தொந்தரவு பண்ணலை. நமக்கெல்லாம் இவங்க கிடைக்கவே மாட்டாங்களா அப்படின்னு தோணலை. எனக்கு ரொம்பத் தோணுதுப்பா. என்னாடா இது ஏன் இப்படியே இருக்கறோம்னு தோணுது."

எழில் அவனுக்குப் பதில் சொல்லவில்லை.

கேமராவை மடக்கி வைத்திருந்தான்.

மதுசூதனன் கோபித்துக் கொள்வார். எனவே, சட்டென்று மூடியைக் கழற்றி தோளில் போட்டு வருவோர், போவோரை படம் எடுக்க ஆரம்பித்துவிட்டான்.

"இதோ பார். ஒரு அன்னபட்சி வருது பார்."

பட்டுப்புடவையில் முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி படியேறுவதுகூடத் தெரியாமல் காற்றில் நழுவுவது போல நடந்து வந்தாள். அந்தப் பட்டுப்புடவை சற்று அகலமாக அவளைச் சுற்றியிருந்தது. அவள் கால்களின் இயக்கம் தெரியாமல் இருந்தது. முகத்தில் ஒரு மந்தகாசமான சிரிப்பு இருந்தது. பலபெண்கள் தலையை விரித்துப் போட்டிருக்க. இவர் போனிடைல் போல கட்டியிருந்தாள். கை வைத்த ஜாக்கெட். கணுக்கையிலிருந்து நாலு அங்குலத்திற்கு தங்க வளையல் பெரிய தங்கஹாரம். உதட்டில் அழுத்தமான கலரில் சாயம். மணமகளுக்கு எதிரே வந்து நிற்க, அவன் அவளையே பல கோணங்களில் படம் பிடித்துத் தீர்த்தான்.

எல்லோரையும் ஒட்டு மொத்தமாகப் பிடித்து அந்தப் பெண்ணுக்குப் போய் நின்றான். அந்தப் பெண் மணமகளை முத்தமிட, ''உதடு குவிக்கும்போது சட்டென்று ஜூம் பேக் செய்து அவர்கள் இருவரையும் அழகாகக் காட்டினான்.

அந்தப்பெண் மெல்லிய முத்தமொன்றை அந்த கன்னத்தில் வைத்து, அவள் தலையைத் தடவி ஆசீர்வதித்தாள். சற்று முன்னேறி மாப்பிள்ளையின் கையைப் பிடித்துக் குலுக்கி மெல்ல தன் முகத்தை அவர் முகத்தோடு வைத்துக் கொண்டு மெல்ல முணுமுணுப்பாக ஏதோ சொன்னாள். மாப்பிள்ளை நன்றியோடு தலையசைத்தான்.

அவள் நகர்ந்து மாப்பிள்ளைக்கு அருகே நெருக்கமாக நின்று கொண்டாள். அவளுக்குப் பின்னால் தம்பிபோல வந்தவன் மணமகளுக்கு அருகே நின்று கொண்டான். கேமராக்கள் கண் சிமிட்டின. அந்த நான்கு பேரையும் நேராகவும், சற்று பக்கவாட்டாகவும் படம் பிடித்தான். மறுபடியும் கைகுலுக்கி விலகிப் போகும்போது மெல்ல அவளின் நடையைப் பின் தொடர்ந்து அவள் முதுகையும் படம் பிடித்தான்.

''இன்னொரு புறா வருது பார்.'' என்று சொல்ல இப் பொழுது சாம்பல் உடையில் ஒரு பெண் நடந்து வந்தாள். இடுப்பு, மார்பின் ஒரு பகுதி எல்லாம் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

''எனக்கு வேணாம். நான் நாட்டுப்புறத்துக்கே போறேன்.'' என்று தமிழ் முணுமுணுத்தான்.

நேற்று அரற்றிய அரட்டல் இன்று அதிகமாகி ஒரு பெண்ணைப் பின் தொடர வைத்துவிட்டது. எதையோ பார்த்துவிட்டு வந்து இன்னும் பிதற்றத் துவங்கிவிட்டது.

தமிழ் சொல்கிற பெண் எதுவென்று எழிலுக்கு ஞாபகம் இருந்தது. சட்டென்று மனசுக்குள் அந்தப் பெண் டீ ஷர்ட்டை அவிழ்த்துவிட்டு வெறும் மார்பும் ஜீன்ஸுமாய் நிற்பது கற்பனையில் உதித்தது. கைகள் மெல்ல நடுங்கின.

''ஃபோகஸ்... ஃபோகஸ்..'' மதுசூதனன் மிக்ஸரிலிருந்து கத்தினார்.

சட்டென்று அவன் மனதைத் திடப்படுத்தி ஃபோகஸைச் சரி செய்தான்.

இவன் பேச்சைக் கேட்கக்கூடாது. கேட்டா உருப்பட முடியாது. இந்த வேலையைச் சரியா செய்ய முடியாது. எவளோ, எவனுக்கோ, எங்கயோ, என்னமோ கொடுத்துட்டுப் போறா. எனக்கென்ன? என் வேலை இது. இந்த கேமரா, ஐயருங்க உட்கார்ந்துட்டாங்க.

அந்த அம்மாளுக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். ஆனாலும் அழகாக இருக்கிறாள். எழுந்து நின்று அவன் அவளை படம் பிடிப்பதையே பார்த்துச் சிரித்தாள்.

''என்னையா பிடிக்கற. நான் வரேனா.'' என்று ஆசை பொங்கக் கேட்டாள்.

நேர் எதிரே டி.வியில பாருங்க மாமி என்று சொல்லி விட்டு, அவளை டைட் க்ளோஸப்பில் காண்பிக்க, அவள் முகம் எல்லா டி.விகளிலும் பிரகாசமாகச் சிரித்தது.

''ஐயோ... ரொம்ப நன்னாயிருக்கேனே.'' என்று அவள் தன்னைப் பார்த்துப் பரவசப்பட்டாள். வெட்கப்பட்டாள். விலகி ஓடினாள்.

நேரம் ஏற ஏற விஷயங்கள் வேகமாக நடந்தன.

பிள்ளையும் அவர் தகப்பனும் அமர்ந்து கொள்ள, விரதம் என்கிற ஒரு நிகழ்வு நடந்தது.

மதுசூதனன் ஒரு அந்தணர். இந்த விஷயங்களை அவனுக்குச் சொல்லிக் கொடுத்திருந்தார். இந்தத் திருமணம் நடத்தி முடிக்காமல் நான் போக மாட்டேன் என்று தெய்வத்தின் பெயரால், அக்னியின் பெயரால், பஞ்சபூதங்களின் பெயரால், நான் சத்தியம் செய்கிறேன் என்று மணமகனின் தகப்பனாரும், மணமகனும் சத்தியம் செய்கிறார்கள். மணமகனின் தாய் உடன் இருக்கிறாள்.

மனையில் உட்கார்ந்து கையில் தர்ப்பையோடு மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தவர்களை அருகே படம் பிடிக்க மண்டி போட்டு உட்கார்ந்திருந்தான். மணமகளின் முகத்தையும் அவர் தகப்பனார் முகத்தையும் ஜூம் செய்து பதிவு செய்து கொண்டான்.

இப்போ எழுந்திரு. ஷேக் பண்ணாத எழுந்திரு. அவர்கள் எழுந்திருக்கும்போது அவனும் நிதானமாக ஒரு க்ரேன் மேலே தூக்குவது போல பிசிறின்றி எழுந்திருந்தான். மணமகன் மேல்துண்டு விரித்து அட்சதை வேண்டி நிற்க, சுற்றியுள்ள அந்தணர்கள் அட்சதை பொழிய அதையும் படம் பிடித்துக் கொண்டான்.

''ஆச்சு. நீங்க போகலாம். பொண்ணு அழைச்சுண்டு வாங்கோ. புடவை ஒதி விட்டுறேன்.'' என்று தலைமை அந்தணர் சொல்ல அந்த இடம் பரபரத்தது.

மணமகன் வலதுபக்க அறைக்குள் நுழைய, ''எழில் நீ போய் இடதுபக்கம் ஒரு அறை இருக்கு பார். அங்கே போய் நின்னுக்க. அந்தக் கதவைத் திறந்து பொண்ணு வருவோ. அப்படியே எடுத்துட்டு வா. நான் அதுக்குள்ள கூட்டத்தைப் படம் பிடிக்கறேன். கூட்டம் வர ஆரம்பிச்சுடுச்சு'' என்று மதுசூதனன் உத்தரவிட்டார்.

அவன் விளக்கை அணைத்துவிட்டு இடது பக்க கதவுப் பக்கம் போனான். மணமகள் வருகைக்காக தயாராகக் காத்திருந்தான். கதவுத்தாழ் திறக்கும் ஓசை கேட்டது. விளக்கைத் திருப்பி குமிழை அழுத்தினான். வெளிச்சம் பரவியது. கதவு திறந்தது. இரண்டு பெண்கள் வெளியே வர மணமகள் முதல்தரமான பட்டுப்புடவையில் இடுப்பில் ஒட்டியாணம் அணிந்து தலை நிறையப் பூ வோடும், நகைகளோடும் வெளியே வந்தாள். பேரழகியாக இருந்தாள்.

கேமரா அவளைப் படம் பிடிக்கிறது என்று தெரிந்த வுடன் வெட்கப்பட்டு நாணமாகச் சிரித்தாள்.

அவன் லென்ஸை நகர்த்தி அவள் முகம் மட்டும் இருக்கும்படி படம் பிடித்தான். இந்த முறை விழி நிமிர்ந்து அவள் கேமராவைப் பார்த்தாள். மறுபடியும் க்ளுக் என்று சிரித்தாள். கடைசி அருமையாக வந்தது.

''ஸார் ரெக்கார்ட் பண்றீங்களா.'' அவன் கேட்டான்.

''பண்றேன். பண்றேன் ரொம்ப நல்லாயிருக்கு. அப்படியே ரெண்டு மூணு ஆங்கிள் எடு.''

அவன் மெல்ல பின்புறம் நகர்ந்து அவள் போவதற்கு வழிவிட்டான். அவள் அவனைக் கடந்து தலைகுனிந்து போனாள். அவனும் அவளைப் பின் தொடர்ந்தான். அவள் நின்றாள் அவனும் நின்றான். அவள் சபையைச் சுற்றி வந்து ஓரிடத்தில் நின்று கைகூப்பினாள். அவன் தொலைவாக நின்று அவளை அருகாமையில் படம் பிடித்தான். விழுந்து

வணங்கினாள். அவன் ஜூம் பேக் செய்து ஒட்டு மொத்த சபையையும் படம் பிடித்துக் கொண்டான்.

அவளுடைய தோழிகள் மேடைக்கு ஓடி வந்து அவளைக் கட்டிக்கொள்ள அவளும் தழுவிக் கொண்டாள்.

"இப்போதெல்லாம் கட்டிக்கலாம். கொஞ்சலாம். மடிசார் வாங்கின பிறகு யாரையும் ஜாஸ்தி தொடப்படாது. சரியா." என்று தலைமை வைதிகர் சொல்ல, அவள் சரியென்று தலையாட்டினாள். வந்த பெண்கள் விலகி ஓடினார்கள்.

மெல்ல மெல்ல கூட்டம் அதிகரித்தது. பசவராஜ் வந்தவர்களைப் படம் பிடித்து தள்ளிக் கொண்டிருப்பது அவர்கள் பேச்சிலிருந்து தெரிந்தது. பசவராஜோடு அவர் பேசுவதும் எழிலுக்கு காதில் விழுந்தது. இப்பொழுது வழிநடையில் ஒரு காமிராவும் தயாராகி விட்டது. கேமரா மதுசூதனனுக்கு அருகே இணைப்பு கொடுக்கப்பட்டது தயாராக இருந்தது. ஆனால், அதை இயக்க வேண்டிய சரவணன் வேறொரு கேமராவை எடுத்துக் கொண்டு நகர்ந்திருந்தான். பேட்டரி மாட்டி கேமராவை இயக்கினான்.

இவ்வளவு தூரம் மின் இணைப்பு போகாது என்பதால் அதற்காக தனியான ஒரு கேமராவும், தனியான பேட்டரி இணைப்பும் இருக்கின்றன. நூற்றைம்பது பேருக்கு மேல் உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிய வர அவனை அங்கே அனுப்பி படம் பிடித்துவரச் சொன்னார்கள். சம்மந்தி வரிசை என்று தனியான ஒரு வரிசை சாப்பிட்டுக் கொண்டிருந்ததை அவன் படம் பிடித்தான். கேமராவை அணைத்துவிட்டு காலைச் சிற்றுண்டியையும் முடித்துவிட்டான். மாடிப்படி ஏறி வந்து கொண்டிருக்கிறான்.

மாடியில் பெண்ணுக்கு கூரைப்புடவை ஓதி கொடுத்து விட்டார்கள். மகனை மட்டுமல்லாது பிள்ளையைப் பெற்றவர்கள் நாற்பத்தோரு சவரன் நகை கொடுக்கிறார்கள்.

அந்த நகைகளைப் படம்பிடிக்க வேண்டுமென்று ஆசைப் பட்டார்கள். மணமகளைச்சுற்றி எல்லா நகைகளையும் திறந்து வைத்து தாலிக்கொடி உட்பட வீடியோ எடுக்கச் சொன்னார்கள்.

பெரிய உடம்பும், சிறிய கண்களுமாய் மாப்பிள்ளையின் தாயார் பெண்ணுக்கு அருகில் உட்கார்ந்து "க்ளோஸப்ல எடுப்பா. க்ளோஸப்ல எடுப்பா." என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

அவன் வியப்போடு அந்த அம்மாளைப் பார்த்தான். மறுகணம் சுதாரித்துக் கொண்டான்.

இந்த மாதிரி சினிமா வார்த்தைகள், கேமரா சங்கேதங்கள் இப்போது எல்லோருக்கும் தெரிந்து விட்டன. க்ளோஸப் என்ற வார்த்தையை எழிலரசன் பட்டணத்திற்கு வந்த பிறகு தான் கற்றான். அந்த அம்மாள் எப்படி யாரிடம் கற்றாள் என்று தெரியவில்லை. அவளைக் க்ளோஸப்பில் வைத்து அங்கிருந்து மெல்ல மணமகளோடு சேர்ந்து சிறிது நேரம் தாமதித்து பிறகு ஒட்டு மொத்தமாய் அந்த இடம் முழுவதையும் படம் பிடித்தான்.

மண்டபத்தில் கெட்டி மேளம் முழங்கியது. மணமகன் மேடையில் காலடி எடுத்து வைத்ததும் சபையை நமஸ்கரித்து விட்டு உட்கார்ந்து கொண்டார். அவருக்கு துண்டு போர்த்திக் கொள்ள சொல்லித் தரப்பட்டது.

இப்போது என்ன செய்யப் போகிறார்கள்.

கடைசி கோடியில் உட்கார்ந்திருந்த ஒரு அந்தணரை அவன் காதோரம் கேட்டான்.

"மாப்பிள்ளை ஹோமம் பண்ணப் போறார். அக்னி மூலமா தேவர்களை நமஸ்கரிக்கிற மந்திரங்கள் சொல்லி நானும் என் பொண்டாட்டியும் சௌக்கியமா இருக்கணும். என் குடும்பம் விருத்தி அடையணும். என் உற்றார் உற

வினர்கள் நன்னா இருக்கணும்னு வேண்டிக்கப் போறா. இது ஒரு ப்ரேயர்.''

அந்த அந்தணர் அலுவலகத்தில் வேலை செய்பவர் போலிருக்கிறது. இப்படி லீவு கிடைக்கின்ற நாட்களில் கல்யாணத்திற்கு வந்து கடைசி வரிசையில் உட்கார்ந்து ததாஸ்து என்று சொல்லி மஞ்சள் அரிசி போடுபவர் போலிருக்கிறது.

முன் வரிசையில் உட்கார்ந்திருப்பவர்களைவிட இப்படி பின் வரிசையில் கடைசியாக இருப்பவர்கள் எப்பொழுதும் உதவியாக இருப்பார்கள்.

''இந்தப் பக்கம் தனியா எடுக்கப் போறியா.''

''ஆமாம்.''

''நானும் வருவேனோன்னோ.''

''ஆஹா... நிச்சயம் நீங்களும் வருவீங்க.''

''அந்த டிவியில தெரியுமா.''

''தெரியும்.''

''கொஞ்சம் காண்பிங்க பார்க்கலாம்.''

''அந்த டி.வியையே பார்த்துகிட்டிருங்க வந்துடுவீங்க.''

அவன் எழுந்து நின்று சற்றுப் பின்னடைந்து மொத்த சபையையும் ஜூம் பேக் பண்ணி சிறை பிடித்தான்.

கேமரா விளக்கின் வெளிச்சம் மேலே விழுந்ததும் வேத வித்துக்கள் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டார்கள். கேமராவை ஒருமுறையும், தன் கோஷ்டியை ஒருமுறையும் பார்த்துக் கொண்டார்கள். வேத மந்திரத்தை கைகளை ஆட்டி மிக உற்சாகமாகச் சொல்லத் துவங்கினார்கள்.

உலகம் முழுவதும் இயங்குவதற்கு இதுதான் அடிப்படை. மற்றவர் பார்க்கும்போது சிறப்பாக இருக்க வேண்டும் என்பதுதான் எல்லா மனிதருடைய கவலையாகவும் இருக்

கிறது. கேமரா பார்க்கும்போது இன்னும் அந்த அக்கறை அதிகமாகி தன் கம்பீரத்தை, அழகை, கெட்டிக்காரத் தனத்தை, வாய்விட்டுச் சிரிப்பதை கவனமாகக் காட்டி மற்ற வர்கள் பார்வைக்கு சுவாரசியமாக இருக்க விரும்புகிறது.

''இது நானா. நானா இது. எவ்ளோ அழகா இருக்கேன்.''

வீடியோ கேசட்டைக் கொண்டு போய் ஒரு வீட்டில் கொடுக்கும்போது அந்த வீட்டு கல்யாணப் பெண் எகிறிக் குதித்தாள். ஓடி வந்து கை குலுக்கினாள்.

''நான் எதனால இவ்ளோ அழகா இருக்கேன்.'' என்று வெகுளியாய் எழிலரசனைப் பார்த்துக் கேட்டாள்.

''உங்கம்மா அழகா இருக்காங்க. அதனால நீங்கள் அழகா இருக்கீங்க'' என்று சொல்ல, அம்மாவிற்கு வாயெல்லாம் பற்கள் மின்னின. அவள் உடம்பு குலுக்கல் அதிதமாகவும், அட்டகாசமாகவும் இருந்தது.

''சின்ன வயசுல நான் இவளை விடவும் அழகா இருப்பேன்.'' என்று அவள் சொல்ல எழில் அதிர்ந்து போனான். அப்படிச் சொல்லும்போது அந்த வயதான அம்மாவின் முகபாவம் கர்வத்தில் பொங்கித் ததும்பியது.

''என்ன சும்மா உட்கார்ந்துண்டிருக்கேளே. சொல்லுங் கோளேன்.'' என்று அந்தப் பெண்மணி கணவரை இடிக்க, ''ஆமா... ஆமா.. நம்ம பொண்ணுக்கு இருபத்திரெண்டு வயசு. கொஞ்சம் முத்திப்போயிட்டா. உனக்கு கல்யாணம் ஆகும்போது ஒன்லி செவன்டீன். ஸ்வீட் செவன்டீன்.. அப்போ நீ கடைஞ்செடுத்த பொம்மை மாதிரி இருப்ப.'' என்று அவர் சொல்ல அந்த அம்மாளின் முகம் மேலும் பிரகாசிக்க, அந்தப் பெண்முகம் கூம்ப ப்பா... இங்கப் பேச நம்மால ஆகாதுப்பா என்று எழில் பெரிய கும்பிடு போட்டு விட்டு வந்தான்.

மதுசூதனனிடம் நடந்ததை விவரித்தான்.

"இதுதான் நம்ம சக்ஸஸ். இதான் நம் தொழிலினுடைய அடிப்படை சூத்திரம். எந்த வீட்ல போய் வீடியோ எடுக் கறியோ அந்த வீட்டு முக்கியமான பொண்களை சரியான கோணத்துல, சரியான லைட்டிங்ல சரியா பார்க்கச் சொல்லி க்ளோஸப்பையும், லாங் ஷார்ட்லயும் ஷூட் பண்ணிட் டீன்னா, அவங்க வீட்ல என்ன ஃபங்ஷன் நடந்தாலும் நம்மளத்தான் கூப்பிடுவாங்க. நமக்குத்தான் போன் போடுவாங்க. கொஞ்சம் ரேட் ஜாஸ்தி ஆயிடுச்சும்மா. தௌஸண்ட் ரூபீஸ் கூட அப்படின்னு சொன்னா போதும். காதுலயே வாங்கிக்க மாட்டாங்க. வரப்போறீங்களா இல்லையா. அதைச் சொல்லுங்க. ஏன் ரேட் பேசறீங்க அப்படின்னு அதட்டலா கேட்பாங்க. நான் கொடிகட்டி இந்தத் தொழில்ல பறக்கறதுக்குக் காரணமே லேடீஸ். அதே நேரத்துல இந்த லேடீஸை ஆபாசமா காட்டவே கூடாது.

சின்னான்னு ஒரு பையன் இருந்தான். ஏதோவொரு பொண்ணு பிடிச்சுப்போச்சு. சும்மா இடது பக்கமே அந்தப் பொண்ணு பின்னாடியே சுத்திகிட்டிருந்தான். கொஞ்சம் மார்பு எடுப்பா இருந்தது. ரெண்டு மூணு தடவை அதை ஃபோகஸ் பண்ணிட்டிருந்தான். நான் சுத்தமா கட் பண்ணி எறிஞ்சுட்டேன். இன்னொரு முறை அந்த மாதிரி செய்தா கடுங்கோபம் வரும்னு சொன்னேன். ஒரு பொண்ணை நாம அழகாகவும் காட்டலாம். அசிங்கமாகவும் காட்டலாம். ரொம்ப ஆபாசமாகவும் காட்டலாம். பொம்பளைய ஆபாசமா காட்டறதுக்காகவா நாம வீடியே தூக்கிட்டு அலை யறோம். அதுவா நமது பிழைப்பு. இல்லவேயில்லை. அழகா காட்டணும். இப்போ அங்க குதிச்சுதுன்னு சொன்னியே இதே மாதிரி அத்தனை பொண்ணும் குதிக்கணும்.

நம்ம ஊர் பொம்பளைங்களுக்கு வேற என்னடா சந்தோஷம். பட்டுப்புடவையும், பவுடர் மூஞ்சியும்தான். இதுல என்ன தப்பு இருக்கு. சந்தோஷப்பட்டுட்டு போகட் டுமே. ஒரு சீமந்தம் போயிருந்தேன். முதல் நாள் வளை

காப்பு. பெரிய தகரப்பெட்டி நிறைய கண்ணாடி வளைய லோட ரெண்டு கிழவிங்க உட்கார்ந்திருக்காங்க. பொட்டிய திறந்து கண்ணாடி வளையல் கடையைப் பரப்பினதும் எனக்குப் போடு உனக்குப் போடுன்னு எத்தினிப்பேர் தெரியுமா. படிச்சவங்க,பணக்காரங்க. சிறு வயசு, பெரிய வயசு, ரொம்ப முதிர்ந்த வயசு அத்தினி பேரும் போட்டி போட்டுகிட்டு கைய நீட்டறாங்க. அந்த வளையலைக் கொடு. இந்த வளையலைக் கொடுன்னு அந்த வீட்டுக் காரருக்கு ரொம்ப சந்தோஷம்.

யார் எவ்ளோ கேட்டாலும் போடு. கையிலயும் கொடுன் னுட்டாரு. கிட்டத்தட்ட ஒவ்வொரு பொம்பளையும் இருவத்து நாலு முப்பது வளையல் போட்டுகிட்டாங்க. மிஞ்சி போச்சுன்னா முப்பது ரூபா. விலையே இல்லை அது அவருக்கு. ஆனால், என்ன சந்தோஷம் என்ன திருப்தி. என்ன குதூகலம். வளையல் போடற இடத்துல நான் கேமராவோட உட்கார்ந்துட்டேன். ஐயட் கொண்டு வரச் சொல்லி ஐயட்ல கேமராவை ஃபிக்ஸ் பண்ணி இதுங்க உட்காரதும், கை நீட்டறதும் அந்தம்மா போட்டு விடறதும் இதுங்க மூஞ்சி சிவக்கறதும் மூஞ்சி சிவந்துவிட்டு அப்புறம் மலர்ந்து போறதும் ஒண்ணு விடாம படம் பிடிச்சேன். ஒரு நாப்பது லேடீஸ் எடுத்திருப்பேன். அதை கரெக்ட்டா எடிட்டிங் டேபிள்ல போட்டு ட்ரிம் பண்ணி ஒரு இருவத் தஞ்சு லேடீஸை விதம் விதமா படம் பிடிச்சு போட்டுக் கொடுத்தேன்.

ஏன்.. இவளைப் பாரேன். அவளைப் பாரேன் இதைப் பாரேன் அதைப் பாரேன்னு ஒரே கூச்சல். உங்களை மாதிரி கேமராமேன் நான் வாழ்க்கையில பார்த்ததேயில்லை. அப்படின்னு அந்தம்மா சர்டிபிகேட் கொடுத்தாங்க. என்னைத்தவிர வேற யாரையும் அந்தம்மாவுக்குத் தெரியாது. ஆனா, பேச்சு எவ்ளோ பெரிசா இருந்தது தெரியுமா. பாராட்டு எவ்ளோ உயர்வா இருந்தது தெரியுமா. உங்கள

மாதிரி பெரியவங்க ஆசீர்வாதம்தான் அப்படின்னு சொல்லி கூட நானூறு ரூபா கேட்டு வாங்கிட்டு வந்துட்டேன். உங்க வீட்ல லேடீஸ் இருக்காங்களா. வளையல் இருக்கு எடுத் துட்டு போங்களேன் அப்படின்னு பொட்டலமா இருவத்தி நாலு வளையல் கொடுத்தாங்க. சந்தோஷம். இதுக்கு பேர் சந்தோஷம். காசு கொடுத்ததோட நிறுத்தியிருக்கலாம். என் வீட்டுப் பொம்பளைக்கு வளையல் கொடுக்கணுமா. அதுக்கு பேர் சந்தோஷம். மத்தவங்களைச் சந்தோஷப்படுத்தறது தான் நம்ப வேலை. அவங்க சந்தோஷமா இருக்கறபோது அந்த சந்தோஷத்தை ரிஜிஸ்டர் பண்ணி இன்னும் சந்தோஷப் படுன்னு காண்பிக்கறதுதான் நம்ப வேலை.''

எழிலுக்கு சுழன்று சுழன்று வந்திருந்த பெண்களை எடுக்கும்போது, மேடையில் அலைமோதும் பெண்களை எடுக்கும்போது, மண்டபத்து அழகை எடுக்கும்போது கம்பீரமான வைதிகர்களை எடுக்கும்போது பல்வேறு நினைவுகள் ஓடின.

''ஸார் சாப்பிட போயிட்டு வரட்டுமா. பசிக்குது.''

''போயிட்டு சீக்கிரமா வாடா. வாசல்ல கூட்டம் ஜாஸ்தி யாப் போச்சு. மேடையில் அடுத்து என்னன்னு கேட்டுகிட்டு போ.''

''ஊஞ்சலாம் ஸார்.''

''ஆமா.. ஆமா.. இந்த ஸைட்ல ஊஞ்சல் ஃபிக்ஸ் பண்ணியிருக்காங்க பார்த்தேன். அதுல எதுனா பூ சுத்தக் கூடாது. வெறுமனே இருந்தது.''

''இங்கேயிருந்தே தெரியுது ஸார். பூ சுத்தியிருக்காங்க.''

''ரைட். அப்போ இந்த கேமராவை கட் பண்ணி தோள்ல பேட்டரி மாத்திக்கோ. டைனிங் ஹாலுக்குப் போய் சாப்பிடு. அப்புறம் டைனிங் ஹால்லேர்ந்து இங்க வந்துடு. வந்து பேட்டரியைத் தேட வேணாம்.''

உதவியாளிடம் மதுசூதனன் பேட்டரியை அனுப்பினார்.

நான்கு பேட்டரிகள் மின்சாரத்தில் கோர்க்கப்பட்டு உயிரூட்டப்பட்டிருந்தது. அங்கிருந்தே தெரிந்தது. ஒரு பேட்டரி தடுமாறினாலும் இன்னொரு பேட்டரி உதவி செய்யும். எப்போதும் கூடுதலாக ஒரு விஷயத்தை வைத் திருப்பது மதுசூதனனின் சிறப்பு. எங்கும் எந்த இடத்திலும் சிக்கல் நேரும். அதனால், கேமரா இயங்காமல் போய்விடக் கூடாது என்கிற கட்டுப்பாடு அவருக்கு அதிகம்.

''நாலு கேமரா வேணும்னா ஆறு கேமரா எடுத்துட்டு போ. மூணு பேட்டரி வேணும்னா நாலு பேட்டரி எடுத்துட்டுப் போ. இந்த மண்டபத்துக்கு பத்து ரோல் ஒயர் போதும்னா பதினஞ்சு ரோல் ஒயர் எடுத்துக்கோ. நீயா தூக்கப் போற வண்டி எடுக்கப்போகுது. வண்டியில இருக் கட்டும்.''

கூடுதலான கருவிகளும் ஓடிஓடி உழைக்கின்ற வேலை யாட்களும்தான் மதுசூதனனின் உண்மையான சொத்து.

''என்னடா அம்மாவுக்கு உடம்பு சரியில்லையா. எவ்ளோ வேணும்.''

சட்டென்று நேரடியாய் விஷயத்திற்கு வந்துவிடுவார். அந்த ஓடியாடி வேலை செய்கிற பையன் அந்தக் கேள்வியின் வேகம் தாங்காமல் மூச்சு திணறுவான்.

''என்னா வேணும்னு தெரியலை ஸார்.''

''போன் போட்டுக் கேளுடா. இந்தா பேசு அம்மாகிட்ட. யார் இருக்காங்க வீட்ல. தங்கச்சியா, அக்காவா, அப்பாவா, யார்கிட்டயாவது பேசு. என்ன சமாச்சாரம் எவ்ளோன்னு கேளு.''

''ஹார்ட் ஆப்ரேஷனாம் ஸார். கவர்மெண்ட் ஆஸ்பத்திரி யில சேர்த்திருக்காங்களாம். காசு எதுவும் கட்ட வேணா மாம். ஆனா மருந்துக்கு ஏதோ தேவைப்படும் போலிருக்கு.''

''எவ்ளோ காசு சொல்லுடா.'' அவர் உரக்கக் கத்துவார். எது பேசினாலும் கொஞ்சம் அதட்டலாகப் பேசுவது அவருடைய பாணி.

''ரெண்டாயிரம் ரூபா கேட்கறாங்க ஸார்.''

''இந்தாம்மா. ஒரு அஞ்சாயிரம் ரூபா அவனுக்குக் கொடு. போக்குவரத்து செலவா ஒரு ஐநூறு ரூபா வச்சுக்கோ. கொண்டு போய் அம்மாகிட்ட கொடுத்துட்டு வந்துடு. நிம்மதியா பைபாஸ் ஆப்ரேஷன் செய்துக்கட்டும். அது ஒண்ணுமே இல்லைடா. விளையாட்டு மாதிரி செய்துட றாங்க இப்போ. கறிசோறு தின்னாத இருக்கச் சொல்லு. ஆட்டுக்கறிதான் மனுஷாளுக்கு எமன். ஆட்டுக்கறி சாப்பிட்டா ஒடி ஆடி வேலை செய்யணும். ஆட்டுக்கறி சாப்பிட்டு உட்கார்ந்திருந்தா நெஞ்சைத்தான் அடைக்கும். மத்தியானம் ஏதாவது பஸ்ஸைப்பிடி. இல்லையா ட்ரெயின்ல போ. உள் பாக்கெட்ல துட்டை வைடா. பல்லைக் காட்டிகிட்டு போவாத.''

புறப்படத் தயாராகும் போது ஒரேயொரு கேள்வி கேட்பார்.

''எப்போ வருவ.''

''எப்போ வரணும் ஸார்.''

''எவ்ளோ சீக்கிரம் வர்றியோ அவ்ளோ சீக்கிரம் நல்லது. அங்க நீ இருந்துதான் ஆகணும்னா. இரு. வந்துட முடியும்னா வந்துடு. அங்க காசுதானே தேவை மனுஷாள் தேவை யில்லையே.''

''இல்லை ஸார் காசுதான் தேவை.''

''அப்போ வந்துடேன்.''

''வந்துடறேன் சார்.''

மதுரையை நோக்கி ஒரு இரவுப் பயணம். மறுநாள் முழுவதும் தாயோடு இருப்பான். அன்று இரவே கிளம்பி

மறுநாள் விடிகாலையில் அலுவலக வராண்டாவில் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தவனைப் பார்த்தவுடன் மதுசூதன னுக்கு நெஞ்சு விட்டுப் போயிற்று.

''பாருடா... மாணிக்கம்டா அவன். இது மாதிரி பத்துப் பேர் ஒரு கம்பெனில இருந்தா கொடி கட்டிப் பறந்துடலாம். எதுனா சாக்கு சொல்லலாம். எதுனா பொய் சொல்லலாம். வந்துட்டான் பார்.''

தினமும் அவனைப் பேச வைத்து தாயின் உடல்நிலை முன்னேறி வருவதை அவனை அறிய வைத்து, ''இப்போ தைக்கு வேலை ஒண்ணும் வேலையில்லை. நீ வேணா மதுரைக்குப் போயிட்டு வா.'' என்று மறுபடியும் அவனை அனுப்பி வைக்கின்ற மிகப்பெரிய மனது மதுசூதனனுக்கு உண்டு. ஒரு அடுக்குமாடி வீட்டில் இரண்டு குடியிருப்பை வாடகைக்கு எடுத்துக் கொண்டு ஒரு குடியிருப்பில் கேமரா மேன்களையும், இன்னொரு குடியிருப்பில் உதவியாளர் களையும் சௌகரியமாகத் தங்க வைத்தார்.

''எங்கிட்ட வேலை செய்யற பையன் கொசுக்கடியில் தூங்க முடியாம இருந்தா மறுநாள் கார்த்தால எப்படி வேலை செய்வான். அதனாலதான் பெரிய ஹால், ரெண்டு ஃபேன், நல்ல கக்கூஸ், குளுகுளுன்னு ஷவர், நல்ல சாப்பாடு, சந்தோஷமா இருப்பான் இல்ல. சம்பளம் யார் வேண்டுமானாலும் கொடுத்துடலாம். சம்பளத்தோட சௌகரியமும் கொடுத்தா நம்மள விட்டுப் போவானா? அவங்கள நம்பி பன்னெண்டு லட்சரூபா சாமானை வண்டி யில் போட்டு அனுப்பறோம். கேமராவை எடுத்துகிட்டு ஓடிட்டான்னா மூணு லட்ச ரூபா போச்சு. எப்படித் துரத்தறது. எப்படிப் பிடிக்கறது. அது பின்னாடி கதை. போனது போனதுதானே. பத்துலட்ச ரூபா சாமானோட அனுப்பறவனை ஆளுக்கு ஐநூறு ரூபா செலவு பண்ணக் கூடாதா. ரெண்டு பெட்ரூம் ஒரு ஹால்ல எட்டு பேர் தூங்க

முடியாதா. இதுக்கு என்ன செலவாயிடும். நாலாயிரம் ரூபா. அவ்ளோதானே.''

கல்யாண வேலை இல்லாத நாட்களில் ஹோட்டலில் போய் சாப்பிட்டு வரச்சொல்வார். எத்தனை சாப்பாடு என்று அவர்கள் கணக்கு வைத்துக் கொள்வார்கள்.

இருபது ரூபாய்க்கு ஒரு காய், ஒரு கூட்டு, குழம்பு, ரசம், மோர் என்று அமர்க்களப்படுத்தி விடுவார்கள். வேலை குறித்த கவலையும், இருப்பிடம் குறித்த சிரமமும் அங்கு இல்லாததால் அங்கே வேலை செய்பவர்கள் மதுசூதன னோடு ஒட்டிக்கிடந்தார்கள்.

பெருசு கூப்பிடறாரு ஸார் என்று மதுசூதனனுக்கு அந்த உதவி ஆட்கள் எல்லோரும் சேர்ந்து தனிப்பெயர் வைத்தார்கள். மதுசூதனன் என்று சொல்லமாட்டார்கள். பெருசு என்றுதான் அழைப்பார்கள். அம்மா என்று மது சூதனனின் மனைவியைக் கூப்பிடுவார்கள். கேமரா மேன்களை அண்ணன் என்ற அடைமொழியோடுதான் அழைப்பார்கள். அதேநேரம் அந்த உதவியாளர்கள் எட்டு பேருக்கும் தனியாக விதம்விதமான பெயர் இருந்தது.

அட்டை, நண்டு, கட்டிங் ப்ளேயர், ரம்பம், பூசணி, கோலி என்று அவர்களாக அடையாளப் பெயர் வைத்துக் கொண்டார்கள். அதில் ஒருவனுக்கு கே.கே. என்ற பெயர் இருந்தது. என்னா அது கே.கே. என்றால், வாய் திறந்து சொல்லமாட்டார்கள்.

''ஏண்டா அப்படி ஒரு பேரை வச்சீங்க. தலையெழுத்து'' எழில் நெற்றியில் அடித்துக் கொண்டான்.

''அவனாவே சொன்னதுதாங்க.''

''என்னா அவனாவே சொன்னது.''

''எப்போ பார்த்தாலும் அந்த கெட்ட வார்த்தையையே சொல்லிட்டிருப்பான். அந்தக் கெட்ட வார்த்தையே அவனுக்குப் பேரா வச்சிட்டோம்.''

மொத்த அலுவலகமும் வாய்விட்டு உரக்க சிரித்தது. பெண்களெல்லாம் என்ன என்று கேட்க, ஆண்கள் வாய் பொத்திக் கொண்டு ஒன்றுமில்லை என்று சொல்லி ஓடினார்கள். ஏதோ மிகக் கேவலமான மோசமான விஷயம் என்று பெண்கள் நினைத்துக் கொண்டு எதுவென்று தெரியாமலேயே புன்னகை செய்தார்கள்.

மதுசூதனன் அலுவலகம் எப்போதும் இந்த மாதிரி சந்தோஷக் கூச்சல்களால் நிறைந்திருக்கும்.

''கேமரா மூவ் ஆகும்போது கட் பண்ணாதன்னு எத்தனை தடவை சொல்றது. கேமராவை இடதுலேர்ந்து வலது பக்கம் கொண்டு வா. ஒரு இடத்துல நில்லு. முப்பது செகண்ட் ஓடட்டும். அப்புறம் கட் பண்ணு. அப்போதானே நீ எடிட் பண்ண சௌகரியமா இருக்கும். என்ன ஓயிட் பேலன்ஸ் பண்ணியிருக்க. இருளோன்னு இருக்கு.''

''இல்ல ஸார் லைட் அண்ட் ஷேடுக்கு ட்ரை பண்ணேன் ஸார்.''

கேமராமேன் சொல்ல அங்கு பெரிய வாக்குவாதம் நடக்கும். சிலசமயம் மதுசூதனனுக்குக் கோபம் வந்துவிடும். பளீரென்று எழுந்து நின்று அடிப்பார்.

''பெரிய பாலுமகேந்திரா. லைட் அண்ட் ஷேடு பண்றாரு. நாம எடுக்கறது வீடியோ கல்யாணக் காட்சி. பொம்மைங்க சுத்தமா பளிச்சுனு தெரியணும். பொண்ண பளிச்சுனு எடுத்துட்டு புள்ள பெத்தவளை இருட்டல காண்பிச்சாக்க அந்தப் பெண்ணு கதி என்ன ஆகும். சொல்லி வச்சு செய்தீங்கன்னு சொல்லமாட்டாங்க. அந்தப் பாவத்தை வேற நான் கொட்டிக்கணுமா. லைட்டோட டோர்

ரெண்டுத்தையும் ஒப்பன் பண்ணாத்தானே ப்ரைட்டா விழும். முக்கா திட்டத்துக்கு திறந்து வச்சுகிட்டு.''

''ஸார். அது பொத்பொத்துனு வந்து மூடிக்குது ஸார்.''

''எந்த லைட் அது.''

''மூப்பத்து இருவதாம் நம்பர்.''

''கொண்டா. அந்த விளக்கைக் கொண்டா. செவுத்தல அடிச்சு உடைக்கறேன் கொண்டா.''

அவர் கோபமாக எழுந்து பரபரப்பார்.

எழிலோ, தமிழ்வளவனோ அந்த லைட்டைத் தேடி எடுத்து என்ன குறை என்று பார்த்து அந்த டோர் இறுக்க மாகத் திறந்திருக்க சிறு வேலைகள் செய்து சரியாக்கு வார்கள்.

''டோர் சரிஞ்சு பாதி லைட்டுதான் விழுதுன்னு தெரியு துல்ல. ஒரு வார்த்தை சொல்லியிருந்தா டக்குனு விளக்கு மாத்தியிருப்பேன் இல்ல. இதை அங்கயே சரி பண்ணியிருக்க மாட்டேன். பாதி விளக்குதான் வருதுன்ற புத்தியே இல்லை. பொட்டக்கண்ணன், மக்கு முண்டமெல்லாம் கேமரா மேனா இருந்தா அப்படித்தான்.''

சகட்டுமேனிக்குத் திட்ட ஆரம்பிப்பார்.

தமிழ்வளவனுக்குக் கையில் மெல்லிய உதறல் இருப்பதைச் சுட்டிக்காட்டுவார்.

''தோள்ல கேமரா உட்கார்ந்திருக்கணும். அழுத்தக் கூடாது. கையில் பிடி உறுதியா இருக்கணும். நடுங்கக் கூடாது. சின்ன டி.வியில உன் உதறல் தெரியாது. டி.வி. பெருசானா எட்ஜ்ல கேமரா உதறிகிட்டே இருக்கறது தெரியும். தயவு செய்து குடிக்காத. கை உதறுகிற அளவுக்கு தினம் தினம் குடிக்காத. எப்போவாவது குடி. ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு நியதி உண்டு. அதைக் காப்பாத் திக்கணும். குடிச்சா கை உதறும். கண்ணு போகும். கேமரா

மேனுக்கு இது ரெண்டும் இருந்ததுன்னா வேலை செய்யறது கஷ்டம். குடிச்சுத்தான் ஆகணும்னா கேமராவை விட்டுடு. இன்னொன்னு சொல்லட்டுமா குடிக்கற நாய் என்ன வேலை பண்ணாலும் குழப்பம்தான். வெள்ளைக்காரன் குடிக்கறான்னா அவன் ஊர் குளுரு கொல்லும். ரத்தத்தைச் சூடேத்திக்கிறதுக்கு குடிப்பான். இங்க ஊரு சூடு. காத்து சூடு. ரத்தமும் சூடு. இங்கப் போய் என்னத்துக்கு குடிச்சிட்டு ஏன் அவஸ்தைப்படணும். இந்த இடத்துல நிறைய தண்ணி குடிக்கணும். இளநீர் குடிக்கணும். சாத்துகுடி ஜூஸ் குடிக்கணும். மோர் குடிக்கணும். எலுமிச்சம்பழம் உப்பு போட்டுக் குடிக்கணும். எப்படிடா அந்த நாத்தத்தைக் குடிக்கறீங்க'' அலுத்துக் கொள்வார்.

ஆனால், மதுசூதனனிடம் ஒரு கெட்டப்பழக்கம் இருந்தது. ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை ஒருகாபி குடிக்க வேண்டும். அந்தக் காபியும் வகையாக இருக்க வேண்டும். பில்டர் காபி இல்லையென்றால் வேண்டாம் என்று சொல்லி விடுவார். அழுக்குத் துணியைத் தண்ணியில நனைச்சு பிழிஞ்சுக் கொடுத்து அது பில்டர் காபிபோலன்னு அர்த்தமா. நான் உலகம் முழுக்க சுத்தி விதம்விதமா காபி குடிச்சுப் பார்த்துட்டேன். கேப்பசினோ, அது இதுன்னு இருவது வகை விதம்விதமான காபி குடிச்சு பார்த்துட்டேன். நம்மூர் பசும்பால் கும்பகோணம் டிகிரி காபி மாதிரி ஒரு ருசி எதுலயும் வரலை.

அவரைப்பற்றி நினைத்துக் கொண்டேயிருக்கும் போது காதில் மாட்டிக் கொண்டிருந்த ஒயர்லெஸ்ஸில் அவர் குரல் கேட்டது.

''எங்க இருக்கறப்பா.''

''ஸார் நான் எழில். என்னையா கேட்கறீங்க.''

''உன்னைத்தான் எழில் எங்க இருக்கற.''

''ஸார் டைனிங்ஹால்ல.''

"என்னாத்துக்கு."

"சாப்பிடப்போறேன் ஸார்."

"ஒக்கிரம் வாடா கண்ணு. ஊஞ்சல் ஆரம்பிக்கப் போறாங்களாம். எங்கிட்ட ரெண்டு பேர் சொல்லிட்டாங்க."

"வரேன் ஸார்."

அவன் கேமராவைத் தோளிலிருந்து இறக்கி டைனிங் ஹால் நோக்கி நடக்க யாரோ வாங்க.. வாங்க என்று கூப்பிட்டார்கள். சாப்பிடத்தான் கூப்பிடுகிறார்கள் என்று நினைத்தபோது, "அந்தப் பக்கம் மாப்பிள்ளை வரிசை உட்கார்ந்துட்டாங்க. என்ன கேமரா வராதா." என்றார்கள்.

"நல்லவேளை வந்துட்டீங்க வாங்க."

"ஸார் நான் சாப்பிட வந்துருக்கேன்."

"சாப்டுக்கலாம் ஸார். முதல்ல அதை எடுத்துடுங்க."

அவன் வேகமாக உதவியாளைத் திரும்பிப் பார்த்தான். உதவியாள் வேறு வழியில்லை என்பதாய் உதடு பிதுக்கினான்.

இரண்டு ரோக்களில் சம்மந்தி ஆட்கள் அமர்ந்திருந் தார்கள். மாப்பிள்ளையின் தோழர்கள், தோழிகள் அமர்ந் திருந்தார்கள்.

"நிதானமா போங்க. நிதானமா போங்க."

ஒவ்வொருவரும் முகத்தைத் தூக்கி பற்களைக் காட்ட இவன் நிதானமாக அவர்களைப் படம் பிடித்துக் கொண்டு போனான். சில நிமிடங்களில் படம் பிடித்தான்.

"ஒரு ஒட்டு மொத்தமா டாப் ஆங்கில் ஷாட்." என்று யாரோ சொல்ல அவரை வினோதமாகப் பார்த்தான்.

"எனக்கும் கேமரா தெரியும்ணா... நானும் சினிமாவுல இருக்கறவன்தான்." என்று அந்த ஆள் அலட்டலாகச் சொல்ல, அவனை தலையெழுத்தே என்பதாகப் பார்த்தான்.

டேபிளில் ஏறி நின்று அவர் சொன்னது போல ஒட்டு மொத்தமாய் சாப்பிடுபவர்களைப் படம் பிடித்தான். படம் பிடிக்க சொன்ன ஆள் நடுநாயகமாய் எல்லோரையும் பந்தி விசாரிப்பது போல நடந்து வர இவன் தனக்காகவே படம் பிடிக்கச் சொல்கிறான் என்பது எழிலுக்குப் புரிந்து போனது. சில சமயம் பத்துப் பைசாவுக்குப் பிரயோஜனமில்லாத சில ஆட்கள் தேவையில்லாமல் இப்படி பொட்டை அதிகாரம் செய்வார்கள். அவர்களைத் தள்ளவும் முடியாது. கொள்ள வும் முடியாது. கல்யாண வீட்டில் இதெல்லாம் சகஜமாக நடக்கின்ற கூத்துகள்.

"மாப்பிள்ளை வந்துட்டார். மாப்பிள்ளை வந்துட்டார்."

திடீரென்று சத்தம் கேட்டது.

மாப்பிள்ளை, இன்னிக்கு நீங்க விரதம் ஒண்ணும் சாப்பிடக்கூடாது. அக்னி காரியம் முடியற வரைக்கும் ஒட்ட ஒட்ட பட்டினி கிடக்கணும். யாரோ சொல்ல தேவை யில்லாமல் அந்தக்கூட்டம் சிரித்தது.

"இல்ல, காபி மட்டும் இருந்தாப் போதும் என்று மாப் பிள்ளை அசடு வழிய அவன் ஆவலோடு மற்றவர் இலை களைப் பார்ப்பது தெரிந்தது."

"செம பாதாம் அல்வா. ஒரு உருண்டை போட்டுக் கறியா. உனக்கு உருட்டித்தரேன்."

மாப்பிள்ளை வெட்கமின்றி அதை வாங்கி வாயில் போட்டுக் கொண்டான்.

"வெறும் பாதாம் அல்வா சாப்பிட்டு காபி குடிச்சா கசக்குமா. ஒரு இட்லி அடிக்கறது."

"வேண்டாம். வடை மட்டும் கொடு."

ஒரு தட்டில் வடை வைத்துக் கொடுத்து அதையும் படம் பிடிக்கச் சொன்னார்கள். தட்டில் வடையும், சட்னியும், சாம்பாருமாய் மாப்பிள்ளை நின்ற வண்ணமே சாப்பிடுவதை அவன் படம் பிடித்தான். சுற்றி அவன் தின்பதை பல தோழர்கள் வேடிக்கை பார்த்தார்கள்.

ஒருவர் தின்ன மற்றவர் வேடிக்கை பார்ப்பது கேமராவுக்குப் பல் காட்டுவது ஆபாசமாக இருந்தது. வேண்டுமென்றே வலிய எடுக்கப்பட்ட படமாக இருந்தது. இயல்பு முற்றிலும் கெட்டுப் போயிருந்தது.

அவன் விளக்கு அணைத்துவிட்டு கேமராவை ஒரு ஓரமாக வைத்துவிட்டு அருகே உள்ள நாற்காலியில் சாப்பிட உட்கார்ந்தான். கேமரா சுவரோரம் இருந்தது. அதை யாரும் மிதித்துவிடக்கூடாது என்பதற்காக ஒரு நாற்காலியை எடுத்து அந்தக் கேமராவிற்கு மேலே கவிழ்த்தது போல நிற்க வைத்தான். அல்வா வந்ததும் உருட்டி ஒரு விழுங்கு விழுங்கினான். யாரோ வேகமாக கேமராவை நோக்கி வருவது பார்த்து சட்டென்று அவன் உடம்பு விரைப்பாகியது.

இதோ சேர் இருக்கு என்று வேகமாக அந்த சேரில் கை வைக்க அவன் சட்டென்று அந்த சேரை அழுத்திக் கொண்டான்.

''கீழ் கேமரா இருக்கு ஸார்.''

''இருக்கட்டுமே. என்ன எனக்கு சேர் வேணும்.''

''கேமராவுக்காக வச்சுருக்கேன் ஸார்.''

''சேர் உட்காரதுக்காக... கேமராவுக்கான்னா என்ன அர்த்தம்.''

வந்தவர் சத்தம் போட்டார்.

அவன் நாற்காலியை மிக நிதானமாக எடுத்துக் கொடுத்தான். இல்லையெனில், அவன் வந்த வேகத்திற்கு சட்

டென்று கேமராவில் இடித்து நாற்காலியை இழுத்திருப்பார். நிச்சயம் கேமரா ஏதோ ஒரு இடத்தில் மூளியாகி இருக்கும்.

''அடிபட்டு மண்டை உடைச்சுக்கோ. எனக்கு அதைப் பத்தி அக்கறை கிடையாது. ஆனா, என் கேமராவுக்கு ஒரு கீறல்கூட விழக்கூடாது.''

இது மதுசூதனனின் மந்திர வாக்கியம்.

கேமராவுக்கு அடிபட்டது என்றால், அவர் அன்று முழுவதும் புலம்பிக் கொண்டிருப்பார்.

''பச்சைக் குழந்தைடா. பச்சைக் குழந்தை. அதை நெட்டுக்குத்தலா கீழ போடுவாங்களா. அப்படிப் போட்டிருக்கியேடா சண்டாளப்பாவி.''

அவர் தமிழ்வளவன் தலையிலும், முதுகிலும் ஓங்கி ஓங்கி அடித்திருக்கிறார்.

ஆனால், தவறு தமிழ்வளவன் மீது இல்லை. அவன் விழவேண்டும் என்பதற்காக ஒரு ரெண்டுங்கெட்டான் பையன் சட்டென்று அவன் பின்னால் மண்டியிட்டு படுத்துக் கொள்ள தமிழ்வளவன் நகரும்போது அப்படியே மல்லாக்கா சாய்ந்தான். உதவியாளன் கைபட்டு சிறிதுநேரம் தங்கி அந்தக் கேமரா தரையில் விழுந்தது. மண்டியிட்டு படுத்து கவிழ்த்த பையன் கண்சிமிட்டும் நேரத்தில் ஓடிப் போனான்.

ரகு தள்ளி விட்டுட்டான். ரகு எப்பவுமே அப்படித்தான் என்று பெண்கள் அலட்டிக் கொண்டார்கள்.

தமிழ்வளவன் அந்த ரகுவைத் தேடிப்பிடித்து ஒரே கொத்தாகப் பிடித்து அடிக்க முற்பட்டபோது இருபது, முப்பது பேர் நின்று தடுத்தார்கள்.

''நீ பார்த்து நடக்கணும்பா. அவனைப் போய் ஏன் அடிக்க வர. அடிச்சுடு பார்க்கலாம்.'' என்றெல்லாம் உரக்கக் கத்தினார்கள்.

இன்னொரு முறை டொப்பென்று நெருப்பு குண்டத்தி லிருந்து ஒரு கங்கு வெடித்து சிதறிவிழ, தமிழ்வளவனே அதில் காலை வைத்துவிட காலை உதறும் வேகத்தில் வேறு யாரோ முகத்திலோ கேமராவை இடித்துவிட்டு அவர் கைவீச அவர் கைபட்டு கேமரா சுவரில் மோதிற்று. ஆனால், நல்ல வேளையாக தமிழ்வளவனின் உதவியாளால் பிடிக்கப் பட்டது.

அடுத்தபடியாய் இட்லியில் கை வைத்து ஒரு விள்ளல் சாப்பிட்ட பிறகு வாப்பா.. வாப்பா... டைம் ஆகுது வாப்பா என்று மைக்கில் மதுசூதனன் அலறுவது மெல்லியதாய் அவிழ்த்து வைத்த ஹெட்போனில் கேட்டது.

''ஸார் சாப்டுகிட்டிருக்கேன்.''

''என்ன இப்போதான் சாப்பிடறியா.''

''ஸார் உள்ள நுழைஞ்சவுடனே சம்மந்தி சாப்பிடறாங்க எடு. மாப்பிள்ளை சாப்பிடறாரு எடு. ஃப்ரெண்ட்ஸ் சாப்பிடறாங்க எடுன்னு சொல்லிட்டாங்க ஸார். இப்போ தான் வந்து உட்கார்ந்தேன்.''

''அப்புறம் சாப்டுக்கலாம்ப்பா வாப்பா. பொண்ணு போயிடுச்சாமே. பரபரக்கறாங்களே.''

அவன் சட்டென்று கை உதறி டிஷ்யூ பேப்பரில் கையைத் துடைத்துக் கொண்டு கேமராவைத் தோளில் மாட்டிக் கொண்டான். அவன் உதவியாளும் வேறு வழியின்றி அவன் பின் நடந்தான். முதுகில் பேட்டரி இழுக்க தோளில் கேமரா அழுந்த மெல்லிய ஒரு கோபத்தோடு எழில் ஊஞ்சல் இருக்கும் இடம் நோக்கி நகர்ந்தான்.

ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு விதமான இடைஞ் சல்கள் இருக்கின்றன. இந்த வேலையில் இது இடைஞ்சல். சற்றுகூட ஓய்வு கிடைக்காமலேயே சில திருமணங்கள் வம்பு செய்யும். இந்தத் திருமணம் அப்படித்தான் செய்கிறது.

''ஒண்ணு பண்ணு நீ காபியைக் குடிச்சுட்டு எனக்கு ஒரு கப் காபி கொண்டு வாடா.''

உதவியாளிடம் சொல்ல உதவியாளன் சரியென்று பின்னடைந்தான்.

கேமராவோடும், பேட்டரியோடும் எழில் ஊஞ்சலை நோக்கி நகர்ந்தான். ஊஞ்சலில் மணப்பெண் அருகே நின்றான். மாப்பிள்ளை வரக்காணோம்.

மாப்பிள்ளைக்காக எல்லோரும் காத்துக் கொண்டிருந் தார்கள்.

''மாப்பிள்ளை வரலையா.''

எழில் மிருதுவாகக் கேட்டான்.

''பசிக்குதாம்ப்பா. சாப்பிட போயிருக்காரு.''

''நான் சாப்டுட்டிருந்தேன் ஸார். சீக்கிரமா வான்னு சொல்லிட்டாங்க''

''நீ சாப்டு. சாப்பிடாத போ. மாப்பிள்ளை சாப்பிடக் கூடாது. சாப்பிடணும்னு போயிருக்காரு. என்ன பண்றது.''

''லேட்டாவுமா ஸார்.''

''எதுக்கு கேட்கற.''

''சாப்பிடறதுக்குப் போகணும் ஸார்.''

''யோவ் நில்லுய்யா. மாப்பிள்ளை வந்துட்டார்னா நீ எங்க எங்கன்னு உன்னைத் தேட முடியுமா. மாப்பிள்ளை சாப்பிட போயிருக்கார்னா சரின்னு சொல்லுவாங்க. நீ சாப்பிட போனா கன்னாபின்னான்னு கத்துவாங்க. பேசாத நில்லு. அப்புறம் சாப்டுக்கலாம்.''

''தாலி கட்டி எல்லாம் முடிஞ்ச பிறகு நிம்மதியா உட் கார்ந்து ரெண்டு வேளை சாப்பிடேன் யார் வேண் ாம்னா.''

அவர் நக்கலாகப் பதில் சொன்னார். அவனை சாப்பாட்டு ராமன் என்பதுபோல் கேலி செய்தார்.

சட்டென்று எழிலுக்கு ஔவையார் பாட்டு ஞாபம் வந்தது.

''ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாள் உணவை ஏலென்றாய் ஏலாய்.''

இடும்பைக்கூர் என் வயிறே என்று வயிறை ஔவையார் சபித்தது ஞாபகம் வந்தது.

ஒரு நாள் உணவு இல்லாமல் இரேன் என்றால் முடியாது என்று வயிறு கத்தும். உணவு கிடைத்திருக்கிறது. இரண்டு நாளுக்காக சாப்பிட்டு விடேன் என்றால் வயிறு உணவை எதுக்களிக்கும்.

கேமராவை எடுத்து பக்கத்திலுள்ள டேபிளில் வைத்து விட்டு அதைப்பிடித்த வண்ணம் தோளில் பேட்டரியோடு அவன் காத்திருந்தான். மாப்பிள்ளை வருவதாக இல்லை. இந்நேரம் இரண்டு இட்லியும், ஒரு வடையும் வேகமாகச் சாப்பிட்டிருக்கலாம். ஏன் காபியும் குடித்திருக்கலாம். உதவியாளனைக் காணோமே என்று நினைக்க உதவியாள் கே.கே. காபி டம்ளருடன் வந்தான்.

''என்னடா இவ்ளோ லேட்.''

''சாப்பிட சொல்லிட்டாங்கப்பா எனக்கும் பசி. சாப்டுட்டு உனக்கு காபி எடுத்துட்டு வரேன்.''

கூசாமல் பதில் சொன்னான்.

காபி மிகவும் சூடாக இருந்தது. டேபிளில் வைத்துவிட்டு காத்துக் கொண்டு, ஒரேயொரு மிடரு குடித்தபோது, மாப்பிள்ளையை யாரோ அழைத்து வருவது தெரிந்தது.

''சீக்கிரம்... சீக்கிரம்... வீடியோ எடு. மாப்பிள்ளை வராரு. அதை வீடியோ எடுப்பா.'' என்று அதட்டி அந்த காபி டம்ளரை அப்படியே வைத்துவிட்டு தோளில் கேமராவைப்

பொருத்தி பேட்டரியை உருவிச் சரிசெய்து கொண்டு, அதை உயிரூட்டி வெளிச்சத்தைப் பரப்பி வியூ பைண்டரில் மாப்பிள்ளையின் வருகையைப் பார்த்து அவர் வருவதைப் படமெடுத்தான்.

பஞ்சகச்ச வேட்டியும், மேல் துண்டுமாய் வந்த மாப்பிள்ளை ஊஞ்சலில் உட்கார ஊஞ்சல் குலுங்கியது. சற்றுத் தொலைவிலிருந்து கேமராவின் வழியாக மெல்ல ஜூம் செய்து ஊஞ்சலாடுகின்ற மாப்பிள்ளையையும் பெண்ணையும் நெருக்கமாகப் படம் பிடித்தான்.

பசி வயிற்றைக் கிள்ளியது. கண்ணில் இருட்டி வந்தது. மெல்ல மூச்சை இழுத்துவிட்டு சுதாரித்துக் கொண்டான்.

''மதன் ஸார்'' ஔர்லெஸ்ஸில் கூப்பிட்டான்.

''பதில் இல்லை.''

''அவரு சாப்பிடப் போயிட்டாரே.''

உதவியாள் கே.கே. பதில் சொன்னான்.

சட்டென்று உள்ளே ஒரு கோபம் வந்தது.

அப்போ நான் மட்டும் மனுஷனே இல்லையா என்ற ஆத்திரம் வந்தது.

ஊஞ்சல் ஆடியதற்கு பாட்டுப் பாடினார்கள். பாட்டுப் பாடியதற்கு நாதஸ்வரம் வாசித்தார்கள். இப்படிச் செய்வார்கள் என்று அவனுக்கு தெள்ளத் தெளிவாகத் தெரியும். நகர்ந்து போய் பாட்டுப் பாடுகின்ற இரண்டு பெண்களைப் படமெடுத்தான். நாதஸ்வரக்காரன் வாசித்ததும் நாதஸ்வரக்காரனைப் படம் பிடித்தான். மெல்ல பின்னுக்கு நகர்ந்து போய் ஜூம் பேக் செய்து சற்று மேடான இடத்தில் நின்றபடி மொத்த ஊஞ்சல் கும்பலையும் படம் பிடித்தான். கேமராவிலிருந்து கண்ணை விலக்கி காபி டம்ளரைப் பார்த்தான்.

திருஷ்டி கழிவதற்காக சோற்று உருண்டையாய் நான்கு பக்கமும் பெண்மணிகள் வீசத் துவங்க வெள்ளைச்சட்டை அணிந்தவர்களில் விவேகமானவர்கள் நகர்ந்து போனார்கள்.

இதை எதற்குப் படமெடுப்பது என்று கேமராவை ஆஃப் செய்துவிட்டு காபி டம்பளர் நோக்கி நகர ஒரு சோற்று உருண்டை லொடக்கென்று காபி டம்ளருக்குள் விழுந்து காபியைச் சிதறிடித்தது. இரண்டு பேர் மேல் தெளித்தது. எந்த மடையன்டா இங்க காபி டம்ளர் வச்சான். காபித் துளிகளால் பாதிக்கப்பட்டவர் உரக்கக் கத்தினார்.

ஏன் இந்தத் திருமணத்தில் சோறு இப்படி சொதப்ப லாகிப் போய்விட்டது. பசி அதிகமாக இருக்கின்ற நேரத்தில் தான் எனக்கு வேலைகள் அதிகமாகின்றன. இன்று கூடுதலாக வேலை செய்ய வேண்டியிருக்குமா? எல்லோரும் வந்து விட்டார்களே. எதனால் எனக்கு மட்டும் வேலை அதிகமாக வேண்டும்.

எழில் கவலையோடு கேமராவைத் தூக்கிக் கொண்டு ஒரு மாடிப்படியேறி அங்கிருந்து மொத்த ஊஞ்சல் கூட்டத்தையும் படமெடுத்தான். ஜூம் செய்து மணமகளின் அழகைச் சிறை பிடித்துக் கொண்டான்.

இந்தப் பொண்ணு கொஞ்சம் அப்பாவியா இருக்கு. மெல்ல கேமராவை மணமகன் பக்கம் திருப்பினான்.

இவன் கெட்டிக்காரன். கொஞ்சம் திருடன். ஆனா, இவளுடைய அமைதிக்கு முன்னால் கட்டுப்பட்டுடுவான் என்று தோன்றியது. விளக்கை அணைக்க அவர்கள் மெல்ல சத்திரம் நோக்கி நடந்தார்கள்.

மணமகளும், மணமகனும் கைகோர்த்துக் கொண்டு சத்திரத்திற்குள் நுழைய ஆரத்தி எடுக்கப்பட்டது. அதையும் படம் பிடித்தான். இனி அடுத்தது... அடுத்தது.. என்று பல்வேறு, வேலைகள் இருக்கும். ஒரு கப் காபி நிச்சயம்

தேவைப்படும். அவன் கேமராவைக் கையில் தூக்கியபடி பாதை வழியே நடந்து மேடைக்குப் போனான்.

"என்னடா... டல்லா வர."

அவன் முகம் பார்த்துவிட்டு மதுசூதனன் கார்ட்லெஸ் போனில் கேட்டார்.

"ஒண்ணும் தின்னலை. பசி கொல்லுது."

"அப்போ போய் சாப்பிடறா."

"எங்க முடியும். இனிமே தடதடன்னு நிறைய மேட் டருங்க நடக்கும். இப்போ போனா நல்லாயிருக்காது."

"என்ன பண்ணப்போற."

"ஒரு காபிக்கு ஏற்பாடு பண்ணுங்க. கே.கே என்னை விட்டுப் போக முடியாது. வேற யாராவது ஒருத்தனை ஒரு டம்ளர் காபி கொண்டு வந்து கொடுக்கச் சொல்லுங்க."

"எவன்டா. எல்லாரும் எல்லா கார்னர்லயும் சரியா இருக்கானே. இரு நான் வரேன்."

"என்னா சொல்றீங்க."

"நான் காபி எடுத்துட்டு வரேன்டா."

"போறும். சும்மாயிருங்க."

அவன் அதட்டினான்.

பக்கத்துல இருக்கிற ஐயர் "தம்பி, என்னையா சொன்ன" என்று குனிந்து கேட்டார்.

"இல்லைங்க கார்ட்லெஸ்ல பேசறேன்."

"எது கார்ட்லெஸ்."

"காதுல மாட்டிகிட்டிருக்கேனே. அதுதான் கார்ட்லெஸ். எங்க முதலாளியோட பேசிகிட்டிருக்கேன்."

"உங்க முதலாளி எங்க இருக்காரு. மயிலாப்பூர்ல இல்ல உங்க கம்பெனி இருக்கு."

''ஹால்ல உட்கார்ந்திருக்காருங்க. சும்மா தொணத் தொணன்னு பேசாதிங்க.''

அலுத்துக் கொண்டான்.

''நான் எங்கடா தொணத்தொணன்னு பேசினேன். காபி கொண்டு வரேன்னுதானே சொன்னேன்.''

ஹெட்போனில் மதுசூதனன் அலுத்துக் கொண்டார்.

''ஸார். நான் உங்களைச் சொல்லலை. இங்க பக்கத்துல ஒரு ஐயரு. நொய் நொய்ங்கறாரு. எனக்கு காபி வேணாம் ஸார். நீங்க கொண்டாரதா இருந்தா வேணவே வேண்டாம்.''

''நான் உனக்கு எப்போ காபி கொண்டுவரேன்னு சொன்னேன்.''

பக்கத்திலுள்ள ஐயர் கேட்டார்.

''உங்ககிட்ட பேசலைங்க. முதலாளிக்கிட்ட பேசறேன்.''

''யோவ்.. பக்கத்துல என்னைப் பார்த்து சொல்லிட்டு முதலாளிகிட்ட பேசறேன். முதலாளிகிட்ட பேசறேன்னு சொன்னா என்ன அர்த்தம்.''

''இது காட்லெஸ்ஸுங்க. இது வழியா அங்க இருக்காரே அவர்கிட்ட நான் பேசிகிட்டிருக்கேன்.''

''என்னமோ காபின்னீயே.''

''உங்களுக்கு ஒண்ணுமில்லைங்க. சும்மாயிருங்க.''

''ஏண்டா... சும்மாயிருக்கச் சொல்ற. நான் காபி வாங்கிட்டு வரேண்டா.''

மதுசூதனன் பேசினார்.

''நான் பக்கத்துல இருக்கற ஐயர்கிட்ட பேசறேங்க.''

''பொத்திகிட்டு பேசேன்.''

''பொத்திகிட்டுத்தான் பேசறேன். கடைசி வார்த்தைக்கு கைய எடுத்துட்டேன். அப்புறம் உங்க காதுக்கு விழுந்துடுச்சு. நீங்க அதுக்குப் பதில் சொல்லிகிட்டிருக்கீங்க.''

''இப்போ காபி வேணுமா, வேணாமா. சொல்டா காபி வேணுமா, வேணாமா.'' பேசாமல் இருந்தான்.

''சொல்லுடா வேணுமா வேணாமா.''

''பசிக்குது ஸார்.''

''அப்போ நான்தான் போய் வாங்கிட்டு வரணும். இரு. நான் வரேன்.''

மதுசூதனன் நகர்ந்து டைனிங் ஹால் போவது தெரிந்தது.

எழில் வேதனைப்பட்டான்.

என்னதான் முதலாளி நட்பாக இருந்தாலும் காபி வாங்கி வர அவர்தான் போக வேண்டுமா. என்ன கஷ்டம்டா இது. நொந்து கொண்டான்.

''கேமராவை இறக்கி வைத்துவிட்டு ஓடி விடலாமா. ஓடிப்போய் ஒரு காபி குடித்துவிட்டு வரலாமா.''

அவன் போகலாம் என்று நினைத்தபோது யாரோ முதுகு தொட்டார்கள்.

''உன்னை மாடிக்கு வரச்சொல்றாங்க. அங்க வயசான தாத்தா, பாட்டி இருக்காங்க. அவருக்கு நமஸ்காரம் பண்றதுக்கு, அவரு திருமாங்கல்யம் ஆசீர்வாதம் பண்றதுக்கு, மாப்பிள்ளையும் பொண்ணும் மேல போறாங்க. அதை வந்து எடுக்கணும்னாங்க.''

வேறு வழியில்லை. தோளில் பேட்டரி மாட்டிக் கொண்டு அவன் படியேறினான். படியேறும்போது மெல்லக் கால்கள் நடுங்கின. தள்ளாடினான்.

நேற்று இரவும் சரியாகச் சாப்பிடவில்லை. காலையும் சரியாக உணவில்லை. இதென்ன இப்படி நம்மைப் பசி

துரத்துகிறதே என்று நினைத்துக் கொண்டான். சக்தியைத் திரட்டி முதல் மாடியை அடைந்தான். வராண்டாவை அடைந்து கும்பலாக இருந்த மாடியைப் போய் அடைந்தான்.

"கொஞ்சம் இருங்க. உள்ள பேசிகிட்டிருக்காங்க." என்று சொல்ல சிவனே என்று காத்துக் கிடந்தான்.

சட்டென்று போய் எடுத்துவிட்டு வரலாம் என்றால், அதற்கும் விடமாட்டேன் என்கிறார்கள் என்று அலுத்துக் கொண்டான். திடீரென்று அவனை அழைத்தார்கள். கதவு விரியத் திறந்தது. அவன் உள்ளே நுழைந்தான்.

ஒரு கிழவர் துவண்டு படுத்துக் கிடந்தார். அருகே ஒரு கிழவி உட்கார்ந்து கொண்டு பொக்கை வாயை அசைத்துக் கொண்டிருந்தாள். இரண்டு பேருக்குமே எண்பது வயதுக்கு மேல் இருக்கும் போலிருக்கிறது. அவர்களுக்கு அருகே மணமகனும், மணமகளும் நிற்க, மற்ற உறவினர்கள் இருக்க, அவன் எந்தப் பக்கத்திலிருந்து அவர்களை படமெடுப்பது என்று தெரியாமல் திண்டாடினான். ஒரு அறைக்குள் குறைந்த வெளிச்சத்தில் எப்படிப் படமெடுப்பது அவன் பேட்டரியிலிருந்து உயிரூட்டி விளக்கு போட்டான். கிழவருக்கு அருகே போனான்.

"கிழவர் இரண்டு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டார்."

"லைட் கூசறதே." என்று கத்தினார்.

"அணைச்சுடு... அணைச்சுடு.. அணைச்சுடு."

சகலரும் உரக்கக் கத்தினார்கள்.

"அவன் பயந்து போய் விளக்கு அணைத்துவிட்டு நாலாபுறமும் பார்த்தான்.

"படம் எடுக்க சொன்னீங்களே."

"விளக்கு இல்லாம படம் எடுப்பா. அவர் கண்ணு கூசுது இல்ல."

"விளக்கு இல்லாம கருப்பு கருப்பாத்தான் வரும். வேற ஒண்ணும் வராது."

"லைட் போறாதா."

"போறாதுங்க."

"லைட் போடக்கூடாது. அவரு மூஞ்சைப் பொத்திக் கறாரு பாரு."

"வெள்ளை வேட்டி இருக்குங்களா."

"அவன் கேட்டான்."

"எதுக்குக் கேட்கற."

"ஒரு வெள்ளை வேட்டிய விரிச்சு பிடிச்சிங்கன்னா, அதுல ஜன்னல்லேர்ந்து வர வெளிச்சம் பௌன்ஸ் ஆகி கிழவர் மூஞ்சியில படும்."

யாரோ மேல் துண்டை விரித்துக் காட்ட அவன் சரியென்று சொன்னான். அந்தத் துண்டை வாட்டமாகப் பிடிக்கச் சொன்னான். இப்போது அறைக்குள் வெளிச்சம் அதிகமாகியது. கேமராவின் எக்ஸ்போஷரை முழுவதும் திறந்தான்.

கிழவருக்கு அருகே போய் நின்று முகத்தைப் பட மெடுத்து மெல்லப் பின்னடைந்து அறையின் வாசலுக்குப் போய் அங்குள்ள அத்தனை பேர்களையும் படமெடுத்தான். வாயசைத்துக் கொண்டிருக்கிற அந்தக் கிழவியைப் பக்கவாட்டில் படமெடுத்தான். மெல்ல நகர்ந்து முகத்திற்குப் போனான். நெற்றிக் குங்குமத்தைத் துண்டாக எடுத்தான். மறுபடியும் பின்னடைந்து கிழவியின் முழு உருவத்தை எடுத்தான். அப்படியே திரும்பி கிழவர் படுத்துக் கொண் டிருப்பதை எடுத்தான். இன்னும் சற்றுத் திரும்பி வியப் போடு பார்த்துக் கொண்டிருக்கிற மணப்பெண்ணையும்,

அலட்சியமாகப் பார்த்துக் கொண்டிருக்கிற மணமகனையும் படமெடுத்தான்.

வயிற்றிலிருந்து பர் என்று ஒரு சத்தம் கிளம்பி ஏப்பமாக வந்தது. ஏதாவது உள்ள போடு என்று வயிறு மிரட்டியது.

"போறும்பா.. போறும்பா போதும். ஸ்டில் போட்டோகிராபரை வரச்சொல்லு."

அவர்கள் சொன்னார்கள்.

ஸ்டில் போட்டோகிராபர் வெளியே காத்துக் கிடந்தான். அவன் முடித்துவிட்டு நகர்ந்ததும் ஸ்டில் போட்டோகிராபர் உள்ளே போனான். நடுவே கொஞ்சம் இடைவெளி கிடைக்கும்போது மதுசூதனன் மிக்ஸரில் நின்றிருந்தார்.

"எங்கடா போயிட்ட காபி ஆறிப்போச்சு."

"ஆறிப்போயிருந்தாலும் பரவாயில்லை ஸார் கொடுங்க."

"இப்போதான் கொண்டு போய் கொட்டினேன்."

"ஏன் ஸார்."

"உன்னைக் காணுமேடா. போய் சாப்பிட்டு வந்துடு."

"நீங்க கேமரா பார்த்துகறீங்களா."

"ஆனா அவங்க லொள்ளு பண்ணுவாங்கடா. இந்த ஒரு டம்ளர் காபிக்கு என்னமோ டிபன் முடிஞ்சு போச்சு, டிபன் முடிஞ்சு போச்சுன்னு சொன்னாங்க. சாப்பாட்டு டைம்ல காபி கேட்கறீங்களேன்னாங்க."

"இல்லை ஸார். காபிக்கு போய் ஏன் பால் மாறுறாங்க."

"அங்கதான் பிரச்சினை. பால்லதான் ஏதோ தப்பாயிடுச்சு போலிருக்கு போ. அவனுக்கு பால் இல்ல. அதனால காபி கிடையாதுன்றான்."

"ஏதாவது வடை, இட்லி இருக்கா ஸார்."

"தெரியலை. போய்த்தான் கேட்கணும். நீ மேடைக்கு போ. நான் வேற ஏதாவது கொண்டு வரேன். ஜூஸாவது கொடுக்கறேன்."

அவனை மேடைக்கு அனுப்பிவிட்டு அவர் மறுபடியும் சமையலறை நோக்கி வேகமாகப் போனார்.

அவரைத் தொந்தரவு செய்வது அவனுக்கு வேதனையாக இருந்தது. அவன் படியேறி மேடைக்குப் போக, யாரோ அருகே வந்து கைதட்டிக் கூப்பிட்டார்கள்.

"என்ன."

"உங்களை வாசல்ல கூப்பிடறாங்க."

"வாசல்ல ஆள் இருக்கே."

"இல்லைங்க ஸார். உங்களை வாசலுக்கு கூப்பிடறாங்க."

"வாசல்ல ஒரு கேமராமேன் இருக்காங்க. அவரு எடுப்பாங்க. நான் மேடையில எடுக்கணும்."

"நீங்க எடுங்க ஸார். வாசல்ல ஒரு அம்மாவும், ஒரு பெண்ணும் உங்களைப் பார்க்கணும்னு கூப்பிடறாங்க."

"அம்மா, பொண்ணா, யாருப்பா அது."

"கொஞ்சம் சைடா இருக்காங்க ஸார்."

"ஏன் சைடா இருக்காங்க. கல்யாணத்துக்கு வந்தவங்கதானே."

"கல்யாணத்துக்கு வந்தவங்க இல்லை ஸார். உங்களைப் பார்க்கணும்னு வந்திருக்காங்க ஸார்."

சட்டென்று அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"என்னைப் பார்க்கவா இந்த இடத்திலா யார்."

"அம்மா வந்திருக்கிறாளா. அம்மாவோடு தங்கை வந்திருக்கிறாளா."

பயந்தான்.

''வெளியூர்லேர்ந்து வந்திருக்காங்களா.''

''இல்லை ஸார். லோக்கல்தான்.''

''நீ யாருப்பா.''

''நான் இந்த கல்யாணத்துக்கு வந்திருக்கேன்.''

''உங்களை ஏன் அனுப்பறாங்க.''

''இங்க நின்னுகிட்டிருந்தேன். கொஞ்சம் தயவு செய்து கூட்டிட்டு வாங்க தம்பின்னு கெஞ்சினாங்க. உங்ககிட்ட வந்தேன்.''

அவனுக்கு ஒன்னும் புரியவில்லை.

''கே.கே. கொஞ்சம் கேமரா பிடிச்சுக்கோ.''

''எடுத்துட்டுமா. ஏதாவது கேட்டாக்க.''

''செய்.. செய்... செய்டா.''

கே.கே.விடம் கேமராவைக் கொடுத்துவிட்டு அவன் முதுகில் பேட்டரி மாட்டி விட்டு வாசல் நோக்கி நடந்தான்.

எப்பொழுதுதான் உதவியாளராய் இருப்பவர்கள் கேமராவை இயக்குவது வழக்கம்தான். அவசியம் ஏற்பட்டா லொழிய இம்மாதிரி கேமராவை உதவியாளரிடம் ஒரு கேமராமேன் கொடுக்கக் கூடாது. கொடுப்பது வழக்க மில்லை. அதுவும் கே.கே விடம் கேமரா கொடுப்பது மதுசூதனனுக்குப் பிடிக்காது. அவன் பொறுப்பற்றவன். மிகவும் விளையாட்டுப் பையன் என்று அபிப்ராயம். ஆனால், இப்பொழுது யாரோ வாசலில் வந்திருக்கிறார்கள் என்றதும், அவன் மனம் பரபரத்தது.

''தம்பி கொஞ்சம் ஜாக்கிரதையா இருடா.'' என்று கே.கே.விடம் சொல்லிவிட்டு அவன் வேகமாய் படியிறங்கி அந்த நீண்ட ஹாலைக் கடந்து பலவகை நாற்காலிகளைத் தாண்டி பன்னீர் சொம்பு தாண்டி வெளியே போய் பார்க்க,

செடியின் மறைவிலிருந்து இரண்டு பெண்மணிகள் மறைவில் வந்தார்கள்.

யார் உற்றுப் பார்த்தான்.

ஒரு அசைவில் அவனுக்குப் புரிந்துவிட்டது.

அது மனோன்மணி. அது மனோன்மணியின் அம்மா. அதைத்தாண்டியும் யாரோ இரண்டு பேர் நின்றிருந்தார்கள். அவர்களை அவனுக்குத் தெரியவில்லை. மனோன்மணி மெல்ல வந்து அவன் எதிரே நின்றாள்.

அவள் உதடுகள் அழுவதற்குத் தயாராக சின்னக் கோணலோடு இருந்தன. மனோன்மணியின் அம்மா அவனையே பார்த்தபடி நின்றிருந்தாள். அவன் அவர்களையே வியப்போடு பார்த்தான்.

''இவங்க எங்க இங்க'' என்று திடுக்கிட்டவனாய் யோசித்தான்.

''நல்லாயிருக்கீங்களா.''

குரல் உடைந்து மனோன்மணி கேள்வி கேட்டாள்.

அவனுக்கு அந்தக் கேள்வி புரியவில்லை.

''என்னா..'' என்றான்.

''நல்லாயிருக்கீங்களா.''

மறுபடியும் கேட்டாள்.

''நல்லாயிருக்கேன். என்ன விஷயம். எதுக்குக் கூப்பிட்டீங்க.''

''சும்மாதான். பக்கத்துல ஒரு கல்யாணத்துக்கு வந்தோம். அங்க கல்யாணம் இருக்கறது தெரியலை. இந்த கல்யாணத்துக்கு வந்துட்டோம். வந்து பார்த்தா நீங்க படம் எடுத்துகிட்டிருந்தீங்க. அப்புறம்தான் நீங்க கேமராமேனா இருக்கறது தெரிஞ்சுது. அந்தக் கல்யாணத்துக்குப் போறதுக்கு

முன்னாடி உங்களாண்ட ஒரு வார்த்தை பேசிட்டுப் போக லாம்னு.''

''எதுக்கு மனோன்மணி, எதுக்குப் பேசணும்.''

''என்னமோ மனசே நல்லாயில்ல. மெட்ராஸ் வரும் போதே நினைச்சேன். உங்களைப் பார்ப்பேன் ரெண்டு வார்த்தை பேசுவேன்னு, அதேமாதிரி மெட்ராஸ் வந்த வுடனே உங்களைப் பார்த்துட்டேன். நல்லாயிருக்கீங்களா.''

''நான் நல்லாயிருக்கேன். மனோன்மணி.''

''நான் நல்லாயில்லை.''

மனோன்மணி நிதானமாகப் பேசினாள்.

தான் மூன்று முறை நல்லாயிருக்கீங்களா என்று கேட்டதே. நான் நன்றாக இல்லை என்று சொல்வதற்காக என்பதாக இப்போது புரிந்து கொண்டான்.

''ஏன் மனோன்மணி. நல்லபடியா வச்சுக்கறாங்க இல்ல. உங்க வீட்டுக்காரர். வந்திருக்காரா.''

''இல்ல. என் வீட்டுக்காரர் வரலை. நான் நல்லாயில்லை.''

''ஏன்.''

''டைவர்ஸுக்கு எழுதிப் போட்டிருக்கோம். கொடுத்துடு வாங்க. என்னமோ தலையெழுத்து. நீங்க நல்லாயிருக் கீங்களா.''

மறுபடியும் கேட்டாள்.

அவனுக்குத் தன்னுடைய கேமராவும், கே.கே. அதை வைத்திருப்பதும் ஞாபகம் வந்தது.

மனோன்மணி அதே மனோன்மணியாக இருந்தாள். அந்த அடையாளங்கள் இருந்தன. உதடு வளைவு. முகவாய்க் குழி. நெற்றியின் பரப்பு. எல்லாம் அதேதான். ஆனால், உடம்பு சற்று இளைத்திருந்தது. முகத்தில் நிறம் மங்கி யிருந்தது. கண்ணில் ஏதோ கவலை அப்பியிருந்தது. பத்து

நாள் ஏதோ திருத்தல யாத்திரைக்கு போய்விட்டு வந்த களைப்பு முகத்தில் இருந்தது. சந்தோஷம் குறைந்தது போலத் தெரியவில்லை. ஆனால் எதற்கு இவள் என்னைப் பார்க்க வந்திருக்கிறாள். இவளைப் பார்ப்போம் என்று நினைக்கவே இல்லையே. மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியா மல் அவன் தவிக்க, அவள் தாயை நோக்கி நல்லாயிருக்கீங் களாம்மா என்று கேட்க முயற்சித்து, சற்றுத் தடுமாறிக் கேட்டான்.

''என்னத்த நல்லாயிருக்கறது. இவ நல்லாயிருப்பான்னு சொல்லிட்டுத்தான் நாம நல்லது பண்ணோம். இது நல்லா யில்லையே. எவ்ளோ நல்லது பண்ணியும் நல்லாயில்லையே. நான் எப்படி நல்லாயிருப்பேன்.''

அவள் பேசுவது டி.வி. சீரியலில் வரும் வசனம் போல இருந்தது.

யார் நன்றாக இல்லை. தாயா, மகளா அல்லது இரண்டு பேருமா. இவளைப்பார்த்தால் சரியாகத் தானே இருக்கிறது என்று யோசித்தான்.

மனசுக்குள் கேமரா கே.கே விடம் இருக்கிறது என்பது உறுத்திக் கொண்டிருந்தது.

''உள்ள தாலி கட்டறப்போ கூப்பிடுவாங்க நான் வரேன்மா.''

அந்த அம்மாள் சட்டென்று வியந்தாள்.

''தாலி கட்ட கூப்பிடுவாங்களா.''

பயத்தோடு பேசினாள்.

''உங்களுக்குக் கல்யாணமா.'' என்றாள்.

''ஐயோ. அவரு கேமராமேன்மா. அங்க தாலி கட்டற துக்குக் கூப்பிடும்போது எடுக்க வேணாமா. அதுக்குக் கூப்பிடுவாங்கன்னு சொல்றாரு.''

''நான் பயந்தேபோயிட்டேண்டி.''

அம்மா சொல்ல, அவன் அவர்கள் பதிலுக்குக் காத்திரா மல் விருட்டென்று உள்ளே திரும்பி கிட்டத்தட்ட மேடை நோக்கி ஓடினான். வழியில் இரண்டு பேர் மீது முட்டிக் கொண்டு நின்று, அவர்களைத்தாண்டி மேடைக்குப் போனான். கே.கே. முழு வெளிச்சத்தில் அங்கு மணமகள் வருகையைப் படம்பிடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அங்கிருந்தபடி தொலைவில் உட்கார்ந்திருந்த மதுசூதனனை எட்டிப் பார்த்தான்.

"எங்க போயிட்ட." என்பதுபோல இரண்டு கைகளை யும் விரித்து ஒரு கோபப்பார்வை பார்த்தார்.

"கேமரா கொடுறா." என்று கே.கே யின் தோளைத் தொட, "இருங்கண்ணா பொண்ணு உட்கார்ந்துடட்டும். கொடுத்துடறேன்." என்று அவனுக்குக் கிடைத்த வாய்ப்பைச் சற்றும் பிசகாது முழுமையாய் பயன்படுத்திக் கொண்டான். அந்தப் பெண் உட்காரும்போது அவனும் மடிந்து கேமராவோடு உட்கார்ந்து அந்தப் பெண்ணை ஜூம் செய்தான். அவன் சரியாகச் செய்கிறான் என்பது அருகி லுள்ள டி.வியில் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

மேடைக்கு இன்னொரு கேமரா இன்னொரு ஆங்கிளில் போகும்படி கட்டளையிட்டு விட்டார். இனி தாலிகட்டுகிற சடங்கு வரைக்கும் இரண்டு கேமராக்களும் மாறி மாறி இயங்கும். கே.கே யிடமிருந்து கேமராவைத் தன் தோளுக்கு மாற்றிக்கொண்டான். ஃபோகஸ் அட்ஜஸ்ட் செய்தான். வியூ பைண்டரை ஒருமுறை வாயால் ஊதித் துடைத்தான்.

ஒரு எந்திரம்போல சடங்குகளைப் படம் பிடிக்க ஆரம் பித்தான்.

அவன் மனம் திருப்பூர் வேலம்பாளையத்துக்குப் பறந்து போய் உட்கார்ந்து கொண்டது. ராமகிருஷ்ணா மிஷன் பள்ளிக்கூடத்திலிருந்து பரீட்சை எழுதி விட்டு என்ன மார்க் கிடைக்குமோ என்று உட்கார்ந்து கொண்டிருந்தவன் வீட்டிற்கு பையன்கள் ஓடி வந்தார்கள்.

"டேய்... எழில் நீதான் ஸ்கூல் ஃபர்ஸ்ட்."

ஒருவன் தொலைவிலிருந்து உரக்கக் கத்தினான். மற்றவர்கள் அருகே ஓடிவந்து கை கொடுத்தார்கள்.

அம்மா பயந்து போய் சமையல் அறையிலிருந்து வந்து எட்டிப் பார்த்தாள்.

"நிஜமாவாடா. பொய் சொல்லாதீங்க."

"சத்தியமா. புஸ்தகம் சத்தியமா. நீதான்டா ஃபர்ஸ்ட். ஆயிரத்து நூத்திப்பத்து. ஸ்டேட் பர்ஸ்ட் ஆயிரத்து நூத்து நாப்பது. திருப்பூர் தினமலர் வாசல்ல போர்டு எழுதி வச்சுருக் காங்க. உன் பேர் எழுதியிருக்காங்கடா. மு.எழிலரசன்."

அவன் சிறிதுநேரம் மௌனமாக இருந்தான். ஓடிப்போய் முகம் கழுவிக்கொண்டான். வாய் கொப்பளித்தான். அப்படி முகம் கழுவிக் கொள்ளும் போது சிறிது நேரம் கொல்லைப் புற கிணற்றையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இங்கு உட்கார்ந்துதானே படிப்போம். நாம் பள்ளிக் கூடத்தில் முதலாவதாகத் தேறியிருக்கிறோமா, உண்மையா?

அவனுக்கு என்னமோ அந்தக் கிணற்றடிக்கு நன்றி சொல்லவேண்டுமென்று தோன்றியது. மெல்ல நகர்ந்து போய் கிணற்று கைப்பிடிச் சுவரைத்தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான். மறுபடியும் முகம் கழுவிக் கொண் டான். துண்டால் துடைத்துக் கொண்டான்.

அம்மா கொல்லைப்புறம் வந்து நின்றாள்.

"என்னடா.. பசங்களெல்லாம் நீதான் முதல் மார்க் குன்றாங்க. நிஜமாகவே இருக்குமா. இல்ல கலாட்டா பண்றாங்களா."

"நிஜமா இருக்கும்மா. நான் நல்லாதான் எழுதியிருந் தேன். இருந்தாலும் ஒரு சின்ன டவுட் ரெண்டாவதோ,

மூணாவதோ வருவேன்னு நினைச்சேன். முதல்னு சொல்றது எனக்குப் புரியலை. அந்த ஐயரு பொண்ணு காயத்ரிதான் வரும்னு நினைச்சேன். அது எங்கயோ கோட்டை விட்டுடுச்சு. கணக்கு சரியா பண்ணலை. கணக்கு சரியா பண்ணலைன்னு அழுதது. அதுல போயிட்டிருக்கும்.''

''வேற என்னமோ பேப்பர் ரொம்ப கஷ்டமா இருக்குன்னு சொன்னாங்க.''

''ஆமாம்மா. பிஸிக்ஸ். ஆனா, எனக்குக் கஷ்டமா யில்லை. எல்லாரும் கஷ்டமாயிருக்குற போது நான் ஈஸின்னு சொன்னா அலட்டிக்கறேன்னுவாங்க. அதனால நானும் கஷ்டமா இருக்குன்னு சொல்லிட்டேன். ஈஸியா தான்ம்மா இருந்தது. படிக்காதவனுக்கு தான் அந்தப் பேப்பர் கஷ்டம்.''

''எதுனா சாப்டுட்டுப் போறியா.''

அம்மா அவனை வாஞ்சையோடு பார்த்துக் கேட்டாள்.

''பசங்களெல்லாம் இருக்காங்களேம்மா எல்லாருக்கும் டீ கொடுக்கறியா.''

''கொடுக்கறேன்டா.''

அது வசதியான வீடு அல்ல. அதேசமயம் வசதி இல்லாமலும் இல்லை. வேலம்பாளையத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தள்ளி திருப்பூர் இருக்கிறது. திருப்பூர் உழைப்பவர்களின் சொர்க்கம். கஷ்டப்பட்டு உழைத்தால் நன்றாக காசு சம்பாதிக்கலாம்.

அப்பா பனியன் கம்பெனியில் சூப்பர்வைஸராக இருந்தார். எட்டாவது படித்து விட்டு பதினான்கு வயதில் பனியன் கம்பெனிக்குள் நுழைந்தவர், இதுவரைக்கும் நிட்டிங்தான் அவருடைய உயிர் மூச்சாக இருந்திருக்கிறது.

''நிட்டிங் கம்பெனி ஆரம்பிக்கிறீங்களா. முதல்ல முருகேசனைக் கூப்ட்டு மரியாதை பண்ணுங்கோ. அவர்

தொட்டு ஒருநாள் வேலை செய்யட்டும். கம்பெனி நல்லா யிருக்கும் ராசியான ஒர்க்கர். நல்ல மனசோட மிஷினைத் தொடுவாரு. பிரச்சினையே இல்லாது போயிட்டிருக்கும். கண்டவனை ஆரம்பத்துல விட்டா மிஷின் எதுனா தொந்தரவு பண்ணிகிட்டிருக்கும்.''

ஒரு பனியன் மிஷின் செட் செய்வதற்கு நேரமாகும். ஆனால், அப்படி மிஷின் சரியாக அமைந்துவிட்டால் எந்தவித இடைஞ்சலும் இல்லாமல் பல மாதங்களுக்குத் தொடர்ச்சியாக வேலை செய்து கொண்டிருக்கும். தொடுவார் தொட்டால் அந்த வேலை இன்னும் அதிகம் நீடிக்கும். முருகேசன் தொட்டு எதுவும் குறைந்ததில்லை. இதுவரையிலும் பலநூறு கம்பெனிகளுக்கு முதல் பண்டல் பனியன் துணி உருவ அவர் காரணமாக இருந்திருக்கிறார். பழைய மிஷின் வாங்கி செட் செய்தாலும் சரி, புதிய கொரியன் மிஷின் வாங்கி ஆரம்பித்தாலும் சரி, முருகேசனுக்கு நூற்றி யொரு ரூபாய் தட்சணை வைத்து அவனைத் தொட்டு ஸ்ட்ரெச் போடச் சொல்ல பல கம்பெனிகள் அழைத் திருக்கின்றன.

''இது ரொம்ப லேட்டஸ்ட் மிஷின். சத்தமே இருக்காது. ஃபேன் போட்டு நூல்ல இருக்கற தூசை அப்புறப்படுத்தறோ மில்லை. இது அந்த மாதிரி பண்ணாத, காத்தை இழுத்து நூல்ல இருக்கற தூசை உறிஞ்சுடுது. டஸ்ட் மொத்தமும் ஒரு தொட்டியில வந்து இறங்கிடும். பனியன் தொழிற் சாலைன்னா எப்பவுமே தூசு பறக்கற இடம்னு இனி இருக்காது.''

பதினைந்து ஸ்பிண்டில்களில் நூல் இழுத்து ஒரு பெரிய சிமெண்ட் குழாய் போல பனியன் துணி உருவாகிக் கொண்டிருக்கும்.

காலை ஏழுமணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பினால் அப்பா நிதானமாக கம்பெனி வாசலுக்குப் போய் அருகே

இருக்கிற டீக்கடையில் டீ சாப்பிட்டுவிட்டு, பேப்பர் படித்துவிட்டு, அன்றைய அரசியல் பேசிவிட்டு எட்டு பத்துக்கு கம்பெனிக்குள் நுழைவார். வெளியே வரும்போது அதேபோல எட்டுமணி ஆகிவிடும்.

வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல நேரே வீட்டிற்கு வருவார். குளிப்பார். சாப்பிடுவார். சிறிதுநேரம் டி.வி பார்த்துக் கொண்டிருப்பார். சட்டென்று தூக்கம் கண்ணை இழுக்க சாய்ந்து விடுவார். ஆறு நாளும் எந்திரம் போலும் வேலை செய்கின்ற அப்பா, சனிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு மதுபானக்கடைக்குப் போய் அரை பாட்டில் விஸ்கி வாங்கி வந்து அங்கங்கே நின்று ருசியாகக் குடித்து, கையேந்தி பவனில் உணவு உண்டு, பிறகு வீட்டிற்கு வந்து சிறிது நேரம் அலம்பல் பண்ணிவிட்டு படுத்துத் தூங்கி விடுவார். ஞாயிற்றுக்கிழமை நிதானமாக எழுந்து பல் தேய்த்து குளித்துவிட்டு, காலை ஒன்பது மணிக்கு சிவன் கோவிலுக்குப் போய் சாமி கும்பிட்டுவிட்டு, பகலில் சாப்பிட்டுவிட்டு மறுபடியும் நன்றாகத் தூங்கி இரவு அம்மாவுடன் உட்கார்ந்து அரட்டையடித்துவிட்டு, திங்கட்கிழமை காலையில் கம்பெனிக்குக் கிளம்பிவிடுவார்.

சனிக்கிழமை இரவு குடிப்பதுதான் அப்பாவுடைய ஒரே பொழுது போக்காக இருந்தது.

"உங்களுக்கு உடம்பு நல்லாயில்லை முருகேசன். ஏன் குடிக்கறீங்க" என்று டாக்டர் சொன்னதை, அவர் முற்றிலும் புறக்கணித்தார்.

"இந்த சனிக்கிழமை சாய்ந்திரம் சந்தோஷத்துக்காகத்தான் ஸார் நான் ஆறு நாள் நாயா பேயா உழைக்கிறேன். அது வேணாம்னா எனக்கு வேலையே வேணாம். வாழ்க்கையே வேணாம்" என்று திட்டவட்டமாக மறுத்தார்.

திடீரென்று ஒரு ஞாயிற்றுக்கிழமை சலவை சட்டையைப் போட்டுக் கொண்டு வெளியே போய் அக்காவிற்குத் திருமணம் பேசி முடித்துவிட்டு வந்தார்.

இன்னும் ஒரு மாசத்துல கல்யாணம். என்ன வேணும்னு கேளு. காசு கொண்டு வந்து போட்டுடறேன். கல்யாணம் பண்ண வேண்டியது உன் பொறுப்பு என்று அம்மாவை மிரட்டினார்.

பெண் பார்ப்பதற்கு மாப்பிள்ளை வரவில்லை. குடும்பம் மட்டும் வந்தது. மாப்பிள்ளை தனியாக மோட்டார் சைக்கிளில் வந்து மிக சகஜமாகப் பேசி, வெறுமே காபி சாப்பிட வந்த நண்பர்போல, எந்தவித பந்தாவும் இல்லாமல் அக்காவோடும், அம்மாவோடும், அவரோடும் சிரித்து பேசிவிட்டுப் போக, அப்பாவின் சாமர்த்தியம் அவன் உறவு களை அதிசயப்பட வைக்கச் செய்தது. மிக நல்ல மாப் பிள்ளை என்று தெரிந்து அம்மாவும் கொண்டாடினாள். சொன்ன தேதியில் அக்காவின் திருமணம் நடந்தது.

பத்திரிகை கொடுக்கும்போதே பொருளாகக் கொடுப் பதை விட பிளாஸ்டிக்காக வழங்குவதை விட காசு கொடுத்துவிடுங்கள் என்று சூசகம் காட்டினார்.

மொய் பணம் குவிந்தது. கல்யாண செலவு போக பாக்கி பணம் நின்றது.

"ஜாக்கிரதையா வச்சுக்கோ. திருப்பியும் எதுனா செலவு வரும். தேவைப்படும். வளைகாப்பு, சீமந்தம், பிள்ளைப் பேறுன்னு தொடர்ந்து எதுனா வந்துட்டே இருக்கும். முப்பது வருஷமா இந்தத் திருப்பூர்ல எத்தனை கல்யாணத் துக்கு மொய் எழுதியிருப்பேன். இப்போ நம்ம வீட்டு கல்யாணம். அதான் மொய் பணம் குவிஞ்சிடுச்சு.

மறுபடியும் போய் மொய் கேட்டா கிடைக்குமா? கிடைக்காது. நல்லவேளையா இன்னொரு பொண்ணு பெத்துக்கலை. புள்ள பொறந்துட்டான். இவன் நிமிர்ந்து

நல்லா சம்பாதிக்கிற வரைக்கும் நான் பனியன் கம்பெனிக் குப் போய்த்தான் ஆகணும். கை வலிக்குதோ, கால் வலிக்குதோ, நெஞ்சு வலிக்குதோ, தலை சுத்துதோ வழியே கிடையாது. அங்க போய் சேர் போட்டாவது உட்கார்ந்து தான் ஆகணும். பன்னெண்டாயிரம் ரூபா சம்பளம். யார் தருவா சொல்லு.''

ஆனால், அப்பா அதிசயமாக குடிப்பதை நிறுத்தினார்.

''ஏன் தடுக்குனு விட்டுட்ட.''

''ஒரு பயம்தான். இன்னிக்கு தேதிக்கு டாக்டர் செலவு எவ்வளவு ஆகும். வந்த காசெல்லாம் வியாதிக்குப் போனா நல்லாயிருக்குமா. உடம்பு நல்லாயிருந்தது குடிச்சோம். இப்போ உடம்பு பலவீனமா இருக்கு. நிறுத்திடணும். நிறுத்திட்டேன்.''

அப்பாவின் மன உறுதி அவனுக்கு ஆச்சரியமாக இருக்கும்.

''அந்தாள் மன்னன்பா. வாரா வாரம் தண்ணி போடுவான். அரைபாட்டில் தண்ணி போடுவான். அதையும் டப்புனு நிறுத்திட்டான் பார். குடிச்சு சீரழியறவன் எத்தனை பேர் இருக்கான் தெரியுமா. இந்தாளை ஓசியில் குடிக்க கூப்பிட்டாக்கூட வரமாட்டேன்றான்.''

''அப்பா கிங்குமா என்ன சொல்ற நீ.''

அம்மா மௌனமாக இருந்தாள்.

''ஏன் அப்பாவைக் கொண்டாட மாட்டேன்ற.''

''கொண்டாடறதுன்னா என்ன பேசறதா. அவரை நான் எப்படிக் கொண்டாடறேன்னு எனக்குத் தெரியும்.''

அம்மா மிருதுவாகப் பேசினாள். அவன் வியப்போடு பார்த்தான்.

''அவரு சாப்பிடும்போது பார்த்திருக்கியா. இது வேணும். அது வேணும்னு ஏதாவது கேட்டிருக்காரா. என்னிக்காவது

சோப்பு வேணும். சீப்பு வேணும்னு கேட்டிருக்காரா. அது அது டக்டக்குனு எடுத்துக்கொடுப்பேன். அது மேலயே கவனமா இருப்பேன். ஒரு நல்ல பொண்டாட்டி புருஷனைப்பத்தியும் பேசமாட்டா. புருஷன்கிட்டயும் பேச மாட்டா. எட்டுமணிக்குப் போய், எட்டு மணிக்கு வராரு. சம்பாதிக்கறாரு. துட்டை வீட்ல கொடுக்கறாரு. அவருக்கு வேணுங்கறது செய்யறதுதான் என் வேலை.''

''என்னடா, உங்கம்மா என்னை எப்படி கொண்டாட றான்னு தெரியுமா. என் கால்ல, கையில நகம் வளர்ந்து பார்த்திருக்கியா. நான் என்னிக்காவது நகம் வெட்டிப் பார்த்திருக்கியா. நான் தூங்கறபோது என் காலைத்தூக்கி மடியில் வச்சுகிட்டு சுத்தமா நகத்தை கட் பண்ணிடுவோ. ஒருநாளும் தூக்கம் கலையாது.

நின்னு நின்னு ஆடுகால் தசை வலிக்கும். ஆடுகால் தசையை அப்பளக்குழவி உருட்டி விடறாப்போல கொஞ்சம் உருட்டி நரம்பை அழுத்தி ரத்த ஓட்டத்தைச் சீர் பண்ணுவோ. என் தூக்கம் கலையாது. அவகிட்ட சொல்லாதயா குடிப்பேன். அவகிட்ட கல்யாணத்துக்கு நாலாவது நாளே சொல்லிட்டேன். சனிக்கிழமை ஆறு மணியிலிருந்து பத்து மணி வரைக்கும் என்னைத்தேடாத. தண்ணி போட்டு வருவேன். பயப்படாத, நான் குடிகாரன் இல்லை. ஓய்வு நாளைக் கொண்டாடறவன். அவ்ளோதான். அவளுக்குப் புரிஞ்சு போச்சு. குடிச்சுட்டு கையேந்தி பவன்ல சாப்பிட்டா வயிறு கெட்டுடும்னு டிபன் பாக்ஸ்ல தோசை, மிளக்காய் பொடி எடுத்துட்டு வந்து கடை வாசல்ல நிப்பா. பையன்கிட்ட கொடுத்தனுப்புவா.

நான் ரொம்ப அதிர்ஷ்டக்காரன்டா. உங்கக்காவுக்கு கல்யாணம் ஆனது என் காசாலயா. என் முகத்தாலயா. பொண்ண விசாரிச்சாங்க. பொண்ண விசாரிக்கும் போது உங்கம்மாவை விசாரிச்சாங்க. அந்தம்மா பொண்ணு அவ

நல்லா வளர்த்திருப்போ. கண்ணை மூடிகிட்டு கல்யாணம் பண்ணிக்கோங்கன்னு சொன்னாங்க. கண்ணை மூடிட்டு கல்யாணம் பண்ணிகிட்டான்.

உங்கக்கா முழுகாம மாசமா இருக்கறா. கொஞ்ச நாள் இங்கேயே இருந்துட்டு வாடி அப்படின்னா, எங்க வீட்டுக் காரருக்கு யார் சோறு போடறது. நான் இங்கேயே இருக் கேன்னு சொல்லிட்டாளாம். அம்மாவை அனுப்பி வைக் கட்டுமான்னு கேட்டேன். நாங்க இருக்கறதுக்கே இடம் போறலை. அம்மா வந்தா எங்க இருக்கறது. வேணாம்னு சொல்லிட்டா. அவ புருஷனும் அதிர்ஷ்டக்காரன். உலகத்துல யாராள சந்தோஷமா இருக்க முடியும் தெரியுமா. பொண்டாட்டி வாஞ்சையா இருக்கறவனால.''

மெதுமெதுவாக அம்மாவின் புகழை அப்பாவிட மிருந்தும், அப்பாவின் புகழை அம்மாவிடமிருந்தும் அவன் காதுகுளிர கேட்டிருக்கிறான்.

இது மிகப்பெரிய கொடுப்பினை. எல்லாக் குழந்தை களுக்கும் இது கிடைப்பதில்லை என்று அவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது.

பள்ளியிலேயே முதலாவது என்று ரிசல்ட் வந்தவுடன் அவன் கொஞ்சம் ஆடிப்போனான். இவனோடு படிக்கும் காயத்ரி தான் முதலில் வரவில்லையென்றதும் தூக்க மாத் திரை அதிகம் சாப்பிட்டு விட்டதாக தகவல் வர, ஓடிப்போய் அவளைப் பார்க்கப் போனான்.

''கணக்கு நல்லாவே பண்ணலைன்னு சொன்னியேடா. இருநூறு மார்க் வாங்கியிருக்கியேடா.''

காயத்ரி ஆஸ்பத்திரியில் இருந்தபடி கத்தினாள். அவன் மேலும் அதிர்ச்சியானான்.

''எழிலரசனைப் பார்க்க வரவேணாம்னு சொல்லுங்க. அவனைப் பார்க்கறதுக்கு எனக்குப் பிடிக்கலைன்னு சொல்

லுங்க.'' என்று அவள் கத்த, ஒரு பெண்ணுக்குள் இவ்வளவு வன்மமா என்று கலவரமானான்.

''மேற்கொண்டு என்னடா பண்ணப் போற. இன்ஜீனிய ரிங்கா, மெடிசனா.''

ஆசிரியர்கள் கேட்க, ''உள்ளூர் காலேஜ்லயே பி.எஸ்.ஸி. கம்ப்யூட்டர் சயின்ஸ் சேரப்போறேன் ஸார்.''

அவன் பதில் சொல்ல அவர்கள் பாராட்டினார்கள். உள்ளூர் கல்லூரியில் கூப்பிட்டு இடம் கொடுத்தார்கள். சிங்க கிளப், தானே பணம் கட்டுவதாய்ச் சொல்ல, அவன் சந்தோஷமாய் நன்றி சொன்னான்.

பல்வேறு பள்ளிக்கூடத்திலிருந்து அந்தக் கல்லூரிக்கு மாணவர்கள் வந்து சேர்ந்திருந்தார்கள். பாடத்திட்டங்களில் ஏதோ கோளாறு அடிப்படையாய் அரசாங்கத்தின் மீது ஏதோ அவநம்பிக்கை. சென்னையிலுள்ள மாணவர்கள் ஏதோ போராட்டம் நடத்த அது கோவையிலும், திருப்பூரிலும் எதிரொலித்தது. காலவரையின்றி கல்லூரிகள் மூடப்பட்டன. பேண்ட்டும், டி.ஷர்ட்டும் சைக்கிளும் புத்தகமும் மணிபர்ஸுமாய் கல்லூரிக்குப் போகும் கட்டிளங்காளையாக அவன் ஊர் சுற்றி வந்தான். சிங்க கிளப் உதவி செய்ததுபோல இன்னொரு கிளப்பும் உதவி செய்ய முன் வந்தது.

''நோட்ஸ் வாங்கணும் ஸார். காசாக் கொடுங்க என்று அவன் கேட்க, அப்படியே நிதி கொடுக்கப்பட்டது.

கல்லூரி நண்பர்களோடு அந்த நிதியை நிதானமாகச் செலவு செய்தான். அவனுக்கென்று தனியே ஒரு கூட்டம் சேர்ந்தது.

''அகிரோ குரோசோவா தெரியுமா.''

பட்டினத்துப் பையன் ஒருவன் உரத்த குரலில் கேட்க, எல்லோரும் திரும்பி அவனைப் பார்த்தார்கள்.

அகிரோ குரோசோவாவின் செவன் சமுராய் என்ற ஒரு படம் பற்றி அவன் விவரிக்க ஆரம்பித்தான்.

பையன்கள் வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"திரும்பத் திரும்ப தமிழ்ப்படத்தைப் பார்த்துகிட்டிருந்தா என்னிக்கு ரசனை வளர்க்கறது. என்னிக்கு தமிழ் சினிமா தலையெழுத்தை மாத்தறது" என்று அவன் பெரிதாய்ப் பேச எல்லோரும் கவலையோடு தலையாட்டினார்கள்.

"அவர் படங்களை எங்க பார்க்க முடியும்" என்று கேட்க, "திருப்பூர்ல பார்க்க நான் ஏற்பாடு பண்றேன். கொஞ்சம் செலவு பண்ணணும்" என்று அவன் தோள் தட்ட, எப்படி என்று விசாரித்தார்கள்.

அவன் சிங்க க்ளப்புக்குப் போய் நிதியுதவி கேட்டான். அவர்களையே நல்ல படங்களைத் திரையிடுவதற்கு ஏற்பாடு செய்யச் சொன்னான்.

க்ளப்பிலுள்ள ஜாலியான பணக்கார மனிதர்கள் உதவி செய்ய ஒத்துக்கொண்டார்கள். ஏழு படப்பெட்டிகள் சென்னையிலிருந்து வந்தன. சிங்க க்ளப்பிற்கு பாதி டிக் கெட்டும், முன்னால் இருந்த பாதி வரிசை மாணவர்களுக் கும், நடுவிலிருக்கின்ற பத்து வரிசை பொது மக்களுக்கும் வழங்கப்பட்டன.

"காசு நல்லா ஹாண்டில் பண்ணாதான் க்ளப்புல நம்புவாங்க. காசுக்கு எப்படி கணக்குச் சொல்றதுன்னு நான் சொல்லித்தரேன்.

அந்தப் பட்டினத்துப்பையன் நானூற்று முப்பது போஸ்டர் ஒட்டியதாய் முதல் பொய் கணக்குச் சொன் னான். நான்கு நண்பர்கள் உதவியோடு வெளியே கொண்டு வந்த பிலிம் பெட்டிக்கு லக்கேஜ் கட்டியதாய் ஒரு காசு எழுதினான். காபி, டீ, ஆட்டோரிக்ஷா என்று பல்வேறு கணக்குகள் எழுதி சிங்க க்ளப் மேலோட்டமாகப் பார்த்து

விட்டு காசு கொடுத்தது. இன்னும் கொஞ்சம் கொடுங்க ஸார். மத்தபடிக்கு எங்க கை காசு போடறோம். முடிஞ்சா டொனேஷன் கொடுங்க ஸார்."

கதவருகே கலெக்ஷன் நடந்தது.

அகிரோகுரோசோவாவின் ஏழு படங்களும் மூச்சுத் திணற வைத்தன. கலையழகு நெஞ்சைத் தாக்கியது. இப்படி யெல்லாம் படம் இருக்கா. விவாதித்து விவாதித்து ஒவ்வொரு ப்ரேமாக அனுபவிக்கத் துவங்கினார்கள். ஒரு முறைக்கு இரண்டு முறை படம் பார்த்தார்கள். சினிமா என்கிற போதை மெல்ல மெல்ல உள்ளுக்குள் இறங்கியது.

"அகிராகுரோசோவா ஒரு மனுஷன்தானே. அவனால ஒரு படம் எடுக்க முடியும்னா, அவன் எடுக்கற படத்துல பாதி நம்மால எடுக்க முடியாதா."

கேள்வி வந்தது.

"சினிமான்னா ஸ்க்ரீன் ப்ளே. அதுதான் முக்கியம். அதுதான் ஆணிவேர்."

எந்த நேரமும் சினிமாவைப் பற்றியே பேசினார்கள். தமிழ் சினிமாவையும் சுற்றிப் போய் பார்த்து வந்தார்கள். பெட்டியைக் கொடுக்கும் போது கூட நான்கு பையன்கள் போனார்கள். ஸ்டுடியோ வாசலில் போய் நின்றார்கள். இந்த நடிகர் இருக்கிறாரா. அந்த நடிகர் இருக்கிறாரா என்று பார்த்தார்கள்.

"சினிமா ரொம்ப சுலபம் தம்பி."

மதுரையிலிருந்து வந்த ஒரு இயக்குனர் அடிக்குரலில் பேசினார்.

"என்ன சொல்லப் போகிறோம். எப்படிச் சொல்லப் போகிறோம். இந்த ரெண்டு கேள்விக்கு பதில் இருந்தா உங்ககிட்ட சினிமா ஸ்க்ரிப்ட் தயார். ஸ்க்ரிப்ட் தயாரா இருந்து புரோடியூசர் கிடைச்சுட்டார்னா இழைச்சு இழைச்சு

படம் எடுத்துடலாம். ஒரு பொண்ணு கெட்டுப் போயிட்டா, காலேஜ்ல ஒருத்தன் ஏமாத்தி கெடுத்துட்டான். அப்புறம் எங்க போறது வீட்டுக்குத்தான் வரணும். வீட்டுக்கு வந்து அப்பா, அம்மாகிட்ட அந்த விஷயத்தைச் சொல்லி அழு வணும். எங்க ஆரம்பிப்ப, யார் மூஞ்சியில் முதல்ல கேமரா இருக்கும்.''

''அந்த பொண்ணு மூஞ்சியிலதான் ஸார்.''

''தேவையில்லை. அப்படியொன்னும் நியதியில்லை.''

அவர் உற்சாகமாக அவனுக்கு எதிரொலித்தார்.

''வேற எப்படி ஸார்.''

ஆச்சரியத்தோடு வினவினான்.

''அந்த வீட்டை காண்பிக்கலாம். அந்த வீடு சந்தோஷமா என்ன நடந்துன்னு தெரியாத ஒருத்தரையொருத்தர் சீண்டி விளையாடிட்டிருக்கு. அப்போ டபடபன்னு மழைவருது. முற்றத்துல இருக்கற மிளகாய் வத்தலை. துணிமணியை மாத்தி மாத்தி போட்டி போட்டுண்டு எடுத்துகிட்டிருக் காங்க. சே.. என்ன மழைன்னு சொல்றாங்க. மழையை கோச்சுக்காதீங்க. மழை வரட்டும்.''

''மிளகாய் வத்தலெல்லாம் போச்சே.''

எது கெடுதல்னு நினைக்கறோமோ அதுவே நல்லது. எது நல்லதுன்னு நினைக்கறோமோ அதுவே கெடுதல். அப்படின்னு ஒரு டயலாக் த்ரோ பண்றோம். இதை யார் வேண்டுமானாலும் சொல்லலாம். அந்த நேரம் கேமரா திரும்பிப் பார்க்குது. அந்த வீட்லேர்ந்து சற்றுத் தொலைவுல அந்தப் பொண்ணு மழையில நனைஞ்சு மெல்ல நடந்து வரா. வீட்டுக்குள்ள ஒரு சிரிப்புச் சத்தம். அந்தப் பொண்ணு மூஞ்சிய பார்க்கும்போது சோகமா வயலின் சத்தம்.

இடி இடிக்குது. அந்த வீடு பயத்துல, சிரிப்புல காதைப் பொத்திக்குது. அர்ஜுனா, அர்ஜுனான்னு... கிட்டக்க வரா.

அந்த வீடு சிரிக்குது. அந்தப் பொண்ணு கிட்டக்க வரா. அந்த வீடு இன்னமும் சிரிக்குது. அந்தப் பொண்ணு கிட்டக்க வரா அந்த வீடு இன்னும் சிரிக்குது. அந்த பொண்ணு கிட்டக்க வரா அந்த வீடு இன்னும் சிரிக்குது. அந்த பொண்ணு இன்னமும் கிட்டக்க வரா. அந்த வீடு சிரிக்குது. இடி இடிக்குது. மழை பெய்யுது. அந்தப் பொண்ண பார்த்துட்டு வீட்ல எல்லோரும் சட்டுனு சைலண்ட் ஆயிடறாங்க. இடி சத்தம், வெளிச்சம், மின்னல் வெளிச்சம்.

''என்னம்மா என்னாச்சு.''

அப்பா கேட்கறாரு.

''அப்பா.. அப்படின்னு அவ ஒ..ன்னு கத்தி அழுவறா. திருப்பியும் இடி சத்தம். தொடர்ந்து இடி சத்தம் அவ ஏதோ சொல்றா, வீட்ல இருக்கற ஓடு சரசரன்னு சரிஞ்சுது. வீட்டை இடி தாக்கிடுச்சு. இப்படித்தான் எடுக்கணும்.''

''ஸார், யூ ஆர் க்ரேட் ஸார்.''

மாணவர்கள் வியந்தார்கள்.

''சும்மா தோணினதச் சொன்னேன். நான் இப்படி எடுப்பேன். எடுக்கவும் மாட்டேன். வேற விதமாகவும் எடுக்கலாம்.''

''வேறவிதமான்னா.''

''நீ யோசனை பண்ணுய்யா. எத்தினி சினிமா பார்க்கற. அகிராகுரோசோவா பேசினீங்க இல்ல. நீங்களும் அகிரா குரோசோவாதான். யோசனை பண்ணுங்கய்யா.''

அந்த நேரம்தான் சினிமா விடமுடியாத மிகப்பெரிய போதையாயிற்று.

''அவர் வீடு பார்த்தியா.''

''பார்க்கலையே.''

"மொத்தமும் சலவைக்கல்லுடா. மாடிப்படிக்கெல்லாம் சலவைக்கல். ஹால்லயே தனியே பார் வச்சுருக்கார் பார்த்தியா."

"பார்க்கலையே."

"எனக்குத் தெரியும். நீ அவரு மூஞ்சியையே.. ஆ..ன்னு பார்த்துகிட்டிருந்த. என்னா துட்டு தெரியுமா. ரொம்ப சாதாரண ஆளா இருந்தாரு. முதல் படத்துல சுமாரா சம்பா திச்சாரு. ரெண்டாவது படம் நல்லாப்போச்சு. அதுலயும் நல்லா சம்பாதிச்சாரு. மூணாவது படம் டாப் கியர்ல போச்சு. அவ்ளோதான் அவர் ரேஞ்சே வேற. உதவி டைரக்டரா இருந்த பொண்ணையே கல்யாணம் பண்ணி கிட்டாரு. அந்தம்மாவுக்கும் சினிமா தெரியும். அந்த ஐயா வுக்கும் சினிமா தெரியும். அடுத்தடுத்து நான்கு படங்கள் சக்ஸஸ். அவரே முதன்முதலா புரொடியூஸ் பண்ணாரு. அதுவும் சக்ஸஸ்."

"கல்லூரி திறந்து பாடங்கள் துவங்கின. ஆனால், மனம் முழுக்க சினிமாவில் மிதந்தது. பி.எஸ்.ஸி. கம்ப்யூட்டர் சயின்ஸ் படிச்சு என்ன பண்ணப் போற சொல்லு. கம்ப்யூட்டர்னா. பி.இ கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கணும். வாழ்க்கையில ஸ்கோப் இருக்கு. இல்ல, எங்கயாவது போய் கம்ப்யூட்டர் சென்ட்டர்ல வேலை செய்யணும்."

பையன்கள் அலுப்போடு பேசினார்கள். எழிலும் அதை உள்வாங்கிக்கொண்டு அவனும் அலுப்போடு பேசினான். பி.எஸ்.ஸி. கம்ப்யூட்டர் சயின்ஸ் வேஸ்ட் என்று சொன்னான்.

"அப்புறம் எதுக்குப் படிக்கிற வெளியே போ." என்று பேராசிரியர் சொல்ல கும்பலாய் பையன்கள் சினிமா பார்த்தார்கள்.

"ஃபெல்லினி அப்படின்னு ஒருத்தன் இருக்கான்."

அவன் படம் பத்திச் சொல்றேன்.

பட்டிணத்துப் பையன் உட்கார்ந்து பேச, அந்தப்படம் பற்றியும் அவர்கள் விவாதித்தார்கள்.

சிங்க க்ளப்பினால் நடுவே காசு புரண்டிருந்தது. சட்டென்று காசில்லாமல் வறட்சியாக இருந்தது.

"ரொம்ப செலவு பண்ற, என்னால அவ்ளோ தாக்குப் பிடிக்க முடியாதுப்பா" அப்பா சொல்லிவிட, அவன் புரிந்து கொண்டு மெல்ல விலகினான்.

"ரெண்டு ரூவா கொடுத்து ஹோட்டல் போய் சாப்பிடு டான்னா ஒரேயொரு மசால் தோசை சாப்டுட்டு மிச்சம் முக்கா ரூவா கொண்டு வருவான். இப்போ என்னன்னாக்கா இருவது ரூபா ஒரு நாளைக்கு செலவு பண்ணிட்டு போறலைன்றான். ஏதாவது கெட்டப்பழக்கம் வந்துடுச்சா. பாக்கு இன்னும் ஏதாவதுன்னு."

அப்பா சொல்ல, "ஒரு கெட்ட பழக்கமும் இல்லை" என்று சத்தியம் செய்தான்.

"டுடோரியல் காலேஜ் அவனை அணுகியது. காசுக்கு கஷ்டப்படறியாமே. ஒரு சின்ன வேலை செய்யறியா. மாசாமாசம் காசு தரேன்."

"என்ன"

"டியூஷன் எடுக்கறியா டென்த்துக்கு. கணக்கு மட்டும் சொல்லிக்கொடு. இந்தக் காலேஜ்ல கோச்சிங் எடுக்கறேன்னு சொல்லு. உன்னை வச்சு விளம்பரம் பண்ணிக்கறோம்."

"எவ்ளோ தருவீங்க."

"இது என்ன பிஸினஸ்ஸா. நீயொரு ஹெல்ப். நான் ஒரு ஹெல்ப். அவ்ளோதாம்மா பண்ண முடியும்."

"எத்தனை தருவ ரூபாய்ல சொல்லு."

"ஒரு மாசம் ஐநூறு தரேன்."

"எதுக்கு."

"டியூஷனுக்கு. விளம்பரத்துக்கு."

"டியூனுக்கு ஐநூறு ரூபா தரணும். அஞ்சு பேருக்குத்தான் எடுப்பேன். கணக்கு மட்டும்தான் எடுப்பேன். விளம்பரத்துக்கு ஐயாயிரம் ரூபாய் தரணும்."

அந்த டுடோரியல் மேனேஜர் கெஞ்சிப் பார்க்க, அவன் முடியாது என்று மறுத்துவிட்டான்.

"திருப்பூர்ல மொத்தம் ஆறேழு கோச்சிங் சென்டர் இருக்கு. உன் கோச்சிங் சென்டர் ரொம்ப சுமார்னு நான் சொன்னா, பசங்க நம்புவாங்க. வீணா வம்பு பண்ணாத."

இப்போது எழில் மிரட்டத் துவங்கினான்.

இதையெல்லாம் அந்தப் பட்டணத்துப் பையன் மிக அழகாகச் சொல்லிக் கொடுத்தான்.

கோச்சிங் சென்டர் மிரண்டது. அவன் சொன்னதற்குக் கட்டுப்பட்டது.

ஐந்தாயிரம் ரூபாய் காசு கொடுத்து அவனை போட்டோ எடுத்துக் கொண்டது.

பள்ளியில் முதல் மாணவனாகத் தேறியவர், எங்கள் தயாரிப்பு என்று விளம்பரம் செய்தது.

அவன் பள்ளிக்கூட ஆசிரியர்கள் வேதனைப் பட்டார்கள்.

"என்ன தம்பி இப்படி பண்ணிட்ட. நாங்க விழுந்து விழுந்து சொல்லிக் கொடுத்தோம். அவன் ஒரு மக்கு பிளாஸ்திரி. அவன் தயாரிப்புன்னு உன்னைச் சொல்றியே. உனக்கே வெட்கமா இல்லை" என்று மூன்று நான்கு ஆசிரியர்கள் கடிந்து கொண்டார்கள். அவன் வெறும் மரக்கட்டை போல நின்றான். காசு அவன் முகத்தை மாற்றியிருந்தது.

"என்னடா.. தூணுக்குத் தூண் உன் முகம் ஒட்டியிருக்கான். என்னமோ பிக்பாக்கெட் கேஸுக்கு பிடிக்கற மாதிரி இருக்குது. நல்ல போட்டோ கொடுக்கக்கூடாது."

அப்பா அலுப்பா பேசினார்.

கல்லூரி விட்டதும் மாலை ஐந்து மணிக்கு சைக்கிளில் டியூஷன் சென்டர் போனான். ஐந்து பெண்களும், ஐந்து பையன்களும் காத்திருந்தார்கள்.

டியூஷன் சென்டர் முதலாளியிடம் போய் பாடம் எடுக்க முடியாது என்று சொன்னான். டியூஷன் சம்பளம் இரட்டிப்பாக வேண்டும் என்று சொன்னான். என் போஸ்டர் பக்கத்திலேயே இன்னொரு போஸ்டர் ஒட்ட முடியும் என்று பயமுறுத்தினான்.

டுடோரியல் முதலாளி ஆயிரம் ரூபாய்க்கு ஒத்துக் கொள்ள, அந்த மாணவர்களுக்கு நடுவே உட்கார்ந்து கொண்டான்.

திருப்பூரிலேயே முதல் மாணவனாகத் தேறியவன் எதிரே வந்து உட்கார்ந்ததும் அந்த பத்தாவது படிக்கிற பெண்களும், பையன்களும் எழுந்து நின்று கை கூப்பினார்கள். அவனுக்கு சந்தோஷமாக இருந்தது.

"உட்காருங்க. உட்காருங்க. கடைசியா என்ன படம் பார்த்தீங்க" என்று அவர்களோடு அரட்டையடிக்க ஆரம்பித்தான். அங்கிருந்த மாணவர்கள் தெளிவானார்கள். படம் பற்றிப் பேசினார்கள். அவன் அவர்களுக்கு நல்ல படம் பற்றி விவரித்தான். சட்டென்று நிறுத்தினான். ஒரேயொரு கணக்கு போட்டு கலைஞ்சுடுவோம் என்று சொல்லி கரும்பலகையில் ஒரு கணக்குப் போட்டான்.

"புரிஞ்சுதா. புரியலையா."

மற்றவர்களெல்லாம் அமைதியாக இருக்க, ஒரு பெண் மட்டும் எழுந்து புரியலை ஸார் என்று சொன்னார்.

"வெரிகுட். நான் மறுபடியும் சொல்லித்தரேன்."

இரண்டாம் முறை அந்தக் கணக்கை எப்படிப் போடுவது என்று சொல்லிக் கொடுக்க, அவர்கள் கண் இமைக்காமல் அவனையே பார்த்தார்கள்.

"புரிஞ்சுதா. புரியலையா."

மறுபடி கேட்க, "புரிஞ்சுடுச்சு ஸார்."

ஒட்டு மொத்தமாய் கும்பலாய் சொன்னார்கள்.

"வெட்கம் பார்க்காதீங்க. தெரியலைன்னா. தெரியலைன்னு சொல்லுங்க. எத்தனை தடவை கேட்டாலும் நான் சொல்லித்தரேன். நூத்துக்கு நூறு வாங்காட்டாலும் நூத்துக்கு எண்பது மார்க்காவது வாங்க வச்சுடுவேன். உங்க மார்க் எவளோ நைன்த்ல."

எல்லோருடைய மார்க்குகளும் நாற்பது, ஐம்பது என்றுதான் இருந்தன.

"போறதுக்கு முன்னாடி நீங்க கடைசியா பார்த்த ஒரு தமிழ் படத்தைச் சொல்லுங்க ஸார்" என்று ஒரு மாணவன் கேட்க, மாணவிகள் ஆவலாக உட்கார்ந்தார்கள்.

பதினைந்து நிமிடம் தான் பார்த்த தமிழ் படத்தை அவள் விவரித்துச் சொல்ல வாய் பிளந்து கேட்டுக் கொண்டார்கள்.

"நீங்க எல்லாமும் நல்லா சொல்லித்தறீங்க ஸார்" என்று அந்த மாணவி எழுந்து நின்று பேசினாள்.

அவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள். அவனும் சிரித்தான். அன்று இரவு முழுவதும் அந்த மாணவியின் முகமே மனதில் வந்தது. பேச்சே காதில் ஒலித்தது.

அவள் பெயர்தான் மனோன்மணி.

மாப்பிள்ளை உட்கார்ந்து ஹோமம் செய்து கொண்டிருக்க பெண் கூரைப் புடவையோடு நடந்து வந்தாள். சபையை நமஸ்கரித்தாள். பாயில் உட்கார்ந்து கொண்டாள்.

மாப்பிள்ளை எழுந்து சபையை நமஸ்கரித்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். மாப்பிள்ளையின் உறவுகள் பின்னால் சூழ்ந்து கொள்ள ஒரு சின்ன மரஸ்டூலில் அமர்ந்தபடி மாப்பிள்ளைக்கு எதிரே கைகூப்பி பெண்ணின் தகப்பனார் மந்திரம் சொல்ல ஆரம்பித்தார்.

எந்த கல்யாணத்துலயும் நடக்காத அநியாயம் இந்த ஐயருங்க கல்யாணத்துல நடக்கும். பெரியவங்க காலை சின்னவங்க கழுவணும். கண்ல தொட்டு ஒத்திக்கணும். இங்கப் பாருங்க சின்னப்பையன் காலை இந்தப் பெரியவரு அலம்பப் போறாரு. இது என்ன நியாயங்க. பல கல்யாணத்தில் இந்த நேரத்தில் அவனுக்குக் கேள்வி வரும். அதற்கு விளக்கம் கேட்க வேண்டும் என்று ஆரம்பித்து மறந்து போய்விடுவான்.

நாற்காலியில் ஏறி நின்றும் நாற்காலியில் அமர்ந்தும் சற்றுத்தாழ உட்கார்ந்தும் இந்தக் காட்சிகளை அவன் படம் பிடித்தான்.

"சூப்பர்டா, கொன்னுட்ட." மதுசூதனன் ஒயர்லெஸ் வழியே பாராட்டினார். மனோன்மணி பாராட்டு நினைவுக்கு வந்தது.

"ஸார் ரொம்ப நல்லா கணக்கு சொல்லித்தறீங்க ஸார். இவ்ளோ எளிதா கணக்குப் பாடம் இருக்கும்னு நான் நினைச்சுப் பார்த்ததே இல்லை. கணக்குன்னாலே ஒரு பயம். வந்தவுடனே நீங்க சினிமாப்பத்தி பேசனீங்களே. அது ரொம்ப நல்லாயிருந்தது. நிறைய சினிமா பார்ப்பீங்களா."

"அதான் என் வேலை."

"என்ன ஸார் அப்படிப் பேசறீங்க."

மனோன்மணி சிரிப்பும், குதூகலமுமாய் பேசினாள். அவள் உடம்பு எப்போதும் ஏதோ ஒரு கோணத்தில் ஆடிக் கொண்டிருந்தது.

மனோன்மணி அழகி என்று சொல்ல முடியாது. ஆனால் அபரிமிதமான இளமை இருந்தது. பாவாடையும் தாவணியும் அழுத்திப் பிடிக்கிற ப்ளவுஸுமாகத்தான் காட்சியளித்தாள். அவளுக்கு உடுத்தத் தெரிந்திருந்தது. உடுத்துவதுபோல் உடுத்தி ஒதுக்கத் தெரிந்திருந்தது.''

''பட்டை வச்சு தச்சிருக்கா அதான்'' என்று ஒரு பெண் குற்றம் சொல்வதுபோல மனோன்மணியிடம் பேச, இவனுக்கு சட்டென்று அந்த வனப்பின் ரகசியம் புரிந்து போயிற்று. ஆனால், இதெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது என்கிற ஒரு அலட்சியம் வந்தது.

''நமக்கு லட்சியங்கள் இருக்கு இல்ல. அந்த லட்சியத்தை நோக்கிப் போறதுதான் ஒரு ஆம்பளைக்கு அழகு'' என்று தனக்குத் தானே உரக்கச் சொல்லிக் கொண்டிருந்தான்.

என்னால காதலிக்க முடியாது. இது காதலிக்கிற நேரமும் இல்லை. சினிமா என் கனவு. சினிமா என் லட்சியம். சினிமா என் வாழ்க்கை.

அவன் உள்ளுக்குள்ளே உரத்துச் சொல்லிக் கொண்டான்.

''பழைய படம் பார்க்கணும். ஸ்ரீதரோட கல்யாணப்பரிசு பார்க்கணும். நீ பார்த்திருக்கியா.''

''இல்லையே.''

அந்தப் பட்டணத்துப் பையன் சொல்ல, ''லெஜண்டுடா. காவியம். அதைப் பார்த்தே ஆகணும். இப்பவும் அந்தப் பாட்டு காதலிலே தோல்வியுற்றான் காளையொருவன் பாட்டு கேட்டாலும் காட்சியைப் பார்த்தாலும் கண்ல தண்ணி கோர்க்கும்.''

''படம் ஸ்லோவா இருக்குண்ணா.''

அவன் பதிலுக்குச் சொன்னான்.

''ஸ்லோவாத்தான் இருக்கும். அந்தக் காலத்து கட்டிங்.''

''கட்டிங்கனா.''

''எடிட்டிங். கொஞ்சம் லாக் விட்டு செய்வாங்க. அந்தக் கதையை எடுத்துக்கோ. அதே கேரக்டர். அதே விஷயங்கள் நீயொரு ஸ்க்ரீன் ப்ளே எழுது. கல்யாணப்பரிசு ரீ கட்.''

''எதுக்கு எழுதறது படம் எடுக்கறதுக்கா.''

''படம் எடுக்கறோம். எடுக்கலை. அது வேற விஷயம்.''

''என் கதையே எடுக்கலாமே. ஏன் ஸ்ரீதர் கதைய எடுக்கறோம்.''

''ஸ்ரீதர் கதைய எடுக்கச் சொல்லலை. ஸ்ரீதர் கதைய புரிஞ்சுக்க சொல்றேன். முப்பத்தஞ்சு வருஷத்துக்கு முன்னால தமிழ்நாட்டை பைத்தியமா அடிச்சுருக்காரு ஒரு இளைஞன். அவரு என்ன பண்ணியிருக்காருன்னு பார்க்கச் சொல்றேன். இதுல காப்பி அடிக்கறதுக்கு என்ன இருக்கு. மொத்தக் கதைகள் முப்பத்தாறு. அந்த முப்பத்தாறு கதைகளைத்தான் விதம்விதமா சொல்லிகிட்டிருக்கோம்.

ஹீரோ தங்கச்சிய லவ் பண்றாரு. அக்காவைக் கல்யாணம் பண்ணி வச்சுடறாங்க. கல்யாணம் பண்ணும்படியா நேருது. அப்படி இருக்கச் சொல்லோ என்ன ஆகும் முடிவு. வேற எதாவது முடிவு இருக்கா. இல்ல, இதே முடிவுக்கு வேற எதுனா பலம் தர முடியுமா.''

''நல்லாயிருக்குங்க நீங்க பேசறது.''

அவனும், அவன் நண்பர்களும் சினிமா பற்றியே பேசித் தீர்த்தார்கள். கனவு கண்டார்கள்.

ஏதோ ஒரு வீட்டுப்பாடம் எழுதிக் கொண்டு வரச் சொல்ல அவனும், அவன் நண்பர்களும் எழுதாமல் வந்தார்கள்.

''மொத்தமா வெளியே போங்க'' என்று சொல்ல, மிகவும் திமிராக எழுந்து போனார்கள்.

"இங்க வந்தது கம்ப்யூட்டர் கத்துக்கறதுக்கு. நீங்க எழுந்து போறத பார்த்தா, வெளியே போய் ஏதோ புடுங்கப் போற மாதிரி போறீங்களே."

"ஆமாம் ஸார். புடுங்கப் போறோம். கத்தை கட்டப் போறோம். தோள்ல தூக்கிட்டு வரப்போறோம். தமிழ் நாட்டுத் தன்மானத்தைத் தூக்கி நிறுத்தப் போறோம்" என்று அவன் வேகமாகப் பதில் சொல்ல, வகுப்பு அவனை வியப் போடு பார்த்தது.

"என்ன தம்பி சொல்ற."

அந்த பேராசிரியர் நிதானமாகக் கேட்டார்.

"எங்களுடைய மூச்சு சினிமா ஸார்."

"எங்களுடையன்னா."

"இங்க எல்லாருடைய."

"அப்புறம் ஏன் இங்க உட்கார்ந்து எழவு கொட்டறீங்க."

அவர் முகத்தை கடுப்பாக வைத்துக் கொண்டு பேசினார்.

"வெயிட் பண்ணிட்டிருக்கோம் ஸார். ஒரு நல்ல நேரத்துக்காக வெயிட் பண்ணிகிட்டிருக்கோம். அதுவரைக் கும் சும்மா வந்துட்டு போயிகிட்டிருக்கோம்."

"வேணாம். இந்த இடத்தையும் பாழ் பண்ணி, உன் கனவையும் வளர்க்காத... ரெண்டாங்கெட்டானா இருக் காத. ஒண்ணு ஆத்துல இரு. இல்ல சேத்துல இரு. ரெண்டுத் துலயும் கால் வச்சுகிட்டிருக்கறது உன்னை அசிங்கமாக்கும். இந்த டெர்ம் வரைக்கும் இரு. ஒழுங்காப்படிக்கலைன்னா போயிடு. உன்னை மாதிரி நெஞ்சை நிமித்திகிட்டு வசனம் பேசறவனைப் பார்த்தா மத்தவங்களுக்கும் கெட்டுப் போகணும்னு தோணும். ஒரு அஞ்சு பேரு எந்த ரியாக் ஷனுமில்லாம நான் பாடம் நடத்தறதை கடனேன்னு கேட்டுகிட்டிருந்தா, எனக்கு உள்ளுக்குள்ள பாடம் நடத்த வேகம் குறைஞ்சு போகும். மீதி இருக்கற நாப்பத்தஞ்சு

பேருக்கு நான் பதில் சொல்ல முடியாது. அதனால இந்த வருஷத்தோட உன் கம்யூட்டர் படிப்பை நிறுத்திக்கோ. நான் ரொம்ப தீவிரமா சொல்றேன். வெளிய போய் எதுனா நடி. உன் சைபர் மார்க் பரீட்சை பேப்பரை புடி. நின்னா நான் எடுப்பேன் தடி."

பேராசிரியர் வசனத்துக்கு வகுப்பு கைகொட்டி ஆரவாரம் செய்தது.

"தமிழ் விளையாடுது ஸார். உங்ககிட்ட... என்று உற்சாகப்படுத்தியது."

"நான் வார்த்தை அடுக்கா சொல்லிட்டா நான் சினிமாக் காரன் ஆயிடுவேனா. நான் எப்பவுமே பேராசிரியர்."

அவர் முகம் திருப்பிக் கொண்டார்.

"சினிமா யாருக்குமே புரிய மாட்டேங்குதும்மா."

அவன் அலட்டிக் கொண்டான்.

அவனுக்குப் புரிந்துவிட்டது போல ஒரு பிரமை இருந்தது.

"ஸ்டூடண்ட்ஸை வச்சு ஸ்டூடண்ட்ஸுக்குச் சொல்லித் தருவீங்களாமே. அதெப்படி வாத்தியாருங்க வச்சுத்தானே சொல்லித்தரணும்."

திடீரென்று இரண்டு மூன்று பெற்றோர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

டுடோரியல் கல்லூரி முகம் சொறிந்தது.

"அவர் முதல் மாணவனா வந்தவர்."

"இருக்கட்டுமே. அவன் படிப்பு படிக்க வேணாமா. அவன் வந்து இங்க எப்படி அக்கறையா சொல்லித்தருவான். வாத்தியாருங்களுக்கு நெளிவு சுளிவு தெரியும். அவன் நல்லா கணக்கு போடுவானாயிருக்கும். கணக்கு போடறது வேற. சொல்லித்தறது வேற. வாத்தியாருன்னு வச்சு சொல்லிக் கொடுக்கறதா இருந்தா சொல்லிக் கொடுங்க. இல்லைன்னா

நான் வேற டுடோரியல் காலேஜ்ல சேர்த்துடறேன்'' என்று ஒரு பெற்றோர் சொல்ல, இரண்டு மூன்று பேர் அதைப் பற்றிப் பேச, கல்லூரி நிர்வாகம் எதனால் இது என்று ஆராய்ந்தது. போட்டிக்கல்லூரி இதைக் கிளப்பி விட்டிருப்பது தெரிந்து, அவனிடம் மெல்ல இப்படிப் பேசறாங்களே என்ன பண்றது என்று கேட்க, என்ன வேணாலும் பண்ணுங்க என்று அலட்சியமாய் சொன்னான்.

''நின்னுகறீங்களா'' என்று கேட்க சரி என்று அவன் தலையசைத்தான்.

நான் லட்ச லட்சமா சம்பாதிக்கப் போறேன். உன்னுடைய ஐநூறு ரூபா ஒரு மேட்டரே இல்லை எனக்கு என்று உள்ளே நினைத்துக் கொண்டான்.

அந்த இடத்திற்கு ஒரு பேராசிரியர் அமர்த்தப்பட்டார். ஆனால், நான்காம் நாளே மனோன்மணி அவன் வீடு தேடி வந்தாள்.

''ஸார், நான் இந்த தெருவுலதான் இருக்கேன். அவரு கணக்கு சொல்லித் தந்தா மாதிரி அவங்க சொல்லித்தர மாட்டேன்றாங்க ஸார். லொட்டு லொட்டுன்னு மண்டையிலயே அடிக்கறாங்க. என் வயசு என்ன. என் தலையில ஸ்கேலால அடிச்சா நல்லாவா இருக்கு. காட்டுமிராண்டியா இருக்கான் ஸார் அந்தாளு.''

அந்தப் பேராசிரியருக்கு ஐம்பது வயது தாண்டியிருந்தது. அவள் உடுத்திக்கொண்டு வருவது அவருக்குப் பிடிக்கவில்லை.

''இந்த மாதிரி கழுதைங்களெல்லாம் ரெண்டு போட்டாத்தான் அடங்கும்.'' என்று ஒரு எண்ணம் வந்தது. எனவே, கூடுதலாகவே அவள் முதுகிலும், தலையிலும் ஸ்கேலால் அடித்தார்.

அவள் அவமானப்பட்டாள்.

நான் எவ்ளோ அழகா இருக்கேன். என்னைப் போய் இந்தாள் ஸ்கேலால் அடிக்கறானே என்று ஆத்திரப்பட்டாள்.

''எனக்கு நீங்க கணக்கு சொல்லிக் கொடுங்க ஸார்.''

எழிலிடம் கெஞ்சினாள். எழில் சரியென்று சொன்னான். அவளைத் தன் வீட்டிற்கே வரவழைத்து கணக்கு சொல்லிக் கொடுத்தான்.

மாலை நாலு மணியிலிருந்து ஆறு மணி வரை கணக்குப் பாடம் என்று முடிவாகியது. நூறு ரூபாய் சன்மானம் தர, வேண்டாம் என்று அவன் மறுத்தான்.

அவன் கையைப் பிடித்து உள்ளங்கையில் வைத்து அழுத்தினாள். மிக நெருக்கமாக இருந்தாள்.

வியர்வை வாசனையுமாய், மல்லிகைப் பூவுமாய் ஒரு கலவை நெடி அவன் மூக்கைத் தாக்கியது. அவன் அலட்சியமாக அந்தக் காசை வாங்கிக் கொண்டான்.

அவளை கணக்குகள் போடச் சொல்லி விட்டு ஸ்பானிஷ் சினிமா பற்றிய படங்கள் நிறைந்த கடன் வாங்கி வந்த ஒரு புத்தகத்தை விரித்துப் படிக்கத் துவங்கினான்.

அவள் நடுநடுவே எட்டிப் பார்க்க, ''உன் வேலையை நீ பாரு. என் வேலையை நான் பார்க்கறேன்.'' என்று மிகத் தெளிவானவன் போல் அதட்டினான்.

அவள் மிக பயந்தவள் போல், நடுநடுங்கியவள் போல் விலகி கணக்குப் போட்டாள். எல்லாக் கணக்கையும் மிகச் சரியாகப் போட்டிருந்தாள்.

''உனக்கு எதுக்கு டியூஷன் நல்லாதானே போடற. டியூஷனே தேவையில்லை'' என்று சொல்ல. ''இதுக்கு முன்னாடி நான் கணக்கு சரியா போடலை. உங்கிட்ட உட்கார்ந்திருக்கும் போது கணக்கு சரியா வருது. இந்த வீட்ல உட்கார்ந்திருக்கும்போது சரியா வருது.'' என்று அவள் சொல்ல, அவன் வியப்போடு அவளைப் பார்த்தான்.

''என்னமோ தெரியலை. எப்போவும் உங்களைப் பார்க்கணும் போல இருக்கு. பள்ளிக்கூடத்துல கூட நான் உங்களை நினைச்சுக்கறேன். ரொம்ப நினைச்சுகிட்டா பொறைக்கேறும். இருமல் வரும்கறதுனால நானா விலக்கிக் கறேன். ஆனா, உங்க நினைப்பு இருக்கு.''

இது உண்மையா, பொய்யா அவனுக்குப் புரியலை.

அவன் வியப்போடு பார்த்தான்.

''எனக்கு சொல்லத் தெரியலை. நீங்க சினிமாவுல பெரியாளா வரணும். நான் டென்த்ல ஸ்கூல் ஃபர்ஸ்ட் வரணும். இது ரெண்டுத்துக்கும் நான் தினம் கோயிலுக்குப் போய் விளக்கு ஏத்தறேன்.''

''நீ டென்த்ல பர்ஸ்ட் வந்துடுவ.''

''அப்படின்னா நீங்களும் சினிமாவுல பெஸ்ட் ஆளா வந்துடுவீங்க.''

''ச்சு.. இது என்ன கணக்கு.''

''அப்படித்தான். நான் வேண்டிகிட்டிருக்கறது அப்படித்தான். இவரு சினிமாவுல பெரியாளா, நான் டென்த்ல பர்ஸ்ட்ல பாஸ் பண்ணணும். நான் டென்த்ல பர்ஸ்ட்ல பாஸ் பண்ணிட்டா. இவரு நிச்சயம் பிரமாதமான ஆளா வருவாரு'' அவனுக்கு அவள் பேச்சு ஆச்சரியமாக இருந்தது. அழுத்தம் திருத்தமாக உடம்பை ஆட்டி பல கோணங்களில் திருப்பி அவள் அசைந்து அசைந்து பேசுவதை வியப்போடு பார்த்தான்.

மார்கழிப்பூவே.. மார்கழிப்பூவே..

இவளை ஜாக்கெட்டும், பாவாடையுமாய் பச்சைப் புல்வெளியில் நடக்க வைத்து ட்ராலிபோட்டு படமெடுக்க வேண்டுமென்று தோன்றியது. ஆனாலும், அதையும் தாண்டி உள்ளுக்குள் ஒரு நெகிழ்ச்சி வந்தது. அவனுக்காக

பிரார்த்தனை செய்கிறேன் என்று சொல்கிற முதல் ஆத்மா இவள்தான் என்ற எண்ணம் ஏற்பட்டது.

மெல்ல எழுந்து நின்றான். அவளும் நிற்க இரண்டு புறமும் பார்த்தான். நடந்து போய் மெல்ல அவளை ஆரத்தழுவிக் கொண்டான். கன்னங்களில் முத்தமிட்டான்.

''ஜெயிக்கணும். எப்படியாவது ஜெயிக்கணும்'' என்று அவள் தோளைப் பிடித்தபடி சொன்னான். மறுபடியும் விலகி வந்து உட்கார்ந்து கொண்டான்.

அவன் முகத்தில் ஒரு கம்பீரமான இயக்குனர் களை வந்துவிட்டதாய் அவனுக்குத் தோன்றியது.

மனம் நிகழ்காலத்தில் இல்லாமல், இறந்த காலத்திலோ, எதிர்காலத்திலோ மிதந்து கொண்டிருப்பதுதான் பல பிரச்சினைகளுக்கு வழி. மனம் என்பது இரண்டு எதிரெதிர் துருவங்களிலும் அலையாமல் இருக்காது. ஆனால், அப்படி அலைகின்ற மனதைத் தடுத்து நிறுத்தி உண்மையில் என் யோக்கியதை என்ன என்று ஆழ யோசிக்க வைக்கும் நிகழ்காலத்தன்மை எல்லோருக்கும் வந்துவிடாது. எதிர் காலத்திற்குச் செல்லும் மனம் சில சமயம் வேறு எந்தக் காலத்திற்கும் போகாமல் அங்கேயே தங்கி கடும் கனவுகளில் ஆழ்ந்துவிடும். இது மிக மிக ஆபத்தான விஷயம். ஏற்கெனவே இருந்த கனவுக்கங்கு அவளால் கிளறப் பட்டதும் கண்ணாடி முன்பு நிற்கும் பொழுதெல்லாம் மிகச்சிறந்த இயக்குனராகத்தான் அவன் நின்றான். தனிமை யில் இருக்கும் போதெல்லாம் நடிகைகளுக்கும். நடிகர் களுக்கும் நடிப்பு பற்றிச் சொல்லிக் கொடுத்தான்.

''என்ன மாப்பிள்ளை யாரோ ஒரு பொண்ண வீட்டுக்கு கூட்டிட்டு வந்து கணக்கு சொல்லித் தர்றியாமே. கணக்கு சொல்லித் தர்றியா. கணக்கு பண்றியா.''

நண்பர்கள் கேட்டார்கள்.

"எனக்கு லட்சியம் சினிமா. கணக்கு இல்ல. கம்ப்யூட்டர் இல்ல."

அவன் அடிக்குரலில் உறுதியாகச் சொல்ல, நண்பர்கள் அடங்கிப் போனார்கள். வெளியே கம்பீரமாய் நடந்து கொண்டாலும், உள்ளுக்குள் ஊசலாட்டம் அதிகமாகத் தான் இருந்தது. அவள் முன்னைவிடப் பொலிவாகவும், வாசனையாகவும் தான் இருந்தாள் என்று தோன்றியது.

அவள் ப்ராவே போடாமல் வெறும் இறுக்கமான ஜாக்கெட் மட்டும் போட்டு வந்த ஒரு நாளில் அவன் அதிகம் தடுமாறினான். அவன் தடுமாறுவதை, அவள் எளிதாக அறிந்து கொண்டாள்.

கணக்குப் பாடத்தில் அவள் தவறு செய்தபோது கோபித்துக் கொண்டான். அவள் சட்டென்று கண்களில் நீர் துளிக்க அவனைப் பார்த்தாள்.

"நான் வேணா வீட்டுக்குப் போய் போட்டுட்டு வந்துட்டுமா." என்று கேட்டாள். அவன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

"நான் போய் ப்ரா போட்டுகிட்டு வந்துடறேன். உங்களுக்குத் தொந்தரவா இருக்கு இல்லையா." என்று சொல்ல, அதெல்லாம் ஒன்றும் இல்லை என்றான்.

"ஆமாம். அதுதான். உங்களுக்குப் பிடிக்குமோன்னு நினைச்சுகிட்டுதான் இப்படி வந்தேன். பிடிக்கலைன்னா நான் போட்டுகிட்டு வந்துடறேன்" என்று கிளம்பினாள்.

அவன் எழுந்து போய் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான். வந்து அமர வைத்தான்.

அவள் நிமிர்ந்து காதலோடு அவனைப் பார்த்தாள்.

"சினிமால நடிகைல்லாம் ரொம்ப நல்லாயிருப்பாங்க இல்ல" என்று அவள் மிருதுவாகக் கேட்டாள்.

"நீயும்தான் அழகு."

அவள் எதிர்பார்த்த பதிலை அவன் சொன்னாள்.

எங்கயோ மாட்டுகிறோம். ஏதோ தவறு செய்கிறோம் என்ற எச்சரிக்கை மணி அவனுக்குள் இடைவிடாது ஒலித்துக் கொண்டிருந்தது. ஆனால், எச்சரிக்கை மணியை அவன் புறக்கணித்தான்.

நெஞ்சத்திலே நீ நிலைத்திருந்தாய்.
நேற்று முதல் ஓர் நினைவு தந்தாய்
நினைவில் வராமல் நீ இருந்தால்
கனவுலகில் நான் வாழ்ந்திருப்பேன்.

என்று கனவு கலந்த கண்களோடு பாடினான்.

அவள் கிறங்கினாள்.

"இங்க வேணாம். மாடிக்குப் போயிடலாம்."

சொல்லிக் கொடுத்தாள்.

"அந்த அடுக்குமாடி வீட்டின் நான்காவது தளத்தில் தனித்தனியாகப் போய் அவர்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டார்கள். நீ என்னென்ன செய்தாலும் கவிதை" என்று அவள் முணுமுணுத்தாள்.

அவன் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் தான் செய்தான்.

"கணக்குல ஃபர்ஸ்ட் வந்துடுவியா" என்று அவளைக் கட்டித் தழுவியபடி கேட்டான்.

"நிச்சயம் வந்துடுவேன்." என்று அவள் இன்னும் இறுக்கிக் கொண்டு பதில் சொன்னாள்.

காமம் காதலுக்கு உதவி செய்யும். காதல் வாழ்வுக்கு உதவி செய்யும் என்றுதான் எல்லோரும் நம்புகிறார்கள். ஆனால் வெகு சிலரே இவை இரண்டையும் மிகச் சரியாக உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள்.

தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா

உன்னை தீண்டும் இன்பம்
தோன்றுதடா நந்தலாலா.

என்று பாரதி பாடியது தீயா, பெண்ணா. ஒற்றை விரலால் அவள் கன்னம் வருட, உதடு வருட, கழுத்து வருட, தோள் வருட, நெஞ்சு வருட கிறங்கிப் போயிற்று.

அவள் உன்மத்தமாகிக் கிடந்தாள்.

காமம் என்பது பரஸ்பரம் விழுங்க நினைப்பது. ஒருவருக் கொருவர் தந்திரம் செய்தால்தான் விழுங்க முடியும். இரண்டு பேரும் கை கோர்த்துக் கொண்டு தந்திரம் செய்யும் போது ஊரை உறவை விழுங்க முடியும்.

"எங்க பொண்ணு முழுகாத இருக்காம். என்னை அவசரமா வரச் சொல்லித்து. கொஞ்சம் கேஸ் பால் வாங்கி வைக்கணும். தண்ணி பிடிச்சு வைக்கணும். அவரு காலையில போனா சாய்ந்தரம்தான் வருவாரு. உங்களாண்ட சாவி கொடுத்துட்டுப் போறேன். கொஞ்சம் உதவி செய்வீங் களா."

மாடிவீட்டுப் பெண்மணி கேட்க, நிச்சயமாக செய்ய றேன் என்று அம்மா சாவி வாங்கி வைத்துக் கொண்டாள். அவர்கள் இருவரும் சட்டென்று ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். இரண்டு பேரும் ஒரே விஷயத்தைத்தான் நினைத்துக் கொண்டார்கள்.

விடியலில் எழுந்திருக்கும் அம்மா பிற்பகலில் தூங்குவாள். அவன் சாவியை உருவி மாடிக்குப் போனான். கதவு திறந்தான். அந்த வீடு சுத்தமாக இருந்தது. ஒரேயொரு அறை யுள்ள போர்ஷன் அது. அந்த அறையில் பெரிய கட்டில் இருந்தது. கண்ணாடி இருந்தது. பாத்ரூம் இருந்தது. அவன் பூட்டிக்கொண்டு கீழே வந்தான். சாவியை வைத்தான். அவளிடம் விஷயம் சொன்னான். அவள் திடுக்கிட்டாள்.

"ஏதாவது தப்பாயிடுச்சுன்னா."

அவள் பயந்தபடியே கேட்டாள்.

"இந்த வருஷத்தோட நான் காலேஜ்ல நின்னுடப் போறேன்."

"நின்னுட்டு."

"மெட்ராஸ் போகப்போறேன். ஃபிலிம் இன்ஸ்டிட்யூட் டுக்கு அப்ளை பண்ணப் போறேன். அது கிடைக்கலைன்னா யாராவது டைரக்டர்கிட்ட சேர்ந்துடப் போறேன். என்னால் திருப்பூர்ல இருக்க முடியாது. ஆனா, நான் மறுபடியும் திருப்பூருக்கு வரணும். மறுபடியும் நான் திருப்பூருருக்கு வரணும்னா இங்க ஏதாவது எனக்கு பிடிப்பு வேணும். இங்கேர்ந்து ஏதாவது ஒரு உந்து சக்தி வேணும். நீதான் நீதான் பிடிப்பு. நீதான் உந்து சக்தி. நீதான் எல்லாம்."

அவன் நெகிழ்ந்து சொல்ல, அவள் பாய்ந்து அவனை இறுக்கத் தழுவிக் கொண்டு மணக்க மணக்க முத்த மிட்டாள். அவன் மடியில் உட்கார்ந்து கொண்டு உரசினாள்.

"எப்போ மாடிக்குப் போகலாம்னு தெரியலை. மத்தி யானம் எதிர்வீட்ல இருப்பாங்க. நகர்ந்தா எங்கன்னு கேட் கறாங்க. ராத்திரி போனா நல்லாயிருக்குமா. மாட்டிகிட்டா சிரமம்."

அவள் சட்டென்று அவன் கையைப் பிடித்துக் கொண் டாள்.

"என்ன."

"விடிகாலையில் போனா."

"நீ வரணுமே."

"காலையில அஞ்சு மணிக்கெல்லாம் கணக்குப் போட ணும்னு கூப்பிடறாங்கன்னு சொல்லிடுவேன்."

"பகல்தான் வசதி. ஸ்கூலுக்குப் போயிட்டு அங்கேயிருந்து வந்துடு."

"நிசமாவே நான் வேணுமா."

"உனக்கென்ன பயம். விட்டுட்டுப் போயிடுவேன்னு நினைக்கறியா."

"இல்லை."

"ஒருவேளை இவன் பெரியாள் ஆகாத மறுபடியும் பனியன் கம்பெனிக்குப் போயிடுவான் அப்படின்னு நினைக்கறயா."

"அதுவும் இல்லை."

"என்ன பயம்."

"இவ்ளோ அவசரப்படறியே. ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆச்சு. நாலு பேருக்குத் தெரிஞ்சுதுன்னா, நீ மனசுல நினைச்சுகிட்டிருக்கற அந்த விஷயம் நடக்காதப் போயிடுமோன்னு பயமா இருக்கு. நீ டைரக்டர் ஆகறது தடைப்படக்கூடாது. ஜெயிச்சே ஆகணும். அதுக்காக நான் என்ன வேணா செய்வேன். அதுக்காக படுத்துக்கோன்னா படுத்துக்குவேன். படுத்தா அது கிடைக்காதுன்னா உன்னை விட்டுட்டு ஓடியே போயிடுவேன். மறுபடியும் கேட்கறேன். மாட்டிகிட்டு முழிச்சு அசிங்கப்பட்டு நீ ஜெயிக்கறது கெட்டுப் போச்சுன்னா, இது தேவைதானான்னு நமக்குத் தோணும். யோசனை பண்ணி சொல்லு. வான்னா வரேன். போடின்னா போறேன்."

அவள் சொல்லிவிட்டு கம்பீரமாக விடை பெற்றாள்.

அவன் ஆடிப்போனான்.

பத்தாவது படிக்கற பொண்ணு. ப்பா.. என்னம்மா பேசுது. நினைத்து நினைத்து வியந்தான்.

அவளை வரச் சொன்னான்.

பிற்பகல் மூன்று மணிக்கு திருப்பூர் நகரம் பனியன் உற்பத்தியில் முழு மூச்சாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, கணக்கு நோட்டுகளை மார்பில் அடுக்கி அவன்

வீட்டு வாசலுக்கு வந்தாள். அவள் வருவதைப் பார்த்து அவன் கதவு சார்த்திக்கொண்டு கீழே போவதுபோல நடித்து பிறகு பூனைபோல் மேலே ஏறி கதவு திறந்து காத்திருந்தான்.

அவள் மெல்ல படியேறி கதவைத் திறந்து பூனைபோல உள்ளே நுழைந்தாள். கதவு மூடிக்கொண்டது.

அவள் மனம் திறந்தாள். உடல் உடை துறந்தாள். அவன் முழுவதுமாய் உடுத்தியிருக்க, அவன் விருப்பப்படி நிர்வாணமானாள். சகலமும் அவனுக்கென்று வாரிக் கொடுத்தாள். கட்டில் வெட்கத்தில் க்ரீச்சிட்டது. குளித்ததுபோல் வியர்த்தது. அவர்கள் நன்றாக முகம் கழுவிக் கொண்டு உடம்பு துடைத்துக் கொண்டு எதிரும் புதிருமாய் உட்கார்ந்து கொண்டார்கள். விழுங்குவதுபோல ஒருவரை ஒருவர் பார்த்தார்கள்.

"முதல் தடவை பார்க்கறபோதே எனக்குத் தெரிஞ்சு போச்சு."

"என்னான்னு."

"நீங்கதான் என் புருஷன்னு."

எவ்வளவு உறுதியான ஆட்களையும் கவிழ்த்துப் போடுகின்ற வாக்கியம் இது. ஆனால், ஆணுக்கு இதை நம்ப விருப்பமில்லை. பயமும் உண்டு.

"இப்படியெல்லாம் தோணுமா."

பொம்பளைக்குத் தோணும். அவன்தான் புருஷன்னு தோணும்.

காமம் என்பது ஒரு மனிதனுக்கு க்ரியா சக்தியாகவும் இருக்கலாம். கிருமியாகவும் இருக்கலாம். எந்தப் பதட்டமும் இல்லாமல், பயமும் இல்லாமல் அணுகுகிறபோதுதான் காமம் உற்சாகமாகவும், உரமாகவும் உதவும். திருட்டுத்தனமான காமத்தால், காதலால், பதட்டம் அதிகமாகும். வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் அனுபவித்து விடவேண்டு

மென்ற வேகம் அதிகரிக்கும். எனவே, மற்ற எந்த விஷயங் களிலும் சிந்தனை ஓடாது. இதுவே குறியாய், இதுவே கதியாய் மனம் லயித்துக் கிடக்கும். அந்த நிலையில் கண் தெரியாது. காது கேட்காது. மற்றவர் தன்னை எவ்விதமாக எப்படிப் பார்க்கிறார் என்று புரியாது. உலகம் முழுவதும் கண்ணை மூடிக்கொண்டிருப்பது போலவும், தான் மட்டுமே தந்திரமாய் இயங்கிக் கொண்டிருப்பதுபோலவும் ஒரு அனுமானம் பிறக்கும். ஆனால், உலகம் ஒருபோதும் தூங்கியதே இல்லை. மற்றவர், அசைவுகளைப் பார்ப்பதைத் தவிர, மனிதருக்கு மிகப்பெரிய சந்தோஷமும் பொழுது போக்கும் எதுவுமில்லை.

மொட்டை மாடி மொட்டை மாடி
ஒரு லவ் ஜோடி லவ்ஜோடி

என்று யாரோ பாடினார்கள்.

அவனைக் குறித்த பாட்டுதான் என்று அவனுக்குப் புரிய சில வாரங்களாயிற்று.

"முதல்ல நாகப்பாம்பு உள்ள போவுது. அப்புறம் சாரைப் பாம்பு பின்னாடி வருது. ரெண்டு பாம்பும் பூத்துக்குள்ள போனவுடனே என்ன நடக்கும். சாரை நாகத்தைக் கவ்வ, நாகம் சாரையைக் கவ்வ, பின்னி பிணைந்து பேரின்பம்."

அந்த காம்ப்பௌண்ட்டுக்குள் பேசிக் கொண்டார்கள்.

எல்லார் காதுக்கும் விழுந்தது. அந்த இரண்டு பேர் காதுக்கு மட்டும் விழாமல் போயிற்று.

"நாலு போட்டா என்ன."

"வேணாம் வுட்டுடுவோம்."

"ஏன்."

"வளரட்டும். வளர்ந்து கெட்டிப்படட்டும். அப்போதான் வெட்டிப் பிரிக்கலாம்."

"எதுக்கு வளரவிட்டு வேடிக்கை பார்க்கறது."

"இப்போ போய் கேட்டின்னா கணக்குதான் சொல்லிக் கொடுத்தேன்னு சத்தியம் பண்ணுவான். என்னைப் பார்த்தா சொல்ற அப்படின்னு நெஞ்சை நிமிர்த்துவான். யாரைப்பத்தி தப்பா பேசற அப்படின்னு மூஞ்சியில குத்துவான். அவன் குத்தைத் தாங்க முடியுமா உன்னால? கிழிஞ்சு கந்தலாப் போயிடுவ. அவனைச்சுத்தி பெரிய பட்டாளம் இருக்கு. போறவரபோது உன் தங்கச்சியையே கேலி பண்ணுவான். அதனாலத்தான் சொல்றேன். வுட்டுடு. வளரட்டும். கெட்டிப்பட்டபிறகு வெட்டிப் பிரிக்கலாம்."

முதன்முறைதான் அவனுடைய அழைப்பாக இருந்தது. இரண்டாம் முறை, மூன்றாம் முறை, நான்காம் முறை, ஐந்தாம் முறையும் அவள் கிளர்ந்து எழுந்து அவனில்லாது வாழ்க்கை இல்லை என்பதுபோல் திரும்பத் திரும்ப அவனோடு இருந்த சந்தோஷம் பற்றிப் பேசி அவனைக் கிறங்கடித்து வழிக்குக் கொண்டு வந்தாள்.

விரல் விட்டு எண்ணினால் அது பதினோரு நாள் சந்தோஷம். அவர்கள் சந்தோஷமாக இருப்பது பொறுக்காத அண்டை அயலார் ஒருநாள் காத்திருந்து உள்ளே போன வுடன் சகலருக்கும் செய்தி பரப்பி ஓரிடத்திலே கூடி என்ன செய்வது என்று விசாரித்து கதவு தட்டி வெளியே கொண்டு வந்து உலகுக்கு அம்பலப்படுத்தி அசிங்கப்படுத்தினார்கள்.

"என்ன ஸார் இப்படிப் பேசறீங்க. நான் என்ன பண்ணி கிட்டிருந்தேன். தெரியுங்களா?"

"தெரியும்டா. நீ கணக்குப் பாடம் சொல்லி கொடுத்து கிட்டிருந்த. இப்படித்தானே சொல்லப் போற." என்று ஒருவர் சொல்ல, மற்றவர் அனைவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"என்னம்மா நீ சொல்லு. உள்ள கணக்குதானே போட்டு கிட்டிருந்த." என்று அவன் கேட்க, "இல்ல, நான் அவரைத்

தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்'' என்று அவள் தடுக்கென்று நேரடியாக விஷயத்திற்கு இறங்கினாள்.

மனோன்மணியின் அம்மா விஷயம் கேட்டு ஓடி வந்தாள். சுற்றியிருந்த எல்லோர் காலிலும் விழுந்தாள்.

''எல்லார் வீட்லயும் பொம்பளை இருக்கு. என் வீட்டைக் கெடுத்துடாதீங்கய்யா. என்னை பாழ்பண்ணிடாதீங்கய்யா. விட்ருங்கய்யா. நான் பார்த்து பேசிக்கறேன். விட்ருங்க. பெருசு படுத்தாதீங்க.'' என்று எல்லோர் காலையும் தொட்டுக் கெஞ்சினாள். கதறி அழுதாள்.

கூட்டம் சரசரவென்று நீர் தெளிக்கப்பட்ட எறும்பு கும்பலாய் கலைந்து போயிற்று.

''ஏம்ப்பா.. என்ன செய்யற நீ. எதுக்கு உனக்கு பொம்பளை.''

ஆனால், அடுத்த மூன்று நாட்களுக்குள் வாழ்க்கை சிதறிப்போயிற்று.

''படிச்சது போதும். கணக்குப் போட்டதுபோதும். கெட நாயே.''

அவளை வீட்டில் வைத்து பூட்டி வைத்தார்கள்.

''என்னா போய் பொண்ணு கேட்கவா. அசிங்கம். செருப்பால அடிப்பான். நீ பண்ணதுக்குப் பேர் நம்பிக்கை துரோகம். உனக்கு என்ன யோக்கியதைன்னு நான் பொண்ணு கேட்கப் போவேன். ஆம்பளையா மீசை முளைச்சுட்டாப் போதுமா? கல்யாணத்துக்கு துட்டு சம்பாதிக்க வேண்டாமா. காலேஜை முடிடா வந்து பனியன் கம்பெனியில் வேலை கத்துக்கோ. மாசம் நாலாயிரம் ரூபா சம்பளம். கம்பெனி தரத்துக்கு நான் ஏற்பாடு பண்றேன். என்ன சொல்ற.''

அப்பா எகிறி எகிறி கேட்டபோது திருப்பூரை விட்டு போகவேண்டும் என்று முடிவு அவனுக்குள் வேகமாக எழுந்தது.

கல்லூரியில் சினிமா க்ரூப் இருந்ததுபோல, ஒரு அரசியல் க்ரூப் இருந்தது. ஆளுங்கட்சியின் சார்பான க்ரூப் அது. கல்லூரியின் எல்லா இடத்திலும் கட்சிக்கொடியைக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னபோது கல்லூரியின் முதல்வர் அது கூடாது என்றும் கல்லூரிக்கு வெளியே அரசியலை வைத்துக் கொள்ளுங்கள் என்றும் சொல்ல, முடியாது என்று அரசியல் குழு சொல்ல, கல்லூரி வளாகங்களில் வளர்ந்த கட்சி அது. அந்தக் கட்சியால் கல்லூரி வளாகங்கள் வளரும் என்று அடுக்கு மொழி பேச, விவகாரம் பெரிதாகி முதல்வர் அடி வாங்கினார். முதல்வர் அடி வாங்கினார் என்றதும் பொங்கி எழுந்து அரசியலுக்கு அப்பாற்பட்ட மாணவர்கள் போர் முரசு கொட்ட, அரசியல் குழுவைச் சேர்ந்த மாணவர்கள் அதிகம் வேகமானார்கள்.

எழில் அரசியல் கட்சிக்கு எதிரான குழுவில் இருந்தான். அரசியல் கட்சி செய்வது அநியாயம் என்று சொன்னான்.

''யார் சொல்றது. யார் யாரைப்பத்தி பேசுவது. கணக்குப் பாடம் சொல்லித்தரேன்னு சின்னப் பொண்ணைக் கூட்டிட்டு வந்து பாவாடை அவுத்துப் பார்த்துட்டு இவரு எங்கிட்ட பேசறாரா'' என்று சொல்ல, எழில் அவனைப் போய் நேரடியாய் முறைத்தான். பொத்பொத்தென்று அடித்துக் கொண்டார்கள். அந்த அடிதடி பெரிய ரகளையாக மாறியது. இடதும் வலதும் நூறு நூத்தியிருபது மாணவர்கள் சுற்றி நின்று சரமாரியாக கல்விட்டுக் கொண்டார்கள்.

திருப்பூர் ஸ்தம்பித்தது.

மத்த நேரத்துலயா கொடி கட்டுங்கறான். முதல்வர் ஊருக்கு வராரு கொடி கட்டுங்கறான். கட்டிட்டுப் போகட்டுமே ஸார். சுவத்துல அவர் பேரு எழுதியிருக்கறான். அழிக்க

முடியுமா. ரோடு முழுக்க தோரணம் கட்டியிருக்கறான். பிரிக்க முடியுமா. பெரிய ஹோர்டிங்கை மறைச்சு பேனர் வச்சருக்கறான் என்ன பண்ண முடியும். காலையில வந்துட்டு சாய்ந்தரம் போறாரு. கொடி ரெண்டு நாள் இருக்கும். அப்புறம் தானா கிழிஞ்சு விழும் ஸார். விட்டுடுங்களேன்.''

போலீஸார் புத்தி சொல்ல சரி என்றும் சொல்லாது, முடியாது என்றும் சொல்லாது கல்லூரி முதல்வர் முகம் திருப்பிக் கொண்டார்.

அரசியல் கட்சி மாணவர்கள் வெற்றி கோஷமிட்டார்கள்.

''இந்த எழில் மூஞ்சிய கிழிக்கணும். வாங்கடா'' என்று அவனைத் தேடினார்கள்.

எழில் தப்பித்து வேறு ஊருக்குப் போனான்.

முதல்வர் வந்துவிட்டுப் போனதும் மறுபடியும் அவர்கள் முறைக்க.

சின்னப்பொண்ணு நடையைப்பாரு. சித்தெறும் பாட்டாம்.

அவன் வரும்போது சுற்றி கும்மியடித்துப்பாட மனம் வெறுத்துப் போனான்.

''என்ன... என்ன.. என்ன பாடறாங்க.'' என்று ஒன்று மறியாத சில மாணவர்கள் கேட்க, கணக்கு சொல்லித்தந்து இடுப்பு நாடா அவிழ்த்தது என்று யாரோ கவிதைகூட எழுதினார்கள். பலருக்கும் அது தெரிந்த விஷயமாய் போயிற்று.

இனி திருப்பூரில் இருக்க முடியாது. லட்சியத்தை நோக்கி நகர வேண்டியதுதான் என்று தீர்மானம் செய்து முதல் வருட பரீட்சை எழுதுவதற்கு முன்பே தோளில் பை மாட்டி நாலு பேண்ட்டும், ஆறு சட்டையும் ஐந்து அண்டர்வேரும், ஐந்து

பனியனும் உள்ளடங்கிய சுமையோடு நாலாயிரம் ரூபாய் காசோடு அவன் சென்னைக்குக் கிளம்ப தயாரானான். பிற் பகலில் திடீரென்று மனோன்மணி வீட்டிற்குள் நுழைந்தான்.

''நான் மெட்ராஸுக்குப் போறேன். சினிமாவுல சேரத்துக்காக, எப்படியும் ஜெயிப்பேன். ஜெயிச்சுட்டு வந்து நான் உன்னை கை பிடிப்பேன். எனக்காக நீ காத்துகிட்டிருக்கணும்.'' என்று சொல்ல, அவள் வீடு தடதடவென்று எழுந்து கொண்டது.

''என்னாத்த கையப்புடிக்கறது. காலைப் பிடிக்கறது. கழுத்தைப் பிடிச்சு கொல்றதுக்கு இருந்தியேடா படுபாவி. போடா, உங்களுக்கு நாங்க பொண்ணு தரவே மாட்டோம். என் பொண்ணை வெட்டிக் குழி தோண்டி புதைப்பேனே தவிர, உனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பேன்னு நினைக்காத.''

''நாள் உங்கிட்ட பேசலை. உன் பொண்ணுகிட்ட பேசறேன். தயவு செய்து வெயிட் பண்ணு.''

அடிதடி நடக்கும் என்ற ஒரு நிலைமை ஏற்பட்ட போது, அவன் வெளியேறினான். தொடர்ந்து யாரோ பின்னால் வந்து கத்திக் கொண்டிருந்தார்கள். யார் கத்தினார்கள் என்று தெரியவில்லை.

தோளில் பை மாட்டிக் கொண்டு அந்த வேதனையோடு, அந்த வெறுப்போடு அவன் வண்டி ஏறினான்.

வெற்றி பெற வேண்டிய விஷயத்திற்கு மிகப் பெரிய போராட்டத்தில் இறங்க வேண்டிய ஒரு தருணத்திற்கு சண்டையில்லாது, சச்சரவில்லாது, பெரியவர்கள், ஆசியோடும் அன்போடும், ஆதரவோடும் நகர்ந்திருக்க வேண்டும். ஆனால், எட்டி உதைத்ததுபோல சரியானபடி விடை பெறாமல் மிகப்பெரிய வேதனையோடும், கெட்ட வார்த்தைகளின் தாக்கத்தோடும். அவன் சென்னைக்கு வந்து சேர்ந்தான். அதுவே அவன் செய்த முதல் தவறு.

முதல் கோணல் முற்றிலும் கோணலாயிற்று. சென்னை நகரில் எதைப் பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் மிரட்சியாக இருந்தது. அதீத பணிவு தோன்றியது. அந்த அதீத பணிவால் அவன் அலட்சியம் செய்யப்பட்டான்.

எந்த இயக்குனர் முன்பு இதமாகப் பேசினாரோ, அவருடைய வீட்டு வாசலில் ஒரு மணி நேரம் நின்றான். உள்ளேயிருந்து யாரோ வந்து விவரம் கேட்டார்கள்.

"இன்னும் பத்து நிமிஷம் பார்ப்பேன். இங்கேயே இருந்த போலீஸ்ல, பிடிச்சுக் கொடுத்துடுவேன். இவர்கிட்ட சேரணும்னா, ஏன் வீட்டுக்குள்ள வர போய் ஷூட்டிங்ல கேளு" என்று சொல்ல, "எந்த ஸ்டூடியோன்னு சொன்னீங்கன்னா அங்கப் போய் நிக்கறேங்க."

அவன் அப்பாவியாய் வினவினான்.

வீட்டிலிருந்து வேலைக்காரன் போல ஒருவர் பையோடு நடக்க, அவன் பின்னாலேயே ஓடுவான். ஸார்.. ஸார்.. என்று கெஞ்சினான்.

அந்த மனிதர் திரும்பிப் பார்த்துவிட்டு என்ன என்று வினவ, தான் திருப்பூரிலிருந்து இயக்குனராக ஆசைப்பட்டு வருவதாகச் சொன்னான்.

"இங்க ஏன் வந்த. இவருக்கே படம் இல்லை. போன வருஷம் ரெண்டு படம் ஃப்ளாப். யாரும் கூப்பிடலை. வீட்ல சும்மா உட்கார்ந்திருக்காரு. இங்க வந்து ஏன் கஷ்டப்படற. இப்போல்லாம் சின்னப்பசங்களெல்லாம் பிரமாதமா போடு போடுன்னு போட்டுகிட்டிருக்காங்க. அங்க போயிடு. யார், எவர்னு புக் இருக்கும். அந்த புக்கை வாங்கி வச்சுக்கோ."

சென்னைப் பட்டிணத்தில் யாருமே பேசாத அந்த நேரத்தில் அவர் பேச்சு மிக ஆறுதலாக இருந்தது.

"நன்றிண்ணா. நான் உங்களே மறக்கவே மாட்டேன்."

"வேணாம். இதெல்லாம் பெரிய பேச்சு."

"இல்லைண்ணா. நிஜமா சொல்றேன்."

"ஒண்ணு சொல்லட்டுமா."

அந்த வேலைக்காரன் போலுள்ளவன் அவனை உற்றுப் பார்த்துக் கேட்டான்.

"சொல்லுங்கண்ணா."

"நானும், உன்னை மாதிரி ஊரைவிட்டு டைரக்டர் ஆகணும்னு வந்தவன்தான். அலைஞ்சு, திரிஞ்சு எடுபிடி வேலைக்குச் சேர்ந்துட்டேன். இனிமேல என்னால டைரக்டராக முடியாது."

"அண்ணா, சின்ன வயசாத்தானே இருக்கீங்க. முயற்சி பண்ணா நடக்காதா."

"இல்லை. உள்ள செத்துடுச்சு. சாவடிச்சுட்டானுங்க."

அவன் சொல்லிவிட்டு ஒரு கணம் சலனமற்று அவனையே பார்த்துவிட்டுத் திரும்பினான். அவன் நடந்து போகும்போது அவனுக்குள் அழுகை பொங்கிப் பொங்கி வருகிறதே என்று எழிலுக்கு தெளிவாய்த் தெரிந்தது.

யார் எவர் புத்தகம் வாங்கினான். எந்த இயக்குனர் வீடு எங்கே இருக்கிறது என்று பார்த்துக் கொண்டான். ஒரு இயக்குனர் வீட்டு வாசலில் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த உதவி இயக்குனர்கள் அருகே நின்று கொண்டான். வணக்கம் சொன்னான்.

"சினிமால சேரணும்னா சினிமா பத்தித் தெரியணும். என்ன படம் பார்த்த கடைசியா."

அவன் அகிராகுரோசோவா என்று ஆரம்பிக்க, அவர்கள் பலபேர் கைகளைத் தலைக்கு மேல் குவித்துத் தூக்கினார்கள்.

"ஐயோ.. நீ ப்ளேடு பார்ட்டியா. தெரியாம கேட்டுட்டேன்ப்பா. அகிராகுரோசோவான்னு ஒரு பேர் சொல்லியே

சாவடிக்கறான்ப்பா. ஆளைவிடுப்பா.'' என்று அலறினார்கள்.

''ஏங்க அகிராகுரோசோவா நல்ல டைரக்டர் தானே.''

''அவரு நல்ல டைரக்டர்தான். நமக்கு உபயோகமா அதுதான் முக்கியம். தமிழ் சினிமாவுல ஜெயிக்கணும்னா. ராமநாராயணன் ஸார் படம் பாரு. ஊர்ல இருக்கற அத்தனை ஜனங்களுக்கும் புரியும்படியா, பிடிக்கும்படியா படம் எடுக்கற ஒரு அற்புதமான டைரக்டர் அவரு. ஒரு குரங்கு, ஒரு நாய், ஒரு கிளி, பத்து வயசுப் பாப்பா. இரண்டரை மணி நேரம் அசையாத உட்கார வச்சுட்டாருய்யா. நீ எதுக்கு சினிமாவுக்கு வரணும்னு நினைக்கற.''

அவன் விழித்தான்.

''சத்தியமா சொல்லு. எதுக்கு சினிமாவுக்கு வரணும்.''

''சம்பாதிக்கறதுக்கு ஸார்.''

''சம்பாதிக்கறதுன்னா உன் படம் எத்தனை நாள் ஓடணும்.''

''நூறு நாள் ஓடணும்.''

''நூறு நாள் ஓடணும்னா என்ன மாதிரி நீ படம் எடுக்கணும்.''

''ஜனங்களுக்குப் புரியற மாதிரி எடுக்கணும்.''

''இப்ப சொன்னியே இது பேச்சு. ஜனத்துக்கு புரியப்படற அளவுக்கு எடுக்கணும். அகிராகுரோசாவா மறந்துடு. ஃபெலினி பார்த்திருக்கியா.''

''ஆமாம்.''

''மறந்துடு. தெலுங்கு படம் பாரு. மலையாளப்படம் பாரு. நம்ம படம் கல்யாணப்பரிசுலேர்ந்து நேத்திக்கு ரிலீசான படம் வரைக்கும் பார்த்துகிட்டே இரு. எப்படி கதை சொல்றாங்கன்னு பாரு.''

''நான் தினம் இங்க வந்துடறேன். எனக்குக் கொஞ்சம் கொஞ்சமா சொல்லிக் கொடுங்க ஸார்.''

அவன் கைகூப்ப, அவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''அசந்து போயிட்ட இல்ல. நாங்க அசத்திட்டோமில்ல. இதெல்லாம் பீலா, சினிமா பத்தி எங்களுக்கு பேசத்தான் தெரியும். இன்னும் சினிமா கத்துகிட்டதா நான் நினைக்கலை. சினிமாவுக்கு வந்து பன்னெண்டு வருஷம் ஆச்சு. சினிமா தெரிஞ்சவன் சினிமாவுல ஜெயிப்பாங்கற சட்டம் கிடையாது. சினிமா சுமாரா தெரிஞ்சவன் கூட சினிமாவுல ஜெயிச்சுடலாம். சினிமா நல்லாத்தெரிஞ்சவங்க சினிமால தோற்கலாம். இந்தக் கணக்கு ஒண்ணும் புரியலை. இங்க இவரு வீட்டு வாசல்ல நின்னா உங்ககூட நிறைய பேச முடியாது. உள்ள தூங்கிட்டிருக்காருங்கறதுனால பேசறேன். நீ அந்த அட்ரஸுக்கு வா. அங்க வந்து தங்கு உன்னை மாதிரி, என்னை மாதிரி, இவங்கள மாதிரி நூத்துக்கணக்கான ஆளுங்க இருக்காங்க. சினிமாவைக் கரைச்சு வாயில ஊட்டுவாங்க. ரொம்ப அகிராகுரோசேவ பேசாத, அடி வாங்கிடுவ.''

அவர்கள் சொல்லிவிட்டு வாய்விட்டுச் சிரித்தார்கள்.

சென்னை நகரின் மேற்கு மூலையில் கிராமமாக இருந்து நகரமான ஒரு பகுதிக்குப் போனான்.

''கிராமம்னு சொல்றீங்க. இவ்ளோ பங்களா இருக்கு.''

''சினிமா வளர்ந்துடுச்சுன்னு அர்த்தம். பனை மரமும், தென்னை மரமும், கொய்யா மரமும், சேரும் சகதியுமா இருந்த இடம்தான் இந்த ஊரு. மழைநாள்ல பத்துநாள் முழங்கால் ஜலம் தேங்கும். எப்போவும் தவளைச்சத்தம் இருக்கும். ஆனா, இப்போ எல்லாம் மாறிப்போச்சு.''

மழை பெய்யாமல் தவளைகள் செத்துப் போய் விட்டன. கொசுக்கள் கூட்டம் கூட்டமாய் அலைந்தன. சத்த

மில்லாமல் இரண்டு மின் விசிறியில் தூங்குகின்ற வீட்டு சுகத்தை நினைத்துக் கொண்டான்.

ஒரு அறையில் கக்கூஸுக்குப் போகும் வழியில் ஒண்டிக் கொண்டான். இரவெல்லாம், பகலெல்லாம், பொழுதெல்லாம் அவர்கள் சினிமாவைப்பற்றிப் பேசினார்கள். விதம்விதமாகச் சொல்லிக் கொடுத்தார்கள். ஆயிரக் கணக்கான தமிழ் சினிமாக்களை அலசிப் போட்டார்கள். வசனங்களை மனப்பாடமாகச் சொன்னார்கள். காமெடி சீன்களைப் பார்த்து அனுபவித்ததைவிட இவர்கள் சொல்லிக் கேட்கிறபோது அனுபவம் இன்னும்கூட இருந்தது. மிமிக்ரி செய்தார்கள். பாட்டு பாடினார்கள்.

"சினிமால சேரணும்னுதானே வந்த."

"ஆமாம்."

"கதை சொல்லு."

"எப்படி ஸார்."

"வேற எதுக்குய்யா இருக்க இங்க. உட்கார்ந்து கதை பண்ணுய்யா. ஒபன் பண்ணா அப்படின்னு ஆரம்பி முதல் சீன் என்னா எழுபதாவது சீன் என்ன. நடுவுல எத்தனை பாட்டு எத்தினி ஃபைட்டு, யார் நடிகர், யார் நடிகை, எது லொகேஷன் தீர்மானம் பண்ணுய்யா.

அவன் விழித்தான்.

"ரொம்ப சுலபமா சொல்லித்தரேன். சினிமாவுக்கு வந்துட்டீங்க இல்ல. அப்போ ரெண்டு விஷயத்துல தெளிவாக இருங்க. என்ன சொல்லப் போகிறோம். எப்படிச் சொல்லப் போகிறோம். ஒரு காதல் சொல்லப் போகிறோம். எப்படி சொல்லப் போகிறோம். கிராமத்து சூழ்நிலையில் ஆரம்பித்து, பட்டிணத்து சூழ்நிலையில் முடிக்கப் போகிறோம்."

அவனுக்கு அந்தப்பேச்சு பிடித்துப் போயிற்று. தனியே ஒரு பார்க்கில் உட்கார்ந்து ஒரு கதை யோசித்தான்.

கையில் காசு குறைந்தது. அப்பாவுக்கு கடிதம் எழுதினான். ஒரு ஆயிரம் ரூபாய் வந்தது. அடிக்கடி கேட்காதே என்ற குறிப்பு இருந்தது. இந்த மாதம், இந்தக் காசில் நகர்ந்து விடலாம். அடுத்தபடி என்ன செய்வது. அடுத்த மாதம் யாரைக் கேட்பது.

யோசனை வந்தது.

அவளுக்குக் கடிதம் எழுதலாமா?

இனிய மனோன்மணி என்றும் உன் நினைவாகவே இருக்கின்ற எழில் எழுதிக் கொள்வது. இங்கு நான் நலம். உதவி இயக்குனர்கள் நண்பர்களோடு ஒரு அறைக்குள் நானும் இருக்கிறேன். அவர்கள் தயவால் உணவுக்கும், மற்ற விஷயங்களுக்கும் கவலையில்லை. அவர்களுடைய உதவியில் வெகு சீக்கிரம் நல்ல ஒரு இயக்குனரிடம் உதவியாளராகச் சேர்ந்துவிடலாம் என்று நினைக்கிறேன். உதவி இயக்குனர்கள் எனக்கு அதிக விஷயங்கள் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்.

திருப்பூரில் உட்கார்ந்து பேசுகின்ற விஷயங்களைவிட இப்பொழுது நான் அறிந்து கொண்ட சினிமா மிகப்பெரிது. இன்னும் விசாலமாகியிருக்கிறது. வெகு நிச்சயம் இயக்குனராகி விடலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால், கையில் காசு குறைவாக இருப்பதால் எங்கேயும் போக முடியவில்லை.

இயக்குனர்களைப் பார்க்க காலையிலேயே எழுந்து பஸ்ஸில் போகிறேன். காசு இல்லாதபோது நடந்து போகிறேன். பஸ்ஸுக்கும் வேறு சில செலவுகளுக்கும் காசு தேவைப்படுகிறது. நீ எப்படியாவது யாரிடமாவது வாங்கி ஒரு ஆயிரம் ரூபாய் அனுப்பினால் இன்னும் ஒரு மாதத்திற்கு சௌகரியமாக இருக்கும். இதைக் கேட்க எனக்குத் தயக்கமாக இருக்கிறது. ஆனாலும், நான் வெற்றி பெற்றால், அதனால் பலனடையப் போவது நீயும்தானே. எனவே,

எப்பாடுபட்டேனும் ரூபாய் ஆயிரம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடிதத்தின் கடைசிப்பகுதி மிகக் கெஞ்சலாக காலில் விழுந்து அழுவதுபோல் இருக்கிறது என்று நினைத்து மறுபடியும் மாற்ற நினைத்தான். பரவாயில்லை அப்படி இருந்தால் என்ன என்று யோசித்தான்.

அங்கிருந்து எந்தச் சலனமும் இல்லை.

"சம்பளமில்லாத அஸிஸ்டெண்ட்னா சேர்த்துக்கறேன்றாரு வந்துடறியாடா."

உதவி இயக்குனர் கேட்க, அவன் சரி என்று ஒத்துக் கொண்டான்.

இவனைத்தவிர சம்பளமில்லாமல் அங்கு ஆறு இயக்குனர்கள் இருந்தார்கள். சம்பளத்தோடு ஐந்து இயக்குனர்கள் அங்கு இருந்தார்கள். இணை இயக்குனராக ஒருவர் இருந்தார். காபி கிடைத்தது. டிபன் கிடைத்தது. சோறு கிடைத்தது.

டைரக்டர் தலைக்கு தலைகாணி வைத்து தூங்குகின்ற போது, ஒரு சினிமா பற்றித் தெரிந்து கொள்ள முடிந்தது. நடிகர்களின் அந்தரங்க வாழ்க்கை, நடிகைகளின் அந்தரங்க அவலநிலை எல்லாம் விதம்விதமாக விளக்கப்பட்டன. பேசப்பட்டன. சிரிக்கப்பட்டன. கொஞ்சம் திரித்தும் கூறப்பட்டன.

"சினிமாவுல ஜெயிக்கணும்னா என்ன வேணும் சொல்லு பார்க்கலாம்."

அவனை ஒரு உதவி இயக்குனர் கேட்டார்.

எழில் பேயாய் முழித்தான்.

"நல்ல ஃப்ரெண்ட்ஸ் வேணும். உன்னைப்பத்தி வெளியில் சொல்றதுக்கு உண்மையான ஃப்ரெண்ட்ஸ் வேணும். எழில் நல்ல கதை சொல்வான். எழில்கிட்ட சூப்பராக ஒரு

சப்ஜெக்ட் இருக்கு. அதைக் கேட்கறீங்களா. எழில் சினிமா பத்தி நல்லா தெரிஞ்சு வச்சிருக்கான். இவர்கிட்ட வேலை செய்திருக்கான். அவர்கிட்ட வேலை செய்திருக்கான்னு உன்னைப்பத்தி எந்தவித எதிர்பார்ப்புமில்லாமல் உனக்கு சப்போர்ட் பண்ற ஆள் வேணும். அவனுக்கு நீ சப்போர்ட் பண்ணணும். நல்லா கதை சொல்றாரு. சீன் சொல்றாருன்னு. நீ போய் எங்க சொல்லணுமோ அங்க போய் சொல்லணும்."

எழிலுக்குத் திகைப்பாக இருந்தது.

ஆமாம். நல்ல நண்பர்கள்தான் சினிமாவில் முன்னேற காரணமாக இருப்பார்கள் என்பது அடிப்படையான தத்துவமாய்த் தெரிந்தது.

"புடுங்குவானுங்க. உன்னைப்பத்தி இன்னொருத்தன் நல்லதா சொல்றதா? சினிமாவுலயா? இதுவரைக்கும் நடந்திருக்கா? என்ன பேசற, நீ அயோக்கியன், கெட்டவன், பொம்பளை பொறுக்கி, உனக்கு வேலையே தெரியாது. பேச்சுத்தான் பெருசா இருக்கும். போட்டுக் கொடுக்கறவன். இப்படித்தான் சொல்வாங்களே தவிர, உனக்கு வேலை தெரியும். நீ நல்லவன்னு கழுத்தை அறுத்தாலும் சொல்ல மாட்டான்.

அப்படியே நீ சொல்றேன்னு வச்சுக்கோ உங்கிட்ட நன்றியா இருப்பான்னு நினைக்கறயா. இல்லை, கதை சொல்லி ஒரு படம் கிடைச்சுடுச்சுன்னா சரி ஓரமா உட்காந்துக்க அப்படின்னு உனக்கொரு இடம் கொடுப்பான். அந்தப்படம் ஜெயிச்சுடுச்சுன்னா. அதுக்கென்ன இப்போ, எனக்கு வேலை தெரியும். நான் ஜெயிச்சிட்டேன் அப்படின்னுவான். அடுத்த படம் ஜெயிச்சிட்டேன்னா, என்னப்பா அடிக்கடி வந்து தொந்தரவு பண்ற. போ, அந்தாண்ட போ அப்படின்னு சொல்லுவான்.

அதற்கு அடுத்த படம் ஜெயிச்சுடுச்சின்னா உன்னைப் பார்க்கவே மாட்டான். வெளியில் துரத்தடா அவனை ஏன்

கண்ட நாயை உள்ள விடற அப்படின்னு உன் காதுபடவே சொல்வான். உலகத்துல எந்த இடத்துலயும் யாரையும் எதுக்கும் நம்பக்கூடாது. சினிமாவுல நம்பவே கூடாது.''

வேறொருவர் அறிவுரை சொன்னார்.

வாழ்க்கை அந்தக் கால கட்டத்தில் மிக மிக குழப்பமாக இருந்தது.

''அட்வைஸ் கேட்டுக்கிட்டே இருந்தீன்னா கடைசி வரைக்கும் முழிச்சுக்கிட்டு தான் இருக்கணும். யாரையும் அட்வைஸ் கேட்காத. நீ டைரக்டர் ஆகணும்னு தலை யெழுத்து இருந்ததுன்னா ஆயிடுவ. கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே அப்படின்றதுக்கு என்ன அர்த்தம். எதுவும் உன் கையில் இல்ல. ஜெயிச்சதுக்கும் நீ காரணம் இல்லை. தோத்ததுக்கும் நீ காரணம் இல்லை அப்படின்னு தான் அர்த்தம்.''

''புரியலையே.''

''உட்கார்ந்து யோசனை பண்ணு. அப்போ புரியும். இன்னும் நல்லா ஆழ்ந்து யோசனை பண்ணு. வேற ஒரு விஷயம் புரியும். தோத்துட்டோம்னு துவளாம இருந் தேன்னா ஜெயிக்க முடியும். ஜெயிச்சுட்டு ஆடாத இருந் தேன்னு வச்சுக்க தோல்வியைத் தள்ளிப்போட முடியும். நான் சொல்றது இப்போ புரியுதா.''

''கொஞ்சம் புரியறாப்போல இருக்கு. கொஞ்சம் புரியலை.''

''இது சொல்லிக் கொடுத்து வராது கண்ணு. இது நானா கத்துகிட்டேன். யோசனை பண்ணி யோசனை பண்ணி கத்துகிட்டேன். அதனாலதான் நான் சினிமாவுல பெருசா ஆடறது இல்லை. கிழிச்சுடுவேன். ஓடிச்சுடுவேன். திசையை மாத்திடுவேன் அப்படின்னு நான் அலட்டறதே இல்லை. சினிமாக்கு வந்துட்ட இல்ல. இடையறாத முயற்சி விதம்

விதமா முயற்சி, ஒடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு.. அப்படியொரு வாட்டம். எப்போ எங்க என்ன சான்ஸ் கிடைக்கும்னு காத்துகிட்டிருக்கற வாட்டம். எல்லா இடத்துலயும் வாயை வைக்காத. எது சரியான வாய்ப்பு அப்படின்னு காத்துகிட்டிருக்கற எண்ணம் திடம். இது முக்கியம்.

ஒவ்வொரு ஷாட்டும் கண்ல ஒத்திக்கற மாதிரி அற்புதமா வைக்கற ஒரு டைரக்டர் இருக்கான். மூணு படம்தான் பண்ணான். வீட்டோட உட்கார்ந்துகிட்டிருக்கான். அவனைக் கூப்பிடுவார் இல்ல.

அதேசமயம், என்ன வேலை செய்தாலும் டவுட். தடுமாற்றம் இப்படி எழுதலாமா. அப்படி எழுதலாமான்னு ஒரு சீனுக்கு இருவத்தாறு தடவை டயலாக் எழுதறது, ஆறேழு தடவையாவது ஷாட்டை மாத்தறது அப்படியொரு டைரக்டர். அவன் போடுபோடுன்னு போட்டிகிட்டிருக் கான். நேரம் கண்ணா நேரம்.

சினிமால மட்டுமில்ல எல்லா இடத்துலயும் தகுதி உள்ளோர் சறுக்கறதும், தகுதி கம்மியா இருக்கறவங்க சிறந்து நிக்கறதும் நடக்கத்தான் செய்யும். நீ என்ன பண்ணணும், தகுதியை வளர்த்துகிட்டே இருக்கணும். சந்தர்ப்பத்துக்குக் காத்துகிட்டே இருக்கணும்.

நம்ம டைரக்டர் ஒரு படம் டைரக்ட் பண்ண கிடைக்கும்னு போன வருஷம் நினைச்சிருப்பாரா. இப்போ எவ்ளோ நிம்மதியா தூங்கறாரு பாரு. இந்தப்படம் முடியற வரைக்கும் அவருக்கு மரியாதை கிடைக்கத்தான் கிடைக் கும். படம் முடிஞ்சு படம் சக்ஸஸ் ஆனா பெரிய மரியாதை கிடைக்கும். படம் சக்ஸஸ் ஆகலைன்னா சாதாரண மரியாதை கிடைக்கும். சினிமாக்குள்ள புகுந்து ஒரு படம் பண்ணிட்டோங்கறதே ஒரு பெரிய விஷயமில்ல. மறு படியும் வாய்ப்பு கிடைக்காம போகாதா கிடைக்குமில்ல.''

மிகப்பெரிய இளைஞர் பட்டாளம் கனவுகளோடு சினிமாவுல போராடிக் கொண்டிருக்க, அவனும் அதற்குள் நுழைந்தான். கதை விவாதத்தில் உற்சாகமாகக் கலந்து கொண்டான்.

"எப்படியிருக்கு இந்தக்கதை."

அந்த இயக்குனர் கேட்டார். அவர் பெயர் மதுரை வீரன். மதுரை மாவட்டத்து சிறிய கிராமத்திலிருந்து மிகச் சாதாரண குடும்பத்திலிருந்து சினிமா ஆசையோடு பத்து வருடம் முன்பு பட்டணத்திற்கு வந்து படாத பாடுபட்டு இப்பொழுது இயக்குனராக வாய்ப்புக் கிடைத்து வெற்றிக்கொடியைப் பறக்கவிடக் காத்திருப்பவர்.

"எப்படியிருக்கு என் கதை."

அவர் ஒரு உதவியாளரைப் பார்த்துக் கேட்டார்.

"ரொம்ப நல்லாயிருக்கு ஸார். புதுசா இருக்கு ஸார். இதுவரைக்கும் யாரும் இப்படியொரு கேரக்டர் சொன்னது இல்லை ஸார்." என்று அவன் கூடுதலாகவே அவரைப் புகழ்ந்தான். அப்படிப் புகழ அவனுக்குச் சொல்லிக் கொடுக்கப் பட்டிருந்தது.

"ஏங்க கதை சுமாராதானே இருக்கு."

எழில் காதோடு பேச, "நிறுத்திக்கறியா. உனக்கு ஏன் அதைப்பத்தி. இப்போ நீ எங்கிட்ட சொன்னதை நான் போய் டைரக்டர்கிட்ட சொன்னேன்னு வச்சுக்க உன் கதி என்னாகும். மறந்து போய்கூட வாயைத்திறந்து சொல்லிடாத. கதை நல்லாயிருக்கு. இன்னும் நல்லா வரும். அதுக்கு என்ன உதவி செய்ய முடியும் அதைப்பண்ணு. நாக்குமேல பல்லைப் போட்டு நல்லாயில்லைன்னு யார் வேணாலும் சொல்லிடலாம். கதை நல்லாயிருந்து நல்ல படியா ஷூட்டிங் நடந்து நல்லபடியா நடிச்சு, நல்லபடியா வெளிய வந்து, அதுல உனக்கும் பேரு எனக்கும் பேரு.

நல்லாயில்லைன்னு சொல்றதுக்கா உனக்கு சோறு போட்டு உட்கார வச்சுருக்காங்க" என்று அடிக்குரலில் சீற, அவனுக்குப் புரிந்துபோயிற்று. ஆனால், யார் பாராட்ட வேண்டுமோ அவர் பாராட்டவில்லை. அந்த ஹீரோ இந்தக் கதை நன்றாக இல்லை என்று முகத்தில் அடித்தது போல் சொல்லிவிட்டார். என்னுடைய கால்ஷீட் வேணும்னா இன்னும் நாலு நாள்ல கதை சொல்லுங்க. கதை சொன்னா எடுத்துக்கறேன். கதை சொல்லலையா வேற ஆளுக்கு கால்ஷீட் கொடுத்துடுவேன்.

அந்த மதுரைவீரனுக்கு முகம் இருண்டு போயிற்று.

"என்னடா... திடீர்னு ஆப்பு அடிச்சுட்டான். நல்லாயிருக்கு. நல்லாயிருக்குன்னு சொன்னான். இப்போ இல்லைன்றானே."

"வேற என்னமோ மேட்டர்மா. ஹீரோ ஒரு ரேட் கேட்டாப்போல, அதை முதல்ல புரொடியூஸர் ஒத்து கிட்டாப்போல, போன படம் சரியாப்போகாததுனால இந்தப்படம் இப்படி ஆயிப்போச்சு. அதனால ஹீரோவும், புரொடியூசரும் ஒத்துவரமாட்டாங்கப்போல. இவ்ளோதான் கொடுப்பேன்னு புரொடியூசர் சொன்னாப்போல அங்க நோன்னு சொல்ல முடியாம கதை சரியில்லைன்னு சொல்லி கிட்டிருக்கான்."

சென்னையைச் சேர்ந்த அந்த உதவி இயக்குனரின் பேச்சு மொழியே வேறுமாதிரி இருந்தது.

மதுரைவீரன் குடித்துவிட்டு அதிகம் புலம்ப, எழிலுக்கு உள்ளுக்குள் சட்டென்று ஒரு துக்கம் ஏற்பட்டது.

"கதை பண்றது கஷ்டமா ஸார். அந்தக்கதை இல்லைன்னா இன்னொரு கதை பண்ணிடலாமே ஸார்."

"எது பண்ணாலும் நல்லாயில்லைன்னுதான் சொல்லப் போறான். அப்போ நீ எதைன்னு சொல்லுவ தம்பி."

வேறு ஒரு உதவி இயக்குனர் சொல்ல, எல்லோரும் திகைத்து நின்றார்கள். எல்லோரையும் வெளியே அனுப்பி விட்டு, அந்த மதுரைவீரன் எழில் தோளில் கை வைத்தான்.

"உங்கிட்ட ஏதாவது கதை இருக்கா." என்று தழுதழுத்த குரலில் கேட்டான்.

"ஏங்க, ஏன் அப்படிக் கேட்கறீங்க."

"உங்கிட்ட ஒரு கதை இருந்தா சொல்லு. இன்னிக்கு சாய்ந்தரத்துக்குள்ள ஹீரோக்கு கதை சொல்லணும். ஓனோட சொல்லணும். சொன்னா வாய்ப்பு இல்லைன்னா ஊத்தி மூடிக்கும். வீட்டுக்குப் போடான்னுடுவாங்க. அவன் வேற இடத்துக்கு கால்ஷீட் கொடுத்துடுவான். வேற டைரக்டர்கிட்ட வேலை செய்ய ஆரம்பிச்சுடுவான். என் வாழ்க்கை முடிஞ்சுப் போயிடும் எழில். இதை உன் காலா பிடிச்சுகிட்டு கேட்கறேன். உங்கிட்ட ஏதாவது கதை இருக்கா."

"சும்மாயிருங்க. இதுக்குப்போய் இவ்ளோ பெரிய வார்த்தையெல்லாம் பேசறீங்க. கதை என்ன ஸார் பெரிய விஷயமா."

"ப்ளீஸ் உன்கிட்ட ஏதாவது கதை இருக்கா. தயவு செய்து சொல்லு."

"இருக்கு ஸார்."

எழில் அடுத்த ஒரு மணிநேரத்தில் அவன் மனதில் வைத்திருந்த ஒரு அற்புதமான காதல் கதையை அவரிடம் விவரித்துச் சொன்னான்.

"இல்லைப்பா அவன் லவ் ஸ்டோரிக்கு ஒத்துக்க மாட்டான். ஆக்ஷன் ஸ்டோரி கேட்கறான். ஆனா, உன் கதை நல்லாயிருக்கு. வெளிய யாருக்கும் கொடுத்துடாத வச்சுக்க."

மதுரைவீரன் சொல்லிவிட்டு தூக்கம் வருவது போல நடிக்க, எழில் வெளியே வந்தான்.

"இன்னிக்கு டிஷ்கஷன் இல்லையாம். வீட்டுக்குப் போகச் சொல்லிட்டார் டைரக்டர்."

வேறு ஒரு உதவி இயக்குனர் சொல்ல, அந்த உதவி இயக்குனரைத் தவிர மற்ற எல்லோரும் வெளியே வந்தார்கள்.

"என்ன சொன்ன உள்ள."

"ஒரு கதை கேட்டாரு. நான் வச்சுகிட்டிருந்த ஒரு கதையைச் சொன்னேன்."

"ஏண்டா சொன்ன."

"கேட்டாரே. செத்துடுவேன் வேற வழியே இல்லைன்னாரே."

"அப்படித்தான் சொல்லுவாங்க. அதுக்காக உங்கிட்ட இருக்கற கதையைக் கொடுக்கறதா. அப்புறம் நீ சாக மாட்டியா. எதிர்காலத்துக்கு என்ன பண்ணுவ."

"இல்லை. அந்தக் கதை பிடிக்கலைன்னுட்டாரு."

"அவன் அப்படித்தான் சொல்லுவான். அவனை நம்பி கதை எதுவும் சொல்லாத." தோழனைப்போல் எப்பொழுதும் செயல்பட்டு வந்த உதவி இயக்குனர் சொல்லிவிட்டு, அவன் சைக்கிளில் ஏறி அவன் இடத்திற்குப் போனான்.

அடுத்த நாளும் கதை விவாதம் இல்லை என்று சொல்லப் பட்டது. அதற்கு அடுத்த நாளும் இல்லை என்று சொல்லப் பட்டது.

"டைரக்டரு சொந்த ஊருக்குப் போறாராம்."

"ஐயோ, சாப்பாட்டுக்கு என்னடா பண்றது."

அவன் வாய்விட்டு அலறினான்.

"உன்னை கன்ஃபார்ம் பண்ணிட்டாரு."

"கன்ஃபார்ம்னா."

"அவருடைய சம்பளம் போட்ட அஸிஸ்டெண்ட்டா சேர்த்துக்கறாரு."

"என்னப்பா, என்னப்பா சொல்ற. அது அவரு எங்கிட்ட நேரா சொல்லியிருக்கலாமில்ல."

அவன் பரவசமாகக் கேட்டான்.

"இல்லை. அவசரமா ஊருக்குக் கிளம்பறேன்னாரு. இந்தா ஆயிரம் ரூபா. உன்னையும் ஊருக்குப் போயிட்டு வரச்சொல்றாரு. வந்தா நல்லா வேலை இருக்குமாம்."

அவனுக்கு சந்தோஷமாக இருந்தது.

"அம்மாவுக்கு ஒரு புடவை வாங்கலாமா" என்ற எண்ணம் வந்தது.

"ஆயிரம் ரூபா போறாதுன்னு நினைக்கறீயா."

அந்த உதவி இயக்குனர் கேட்டார்.

"இல்ல. அம்மாவுக்கு புடவை எடுக்கலாம்னு நினைச்சேன். அது போறும்." என்று இழுத்தவாறு சொன்னான்.

"புடவைதானே. கம்பெனி கணக்குல வாங்கிக்கலாம். புடவை மட்டும் போதுமா. வேற ஏதாவது வேணுமா."

"அப்பாவுக்கு சட்டை."

"வாங்கிடலாம்."

"அப்புறம்."

மெல்ல தடுமாறினான்.

"சொல்லுங்க."

"ஒரு பாவாடை, தாவணி செட்."

"யாருடா தங்கச்சியா."

"இல்ல."

"அக்காவா."

"இல்ல."

"உன் ஆளா."

"ஆமாம்."

வெட்கப்பட்டுச் சொன்னான்.

"நான் காஸ்டியூமர்கிட்ட கேட்டு ஒரு வார்த்தை சொல்லிடறேன்."

அவன் சைக்கிள் ஏறி எங்கோ போனான்.

"அவரே செலக்ட் பண்ணிகிட்டு வரலாமான்னு கேட்கறாரு. கம்பெனி கணக்குல உனக்கு வாங்கிக் கொடுத்துடறாராம். காஸ்டியூமர் நம்மாளுதான்."

"நான் காசு எப்போ தரணும்."

"ஒண்ணும் தரவேணாம்."

"டைரக்டர்கிட்ட சொல்லிக்கலாம். டைரக்டர் கணக்குல போயிடும்."

"அவர்கிட்ட கேட்காம செய்யறது தப்பு இல்லையா."

"உன்னை ஒண்ணும் சொல்ல மாட்டாருடா." வேலை செய்யறவங்களை அவருக்குப் பிடிக்கும்."

"எப்படிச் சொல்ற."

"எங்கிட்ட கேட்டாரு."

"நல்லா சீன் சொல்றான் ஸார். சினிமா புரிஞ்சுகிட்டு பேசறான் ஸார் அப்படின்னேன். ஆமா ஆமா அவன் கதை சொல்றதுகூட நல்லாயிருக்கு. நமக்கு சூட் ஆகலையே தவிர, அது நல்ல கதைதான் அப்படின்னாரு."

"அப்படியா.. அப்படியா சொன்னாரு."

அவன் ஆனந்தப் பரவசத்தில் மூழ்கிப் போனான். கையில் புதுத்துணி மூட்டையோடும் அவன் பெட்டியோடும் திருப்பூருக்கு பஸ் ஏறினான்.

விடியல் நேரத்தில் வீட்டு வாசலில் கதவைத் தட்டினான்.

அப்பாவும், அம்மாவும் திகைத்து வரவேற்றார்கள்.

"நூலு ஸ்பிண்டல் மாதிரி இருந்தவன். காலி ஸ்பிண்டல் மாதிரி வரான். என்னாடா இவ்வளவு இளைச்சுப் போயிட்ட."

அப்பா கிட்டத்தட்ட அலறினார். ஆனால், அவன் முகத்தில் உள்ள சந்தோஷத்தைப் பார்த்து வீடு சந்தோஷப் பட்டது.

"ஜெயிச்சுடலான்றியா."

"நிச்சயம்ப்பா."

"அப்படியே இந்த திருப்பூர்ல எந்த வீடு வாங்கலாம் அப்படின்னு மனசுல ஒரு படம் போட்டுகிட்ட போ. எந்த மாதிரி வீடு கட்டலாம் அப்படின்னு எண்ணம் வச்சுக்கோ."

"ரெண்டு வருஷம்... ரெண்டு வருஷம். திருப்பூர்ல நாம வீடு வாங்கறோம்."

அவன் விரல் சொடுக்கி அப்பாவிடம் பேசினான்.

அப்பா அவனை அருகே அழைத்து அவன் தோளில் கை போட்டுக்கொண்டு கன்னத்தில் முத்தமிட்டார்.

வீடு குதூகலமாகியது.

நண்பர்கள் ஓடி வந்தார்கள். சுற்றிக் கொண்டார்கள்.

"என்னப்பா. அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆயிட்டியமே."

விசாரித்தார்கள்.

அம்மா கையால் டீ சாப்பிட்டு விட்டு நண்பர்களோடு டீ குடிக்கப் போனான். சூடா சமோசா, ஸ்பெஷல் டீ என்று அவனை ஆர்டர் செய்தான்.

வேறு யாரோ காசு கொடுக்க வரும்போது வேண்டா மென்று மறுத்துவிட்டான். சினிமா பற்றி அவர்கள் விதம் விதமாகக் கேள்வி கேட்க. அவன் விவரமாகப் பதில்

சொன்னான். அனேகமாக அவர்கள் கேள்விகளெல்லாம் நடிகர், நடிகைகள் உறவு பற்றியே இருந்தன.

"ஏண்டா. இதைப்பத்தியே கேட்கறீங்க. அவங்க உலகம் வேற. எங்க உலகம் வேற. நடிகர், நடிகை நடிச்சுட்டுப் போயிடுவாங்க. அதுக்கப்புறம்தான் வேலையே இருக்கு. சினிமாவை லவ் பண்ணவன் அங்க இருக்கற மத்த விஷயத்தை லவ் பண்ணமாட்டான். படம் ஜெயிக்கணும். அதான் முக்கியம். பிரமாதமான டைரக்டர்னு மரியாதை கொடுக்கணும். அதான் முக்கியம்."

அவன் ஞானம் பார்த்து நண்பர்கள் வியந்தார்கள். அவன் எழுந்தால் எழுந்தார்கள். அவன் நகர்ந்தால் நகர்ந்தார்கள். அவன் அமர்ந்தால் அமர்ந்தார்கள். அவன் பேசினால் கேட்டார்கள்.

"விடுங்கடா நான் போய் தூங்கறேன்."

அவன் அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வந்து மனோன்மணியின் வீட்டுப்பக்கம் போனான்.

அவன் வந்திருப்பதை யாரோ சொல்லி விட்டார்கள் போலும், மனோன்மணி வாசலிலேயே எதிர்கொண்டாள்.

"எங்க பேசறது." என்று ஆவலோடு கேட்டாள்.

"திருப்பூர்லேர்ந்து கோயம்புத்தூர்ல பஸ்ல போய் அதே பஸ்ல திருப்பூருக்குத் திரும்பிடலாம்." என்று அவன் சொன்னான்.

திருப்பூரிலிருந்து கோயம்புத்தூருக்கு எங்கும் நிற்காத துரிதவேக பேருந்துகள் உண்டு. வீடியோ கோச் உண்டு. கொஞ்சம் கட்டணம் அதிகம். ஆனாலும் சௌகரியமாக இருக்கும். ஒன்றரை மணிநேரத்தில் கோயம்புத்தூர் கொண்டு போய் இறக்கி விடுவார்கள். அந்த பஸ்ஸில் பயணம் செய்வதே சுகமாக இருக்கும். தூங்கிக் கண் விழித்தால் கோயம்புத்தூர் என்று பேசுவார்கள்.

அந்த பஸ்ஸில் டிக்கெட் வாங்கி அவளுக்கருகே உட்கார்ந்து கொண்டான். அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

பஸ்ஸில் பலபேர் தூங்கிக் கொண்டு வந்தார்கள். வீடியோவில் ஒரு பழைய படம் ஓடிக்கொண்டிருந்தது.

அவன் அவளுக்கு நம்பிக்கை கொடுத்தான். வாழ்க்கையில் ஜெயித்துவிட முடியுமென்றும் டைரக்டராக முடியுமென்றும், காட்சிகள் அமைக்க முடியுமென்றும் காட்சிகள் அமைத்ததை கேமராவில் பதிவு செய்ய முடியுமென்றும் அவன் வேலையை விவரித்தான். அவள் வியப்போடு கேட்டுக் கொண்டிருந்தாள். அவளும் நடிகர், நடிகையர் உறவுபற்றிக் கேள்வி கேட்டாள். தெரிந்தவரை பதில் சொன்னான்.

''ப்ளீஸ். இதெல்லாம் தயவு செஞ்சு கேட்காத. என் இண்டஸ்ட்ரீல இருக்கறவங்களை நானே இழிவா பேசறது நல்லாயில்லை. எல்லா இடத்துலயும் எல்லா வேலையிலும் ஆம்பளை, பொம்பளை தப்பு நடக்கத்தான் செய்யுது. அதே மாதிரிதான் சினிமாவும். அங்க நல்லவங்களும் இருக்காங்க. கெட்டவங்களும் இருக்காங்க. என்னவோ சினிமால நடிக்கற நடிகர், நடிகைகள் மட்டுமே சினிமாவுல தப்பு பண்றாப் போல எல்லாரும் பேசறாங்க. எல்லாரும் எழுதறாங்க. அப்படி ஒண்ணும் இல்லை. பனியன் கம்பெனியில நடக்காத தப்பா. இங்க தப்பே நடக்கலையா?''

அதற்குப்பிறகு அவள் கேட்கவில்லை.

திரும்பி வரும்போது இருட்டியிருந்தது. அந்த பஸ்ஸில் அவளின் இடுப்பைத் தொட்டான். மார்பைத் தொட்டான். கன்னங்களைத் தொட்டான். இறுக்க அணைத்துக் கொண்டான். முத்தமிட்டான். ஒரே அயற்சியாக இருந்ததால் தூங்கிப் போனான். அவள் தூங்கவில்லை. அவனைப்பற்றிய

கனவுகளோடும், கேள்விகளோடும் அவள் திருப்பூருக்குத் திரும்பினாள்.

ஆனால், இரவு கனவுகள் தவறாக வந்தன. மலையிலிருந்து கால் தடுக்கி விழுவதுபோலவும், ஆற்றில் அடித்துக் கொண்டு போவது போலவும், முடியெல்லாம் பிய்ந்து கையில் வருவது போலவும் பயந்து பயந்து ஓடுவது போலவும் கனவுகள் வந்தன.

என்ன படம் பார்த்தோம். இப்படி கனவு வருது என்று நினைத்துக் கொண்டான். அவனுக்கு விடை கிடைக்கவில்லை. அடுத்த நாள் அவளைச் சந்திக்க முயற்சி செய்ய முடியவில்லை.

அவள் சற்று விலகிப் போவதுபோல தோன்றியது.

ஐந்து நாட்கள் கழித்து ஊருக்குக் கிளம்புகிற நேரத்தில் மறுபடியும் அவள் வீட்டு வாசலில் நிற்க, அவள் அவனை உள்ளே வரச் சொன்னாள். அவன் ஆச்சரியப்பட்டு வீட்டிற்குள் நுழைந்தான். அவள் அம்மா அவனை வரவழைத்து உட்கார வைத்தாள்.

''சினிமாவில் சேர்ந்துட்டீங்களாம். பெரிய ஆள் ஆயிட்டீங்களாம். சொன்னாங்க.''

''இல்லீங்க. பெரியாள் ஆகணும் இனிமேதான்.''

''உங்க வீட்ல மனோன்மணி பத்திச் சொல்லிட்டீங்களா.''

''இல்லீங்க சொல்லலை.''

''ஒண்ணும் சொல்லாதிங்க.''

''ஏன்.''

''நாங்க மனோன்மணியை வேற இடத்துல கல்யாணம் பண்ணி கொடுக்கறதா தீர்மானம் பண்ணியிருக்கோம்.''

''என்னங்க. நான் இவ்ளோ ஆசையா இருக்கேன்.''

"இருக்கலாம். நானும் மனோன்மணியும் யோசனை பண்ணிப் பார்த்தோம். நீங்க சினிமாவுல போய் ஜெயிக்க வந்து எத்தினி வருஷம் ஆகும். அதெல்லாம் சரியா வராது. மனோன்மணி அடுத்த வருஷம் ப்ளஸ் டூ எழுதப்போகுது அதுக்கு முன்னாடியே அவளை பொண்ணு கேட்டு நிறைய பேர் வராங்க. அவங்க அப்பாவுக்கும் முடியலை. வலுவு இருக்கச் சொல்லவே பொண்ண கல்யாணம் பண்றதுதானே நல்லது. நீங்க ஜெயிச்சு வரதுக்கு மூணு வருஷம் ஆகும். அதுவரைக்கும் ஒரு பொண்ண காபந்துபண்ணி வச்சுருக்க முடியுமா. உங்களுக்குக் கிடைக்காத பொண்ணா. பட்டணத்துல நடிகைங்க இருப்பாங்க. டான்ஸ் ஆடறவங்க இருப்பாங்க. அவங்களைக் கல்யாணம் பண்ணிக்கோங்க. மனோன்மணியைத் தயவு செய்து மறந்துடுங்க."

"மனோன்மணி அப்படிச் சொல்லலையே."

"அவ சொல்வாளா. அவளுக்கு என்ன பண்றதுன்னு தெரியலை. குழம்பினா எங்கிட்ட வந்து சொன்னா. நான் தான் வேணாம் நமக்கு சரியா வராது. கழட்டி விட்ருண்ணு சொன்னேன்."

"ஏங்க, ஏன் அப்படி சொல்றீங்க."

"காசு பணம் ஒண்ணும் பெரிய முக்கியமில்லை. நீங்க பெரிய டைரக்டர் ஆயிட்டா உங்களுக்கு ஏத்தபடி சீர் செய்ய வேணாமா. உங்கம்மா கேட்க மாட்டாங்களா. உங்கப்பா நின்னு நாக்கு மேல பல்லைப் போட்டு இத்தினி பண்ணுங்கோ அப்படின்னு பேச மாட்டாங்களா. எங்களால பண்ண முடியுமா? முடியாது. நீங்க தோத்துட்டீங்க. ஜெயிக்கலை. அப்போ என்னான்னு உங்களுக்குப் பொண்ணு கொடுக்கறது.

பனியன் வேலையும் தெரியாது. படவேலையும் தெரியாது. ரெண்டுங்கெட்டானா நிப்பீங்க. உங்களுக்கு நான் சோறு போட முடியுமா. அதுவும் நல்லாயிருக்குமா.

நல்லாயிருக்காது. அதனால பனியன் வேலை செய்யற எங்க குடும்பத்துக்குப் பனியன் வேலை செய்யற இன்னொரு குடும்பம்தான் நல்லாயிருக்குமே தவிர, சினிமாக்காரர் சங்காத்தம் சரியா வராது. அதனால நான் கூப்பிட்டு பேசிடறேன்னு நான்தான் உள்ள வரச் சொன்னேன்.

உங்க காலைப் பிடிச்சுகிட்டு கேட்கறேன். என் பொண்ண விட்ருங்க. அது தாங்காது. நேத்துகூட கூட்டி கிட்டுப் போய் கண்ட இடத்துல கை வச்சிங்களாம். இது மயங்கிப் பேசுது. பொம்பளைங்களுக்கு எங்க தொட்டாலும் பொத்துகிட்டு வந்துடும். வயசு அப்படி. அவங்க வாலிபம் அப்படி. அதை மட்டும் கணக்குல வச்சுகிட்டு சாய்ச்சிடக் கூடாது.

நீங்க நல்லாயிருக்கணும். நல்ல படியா வரணும். நீங்க எல்லாம் எங்களுக்குத் தெரியும் அப்படின்னு சொல்லிப் போம். அதோட போறும். சம்மந்தம் வேணாங்க. என்னை மீறி எதுனா பேசுனீங்கன்னா, எதுனா செய்தீங்கன்னா, உங்கப்பாவை விட்டு கைய காலை ஒடிக்கச் சொல்லுவேன். புரியுதுங்களா. போயிட்டு வாங்க. நல்லபடியா போயிட்டு வாங்க. நடந்ததெல்லாம் மறந்துடுங்க. நீங்க ஜெயிக்கணுங் கறதுதான் என் ஆசை. ஜெயிச்சுட்டு வேற எங்கேயாவது போய் உட்கார்ந்துக்கோங்க. எங்க வீட்டுப் பக்கம் வராதீங்க.

மனோன்மணி பனியன் வேலை செய்யறவனுக்கு வாக்கப்படத்தான் பொறந்திருக்கா. சினிமா டைரக்டருக்கு பொறக்கலை. போயிட்டு வாங்க."

"எங்கங்க மனோன்மணி."

"இங்கதான் இருக்கறா. கதவுக்குப் பின்னாடி நான் என்ன கட்டிப்போட்டு வச்சுருக்கனா. ஏய் வந்து நில்லுடி."

"அவள் வெளியே வந்து நின்றாள். அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"எனக்கு நீங்க வேணாம்" என்று ஒரே ஒரு வார்த்தை சொன்னாள்.

பின்னால் போய் நின்று கொண்டாள். அவளை யாரும் மிரட்டியதாகத் தெரியவில்லை. அவளே முடிவு செய்ததாகத் தான் பட்டது.

அவனுக்குத் தலை சுழன்றது. கண்கள் இருண்டன. நடை தள்ளாடியது. எழுந்து நின்றான். தள்ளாடினான். சுவர் பிடித்து நின்றான். பிறகு மெல்ல வெளியேறினான்.

அவனுக்குப் பின்னால் காதலிலே தோல்வியுற்றான் காளை யொருவன் என்ற பாட்டு ஓடிக் கொண்டிருந்தது.

"என்னடா ஒருவாரம் இருப்பேன்னு சொன்ன."

"இல்லைப்பா நான் கிளம்பறேன்."

நாலாவது நாளே அவன் சென்னைக்கு பஸ் ஏறினான். அம்மாவிடம் ரகசியமாய் ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டான். நண்பர்களிடம் அடுத்த மாதம் தருகிறேன் என்று ஒரு ஐநூறு ரூபாய் கடன் கேட்டான்.

அவர்கள் எல்லோரும் கை காசைப் போட்டு ஐநூறு ரூபாய் கடன் கொடுத்தார்கள். யார் யார் எவ்வளவு கொடுத் தார்கள் என்று ஒரு சீட்டும் அந்தக்கவரில் வைத்திருந் தார்கள். அவன் ஜெயிச்சு ஒண்ணுக்குப் பத்தா தருவான் என்று நம்பினார்கள். அதனாலேயே அவனுக்குக் கடன் கொடுத்தார்கள். கடன் கொடுப்பதாய்ச் சொன்னார்கள்.

சென்னையில் இறங்கி அறைக்குப் போயிருந்த போது, அறையிலுள்ள மூன்று பேர் அறையை காலி செய்து வேறு பக்கம் போயிவிட்டதாகத் தெரிந்தது. எங்கே என்று விசாரித்தபோது, "மதுரைவீரன் பின்னாடிதான் போயிட் டாங்க. டிஸ்கஷன்."

"எங்க."

"தேனியிலயாமே."

"தேனியில என்ன டிஸ்கஷன்."

"தெரியலையே."

"எந்த படம்."

"புதுசா ஒரு லவ் ஸ்டோரி சொன்னாராம். செம டக்கர் ஸ்டோரியாம். அந்த நடிகர் சரின்னு சொல்லிட்டாராம். இப்போ அதுக்குத்தான் டிஸ்கஷன் போயிட்டிருக்கு. கொஞ்சம் அதுல வந்து ஆக்ஷன் சேர்க்கணும்னாராம். ஆக்ஷன் சேர்க்கணும்கறதுக்காக ஒரு லட்ச ரூபா எடுத்து கிட்டு தேனி போயிருக்காங்க."

அவனுக்கு மறுபடியும் வயிறு குழைந்தது.

எங்கே போய் யாரைத்தேடுவது.

அவன் தயாரிப்பாளரைத் தேடினான். அவர் அலுவலகத் தைத் தொட்டதும், புரொடக்ஷன் மேனேஜர் உள்ளே அழைத்தார்.

"தம்பி உனக்கு இங்க வேலை இல்லை. டைரக்டர் சொல்லிட்டாரு. உன்னைத்தவிர மத்த எல்லாரையும் சேர்த்துகிட்டாரு."

"இல்லீங்க. என்னைச் சேர்த்திருக்காருங்க. சம்பளமும் கொடுத்து சேர்த்திருக்காங்க. அட்வான்ஸ் கொடுத்தாரே."

"அவரு போனாப் போவுதுன்னு உனக்குக் கொடுத்தாரு. அது அட்வான்ஸெல்லாம் இல்லை. தப்பா நினைச்சுக்காத. உன்னைக் கழட்டி விட்டாங்க."

"இல்லைங்க டைரக்டர்கிட்ட நான் பேச முடியுமா."

"நீயா பேசிக்கோப்பா. இங்கேயிருந்தெல்லாம் பேச முடியாது."

"என்னைக் கழட்டிவிடலீங்க."

"தெள்ளத் தெளிவா உன் பேர் சொல்லி, அவன் வந்தா சேர்க்காத. அவனைத்தவிர மத்தவங்களைச் சேர்த்துக்கோ அப்படின்னு சொல்லியிருக்காரு."

"மத்த உதவி டைரக்டரெல்லாம் எங்க."

அவரோட ஏழு பேர் போயிருக்காங்க. மூணு பேர் இங்க லொகேஷன் பார்க்க அனுப்பியிருக்காரு."

அவன் அவர்களைத் தேடினான். கண்டுபிடித்தான்.

அவர்கள் முதலில் பேச மறுத்தார்கள். அவர்கள் பேசப் பேச ஒன்று தெரிந்து போயிற்று.

அவன் சொன்ன கதையை சற்று மாற்றி அந்த நடிகரிடம் சொல்லி அந்த நடிகர் சந்தோஷப்பட்டு அற்புதமான கதை இதை வைத்துக் கொண்டா பழைய கதை சொன்னாய் என்று பரபரக்க இன்னும் கொஞ்சம் சண்டைக் காட்சிகள் சரியானபடி சேர்க்கும்படி நடிகர் சொல்ல டைரக்டர் தேனிக்கு கதை விவாதத்திற்குப் போயிருப்பது தெரிந்தது.

"அது என் கதைங்க."

"அப்படியில்லையே. அவர் கதைதானே. உன் கதைன்னு யார் சொன்னா. அவர் எங்கிட்ட சொன்னாரே. ஒரு கதை சொல்றேன் கேளுன்னு நல்லாயிருந்ததுன்னு நான்தானே சொன்னேன்."

"அவர் சொன்னா அவர் கதை ஆயிடுமா. இது என் கதை."

"எனக்குத் தெரியாதுப்பா. என்னை லொகேஷன் பார்க்கச் சொல்லி இங்க விட்டுட்டுப் போனாரு. நீ அவரு வந்தாப் பேசிக்கோ."

அவன் நடிகரைத் தேடிக்கொண்டு ஓடினான். அவர் யாரென்று தெரியாமல் வணங்கினார். தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான்.

"நான் ஒரு கதை சொன்னேங்க மதுரைவீரன்கிட்ட."

"ஆமாம். நல்லா ஒரு கதை சொன்னாரு. என்னது அது."

"அது என் கதைங்க."

"அடடே... அப்படியா. எனக்குத் தெரியாதே. அவரு கதைன்னுதானே சொன்னாரு. ஒரு கிராமத்துல ஒரு பையன் இருக்கறது அவன் ஒரு பொண்ணை லவ் பண்றது."

"ஆமாங்க."

"சொல்லு பார்க்கலாம்."

அவன் மடமடவென்று அவனுக்குக் கதை சொல்ல அவர் ஆழ்ந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"அவர் கதைய நீ திருடி, உன் கதைன்னு சொல்றியா. தப்பு தம்பி. சினிமாவுல வந்து பொய் சொல்லாத. மாட்டிப்பே."

அவன் அவர் காலில் விழுந்தான். வாய் விட்டுக் கதறினான்.

"அது என் கதைங்க. இந்த புக் சத்தியமா. இந்த வானம் சத்தியமா. கடவுள் சத்தியமா. உங்க சொல்மேல சத்தியமா சொல்றேன் ஸார். என் தலைமேல் சத்தியமா சொல்றேன் ஸார். என் கதை ஸார். என் கதை ஸார்."

செட்டில் உள்ள அத்தனை பேரும் திரும்பிப் பார்த்தார்கள். அவன் கை விரித்து அலறிக் கொண்டிருந்தான். அவன் தலையை மெல்ல நடிகர் தடவி விட்டார். அணைத்துக் கொண்டார்.

"காபி. காபி கொண்டா" என்று சொன்னார்.

அவனை ஓரமாக அழைத்துப் போனார். செட்டிலுள்ளவர்கள் தங்கள் வேலையைக் கவனிக்கத் தொடங்கினார்கள்.

"உன்னை நம்பறேன். ஆனால் ஒண்ணும் பண்ண முடியாது. உன் கதையை ஏன் வாயைத் திறந்து அவர்கிட்ட

சொன்ன. அந்தாளு அதைச் செய்யக்கூடியவன்தான். ஆனா, வேலை ஆரம்பிச்சிடுச்சி. அவனுக்கு டேட் கொடுத்துட்டேன். அட்வான்ஸ் வாங்கிட்டேன். பத்து லட்ச ரூபா அட்வான்ஸ் வாங்கியிருக்கேன். வாங்கின அட்வான்ஸை நிலம் வாங்கறதுக்கு இன்னிக்கு காலையிலதான் கொடுத்தேன். இனிமே நடிக்கமாட்டேன்னு நான் சொல்ல முடியாது. படம் எடுக்க மாட்டேன்னு அவன் சொல்ல முடியாது. கதை உன்னுதா இருக்கலாம். சொன்னது தப்பு. கத்தி கூச்சல் போட்டு அலறி சண்ட போடறதைவிட அமைதியாய் போயிடு. அவர்கிட்ட போய் நஷ்டஈடு ஏதாவது கேளு. ஏதாவது கொடுப்பான். வாங்கி வச்சுக்க. கொடுக்கச் சொல்றேன். கொடுக்கறதுக்கு நான் ஏற்பாடு பண்றேன். இப்போ அழுவாத வீட்டுக்குப் போ. இந்தா காசு வச்சுருக்கியா.''

நூறு ரூபாய் நோட்டுகளாக ஐந்து நூறு ரூபாய் நோட்டுகள் கொடுத்தார். மடித்து அவன் சட்டையில் வைத்தார். கிட்டத்தட்ட மெல்ல தள்ளிக் கொண்டு போய் செட் வாசலில் விட்டார்.

அவன் வெளியேறினான். மறுபடியும் மறுபடியும் சட்டைப் பேண்ட்டை பெட்டியில் வைத்துக் கொண்டு பஸ் ஏறினான். அவன் தேனிக்குள் வருவதற்குள் அவன் அங்கு வருவான் என்ற தகவலும் இந்த மாதிரி செய்தான் என்ற தகவலும் நடிகரால் இயக்குனருக்குச் சொல்லப்பட்டது. இயக்குனரும் நடிகரும் கைகோர்த்துக் கொண்டார்கள்.

''என்னா ப்ரதர் இன்னொருத்தன் கதைய நம்மகிட்ட சொல்லி உன் கதையா பண்ணிகிட்டிருக்கியா. அவன் வந்து இங்க அழுவறான். பெரிய சீன் பண்ணான். நான் அடக்கி வாசிடான்னு சொல்லி தலையைத் தடவி பாக்கெட்ல துட்டு சொருவ உனக்காக படாதபாடுபட்டேன். உன்னைத் தேடிகிட்டு அங்க வருவான். சமாதானம் பண்ணி இங்க

அனுப்பிடு. அவனைச் சேர்த்துக்காத. சேர்த்துகிட்டேன்னு வச்சுக்கோ. தொடர்ந்து தொந்தரவு பண்ணுவான். கட் பண்ணி காசைக் கொடுத்து கையெழுத்து வாங்கிட்டு அனுப்பிடு. பீ கேர்ஃபுல் ஆமா. உங்கிட்ட சரக்கே கிடையாதா. ஊரான் சரக்கைதான் விப்பியா.'' என்று கேட்க, டைரக்டர் ஏதோ உளற, ''சினிமாவில் இதெல்லாம் சகஜமப்பா'' என்று நடிகர் சொல்ல, இரண்டு பேரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

எழில் கழட்டிவிடப்பட்டான்.

''எதுனா பேசின தேய்ச்சுடுவேன். இந்தத் தேனியில் என்னைக் கேட்காத ஒரு ஈ, எறும்புகூட நகராது. இங்க வந்து என்னை கை நீட்டிப் பேசறியா. த்தா... அடிங்கடா அவனை.''

அந்த ஊர் இளைஞர்கள் நாலைந்து பேர் லுங்கியை வரிந்து கட்டிக்கொண்டு அவன் தோளில் கை வைத்தார்கள். அடி விழுந்து விடும் என்ற நேரத்தில் மற்ற உதவி இயக்குனர்கள் தடுத்தார்கள்.

''வேணாம். இங்க வந்து கலாட்டா பண்றியே. மெட்ராஸ்ல வந்து பேசிக்கோ. நான் வேணா பேசி காசு வாங்கித்தரேன். கை ஓங்கின, வெட்டிருவானுங்க. இது அவங்க ஊர்.''

அவன் தலைகுனிந்து அமர்ந்திருந்தான்.

''நான் சொல்றத கேளு. காசுக்குத்தானே வந்தோம். காசு கிடைக்கும். எவ்ளோ வேணும்.''

அவன் தெரியவில்லை என்று சொன்னான்.

''அப்போ விடு. என் மேல நம்பிக்கை இருக்கு இல்ல. நான் வாங்கித் தரேன்.''

அவன் எழுந்து பங்களாவுக்குள் போனான். இயக்குனரோடு பேசினான். ஒரு கவரோடு வெளியே வந்தான்.

"இதுல அம்பதாயிரம் இருக்கு. இதை எடுத்துட்டுப் போ."

"என்னங்க அவரு வந்து அவ்ளோ சம்பளம் வாங்கறாரு. எனக்கு அம்பதாயிரமா."

"உனக்கு எங்கனா அம்பதாயிரம் கிடைக்குமா. இன்னிக்கு தேதிக்கு எவ்ளோ பெரிய காசு. உன்னால நூறு கதை பண்ண முடியும். இந்த அம்பதாயிரம் சம்பாதிக்க முடியுமா? இந்த அம்பதாயிரம் இருந்ததுன்னு வச்சுக்கோ. இன்னும் இரண்டு மணி நேரத்துல வேலை வாங்கலாம். நீயே போய் சான்ஸ் கேட்கலாம். கவலைப்படாத போ. இதுல கையெழுத்து போட்டுடு."

ரூபாய் பெற்றுக் கொண்டான். அவன் வெள்ளைத்தாள் நீட்டினான்.

"ஒண்ணுமே எழுதலையே."

"என்ன எழுதப் போறோம். அம்பதாயிரம் பெற்றுக் கொண்டேன்னு எழுதப் போறோம். வேணா, போட்டுமா."

ரூபாய் ஐம்பதாயிரம் பெற்றுக் கொண்டேன். கீழே எழுதி புள்ளி வைத்தான். அந்தப் புள்ளியில் அவன் கையெழுத்திட்டான். காசு வாங்கிக் கொண்டான்.

பெற்ற தாயே, சொந்த மகளை விற்று விட்டு வருவது போல ஒரு உணர்வு தோன்றி தொண்டையை அடைத்தது.

பிரசாத் ஸ்டூடியோவிற்கு எதிரே உள்ள தெருவில் ஒரு சந்தில் சிறிய ரூம் வாடகைக்கு எடுத்துக் கொண்டான். எந்த நடிகரிடம் போய் அழுதானோ, அதே நடிகரைத் தேடிப் போனான்.

"ஸார் ஒரு கதை வச்சுருக்கேன். கேட்கறீங்களா." அந்த நடிகர் அவனை உற்றுப் பார்த்தார்.

"அந்த டைரக்டர் கதைய எடுத்துகிட்டு வந்து உன் கதைன்னு சொன்ன. இப்போ எந்த டைரக்டர் கதைய

எடுத்துட்டு வந்து சொல்ற. திருட்டுக்கதை சொல்றவங்களை நான் நம்பறதேயில்லைப்பா. அது உன் கதைன்னுதானே சொன்ன. இப்போ, உன் கதையா அது."

"இல்லை ஸார். அது என்னுடைய.."

"உன் கதையா அது."

"இல்லை ஸார்."

"அப்போ ஏன் உன் கதைன்னு சொன்ன."

அவர் பெரிதாகச் சத்தம் போட்டார்.

"போ... போ வெளிய..." என்று சொல்லி அவமானப் படுத்தினார்.

அவன் முகம் துடைத்து வெளியே வந்தான்.

அந்த இடத்தில் அவன் திருட்டுக்கதை சொல்கிறவன் என்ற பெயர் ஏற்பட்டது. பல உதவி இயக்குனர்கள் அவனை வந்து விசாரித்தார்கள். அவன் நிஜம் சொல்வதை யாரும் நம்பத் தயாராக இல்லை.

"அவரு சூப்பர் டைரக்டர்மா. இவன் திருடன்." என்று அவன் முகத்திற்கு நேரேயே பேசினார்கள்."

உதவி இயக்குனர்களால் அவன் புறக்கணிக்கப் பட்டான். மறுபடியும் திருப்பூருக்கே போய் விடலாமா என்று நினைத்தான்.

இல்லை. இங்கு எப்படியும் போராடிப் பார்ப்பது. எல்லாம் மறக்கும். என்னையும் இவர்கள் மறப்பார்கள் என்று நினைத்தான். பெயர் மாற்றிக் கொண்டான். மறுபடியும் சுற்றிச் சுற்றி வந்தான். ஆனால் அவன் போகின்ற இடங்களிலெல்லாம் அவன் மீது தூசு கொட்ட பலர் திட்டமிட்டு வேலை செய்தார்கள்.

நான்காவது மாதத்தில் அந்த இயக்குனரும், அந்த நடிகரும் சேர்ந்த படம் வெளியே வந்தது. மகத்தான

வெற்றியைப் பெற்றது. படம் வெளியான இரண்டாம் நாள் மேட்னியில் புழுக்கத்தில் அந்தப் படத்தைப் பார்த்தபோது, ஒவ்வொரு அங்குலமும் அவன் கதை. அவன் பேச்சு என்பது புரிந்தது. அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. விக்கி விக்கி அழுதான்.

''செம லவ் ஸ்டோரி இல்ல ஸார். கதற விட்டான் ஸார். எப்படி அழுவறாரு பார் பார்ட்டி..'' என்று பக்கத்திலுள்ளவர்கள் சொல்ல, எல்லோரும் அவனை எட்டிப் பார்த்தார்கள்.

அவன் வேதனையை அவன் நெஞ்சு மட்டுமே அறிந்திருந்தது.

ஒரு பத்திரிகைக்குப் போய் இவரைப்பற்றி பேட்டி கொடுத்துவிடலாமா என்று பத்திரிகை ஆசிரியடம் சொல்ல, அவர் முழுவதும் கேட்டுக் கொண்டார்.

''சரி கண்ணு. நீ சொன்னதை நோட் பண்ணிட்டேன். இது ஸ்கூப் வரும்.'' என்று சொன்னார்.

அடுத்த வாரம் பத்திரிகையில் அவனுடைய போட்டோ போட்டு இது என் கதை. இவர் திருடிவிட்டார் என்று டைரக்டர் படமும் போட்டிருந்தது. இவன் படம் சிறியதாகவும், டைரக்டர் படம் பெரியதாகவும், டைரக்டர் தேர்வு செய்த நடிகையின் படம் இன்னும் பெரியதாகவும் இருந்தது. இதற்கு இயக்குனரின் பதில் என்ன அடுத்த வாரம் என்று எழுதியிருந்தது.

பத்திரிகைக்கு வியாபாரத்தைப் பெருக்க வேண்டும் என்பதே குறிக்கோள். உண்மையை அறிய வேண்டும் என்ற ஆவல் துளிக்கூட இல்லை என்பது அவனுக்குப் புரிந்தது.

அடுத்த வாரம் காரசாரமாக இயக்குனர் அவனுடைய புகாருக்குப் பதில் சொல்லியிருந்தார். பசிக்கிறது என்று சொன்னார்கள். சோறு போட்டேன். இப்படிப் படுபாதகம்

செய்வார்களா என்று புலம்பியிருந்தார். இருபது வருடம் இந்த சினிமாத்துறையில் கஷ்டப்பட்டு அங்குலம் அங்குலமாக முன்னேறி பலரது நம்பிக்கையைப் பெற்று இன்று ஒரு இயக்குனராயிருக்கிறேன். என் வளர்ச்சி பிடிக்காதவர்கள் திட்டமிட்டு எனக்கு எதிராக இப்படிப்பட்ட இளைஞர்களைத் தூண்டி விடுகிறார்கள்.

அந்த இளைஞர் ஐயோ பாவம். சினிமா தெரியாதவர். வாழ்க்கை விவரம் புரியாதவர். அவரை மன்னித்து விடுகிறேன். இதற்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்று எனக்கு மட்டும் தெரியும். பூடகமாக அந்த இளைஞனை யார் தூண்டி விடுகிறார்கள் என்று தெரியுமென்று வேறொரு இயக்குனரைச் சொல்லியிருந்தார்.

அவன் திகைத்துப் போனான். உதவி இயக்குனர்கள் நடுவில் அவனுக்கு மேலும் ஒரு அவமானம் ஏற்பட்டது. யாரோ அடிக்கவும் வந்தார்கள். உரத்த குரலில் திட்டினார்கள்.

''ஊர நாட்டை பார்க்கப் போயிடு. இங்க உட்கார்ந்து எங்க பேரை கெடுக்காத. உதவி இயக்குனர்னா யார் கதைய திருடி சொல்றேன்னு எவன்கிட்ட கதை சொன்னாலும் உன்னால அசிங்கமாப்போச்சு.'' என்று கத்த ஆரம்பித்தார்கள்.

யாரைப் பூடகமாகத் திட்டினாரோ, அந்த இயக்குனரிடம் போய் நின்றான்.

''யாரு என்ன விஷயம்.'' அந்த இயக்குனர் கேட்டார்.

''உங்களைப்பத்தி தப்பா சொல்லியிருந்தாரே.''

''யாரு. என்ன இப்போ அதுக்கு.''

''அந்த.. அந்தக் கதை சொன்னவன் நான்தான் ஸார். உங்களை ஏன் ஸார் அநியாயமா சொன்னாரு. என்

கதையையே திருடிட்டு தான் பெரிய யோக்கியன் மாதிரி பேசறாரு ஸார்.''

''ஹலோ நீதானா அது. உட்கார். போட்டோல வேற மாதிரி இருக்கற. நேர என்னமோ பங்கி அடிச்ச மாதிரி இருக்கற. கஞ்சா குடிக்கறியா. பன்னாடை. வாயை மூடி கிட்டுப் போ. அவன்கிட்ட கைய நீட்டி காசை வாங்கி யிருக்க இல்ல. கையெழுத்து போட்டிருக்க இல்ல. அப்புறம் என்னாத்துக்கு அதைப் போய் க்ளெயிம் பண்ற. முண்டம்.

உங்கிட்ட வேற கதை இல்லையா. இந்த உலகத்துக்கு வேற கதை சொல்லிட்டுப் போயேண்டா. அவன் காலடி யிலயே உட்கார்ந்து அவங்கிட்டயே ஜெயிக்கறத விட்டுட்டு என்னாடா இது. எனக்கும் அவனுக்கும் சண்டைன்னு நினைச்சுகிட்டிருக்கியா. அதெல்லாம் ஒண்ணுமில்லை. எங்கிட்ட சொல்லிட்டுதான் பேட்டியே கொடுத்தான்.

பத்திரிகைக்கு எதுவோ தீனி வேணும். ஜனங்களை முட்டாள் ஆக்கணும். அதனால நாங்க ரெண்டு பேரும் எனிமி மாதிரி நடிச்சுகிட்டிருக்கோம். எங்களுக்குள்ள எந்தச் சண்டையும் கிடையாது. அவனும் ஜெயிச்சவன். நானும் ஜெயிச்சவன். ரெண்டு பேர் ஜெயிச்சவனுங்க சண்டையே போடமாட்டானுங்கடா. ஒத்துமையாத்தான் இருப்பாங்க. போ. போய் வா. நீ தோத்த நாய் போ'' என்று அவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாத குறையாக அனுப்பினார். அவள் திகைத்துப் போனான்.

இரண்டே இரண்டு மாதத்தில் அவனுக்கு யார் வாழ்க்கை பற்றி, சினிமா பற்றி போதித்தானோ, அவனுக்கும் சினிமா கிடைத்திருந்தது. அவனிடம் வேலை செய்யலாம் என்று போக, ''தயவு செய்து யார்கிட்டயும் வேலை செய்ய வராத. உன்னைச் சேர்க்க மாட்டாங்க. உன் போட்டோ போட்டு பத்திரிகையில பேர் வந்துடுச்சி. உன்னை வச்சுருந்தாக்க எங்களுக்கு அசிங்கம். இனிமே தயவு செய்து சினிமாவுலயே

இருக்காத. பனியன் கம்பெனிக்குப் போயிடு.'' என்று அவன் சொல்ல அவன் திகைத்துப் போய் நின்றான். வேறொரு உதவி இயக்குனர் அவனிடம் வந்தான்.

''இவன் உதவி செய்வான்னு நினைச்சுகிட்டு வந்தியா. இவன் என்னிக்கு யாருக்கு உதவி செய்திருக்கான். உங்கிட்டேயிருந்து கதை வாங்கித்தரேன்னு அவர்கிட்ட நின்னு ஒரு லட்ச ரூபா காசு வாங்கிட்டு வந்து அம்பதாயிரம் ரூபா பாக்கெட்ல போட்டுகிட்டு, அம்பதாயிரம் ரூபா உனக்குக் கொடுத்தான். இவனையா நம்பி நீ வர. இவங் கிட்டயா நீ வேலை செய்யப் போற. கதை நல்லாயிருந்தா எடுத்துக்கோங்க ஸார் அப்படின்னு அவரை உற்சாகப் படுத்தினதே இவன்தான். இவனையா நல்லவன்னு நினைக்கற'' என்று அவன் சொல்ல மனம் ஆடிப் போயிற்று.

சினிமாவில் நண்பர்கள்தான் சொத்து என்று சொன்ன வனே துரோகம் செய்ததை வியப்போடு நின்று பார்த்தான். மனம் சோர்ந்தான். அவனால் உண்ண முடியவில்லை. உறங்க முடியவில்லை. கையில் காசு இருப்பு கரைந்தது. ஏதோ தவறாகச் சாப்பிட்டது வயிற்று வலியை அதிக மாக்கியது. அவனால் வலி தாங்க முடியாமல் ஆஸ்பத்திரிக் குப் போக, உள்ளே கட்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றார்கள். மீதியிருந்த காசை அவர்களிடம் கொடுக்க, அறுவை சிகிச்சை செய்து அனுப்பினார்கள்.

வெறும் கஞ்சி மட்டும் குடிக்கச் சொன்னார்கள். கஞ்சி குடித்தான். கதைகள் செய்தான். யாரிடம் கதைகள் விற்பது என்று அலைந்தான். அவன் முகமே மாறிப்போயிற்று. உருவம் சிதைந்து போயிற்று. செத்து விடுவோமா, தற்கொலை செய்து கொள்ளலாமா என்று அழுக்கு உடையோடும், முகம் நிறைய தாடியோடும், கண்களில் இருட்டோடும் அவன் தள்ளாடி வரும்போது கல் தடுக்கி

இமே விழுந்தான். அவனை எழுப்பி உட்கார வைத்து சோடா கொடுத்தார்கள். சோடா குடித்தால் வயிற்று வலி அதிகமாகி விடும். ஆனால், அவன் வாயில் சோடா புகட்டினார்கள். சோடா புகட்ட வாந்தி எடுத்தான். வயிற்று வலி துவங்கியது. சுருண்டு இருளில் அங்கேயே படுத்துக் கொண்டான்.

மறுநாள் காலை மதுசூதனன் எழுப்பினார். அவன் கதை கேட்டார்.

"எழிலரசன் அவங்க மேல தப்பேயில்ல. உனக்கு போறலை. மனுஷாளை இனம் கண்டு கொள்ள, யார் யார் எப்படி என்று தெரிந்துகொள்ள, மனிதர்கள் மீது சந்தேகப் பட உனக்குத் தெரியவில்லை. உலகத்துல யார் ஜெயிப்பான் தெரியுமா? அடுத்து இருக்கற ஆளை சந்தேகத்தோடு எப்போதும் இருப்பவன்தான் ஜெயிப்பான். அடுத்தவரை நம்பறவன் நிச்சயம் தோற்பான். உன்னை நம்பு எழிலரசன். அடுத்தவனை நம்பாத. இது போட்டிகள் நிறைந்த உலகம். நீ முன்னேறினா காலைப் பிடிச்சு இழுக்கறதுக்குத்தான் மூணு பேர் காத்துகிட்டிருப்பான். உன்னைத் தூக்கறதுக்கு ஒருத்தன்கூட வரமாட்டான். நீயாதான் ஏறணும்."

"இவ்ளோ அநியாயம் பண்ணிட்டு எப்படி ஸார் அவரால நிம்மதியா தூங்க முடியுது."

"நிம்மதியா தூங்கறாங்கன்னு எப்படிய்யா நினைக்கற. தூங்க முடியாது. மதுரைவீரன் அடுத்த படமும் சக்ஸஸ் ஆவணும்னு வேண்டிக்கோ."

"ஏன் ஸார்."

"ஸக்ஸஸ் வரவரத்தான் இவங்க அதிகமா ஆடுவாங்க. அதிகமா பேசுவாங்க. சக்ஸஸ் வரட்டும்."

எழிலரசன் அவரோடு ஒண்டிக் கொண்டான். வேலை கற்றான்.

மதுசூதனன் சொன்னதுபோலவே மதுரைவீரனின் அடுத்த படமும் சூப்பர் ஹிட் ஆகியது.

அகிராகுரோசோவே தன்னுடைய குரு. தொடர்ந்து ஜப்பானியப் படங்களும், ஸ்பானிஷ் படங்களும் பார்ப்பது தான் தன் சினிமா அறிவை அதிகப்படுத்தியதாக மதுரை வீரன் பேட்டி கொடுத்திருந்தார்.

அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

அவர் ஒரு நடிகையோடு காதலில் இருப்பதாக கிசுகிசு செய்திகள் வந்தன. அந்த நடிகையை ரகசியத் திருமணம் செய்து கொண்டதாக இன்னும் சில மாதங்கள் கழித்து தகவல் வெளியாகியது. அதேநேரம் மதுரைவீரனுக்கு ஏற்கெனவே திருமணமாகி விட்டதும். தேனியில் அவர் மனைவி இருப்பதும் தெரிய வந்தது. அவர் மனைவி பெரும் பட்டாளத்தோடு சத்தமிட்டு கலவரம் பண்ணி விஷயம் போலீஸுக்குப் போய் சந்தி சிரித்தது.

அவர் திருமணமானவர் என்பதும், அவருக்கு குழந்தைகள் இருப்பதும் சினிமாவில் ஜெயித்து, பிறகு வருகிறேன் என்று சத்தியம் செய்வதும் சொல்லப்பட்டது. அந்த நடிகைக்கும் அவருக்கும் மிகப்பெரிய சண்டை ஏற்பட்டது.

"பாருங்க ஸார். பாருங்க சந்தி சிரிக்குது. பாருங்க ஸார்."

"விடுடா. விடு. உனக்கும், இவருக்கும் என்ன சம்பந்தம். ஏதோ போன ஜென்மத்துல நீ பண்ண பாவம். தப்பான நேரத்துல தப்பான மனுஷாள் கிட்ட மாட்டிகிட்ட. அது உன் தலையெழுத்து. சினிமாவுல நிறைய பேர் நல்லவங்க இருக்காங்கடா. உனக்குக் கிடைக்கலைன்றதுதான் உன் தலையெழுத்து."

"ஆமாம் ஸார். உலகத்துல நிறைய நல்லவங்க இருக்காங்க ஸார். அதுல ஒருத்தர் எனக்கு நல்லா தெரியும் ஸார்."

"யாரு மகாத்மா காந்தின்னு சொல்லப்போறீயா."

''மதுசூதனன்னு சொல்லப்போறேன்.''

அவர் வாய்விட்டுச் சிரித்தார்.

''நான் நல்லவனும் இல்லை. கெட்டவனும் இல்லை. என்னமோ அன்னிக்கு உன்னைப் பார்த்தபோது பரிதாபமா தோணிச்சு. வாடா உட்காருடான்னு சொன்னேன். உனக்குள்ள ஒரு நெருப்பு இருந்தது. அது பத்திக்கும்னு எனக்குத் தெரியும். பத்துநாள் வேலை சொல்லிக் கொடுத்தேன். பத்திகிச்சு. மறுபடியும் போயிடுவ சினிமாக்குன்னு நினைக்கறேன்.''

''இல்லை ஸார். மனசுக்குள் சினிமா ஓட்டலை.''

''அதுக்குக் காரணம் நீதான். பயந்துட்ட. போராடாம உட்கார்ந்துட்ட. இதையும் தாண்டி சினிமாவுல இருந்திருக்கணும். திரும்பிப் போவாத. இங்க அழகா செட்டிலாயிட்ட எங்கூடவே இரு. ஏகப்பட்ட ஆர்டர் வரும்.''

மதுசூதனனுடைய குழு மிகப் பலமாக வந்தது. அரசாங்க ஆர்டர்கள் கிடைத்தன. அரசாங்கத்து விழாக்களுக்கு வீடியோ எடுத்து சி.டியாக மாற்றிக் கொடுப்பதற்கு அவருக்கு பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. பெரிய மனிதருடைய திருமணங்களையும் பத்திரிகை விழாக்களையும் மிக அழகாக படமெடுத்துக் கொடுத்தான். பேஷன் ஷோவையும் படமெடுத்துக் கொடுத்தான்.

நிறைய கருவிகள் வாங்கி, வங்கியில் கடன் வாங்கி இடத்தை விஸ்தரிக்கச் செய்து ஆட்களைச் சேர்த்து அவர் பெரிய குழுவாக இயக்கினார். அந்தக் குடும்பமே முழு வீச்சில் ஈடுபட்டது. நல்ல எடிட்டர்கள் கிடைத்தார்கள். ரீரெக்கார்டிங் செய்ய அருமையான வசதி இருந்தது. கிராபிக்ஸ் செய்யவும் இரண்டு பையன்கள் இருந்தார்கள்.

வள்ளி தெய்வானையோடு மயிலிலிருந்து திருமண மண்டபத்திற்குள் முருகர் இறங்கி தம்பதிகளை ஆசீர்வாதம்

செய்துவிட்டு விர்ரென்று போவதை கிராபிக்ஸில் செய்து காட்ட, அந்தக் குடும்பம் ஆனந்தப் பரவசக் கூச்சல் போட்டது.

அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லை என்ற செய்தி வந்த போது மதுசூதனன்தான் அந்தப் போனை எடுத்தார்.

''எப்படிப்பா இருக்கான் எம்புள்ள'' என்று அப்பாவே தொலைபேசியில் பேச, அவரைச் சமாதானம் செய்தார். உடனடியாக பஸ்ஸில் ஏற்றி ஊருக்கு அனுப்பினார்.

திருப்பூர் அதேபோல பனியன் மிஷின் சத்தத்தோடும் பெரிய பெரிய பண்டல்களோடும் டி.வி.எஸ் பிஃபிடியில் மூட்டை ஏற்றிக் கொண்டு போகின்ற மனிதர்களோடும், டெம்போக்களோடும் இருந்தது.

அப்பா இருதய வலி என்று ஒரு இரவு சொல்ல டாக்டர் அவருக்கு இருதயக் கோளாறு இருப்பதாகக் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார். இனியும் வேலை செய்யக்கூடாது என்ற உத்தரவிட்டிருந்தார். ஓய்வாக இருக்க வேண்டிய காலம் வந்துவிட்டது என்று சொல்லியிருக்கிறார்.

அவர் ஓய்வாக இருந்தால் பத்துப்பதினைந்து வருடங்கள் சௌக்கியமாக இருக்கலாம். இல்லையெனில், எது வேண்டுமானாலும் ஆகும்படியாய் ஹிருதயம் பலவீனமாக இருக்கிறது என்று விளக்கினார். அவன் அவரை ஓய்வெடுக்கச் சொன்னான்.

''என்னப்பா சினிமாவுல ஜெயிப்பேன்னு சொன்ன. உன்னைப்பத்தி கெட்ட பேருதான் வந்திருக்கு. அசிங்கம் தான் வந்திருக்கு. ஏம்ப்பா.. எதுக்கு இவ்ளோ தூரம் கஷ்டப் படற. கம்ப்யூட்டர் படிச்சு பெரிய ஆள் ஆகியிருக்கலாமில்ல.''

''இப்போவும் ஒண்ணும் கெட்டுப் போகலைப்பா. நான் நல்லாதான் இருக்கேன். நல்லாதான் சம்பாதிக்கறேன்.

உங்களுக்கு நான் மாசாமாசம் காசு அனுப்பறேன்ப்பா. நீங்க போகாதீங்க.''

அவருக்கு மாதம் மூவாயிரம் ரூபாய் அனுப்புகிறேன் என்று சொல்ல அவர் சந்தோஷமானார்.

''ஆனா எழிலு. நான் என்ன தெரியுமா பண்ணுவேன். பெரிய பெரிய பங்களாவா பார்த்து நின்னு அது எப்படி இருக்கும்னு மனசுக்குள்ள கணக்குப் போட்டேன். இந்த மாதிரி கட்டறதா அந்த மாதிரி கட்டறதான்னு நானும் நடுவுல அலைஞ்சேண்டா. நீ திருட்டுக்கதை விக்கறேன்னு சொன்னவுடனே என்னவோப்போல ஆயிப்போச்சு. அப்போதான் வீடு தேடறதை நிறுத்தினேன்.'' என்று அவர் சொல்ல, அவன் தலை குனிந்தான்.

''கண்ணு அது திருட்டுக்கதையாடா.''

''இல்லைப்பா. என் கதையை அவங்க திருடிட்டாங்க.''

''அப்படியா. உன் மேல் தப்பில்லையா.''

''சாமி சத்தியமா உழைச்ச உன் கால் சத்தியமா. எங்கம்மா மேல சத்தியமா நான் திருடலைப்பா. என்னை ஏமாத்திட்டாங்க.''

''நிம்மதி. நீ திருடன்னவுடனே ரொம்ப வருத்தப் பட்டேனப்பா. இப்போ ரொம்ப நிம்மதியாகிப் போச்சு. எனக்கு இருதய நோய் வந்ததுக்குக் காரணம்கூட என் புள்ள திருட்டுப்புள்ளயா. என் புள்ள திருடனா அப்படிங்கற குமையல்தான். இப்போவே உடம்பு சரியாப் போச்சுடா எனக்கு. எனக்கு உடம்புக்கு, ஒண்ணுமே இல்லை. நானா கூப்ட்டு கேட்டிருக்கணும். நான் கேட்காத போயிட்டேன்.''

அவர் புலம்பத் துவங்கினார். அவன் அவரை அணைத்துக் கொண்டான். கன்னத்தில் முத்தமிட்டான்.

''போறும்டா. என் புள்ள வேதனைப்பட்டு வந்திருக்கு. நீ அனுப்பற மூவாயிரம் ரூபா போதும். நீ திருடன் இல்லைன்றது போதும்.''

அவர் அவனை ஆதரவோடு கட்டிக் கொண்டார்.

''தண்ணி போடுவியா.''

அப்பா கேட்டார்.

இல்லையென தலையசைத்தான்.

''நீயும் போடக்கூடாது. நான் போடறதேயில்லை. எனக்கு அந்தப் பழக்கம் வரலை. எத்தினி துக்கம் வந்தாலும் நான் தண்ணியோ, கஞ்சாவோ, சிகரெட்டோ எதுவும் கிடையாது. நான் போயிட்டு வரேன்.''

''எங்க.. மனோன்மணி வீட்டுக்கா.''

''இல்லைப்பா. ஆமாப்பா.''

''வேணாம். போவாத. அதை பனியன்காரனுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்துட்டாங்க. அவன் செம தண்ணி பார்ட்டி. எங்கிட்ட ஒரு வார்த்தை கேட்டிருந்தா, அவனுக்கு பொண்ணு கொடுக்காதன்னு சொல்லி யிருப்பேன். ஊர்ல எல்லார்கிட்டயும் கேட்டாங்க. அவன் தண்ணிப் பார்ட்டின்னு தெரிஞ்சும் யாரும் சொல்லலை. அந்தப் பொண்ணு மாட்டிகிட்டு அவஸ்தைப்படுது. ஆறு மாசத்துல மூணு தடவை வீட்டுக்கு வந்துடுச்சு.''

''ஐய்யய்யோ.. அப்புறம்.''

''என்ன அப்புறம். இழுபறிதான். அங்க போய் நிக்காத. அப்புறம் ஏதாவது தப்பா வந்துடும்.''

''என்னப்பா.''

''உனக்கும் அவளுக்கும் தொடர்பு இருக்கறதா ஏதாவது கதை விட்ருவானுங்க. நீ வந்து பார்த்ததா சொல்லுவானுங்க. அந்தப் பக்கமே போவாத.''

அவன் பயந்தான்.

அவள் வீட்டுப்பக்கம் போகாமல் வேறுபக்கம் போனான். நண்பர்கள் யாரும் வரவில்லை. அவன் தோற்றுவிட்டதாய் நினைத்து அவனைப் புறக்கணித்தார்கள்.

ஐநூறு ரூபாய் கொண்டு போய் அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தான்.

''இதுக்கு வட்டி கொடுக்கணும்னாலும் சொல்லுங்க. நான் தந்துடறேன்'' என்று சிரித்தபடி சொன்னான்.

அவர்கள் வேண்டாமென்று சொல்லி அந்தக் காசை மட்டும் வாங்கிக் கொண்டு விலகிப்போனார்கள். தனியாய் நான்கு நாட்கள் திருப்பூர் சுற்றினான். மறுபடியும் வண்டி ஏறி சென்னைக்கு வந்தான்.

வருடத்திற்கு நாற்பது ஐம்பது திருமணங்கள், எழுபது எண்பது பொது நிகழ்ச்சிகள். நூற்றுக்கணக்கில் அரசாங்க நிகழ்ச்சிகள் என்று படம் பிடித்தான்.

மதுசூதனன் சம்பளம் அதிகப்படுத்தினார். டூ வீலர் வாங்கிக் கொடுத்தார்.

மோட்டார் சைக்கிளில் சென்னையைச் சுற்றுவது சந்தோஷமாக இருந்தது.

ஜீன்ஸ் பேண்ட்டும், காலில் கனத்த ஷூவும், ஓவர் கோட்டும் தோளில் கேமராவோடும் மேடையேறி இறங்குகின்ற அவனை சிலர் வியப்போடு பார்த்தார்கள்.

''சினிமாவுல நடிக்கறியாப்பா.'' என்று யாரோ ஒருவர் கேட்க. அவன் திரும்பிப் பார்த்து, ''வாழ்க்கையில் நடிக்கறதே போதும்னு நினைக்கறேன் ஸார்'' என்று சிரித்தபடி பதில் சொன்னான். அவர் முதுகில் தட்டிவிட்டு விலகிப் போனார்.

''இங்க வந்து ரெண்டு இன்ச் உசந்துட்டா.''

மதுசூதனன் சொல்ல, ''இல்லைங்க ஷூ கொஞ்சம் ஹைட்.''

அவன் கண் சிமிட்டினான்.

''கொஞ்சம் குண்டாயிட்டியோ.''

''நிறைய குண்டாயிட்டேன். ஆனா தொப்பை போடலை பாருங்க.''

''காலையில ஓடறோமில்லை பீச்ல. அதான் நல்லா யிருக்கு.'' என்று சொன்னான்.

இரவு எந்நேரமானாலும் காலையில் ஐந்தரை மணிக்கு பீச்சில் ஓடுவது வழக்கமாக இருந்தது. உடம்பும், மனமும் ஆரோக்கியமாக இருந்தது. செய்யும் வேலையில் தெளிவு இருந்தது. அந்தத் தெளிவை கால்விட்டுக் கலக்கும்படியாக மனோன்மணி வந்தாள்.

புருஷனோடு இல்லையாம். விவாகரத்து வாங்கி விட்டார்களாம். போட்ட நகை, பாத்திரம், பண்டம் அத்தனையும் சண்டையிட்டு திருப்பி எடுத்துக் கொண்டு விட்டார்களாம்.

மனோன்மணியின் அம்மா பிற்பகல் ஓய்வு நேரத்தில் கூடத்தில் நாற்காலி போட்டுக் கொண்டு அழுதபடியே சொன்னாள்.

''சரிங்க. பாவமாத்தான் இருக்கு. எதுக்கு என்னைத் தேடிகிட்டு வந்தீங்க.''

''இல்லைப்பா. உங்களைப் பார்க்கணும்னு தோணிச்சு. மனோன்மணிதான் பார்த்துட்டு ஐயோ எழில், நம்ம எழில்னு சொல்லிச்சு. நான்தான் பேசவேணாம்னு சொன்னேன். அது கேட்கலை. உங்கிட்ட பேசிட்டு வரச் சொல்லிச்சு. நீ சரின்னு சொன்னா நான் கூட்டிகிட்டு வரேன்.''

''யாரை.''

''மனோன்மணியை.''

"எதுக்கு."

"இப்போ பேசுங்கோ. அப்புறம் பழகுங்கோ. தலை யெழுத்து நல்லா இருந்தா எது வேணாலும் நடக்கட்டும். என்னா சொல்றீங்க. எப்படி லவ் பண்ணீங்க. எனக்குத் தெரியுமே. கேட்டுட்டு வாம்மா லவ் இருக்கான்னு அப்ப டின்னுச்சு என்னப்பா சொல்ற."

"இல்லீங்க."

"என்ன இல்லீங்க."

"எனக்கு எந்த ஆசையும் இல்லை."

"ஏம்ப்பா கல்யாணமாகி நாசமாகிட்டான்றதுனால அவ மேல இரக்கமில்லாத பார்க்கறியா."

"நீங்க இரக்கமில்லாத நடந்தீங்க. எனக்கு பனியன் கம்பெனி ஆள் போதும். எனக்கு பெரியாளுங்க வேணாம்னு சொன்னீங்க. அன்னிக்கு இவ கிடைப்பான்னு தெரிஞ் சிருந்தா, நான் பல விஷயங்களைப் பொறுத்துக்கிட்டு போயி ருப்பேன். தன்மையா தலைகுனிஞ்சு தாண்டி வந்திருப்பேன். என்னைத் துரத்திவிட்டுட்டீங்க. வெறுத்துப் போய் வந்து தப்புத்தப்பாகிப்போச்சு."

"மனோன்மணி வேணாமாப்பா."

"வேணாம்."

"நிச்சயமா வேணாமா."

"எங்கயாவது நல்லாயிருக்கட்டும். எனக்கு வேணாம்."

"வேற யாரையாவது லவ் பண்றயா."

"இல்லைம்மா."

"கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்றாங்களா."

"இல்லைம்மா."

"என்னப்பா பண்ணப்போற."

"இதேமாதிரி கேமராமேனா... குறைச்ச சம்பளம். ஒரு பனியன் கம்பெனிக்காரனுக்கு என்ன வருமோ அவ்ளோ தான் வீடியோ கேமராக்காரனுக்கும் வரும். ஆனா, சந்தோஷமா இருக்கும் தாயே. மனோன்மணி வேணாம்."

அவன் தீர்மானமாகச் சொன்னான்.

"மனோன்மணியைக் கூப்பிடறேனே. பேசச் சொல் றேனே."

"வேணாம்மா. தயவு செய்து போயிடுங்க."

அங்கிருந்து மதுசூதனன் வந்தார்.

"தெளிவா சொல்லிட்டான் இல்ல. வேணாம்னு, போங்க."

அப்போதுதான் கேமராவிலுள்ள மைக்செட்டை ஆஃப் செய்யவில்லை என்று தெரிந்தது.

"என்ன ஸார் கேட்டுகிட்டிருந்தீங்களா."

அவள் போன பிறகு கேட்டான்.

"கரெக்டா ஒரு முடிவு இப்போதான் எடுத்திருக்க. அந்தப் பொண்ணு வேணாம். இவ்ளோ தெளிவா துரத்தனவங்க, எவ்ளோ தெளிவா வராங்க பார்த்தியா. வாழ்க்கை இப்படித் தான் திசைமாறும். நீ உத்தமனா இரு. உன்னைத் தேடிகிட்டு உன்னை அசிங்கப்படுத்தனவங்க வந்து மண்டியிட்டே தீருவாங்க. ஒரு கூணம் நீ மனோன்மணியைப் பார்க்கற துக்கு போயிடுவியோன்னு நினைச்சேன். வேணாம். அதே சமயம் இன்னொன்னும் தோணுது எழில்."

"என்ன ஸார்."

"கல்யாணம் பண்ணிக்கோ."

"யாரை ஸார்."

"யாரைன்னு தெரியலையா. உங்கப்பா, அம்மாவைப் பார்க்கச் சொல்லு."

"ஏன் ஸார். அவங்க என்னத்துக்குப் பார்க்கணும்."

"பார்க்க மாட்டாங்களா."

"எனக்கு அந்த மாதிரி கல்யாணத்துல விருப்பமில்லை ஸார்."

"லவ் பண்றயா."

"இல்லை ஸார்."

"இப்போதைக்கு நான் பண்ற ஒரே லவ் இந்தக் கேமராதான். இந்த வேலைதான்."

"வெரிகுட். இந்தக் கேமராவை, இந்த வேலையை நீ லவ் பண்றதுக்கு ஒரு வசதி செய்து தரட்டுமா."

"சொல்லுங்க ஸார்."

"கே.கே. யாருன்னு தெரியுமா."

"தெரியாது ஸார்."

"பெரிய இடத்துப்பிள்ளை. கெட்டு அழிஞ்ச குடும்பம். கே.கே.க்கு அக்கா இருக்கு. அவ நல்ல பொண்ணு. எங்கிட்ட மூணு வருஷம் வேலை செஞ்சுது. அப்புறம் அரசாங்க வேலை கிடைக்க அங்க போயிடுச்சு. அதான் அந்தக் குடும்பத்தைத் தூக்கி நிறுத்துது. அவளைக் கல்யாணம் பண்ணிக்கோ. கே.கே. யோட மெட்ராஸ் சிட்டிலேர்ந்து தள்ளிபோய் வேளச்சேரி, தாம்பரம், பாடி இந்த மாதிரி இடத்துக்குப் போய் இதே மாதிரி வீடியோ கம்பெனி ஆரம்பி. என் மிக்ஸர் எடுத்துக்க. ரெண்டு கேமரா புதுசு வாங்கு. ரெண்டு கேமரா பழசு வாங்கு. டி.வி. செட் வாங்கு. கார்ட்லெஸ் மைக் வாங்கு. பேங்க் இருக்கு. நீ கேட்டா கடன் தருவான். நான் கையேழுத்து போடறேன். தனியா கடைபோடு."

"என்ன ஸார் திடீர்னு கழட்டி விடறீங்க."

"திசை திருப்பி விடறேன். எங்கிட்டயே உட்கார்ந்து கிட்டிருந்தா புது பசங்க வரணுமில்ல. அவங்களும் மேல வரணமில்ல. நீ இருந்தா புதுப்பசங்க மேல வரமுடியாது. போ. நீ போய் தனியா கடை ஆரம்பி. புதுப்பசங்களைச் சேரு. நொந்து நூல் ஆனவனைச் சேர்த்துக்கோ. கடுமையா உழைக்கச் சொல். கே.கே. ரொம்ப நல்லவன். ரொம்ப பொறுமைசாலி. அவனுக்கு வேலை கத்துக்கொடு. அக்காளைக் கொண்டவன் பார்ட்னர்னா அவன் உண்மையா இருப்பான். மச்சினனைப் பங்குதாரரா சேர்த்துகிட்டீன்னா நீயும், நல்லாயிருப்ப. உங்க ரெண்டு பேருக்கும் நடுவுல அந்தப் பொண்ணு. வரச்சொல்லியிருக்கேன். என்னையப் பார்க்கறதுக்கு நீயும் பாரு."

"என்ன ஸார். முன்கூட்டியே திட்டமிட்டு வரச் சொன்னீங்களா."

"என் வொய்ஃப் பார்க்கறதுக்கு வரச்சொல்லியிருந்தா. போன் பண்ணி காலையில் வாழ்த்துச் சொன்னா. வாயேண்டி நேரான்னு என் வொய்ஃப் கூப்பிட்டா. அதனால வருது."

"எதுக்கு ஸார் வாழ்த்துச் சொன்னாங்க."

"இன்னிக்கு எனக்கு கல்யாண நாள்டா."

"ஸார் சொல்லவே இல்லையே."

"ரொம்ப சிலபேர் கிட்டதாண்டா சொல்லணும். கல்யாண நாள். பிறந்த நாளெல்லாம் எல்லார்கிட்டயும் சொல்லக்கூடாது. திருஷ்டிபடும். நாம நிஜமாவே நேசிக்கறவங்க. நம்ம மேல அக்கறை இருக்கறவங்கிட்டதான் சொல்லணும். அதுதான் நல்லது. அந்தப் பொண்ணு எங்க மேல அக்கறையுள்ள பொண்ணு. நாங்க அந்தப் பொண்ணு மேல அக்கறையா இருக்கோம். இன்னிக்குப்பாரு. பார்த்த பிறகு அபிப்ராயத்தைச் சொல்லு. மனசுக்குப் பிடிச்சுருந்தா கல்யாணம் பண்ணிக்கோ."

"அந்தப் பொண்ணுக்கு என்னைப் பிடிக்கணுமில்ல."

"ராஜாமாதிரி இருக்கடா. நிஜமாகவே உன்னை ஷூட் பண்ணச் சொல்லி தனியா எடுத்து வச்சுருக்கேன். பார். நிறைய பொண்ணுங்க உன்னை டாவடிக்குது. வினோதமா பார்க்குது. அதையும் படம் எடுத்து வச்சுருக்கேன் பார். இது ஒரு நல்ல பீரியட். உன் முகம் களையா இருக்கு. உன் உடம்பு உறுதியா இருக்கு. பயன்படுத்திக்க."

"என்ன ஸார் சொல்றதுன்னு தெரியலை. எனக்கு மனோன்மணியை வேணாம்னு சொன்னது..."

"துக்கமா இருக்கா."

"இல்லை ஸார். ரொம்ப பிடிச்சருக்கு. இவ்வளவு தெளிவா. இவ்ளோ அமைதியா எப்படி வேணாம்னு சொன் னோம்னு ஆச்சரியமா இருக்கு. நான் உள்ள எங்கயோ மாறியிருக்கேன் ஸார். இந்தத் தெளிவு. இந்த அமைதி அன்னிக்கு இல்லை. ஒரே பதட்டமா தப்பு பண்ணிட்டேன். என்னை நீங்கதான் ஸார் அமைதியாக்கியிருக்கீங்க. நீங்க தான் ஸார் கை தூக்கி காப்பாத்தி விட்ருக்கீங்க ஸார். என்னை நம்பியிருக்கீங்க ஸார். என்ன நம்பி கேமராவைக் கொடுத்து, யூனிட் கொடுத்து என்னை ஆம்பளையாக்கி யிருக்கீங்க ஸார். எனக்கு எப்படி இந்த நன்றியைச் சொல்ற துன்னே தெரியலை."

"எதுவும் சொல்ல வேணாம். என்னை யாரோ கை தூக்கி விட்டாங்க. உன்னை மாதிரியே நான் அழுதுகிட்டு கிடந் தேன். எவனோ காப்பாத்தினான். அதேமாதிரி உன்னை நான் காப்பாத்தினேன். அதே மாதிரி நீ நாலுபேரைக் காப்பாத்து. தூக்கி விடு. அடுத்தாளுக்கு உதவி செய்யத்தான் பிறந்திருக்கோம். உபத்திரவம் செய்யறதுக்கு இல்ல. திருடறதுக்கு இல்ல. ஏமாற்றதுக்கு இல்ல. பொய் சொல்ற துக்கு இல்ல. ஏமாத்தறவன் பொய் சொல்றவன் இன்னிக்கு இல்லைன்னாலும் ஒருநாள் குப்புற விழுந்தே தீருவான். நம்முடைய தர்மம் நம்மள காப்பாத்தும்.

எழில், வாழ்க்கையில் எழிலா இருக்கறதுன்னா எது தெரியுமா. அமைதியா இருக்கறது. யாரால அமைதியா இருக்க முடியும் தெரியுமா? யார் எதிர்காலம் பத்தி நம்பிக்கையா இருக்காளோ அவன்தான் அமைதியா இருக்க முடியும். யார் எதிர்காலம் பத்தி நம்பிக்கையா இருக்க முடியும். தெரியுமா? தனக்கு என்ன வேணும்னு எவன் தெளிவா இருக்காளோ அவனாலதான் நம்பிக்கையோட இருக்க முடியும். தனக்கு என்ன வேணும்னு யாருக்குத் தெரியும் தெரியுமா? அடுத்தவன் வலியைத் தன் வலியா நினைக்கறவனுக்கு தன்னைப்பத்தி தெளிவா தெரியும். தன்னை பத்தி தெளிவா நினைக்கறவனுக்கு அடுத்தவன் வலியும் தெரியும். எழில் அப்படின்றது அமைதி. அமைதிதான் எழில்."

"எங்க அக்கா வராங்க." கே.கே. முன் வந்து மது சூதனனிடம் பேசினான்.

மதுசூதனன் அவசரமாகத் திரும்பினார்.

எழில் திரும்பாமல் கே.கே. வையே பார்த்துக் கொண் டிருந்தான்.

இவன்தானா இவன்தான் உறவா? இவன்தான் பார்ட்னரா? இவன்தான் எனக்கு வாழ்நாள் முழுவதும் உதவியாக இருக்கப் போகிறவனா? இவன்தான் என் மைத்துனனா?

எழிலை கே.கே. பிரியத்துடன் பார்த்தான்.

கே.கே.விடம் இந்த விஷயத்தை மதுசூதனன் சொல்லி யிருப்பார் போலிருக்கிறது. கே.கே. எழிலையும், தன் தமக்கையையும் மாறி மாறிப் பார்ப்பது எழிலுக்குத் தெரிந்தது.

எழில் மெல்ல வெட்கப்பட்டு தலையைக் குனிந்து கொண்டான்.

❖ ❖ ❖



மலையைத் தழுவிக் கொண்டு ஓடிய காற்று மனோகரனையும் வருடியபடி சென்றது. காலைக் குளிரும், காற்றின் வருடலும் மனோகரனை மெல்ல நடுங்க வைத்தன. அந்த நடுக்கம் சுகமாக இருந்தது. பல் தெரிய சிரிக்க வைத்தது.

'என்ன சிரிக்கிறாய்.'

மனோகரன் தன்னைப் பார்த்தே கேள்வி கேட்டுக் கொண்டான்.

காற்று கிச்சு கிச்சு மூட்டுகிறது. அதனால்தான் சிரிக்கிறேன் என்று உடனே தனக்குள் பதிலும் சொன்னான்.

தனக்குத்தானே கேள்வி கேட்டுக் கொள்வதும், பதில் சொல்வதும் மனோகரனுக்கு தாத்தாவால் ஏற்பட்ட பழக்கம்.

தாத்தா மனோகரனை மடக்கிக் கேள்வி கேட்பார். அவரே பதிலும் சொல்வார்.

"உயிர் என்பது என்ன? உனக்குத் தெரிந்த பதிலைச் சொல்."

தாத்தா ஒருநாள் கேள்வி கேட்டார்.

அவன் விதம் விதவிதமாய் பதில் சொல்ல, எல்லாவற்றிற்கும் இல்லை என்று தலையசைத்துவிட்டு பதில் தெரியாது என்பதே உண்மையான பதில். ஊர் கேட்கிற

கேள்விக்கு முன் பின்னாகப் பதில் சொல்லலாம். நமக்கு நாமே கேட்டுக் கொள்கிற கேள்விக்கு, நாம் தெளிவாகவும் நேர்மையாகவும் பதில் சொல்ல வேண்டும் என்பார்.

மனோகரன் ப்ளஸ்டூ படிக்கிறான். படிப்பில் பெரிய கெட்டிக்காரன் இல்லை. அதேசமயம் தோல்வியும் அடைவ தில்லை. எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது ரேங்க்கில் அவன் பெயர் இருக்கும்.

முயற்சி செய்தால் முதலாவதாக வரலாம் என்று, அவனுடைய மதிப்பெண் அட்டையில் தலைமையாசிரியர் குறிப்பிட்டிருந்தார்.

வீடு கூவிற்று.

ஒரு முயற்சியும் செய்ய வேண்டாம். இதுபோதும் என்று தாத்தா சொல்லிவிட்டார். அவனும் சரியென்று தலை யசைத்து விட்டான்.

"அவனுக்கென்ன கிழவன், முடிஞ்சுபோச்சு எல்லாம். நீ சின்னப் பையன் இல்லையா. நீ வாழ்க்கையில் முன்னேற வேணாமா? அதை விட்டுட்டு அந்தக் கிழவன் பேச்சை கேட்டு ஆடறியே."

அவன் அம்மா திட்டினாள்.

"முன்னேறது அப்புறம் இருக்கட்டும். முதல்ல மலை யேறுவோம் வா."

தாத்தா அவனைக் கூட்டிக் கொண்டு மலை ஏறினார்.

அறுபது வயது தாத்தா. எங்கேயும் நிற்காமல் சீராக மலை யேறிக் கொண்டிருக்க, அவன் பின் தொடர்ந்து கொண் டிருந்தான்.

"குமாரசாமி திங்கிழமை, திங்கிழமை இந்த மலை ஏறியாமே."

"ஆமாப்பா."

யாவது போய் புதர்ல அசையாது நின்னுக்கும். எவ்ளோ கஷ்டமா இருந்தாலும் சரி, அடிபட்டுச் செத்தாலும் சரி, துரத்தின பன்னியை கொல்லாத வரமாட்டோம். அப்படின்னுதான் மனுஷன் ஓடறாங்க. அப்படிப் பன்னி வேட்டைக்கு போறவன் நடுவுல கடவுளைப் பார்த்துட்டான். கடவுளும் விடலை. அவன் கண்ணைக் குடைஞ்சு அவன் யாருன்னு அவனுக்கு காமிச்சு கடைசி நேரத்துல நில்லு கண்ணப்பான்னு கையபிடிச்சுக்கிட்டாரு. உனக்கு தெரியுமா தம்பி''

குமாரசாமி தாத்தா மனோகரனிடம் திரும்பினார்.

கடவுள் கைதொட்டுத் திருப்பிய ஒரேயொரு நாயன்மார் கண்ணப்பர். காரைக்கால் அம்மையாரை அம்மையேன்னு கூப்பிட்டார். இங்க ஒருபடி கூடபோய் கண்ணப்பா அப்படின்னு பேர் வைக்கறார். அந்த வேடன் பேர் திண்ணப்பன். கடவுளா ஒரு டைட்டில் கொடுத்தார். கண்ணைக் கொடுத்ததால் கண்ணப்பர். ஆசாரம், ஒழுக்கம் வேத மந்திரம், ஹோமம். தியானம் எல்லாம் தாண்டி எவன் தன் மனசைக் கொண்டுபோய் பரிசா கடவுளுக்குக் கொடுக்கறானோ, அவன் கைய பிடிச்சு அப்பா இரு, என் கூடவான்னு கூப்பிடறாரு.

கண்ணப்பநாயனார் சரித்திரம் மாதிரி கடவுளைப் பற்றி, கடவுள் தேடல் பற்றி சொல்லுகிற கதை உலகத்துல வேற எங்கயும் இல்லைன்னு நினைக்கறேன். நல்லவேளை சரியான நேரத்துல கண்ணப்பன் கதைய ஞாபகப்படுத்தின. மலை ஏறி இறங்கற வரைக்கும் கண்ணப்பனாகவே இருக்கலாம்.

அவர் உதறினாற்போல் அந்த நண்பரை விட்டு நகர்ந்து மலையேறத் துவங்கினார்.

மனோகரன் பின் தொடர்ந்தான்.

மொத்த மலையும் கடவுள் ரூபம்ப்பா. சிவபெருமான் வடிவம். சிவபெருமான் தலைமேல் கால்வச்சு ஏறதா.''

''என்ன முட்டாள் தனமா பேசற. ஒரு எறும்பு உன்மேல ஏறிட்டா உனக்கு பெரிய அவமரியாதையா, ஒன்னுமில்லையே. நான் எறும்புக்கு எறும்பு.''

''அப்படின்னா, புரியலையே.''

''ஒரு எறும்புக்கு அது எறும்பா நினைக்கற அளவுல ஒரு உருவம் இருந்தா எப்படியிருக்கும்.''

''ரொம்ப ரொம்ப சின்னதா இருக்கும்''

''அந்த மாதிரி நான். பெரிய ஆகிருதியான மனுஷன் மாதிரி மலை. இதுல அவமரியாதை எங்க வந்தது. மரியாதைன்னா என்னன்னு மனுஷாளுக்குத் தெரியாது. கடவுளுக்குத் தெரியும்டா. தலையில் செருப்புக்காலை வச்சு, வாயில இருக்கற எச்சலை துப்பி, எதிர பன்னியை வெட்டிப் போட்டு ஊட்டுன திண்ணப்பரை நில்லு கண்ணப்பான்னு தடுத்திருக்கிறார். ஏன் அவமரியாதை பண்றேன்னு கேட்கலை.''

''அது வேடன் கண்ணப்பனுக்கு, நீயும் வேடன் கண்ணப்பனும் ஒன்னா.''

''நாம எல்லாரும் வேடன் கண்ணப்பன் தான். பன்னி வேட்டை, பணவேட்டை ஆடிகிட்டிருக்கோம். இருக்கறதுலயே ரொம்ப கஷ்டம் பன்னி வேட்டைதான். பன்னியைத் துரத்திகிட்டு ஓடறது சுலபமில்லை. டக்குனு எழுந்துகிட்டு திருப்பி அடிக்கும். வளைஞ்சு வளைஞ்சு ஓடும். எங்கே

"அது தப்பு இல்ல."

"எது"

"மலை ஏறது"

"ஏன்"

"மொத்த மலையும் கடவுள் ரூபம்ப்பா. சிவபெருமான் வடிவம். சிவபெருமான் தலைமேல் கால்வச்சு ஏறதா."

"என்ன முட்டாள் தனமா பேசற. ஒரு எறும்பு உன்மேல ஏறிட்டா உனக்கு பெரிய அவமரியாதையா, ஒன்னு மில்லையே. நான் எறும்புக்கு எறும்பு."

"அப்படின்னா, புரியலையே."

"ஒரு எறும்புக்கு அது எறும்பா நினைக்கற அளவுல ஒரு உருவம் இருந்தா எப்படியிருக்கும்."

"ரொம்ப ரொம்ப சின்னதா இருக்கும்"

"அந்த மாதிரி நான். பெரிய ஆகிருதியான மனுஷன் மாதிரி மலை. இதுல அவமரியாதை எங்க வந்தது. மரியாதைன்னா என்னன்னு மனுஷாளுக்குத் தெரியாது. கடவுளுக்குத் தெரியும்டா. தலையில் செருப்புக்காலை வச்சு, வாயில இருக்கற எச்சலை துப்பி, எதிர பன்னியை வெட்டிப் போட்டு ஊட்டுன திண்ணப்பரை நில்லு கண்ணப்பான்னு தடுத்திருக்கிறார். ஏன் அவமரியாதை பண்றேன்னு கேட்கலை."

"அது வேடன் கண்ணப்பனுக்கு, நீயும் வேடன் கண்ணப்பனும் ஒன்னா."

"நாம எல்லாரும் வேடன் கண்ணப்பன் தான். பன்னி வேட்டை, பணவேட்டை ஆடிகிட்டிருக்கோம். இருக்கறதுலயே ரொம்ப கஷ்டம் பன்னி வேட்டைதான். பன்னியைத் துரத்திகிட்டு ஓடறது சுலபமில்லை. டக்குனு எழுந்துகிட்டு திருப்பி அடிக்கும். வளைஞ்சு வளைஞ்சு ஓடும். எங்கே

யாவது போய் புதர்ல அசையாது நின்னுக்கும். எவ்ளோ கஷ்டமா இருந்தாலும் சரி, அடிபட்டுச் செத்தாலும் சரி, துரத்தின பன்னியை கொல்லாத வரமாட்டோம். அப்ப டின்னுதான் மனுஷன் ஓடறாங்க. அப்படிப் பன்னி வேட்டைக்கு போறவன் நடுவுல கடவுளைப் பார்த்துட் டான். கடவுளும் விடலை. அவன் கண்ணைக் குடைஞ்சு அவன் யாருன்னு அவனுக்கு காமிச்சு கடைசி நேரத்துல நில்லு கண்ணப்பான்னு கையபிடிச்சுக்கிட்டாரு. உனக்கு தெரியுமா தம்பி"

குமாரசாமி தாத்தா மனோகரனிடம் திரும்பினார்.

கடவுள் கைதொட்டுத் திருப்பிய ஒரேயொரு நாயன்மார் கண்ணப்பர். காரைக்கால் அம்மையாரை அம்மையேன்னு கூப்பிட்டார். இங்க ஒருபடி கூடபோய் கண்ணப்பா அப்படின்னு பேர் வைக்கறார். அந்த வேடன் பேர் திண்ணப் பன். கடவுளா ஒரு டைட்டில் கொடுத்தார். கண்ணைக் கொடுத்ததால் கண்ணப்பர். ஆசாரம், ஒழுக்கம் வேத மந்திரம், ஹோமம். தியானம் எல்லாம் தாண்டி எவன் தன் மனசைக் கொண்டுபோய் பரிசா கடவுளுக்குக் கொடுக் கறானோ, அவன் கைய பிடிச்சு அப்பா இரு, என் கூடவான்னு கூப்பிடறாரு.

கண்ணப்பநாயனார் சரித்திரம் மாதிரி கடவுளைப் பற்றி, கடவுள் தேடல் பற்றி சொல்லுகிற கதை உலகத்துல வேற எங்கயும் இல்லைன்னு நினைக்கறேன். நல்லவேளை சரியான நேரத்துல கண்ணப்பன் கதைய ஞாபகப்படுத்தின. மலை ஏறி இறங்கற வரைக்கும் கண்ணப்பனாகவே இருக்கலாம்.

அவர் உதறினாற்போல் அந்த நண்பரை விட்டு நகர்ந்து மலையேறத் துவங்கினார்.

மனோகரன் பின் தொடர்ந்தான்.

''கண்ணப்பவேஷம் போடறதுக்காகவா மலையில ஏறறோம்.''

அவன் பாதிவழியில் அருகே நடந்துபோய் கேட்டான்.

''இல்லை பார்க்கறதுக்கு.''

''எது பார்க்கறதுக்கு''

''மலைலேர்ந்து கீழ பார்க்கறதுக்கு. ஊரைப் பார்க்கற துக்கு.''

''மலைலேர்ந்து ஊரைப்பார்த்தா என்ன தெரியும்.''

''உண்மை தெரியும்''

''புரியலை தாத்தா''

''என் வீடு, என் வாசல், என் கொல்லைப்புறம், என் காம்ப்பௌண்ட் சுவர், அடுத்த வீடு, அதுக்கு அடுத்தவீடு, முதல் வீடு, ரெண்டாம் வீடு அப்படின்னு கணக்குச் சொல்றோம். மேலேயிருந்து பார்த்தா எல்லாம் கைப்பிடி மண்ணா தெரியுது இல்ல. வீட்டுவாசல்ல இருக்கும் போது பிரமாண்டமான வீடா இருக்கு. மேல ஏறிப் போயிட் டீன்னா சுண்டுவிரல் நகம் கூட இல்லை நம்ம வீடு. உயரப் போகப் போக இதெல்லாம் ஒன்னுமில்லைன்னு தெரியும். அதுதவிர இன்னொரு விஷயமும் இருக்கு.''

''என்ன''

''தரையிலேர்ந்து வானம் பார்க்கறதைவிட மலைலேர்ந்து வானம் பார்க்கலாம். மேலேயிருந்து கீழ பார்த்தா கீழ இருக்கறதெல்லாம் ஒன்னுமே இல்லாத சின்னஞ்சிறுசா தெரியுது. மலைலேர்ந்து வானம் பார்த்திருக்கியா, ரொம்ப பெரிசா தெரியும். ரொம்ப பிரமாண்டம்.

ரொம்ப உயரத்துக்கு வந்துட்டோம்னு நினைக்கிறேன். ரெண்டரை மணிநேரமா மலை ஏறி ஒரு உச்சிக்கு வந்துட் டோம்னு நிமிர்ந்தா, அது எங்கயோ இருக்கு உயரம்.

இவ்ளோதான் இந்த உயரம் தான் என்னாலே ஏறமுடியும். இதைவிட ரெண்டு மடங்கு ஏறலாம். மூணுமடங்கு ஏறலாம். பத்து மடங்கு ஏறலாம். அதுக்கு மேலயும் ஒரு உசரம் இருக்கு. என் உயரம் ஒரு அளவுதான். இமயமலையே இருந்தாகூட அதன் உயரம் ஒரு எல்லைக்குட்பட்டதுதான். ஆனால் வானம் எல்லைக்கு உட்படாத ஒரு உயரம், அகலம் கொண்டது. ரகசியம் கொண்டது. அங்கேயிருந்து பார்த்தா நான் என்ன, ஒரு மலைலேர்ந்து பார்த்தா என் பெரிய வீடே சுண்டுவிரல் நகம் மாதிரி தெரியுது. வானத்துலேர்ந்து பார்த்தா என்னவா தெரியும். தூசிலும் தூசு இல்ல. அணுவிலும் அணு இல்ல. அப்படிப்பட்ட உயரம் நமக்கு தெரிஞ்ச போது, நான் யார் தெரியுமா? என்னான்னு நினைச்சுக்கிட்டு இருக்க. அப்படின்னு அதட்ட முடியுமா? அலட்ட முடியுமா?

கார் போகுது, லாரி போகுது, மூணுபஸ் ஒன்னு பின்னாடி ஒன்னு உள்ளே வருது. ஆனா நூறு வருஷத்துக்கு முன்னாடி மாட்டு வண்டி போயிருக்கும், குதிரைவண்டி போயிருக்கும். அதுக்கும் நூறுவருஷம் முன்னாடி குதிரைப்படை போயிருக் கும். யானைப்படை போயிருக்கும். அதுக்கும் நூறு வருஷம் முன்னாடி தேர் போயிருக்கும். தோப்புக்கு நடுவுல ராஜா மாளிகை. மத்த தெல்லாம் குடிசை. இப்போ இதுல எது என் ஊரு. இப்போது எந்த மண்ணு எனக்கு சொந்தம். எத்த னையோ பேர் நடந்து போன பாதை, எங்க அவங்க ளெல்லாம் காணாம போயிட்டாங்க. நானும் காணாம போவேன். கண்ணு, உயரமா வந்தாதான் இந்த ஊர்ல எத்த னையோ பேர் நடந்து போயிருக்கான்ற உண்மை தெரியும்.

இந்த ஊர் சுத்திகிட்டே இருக்கும் தெரியுமா? இப்போ இந்த பக்கம் இருக்கு தெரியுமா. இப்போ இந்தபக்கம் இருக்குல்ல ஊர். அப்புறம் கொஞ்ச நாள் பொறுத்து தெற்கால வளரும். தெற்கு லேர்ந்து மேற்கால ஊர் வளரும்.

மேற்குலேர்ந்து வடக்கால ஊர் வளரும். வடக்குலேர்ந்து கிழக்கால ஊர் வளரும். இப்போ கிழக்கு கோபுரம்னு கொண்டாடுவாங்க. இன்னொருதரம் மேற்கு கோபுரம்னு கொண்டாடுவாங்க. அப்புறம் கொஞ்சநாள் பொறுத்து வடக்கு கோபுரத்த கொண்டாடுறாங்க. இப்படித்தான் போய்க்கிட்டிருக்கும். இப்போ சுடுகாடு இருக்கற இடம் ஊராயிரும். ஊர் இருக்கற இடம் சுடுகாடு ஆயிடும்'' சொல்லிவிட்டு குமாரசாமிதாத்தா வாய்விட்டுச் சிரித்தார்.

அவன் தாத்தாவையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''இதுக்கு மட்டும் நான் மலை ஏறலைடா. வேற ஒரு விஷயமும் இருக்கு.''

ஒரு கற்பாறையின் மீது குமாரசாமி அமர்ந்து கொண்டார்.

அவர் காலின் கீழ் மனோகரன் அமைதியாய் உட்கார்ந்து கொண்டான்.

''மனோகரா நான் உன்னை ரொம்ப அறுத்தெடுக்கறனா.''

திடீரென்று சிரித்தபடி குமாரசாமி கேட்டார்.

மனோகரனும் சிரித்தான்.

''இல்லை தாத்தா. நீ பேசறது எனக்கு ரொம்ப பிடிச்சுருக்கு. எல்லாமும் புரியுதுன்னு சொல்லமாட்டேன். அப்பப்போ சிலது புரியது. அதைத் தவிர நீ என் தாத்தா. நீ என்ன சொன்னாலும் என் நல்லதுக்குத்தான் சொல்லுவ. இன்னிக்குப் புரியலைன்னாலும் அன்னிக்கு தாத்தா சொன்னது இதுதான்னு நாளைக்குப் புரியுமில்லையா? அதனால் கேட்டுகிட்டு வரேன்.''

''வேற ஏதாவது காரணம் இருக்கா, என்கூட ஒட்டிகிட்டு வர.''

''இருக்கு தாத்தா.''

''என்னது''

''என் செட் பசங்களோட என்னால பேசவே முடியலை. ஒன்னு நடிகரைப் பத்தி பேசறாங்க. இல்லைன்னா நடிகையைப் பத்தி பேசறாங்க. எப்போ, எந்தப் பொண்ணு யார் கூட கெட்டுப் போச்சுன்னு பேசறாங்க. அதுவும் இல்லைன்னாக்க ஏதாவது ஒரு கட்சி, ஏதாவது ஒரு எம்.எல்.ஏ. பக்கம் சேர்ந்துகிட்டு அவரை தலைவர் தலைவருன்றாங்க. போன மாசம் பிரியாணி போட்டாரே யம்மா என்னா நெய், என்னா நெய்யின்றாங்க. போனமாசம் தின்ன சோறைப்பத்தி இந்தமாசம் எப்படிப் பேசறது. இவங்க தலைவருன்னு சொல்றவன் இங்க கொலைகாரன், கொலையை மறைக்க கூட்டம் சேர்க்கறான். கூட்டம் சேர்க்க பிரியாணி போடறான். அவங்களுக்கும் தெள்ளத் தெளிவா தெரியுது. இருந்தாலும் எதுனா பிரச்சினை வந்தா எம்.எல்.ஏ. ஸ்நேகிதம் உதவும். அப்படின்னு அவங்களாண்ட போய் நிக்கறாங்க. வாழ்க, வாழ்கன்றாங்க. ஒன்னு காமம் இல்லைன்னா வன்முறை. இதுக்கு அடிப்படையா பணம். இதைப்பத்திதான் பேசறாங்க.

எப்படியாவது அந்தப் பொண்ணை மடக்கிடனும்னு சொல்றபோது எனக்கு பயமாவும் இருக்கும், பாவமாகவும் இருக்கும். என்னால் அவங்களோட இருக்க முடியலை தாத்தா. அதான் உன் பின்னாடி சுத்தறேன்.''

''ஏதாவது சினிமா பார்க்கறது.''

''ஒரு பேட்டை ரௌடி. அவனுக்குப் பிடிச்ச அழகான பொண்ணு. அவகொஞ்சம் பணக்காரி அப்படின்னு எல்லாக் கதையும் ஒரே மாதிரி. சினிமா படம் பொழுது போறதுக்குன்னு சொல்றாங்க. முப்பதுபடம் வந்தது. பதினாறு படமும் ரௌடி பத்திதான் கதை.''

"ஒரு ரௌடி திருந்திடுவான்னா அது நல்ல கதைதானே."

"திருந்திடுவான். ஆனா, செத்துடுவான். சாவுபத்தி நிறை பேருக்குத் தெரியலை. ரொம்ப அலட்சியமா இவன் செத்துடு வான்னு கதையை முடிக்கறான். அவன் கொன்னுட்டான்னு கதை சொல்றாங்க. சாவு வரத்தான் போகுது. இதுக்கு யாரும் ஒன்னும் சொல்ல வேணாம். ஆனா வாழறது எப்படின்னு தான் தெரியலை. அதான் சொல்லித்தரணும். இதனாலேயே நான் சினிமாவுக்குப் போறதில்லை."

"நிறைய பத்திரிகை வருது போலிருக்கே. கலர் கலரா தோரணமா தொங்கவிடறானே."

"எல்லா பத்திரிகையும் சினிமாப் பத்திரிகை தான். நடிகையைப் பத்திதான். நடிகர் பத்திதான். நெல்லு பத்தியோ, கரும்பு பத்தியோ, உரம் போடறத பத்தியோ எழுதமாட்டாங்க."

"ஏன் சாவுபத்தி யோசிச்சா என்ன? உனக்கு சாவுபத்தி யோசிக்க பயமா இருக்கா."

குமாரசாமி கேட்டார்.

அவன் யோசித்தான்.

"இல்லீங்க. சாவுபத்தி யோசிக்கறதுக்கு ஒன்னுமில்ல. அது எப்போ, எப்படின்னு தெரிஞ்சிருந்தா எதுனா யோசனை பண்ணலாம். டொப்புன்னு வந்து உட்காரும். மெல்ல மெல்ல வந்து உட்காரும். அதனால அதைப்பத்தி யோசிக் காத. இங்க வந்துட்டோம். எப்படி வாழறதுன்னு யோசனை பண்ணா நல்லாயிருக்குமே. வாழறது நல்லாயிருந்தா சாவு சந்தோஷமா இருக்குமே."

"ப்ளஸ்டூ படிச்சிட்டு இப்படிப் பேசறீயே, ஆச்சரியமா இருக்கு."

"ஓஷோ புக்கு ஒன்பது பத்தாவது படிக்கும் போது கிடைச்சுது. அந்தப் புக்கை திரும்பத் திரும்ப படிச்சுகிட்

டிருக்கேன். பழைய புஸ்தகக்கடையில அஞ்சு ரூபா, ஆறு ரூபாய்க்கு வாங்கறேன். நல்லாயிருக்கு. ஆமா நீ கூட ஒன்னு கொடுத்தியே. எனக்கு முழுக்க புரியலை தாத்தா."

"புரிஞ்சவரைக்கும் யோசனை பண்ணி பார்க்கணும்."

"என்னிக்காவது ஒருநாள் புரியும்கற நம்பிக்கையில் திரும்பத் திரும்ப படிக்கறேன். பன்னெண்டு வயசுல க்ளாஸ் பசங்க சொல்வாங்க, அந்தப் பொண்ணை அந்த பையன் லவ் பண்றான்னு. கெட்ட விஷயம் சொல்ற மாதிரி சொல்லு வாங்க, அன்னிக்கு அது அசிங்கமா இருந்தது. இன்னிக்கு அது ரொம்ப பிரமாதமான விஷயமா படுது."

"நீங்க யாரையாவது லவ் பண்றீங்களா?"

"நம்மூர்ல கஷ்டம்."

"என்ன கஷ்டம்."

"இந்த மாதிரி ஊர்ல பயந்து பயந்து அலையணும். லவ் பண்றது ஊருக்குத் தெரிஞ்சா பொண்ண கட்டி வச்சுட னும்னு சொல்வாங்க. இல்லை கட்டி வச்சு அடிப்பாங்க. டென்த் படிக்கறபோது ஒரு பையன் நைன்த் பொண்ண லவ் பண்ணான். கல்யாணம் பண்ணி வச்சுட்டாங்களே. படிப்பு பாழாப் போச்சு. சுமாரா படிக்கறவன் அப்படியே டௌன் ஆயிட்டான்."

"அப்போ மத்தவங்க பண்ண தப்புலேர்ந்து கத்துகறீங் கன்னு சொல்லுங்க."

"அப்படித்தான் கத்துக்க முடியும். நாம தப்பு பண்ணி யேவா கத்துக்க முடியும்."

"நீங்க இப்படி பேசறதுக்கு உங்க ஜாதகம் தான் காரணம்."

தொடர்ந்து பன்மையில் தாத்தா பேச ஆரம்பித்தார்.

"உங்களுக்கு கேது உச்சம், குரு நல்ல இடம், சனி கேந்திரம், ஒருத்தர் ஞானத்தைக் கொடுப்பார். இன்னொருத்தர் நன்மையைக் கொடுப்பார், இன்னொருவர் உறுதியைக் கொடுப்பார்.

"ஏன் இதைச் சாதாரணமா சொன்னா போதாதா. ஏன் வாங்க, போங்கன்றீங்க."

"சட்டுன்னு உங்களை பெரியாளா நினைச்சுட்டேன்."

தாத்தா சிரித்தார்.

இரண்டு பேரும் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள்.

"இந்த மாதிரி மலையில் உட்காறத்துக்கு இன்னொரு காரணமும் இருக்கு."

திரும்பி குமாரசாமி மனோகரனைப் பார்த்தார். மனோகரன் ஆடாது அசையாது பார்த்துக் கொண்டிருந்தான்.

"திண்ணையில் உட்கார்ந்து பார்த்தா குப்பன் போறான். சுப்பன் போறான். அவபோறா, இவபோறா அது போகுது, இது போகுதுன்னு ஒவ்வொரு விஷயத்தையும் பார்த்துட்டு, பார்த்த விஷயத்தோட மனம் ஒட்டிகிட்டு ஏதாவது யோசிக்கும். குப்பன் கடன் வாங்கினானே திருப்பிக் கொடுத்துட்டானா. சுப்பன் வீட்டுல சாவாமே, என்ன ஆச்சு மேற் கொண்டு, அவ என்ன இவனோட சுத்தறாளா, இவ வந்து வாழாத இருக்காளாம், அப்படின்னு ஏதாவது பேச்சு உள்ளுக்குள்ள ஓடிகிட்டு இருக்கும். இந்த உசரம் வந்துட்டோம்னா எல்லாம் கண்லபடும். ஆனா உள்ள ஒன்னும் ஓடாது, ஊரு மொத்தமும் கண்ல நிற்கும். ஆனா உள்ள எந்த ஒன்னும் தோணாது. எந்த எண்ணமும் தோணாது. கேட்டு யோசிச்சு, பார்த்து யோசிச்சு பழக்கப்பட்ட புத்தி இல்ல. மேல வந்து உட்கார்ந்த பிறகும் எதையும் பார்க்காத பிறகும் உள்ள எதுனா யோசிக்கும். இதைப்பத்தி அதைப்பத்தி அவைப் பத்தி இவனைப்பத்தின்னு ஆனால் கொஞ்ச நேரத்துல அலுப்பாகி வெறுமன பார்த்துகிட்டு நிக்கும். எதுவும் யோசிக்காது.

இதைக் கவனிச்சுருக்கீங்களா. வெறுமன பார்த்துகிட்டு இருப்போம். ஆனா எதைப்பத்தியும் யோசிக்க மாட்டோம். ஒரு மௌனம் இருக்கும். பார்த்ததினுடைய விஷயம் மனதுக்குள் செய்தியாக, வாக்கியமாக போகாது. அது ஒரு சுகம். இது ஒரு அமைதி. உள்ளுக்குள்ள எந்த வாக்கியமும் போகாமல் எந்த எண்ணமும் இல்லாமல் ஒரு அமைதி முழிச்சுகிட்டு இருக்கறபோதே ஏற்படும். தூங்கினா ஏற்படற அமைதி விழிப்புல இருக்கும். விழிப்புல அமைதியாக இருக்கறதுதான் ரொம்ப பெரிய விசேஷம். இதுக்கு பழக்கப்பட்டுப் போச்சுன்னா எதிர்க்க எவ்வளவு பெரிய விஷயம் நடந்தாலும், எது நடந்தாலும் உள்ள பெரிய ஆரவாரம் காட்டாது. அமைதியாக யோசிக்க முடியும். எப்போ அமைதியா யோசிக்கறோமோ, அப்போ அந்தப் பிரச்சினையினுடைய தன்மையை, செய்ய வேண்டிய முடிவை ரொம்ப வேகமாக, எளிமையாக எடுத்துடலாம். அதுக்கு பழக்கப்படுத்திக் கிறதுக்குத்தான் நான் மலைக்கு வந்து உட்கார்ந்துக்கறேன். நீங்க கூட எங்க மலை பார்த்தாலும் மடமடன்னு ஏறிடுங்க. ஏறி உட்கார்ந்துக்கோங்க. ப்ளஸ்டூ முடிச்சிட்டீங்க இல்ல. காலேஜ் படிப்புதானே."

அவன் திரும்பி ஊரைப்பார்த்து தாத்தாவிற்கு முதுகு காட்டி உட்கார்ந்து கொண்டான்.

ஏதேதோ எண்ணங்கள் ஆரம்பத்தில் தோன்றின. மெல்ல மடங்கின.

மலை ஏறி இறங்கிய வேகத்தில் தாத்தா கூடுதலாக ஒரு டம்ளர் கஞ்சி குடித்துவிட்டு ஈஸிசேரில் சாய்ந்து கொண்டார். சிறிது நேரத்தில் தூங்கிப்போனார்.

மனோகரன் தாத்தாவைச் சில கணங்கள் உற்றுப் பார்த்து விட்டு வெளியே வந்தான். அவனும் கஞ்சி குடித்திருந்தான். கஞ்சி குடித்த பிறகு சுறுசுறுப்பு அதிகமாக இருந்தது. கஞ்சியில் தேன் விட்டுக் குடி என்று தாத்தா சொல்வது வழக்கம். தேன்விட்டுக் குடித்ததாலா அல்லது புத்தியில் தூக்கம் இல்லாததாலா தெரியவில்லை. கூடுதலாக ஒரு சுறுசுறுப்பு இருந்தது. எதற்கு வீட்டிலேயே அடைந்து கொண்டு வெளியே போகலாமே என்று பள்ளிக்கூடத்து எதிர்பக்கத் தோப்பில் நண்பர்கள்கூடும் இடத்திற்கு சைக்கிளில் நிதானமாகப் போனான். தோப்பு காலியாக இருந்தது.

இந்நேரம் பெரிய கும்பலா இருப்பாங்கன்னு நினைச்சேன். ஒருத்தரையும் காணோமே.

என்ன செய்வதென்று தெரியாமல் திருதிருவென்று விழித்தான். பிறகு தோப்புக்கு அருகே இருக்கின்ற நண்பன் வீட்டுக்கு சைக்கிள் மிதித்தான். போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருப்பதாகத் தகவல் வந்தது.

"ஏதோ பொண்ணோட லவ்வாம். தகராறாம். என்னத்துக்குடா, நீங்களெல்லாம் படிக்கற பசங்களா."

நண்பனின் அம்மா உரத்த குரலில் கத்தினார்.

"யாருக்கும்மா, யாருக்கு யாரோட லவ்வு."

பதட்டமாக விசாரித்தான்.

"யாரோ நடராஜனாமே. உங்களோட படிக்கறவன் தானாமே. ஏண்டா இந்தமாதிரி பசங்களோட சேரறீங்க. என் புள்ளைய பார்த்தா தலமேல அடிச்சு வீட்டுக்குக் கூட்டிட்டு வா. நீயும் அங்கபோய் நிக்காத வந்துரு."

அந்த அம்மாள் கவலையோடு பேசினாள்.

"நடராஜனா, நம்ம நடராஜனா?"

அவன் வேகமாக சைக்கிள் மிதித்தான்.

"நடராஜன் வேணியை லவ் பண்றதா சொல்றான். ஆனா வேணி, கிருஷ்ணனை லவ் பண்றதா சொல்லுது. வேணியும் கிருஷ்ணனும் ஒரே ஜாதி. நடராஜன் வேற ஜாதி. ஜாதி விட்டு ஜாதி லவ் பண்ணா சரின்னு சொல்லுவாங்களா. இந்த ஊர்ல பொத்திடுவான். காதலுக்கு கண் இல்லை, அதனால் ஜாதி இல்லை அப்படின்னு நடராஜன் சொல்றான். ஆனா, மத்தபசங்க ஒத்துக்கலை. காதலுக்கு கண் இல்லாத இருக்கலாம். ஆனா ஜாதி உண்டுன்னு சொல்லிட்டாங்க. ஜாதின்னு ஒரு வசதிடா. நம்ம பள்ளிக்கூடத்துல ஆயிரம் பேர் இருக்காங்க, ஆயிரம் பேரை ஆறு டீமா பிரிச்சிடல."

"ஏன் பிரிக்கறாங்க."

"அப்போதான் ஒருத்தருக்கு ஒருத்தர் போட்டி ஏற்படும். ஒருத்தர் பார்த்து ஒருத்தர் முன்னேறணும்னு ஆசைவரும். ஒருத்தருக்கு ஒருத்தர் பாதுகாப்பா இருக்கணும்னு தோணும். கட்ட பொம்மன் அணி, தேசிங்கு ராஜா அணி, வீரசிவாஜி அணின்னு எதுக்குப் பிரிக்கறாங்க. எல்லாரும் ஒரே டீம்னா யார் யாரோட ஆடறது. அதனால பெரியவங்க அந்தக் காலத்துல ஜாதி பார்த்து வச்சுருக்காங்க. நூறு பேர்ல, பத்துப்பேர் பத்துப் பேரா பிரிஞ்சாதான் ஒருத்தருக்கு ஒருத்தர் பார்த்துப் புரிஞ்சிக்கறதுக்கு, பாதுகாப்பா இருக்கறதுக்கு தெளிவா இருக்கும்.

நூறு பேரும் ஒன்னா இருங்கன்னாக்க. யார் யாருக்கு பாதுகாப்பு, யாருக்கு யாரோட போட்டி, ஒன்னுமே இருக்காது. சும்மா சோம்பேறித்தனமாயிடும்.

உன்னை லவ் பண்றது தப்புன்னு சொன்னோமா, இல்லையே நல்லா பண்ணு. உங்க ஜாதி பொண்ணா பார்த்து பண்ணு, நாங்க நின்னு செய்து வைக்கிறோம். எங்க ஜாதிப் பொண்ணுல கைய வச்சா அது எங்கமேலயே கை வைக்கற மாதிரி இல்ல இருக்கு. அப்போ நாங்களெல்லாம் என்ன சும்பனா, எங்களுக்கு லவ் பண்ணத் தெரியாதா. படிப்பு

முடியறதுக்கு பதினெட்டு, பத்தொன்பது வயசாயிடும். அப்புறம் ஒரு மூணு வருஷம் நெல்லு வியாபாரமோ, வேர்க் கடலை பயிரோ, காய்கறியோ, லாட்டரி டிக்கெட்டோ ஏதோ பண்ணோம்னா தபதபன்னு ஒரு மூணு வருஷத்துல முன்னுக்கு வந்துடலாம்.

கழுத்துல ஒரு செயின், கையில ஒரு ப்ரெஸ்லெட், விரல்ல ரெண்டு மோதிரம், ஓட்டறதுக்கு ஒரு பழைய ஸ்கூட்டர், பாக்கெட்டுல கொஞ்சம் காசுன்னு இருந்ததுன்னா அடுத்த வருஷமே கல்யாணம் பண்ணி வச்சுடறாங்க.

இருவத்திரெண்டு வயசுல கல்யாணம் பண்ணிகிட்டோம்னா, முப்பது வயசுக்குள்ள ரெண்டு மூணு பசங்க பொறந்துடும். அம்பது வயசுல எல்லாம் பெருசாயிடும், பொம்பளைப் புள்ளையா இருந்தா கல்யாணம் பண்ணிக் கொடுத்துடுவோம், புள்ளையா இருந்தாக்க சம்பாதிக்கறதுக்கு அனுப்பிடுவோம். அவங்க கால்ல நிக்கும் போது நமக்கு அம்பத்தஞ்சு வயசாயிடும் கூசாத ரிடையர் ஆயிடலாம்.

எங்கப்பாவந்து சின்ன அளவுல பண்ணிகிட்டிருந்தாரு, நா இப்போ மல்லாட்டை பயிரு பெருசா பண்றேனே, என் புள்ள வந்தா இன்னும் பெருசா பண்ணுவான், அவ்ளோ தானே.

ஆறு தலைமுறையா மல்லாட்டை பயிறு பண்றோம். இந்த ஊர்ல மூணு வீடு, நாலு வீடுன்னு பெருகிட்டே போகுது. இந்தக் கோயில்ல ஒருநாள் உற்சவம் எங்க மண்டகப்படி. அந்த மரியாதைக்குக் குறைவே கிடையாது. இதுல அடுத்த ஜாதிப் பொண்ணபோய் என்னத்துக்கு நான் லவ் பண்றது. அக்கா பொண்ணு தாரேன்றாங்க. அத்தை பொண்ணு தரேன்றாங்க. எதுனா ஒன்னுத்த கட்டிக்க வேண்டியதுதானே. இதுல லவ் என்னா அக்கா நூத்திப்பத்து சவரனோட பொண்ணு அனுப்பறேன்னுது. ஆனா அது

வீட்டோட வந்துடணுமாம். ஏனக்கான்னு கேட்டேன். அவரு வீட்டுக்காரருக்கு உதவியாக இருக்கணுமாம். அவங்க தொழிலைச் செய்யணுமாம். அவரு டிப்ளமோ சிவில் இன்ஜீனியரிங் காண்ட்ராக்டர். ஊரு தெற்குப்பக்கமா வளர்ந்து போய்கிட்டே இருக்கும். ஆடுமாடு மேய்ச்ச கரம்புகாட்டுலேர்ந்து வளைச்சு போட்டு வாங்கறானுங்க.

இப்போதைக்கு ரியல் எஸ்டேட்டும், கட்டடம் கட்டற தும்தான் நல்ல துட்டு. மாமாவோட கைகோர்த்துக்கிட்டா பொண்ணுக்கு பொண்ணு, துட்டுக்கு துட்டு, வேலைக்கு வேலை. எதுக்காக இன்னொரு ஜாதிப்பெண்ணைப் போய் லவ் பண்ணி, உதை வாங்கி, அடிபட்டு ஊரைவிட்டு ஓடி சாகணும். அக்கா பொண்ணைக் கட்டிகிட்டா போதும். ஊர் மொத்தமும் என்னை மாப்பிள்ளை, மாப்பிள்ளை என்று கூப்பிடும்.

அந்த ஊரைச் சுற்றி உள்ள எல்லா குடும்பமுமே விவசாயத்தோடு பின்னிப் பிணைந்தவை. காசோடு உருண்டு வளர்பவை.

ப்ளஸ்டூ முடித்த பல மாணவர்கள் நெல் கமிஷன் ஏஜெண்டாகவும், வேர்க்கடலை கமிஷன் ஏஜெண்டாகவும் நவதானிய விற்பனையாளராகவும் இருப்பார்கள்.

ஒரு ப்ளஸ்டூ பையன் சென்னைக்குப் போய் அலுமினியப் பாத்திரங்களை வாங்கி வந்து பஸ்சின் கூரைமேல் போட்டு மொத்தமாக விற்பவனாகவும் இருக்கிறான்.

ப்ளஸ்டூவில் முதல் மாணவனாக வரவேண்டும் என்று யாருக்கும் ஆசையில்லை. அறுநூறு மார்க் வாங்கினால் மிகப் பெரிய சந்தோஷம். தொள்ளாயிரம் வாங்கினால் மிகப் பெரிய இறுமாப்பு. ஆயிரம் வாங்கினால் அதிர்ஷ்டம் என்று தான் அவர்கள் பேசிக் கொள்வார்கள்.

ஆனால் நடராஜனுக்கு இந்த மாதிரியான வியாபாரங்கள் எதுவுமில்லை. அவன் தகப்பனார் அரசாங்க அதிகாரி. தாயார் தமிழாசிரியை. நடராஜன் அதிகம் புத்தகங்கள் படிப்பான். குறிப்பாய் நாவல்கள் படிப்பான், குறிப்பாய் கவிதை எழுதுவான்.

இந்தக் குணங்கள்தான் அவனைக் காதலிக்க தூண்டியிருக்க வேண்டும்.

வேணியை மிகப் பெரிய அழகி என்று சொல்ல முடியாது. ஆனால் அந்த வருடம், அந்த பள்ளிக்கூடத்தில் அவள்தான் அழகி. மதமதவென்றிருக்கிற உடம்பு ஒரு பொலிவை அவளுக்குக் கொடுத்தது.

"வேணி, உன் கணக்கு நோட்டை காமி" என்று ஆசிரியரே கொஞ்சுகிற அளவுக்கு இருந்தாள். அந்த ஆசிரியரை மாணவர்கள் கூட்டாகப் பழி தீர்த்தார்கள்.

அவர் எப்போதேனும் மது அருந்துகிற பழக்கம் உடையவர். இதை மாணவர்கள் கண்டுபிடித்து அவருடைய மேஜை டிராயரில், புத்தக அலமாரியில், ஸ்கூட்டர் பையில் பிராந்தி பாட்டிலை ஒளித்து வைத்துவிட்டார்கள்.

பள்ளிக்கூடத்தில் அது மிகப்பெரிய விவகாரமாக மாறியது. அந்த ஆசிரியர் எங்குப் போனாலும் விசாரிக்கப் பட்டார். விசாரிப்பதற்கு அந்த பையன்களும் ஆட்களையும் அனுப்பினார்கள்.

அந்த ஊரில் பையன்கள் பையன்களாக இல்லை. ஆட்களாக இருந்தார்கள். எல்லாம் செய்துவிட்டு மாணவன் நினைத்தால் அதை நடத்திக்காட்டுவான் என்று கோரஸாய் பாட்டுப் பாடினார்கள்.

அவன் எங்கேயிருந்தான். வானத்துலேர்ந்தா குதிச்சான். நீங்க ஜாதி பேசறீங்க, அவனும் ஜாதி பேசறான். நீங்க பொம்பளைய அசிங்கமா சொல்றீங்க. அவனும் பொம்பளைய

அசிங்கமா சொல்றான். நீங்க செக்ஸ்படம் பார்க்கறீங்க, அவனும் செக்ஸ் படம் பார்க்கறான். நீங்க சாராயம் குடிக்கறீங்க, அவனும் சாராயம் குடிக்கிறான். நீங்க ரகசியமா, நிதானமா மெள்ள பண்றீங்க. அவன் தடாலடியா பண்றான். ஒரு சமூகம் கெட்டுப் போவதற்கு தெளிவான உதாரணம் மாணவர்கள்.

"இந்த மீனுக்கும், அந்த மீனுக்கும் கல்யாணம்னு பாட்டுப் பாடறீங்க. அவனுக்குப் படிப்புல எப்படி புத்தி போகும். கோழிக்கும் சேவலுக்கும் கல்யாணம். எருதுக்கும் பசுவுக்கும் கல்யாணம், இப்படியே போய்ட்டே இருப்பான்.

திருவிழான்னா திங்கறது, பொம்பளைங்கள பார்க்கறது. ஆ..ஊன்னு கத்தறது. எவனாவது கேள்விகேட்டா அடிக்கறது. ரகளை பண்றது, குடிச்சுட்டு கூச்சல் போட்டு கத்தறது. இந்தக் கருமாந்தரத்துக்கு திருவிழாவே வேணாங்கறேன்.

ரிஷபத்துல சிவனும், அம்பாளும் வரச்சொல்ல கார்த்தால வெய்யில்ல தகதகன்னு பார்த்துட்டு எங்கப்பா மாலை மாலையா தண்ணி விடுவாரு. ஏம்ப்பா அழுவறேன்னு கேட்டேன். நான் அதுகிட்ட போகலைடா எனக்கு போகத் தெரியலை. அது என்னை நோக்கி வருதுன்னுவாரு. மனுஷாள் இழுத்தா வருமேப்பா அப்படின்னேன். மனுஷாள் இழுத்து வரலைடா. அவனே அவனை இழுத்துவரேன்னாரு. எனக்கு ஒன்னும் புரியலை. ஆனா, ரிஷபத்துல சாமியும் அம்பாளுமா உட்கார்ந்து வரத பார்க்கறபோது எங்கப்பா ஞாபகம் வந்து, எங்கப்பா ஞாபகம் வந்ததால எனக்குள்ள சில்லுனு ஒரு உணர்ச்சி ஏற்படுது. என் பிள்ளைக்கு சிவனும் தெரியலை. அம்பாளும் தெரியலை மாடுதான் தெரியுது. மாடுகூட தெரியலை, மாடு விரைக்கொட்டை ஆடுதே அதையே பார்த்துகிட்டே இருக்கான். ஒரே சிரிப்பு. எங்க

போய் முட்டிக்கறது. அப்படியே போனா இந்த உலகம் என்ன ஆகும்.''

அப்பாவின் நண்பர் புலம்புவதை அவன் அருகேயிருந்து கேட்க, அவனும் அவ்விதமே யோசித்தான்.

போலீஸ் ஸ்டேஷன் வாசலுக்குப் போய் ப்ரேக் போட்டு நின்றான். வாசலிலிருந்த சென்ட்ரியைப் பார்த்து வணக்கம் சொன்னான்.

''என்ன தம்பி கேஸா''

சென்ட்ரி ஆவலாக விசாரித்தார்.

ஏதாவது கேஸ் இருந்தால்தான் தனக்கு உபயோகம் என்பது போல் அவர் ஆவல் இருந்தது.

''இல்லீங்க பள்ளிக்கூடத்துப் பசங்க இங்க வந்திருந்ததா சொன்னாங்க.''

''ஆமா... ஆமா.. காலையிலயே ஆயிப்போச்சே ரகளை. வேணி சமாச்சாரம்தானே காலையிலயே இட்டுகிட்டு போயிட்டாங்க.''

''யாரு''

''ஊர் ஆளுங்கதான், போலீஸ் வேணாம். நாங்களே பஞ்சாயத்து பண்ணிக்கறோம். போலீசுக்கு சமாச்சாரம் வரவே வராதுன்னு சொன்னாங்க. இன்ஸ்பெக்டரும் விட்டது பீடைன்னு வெளிய அனுப்பிட்டாரு. அதுதவிர வெறும் ரெண்டுரூபா கொடுத்துட்டு போறானுங்கப்பா. பேமானிப் பசங்க. வேற எதுலயாவது மாட்ட மாட்டானா மெறிச்சிடறேன் இரு.''

போலீஸ்காரர் கவலை பெருங்கவலையாக இருந்தது.

சைக்கிளில் ஏறி எங்கு பஞ்சாயத்து நடக்கும் என்று தேட, அங்கு மாணவர்கள் இருந்தார்கள்.

''என்னடா ஏதோ தகறாராமே''

''உனக்குத் தெரியாதா.''

அந்த மாணவர்கள் ஆவலாக ஆரம்பித்தார்கள். அந்த மாணவர்கள் யாரும் எந்த வம்பிலும் கலந்து கொள்ள மாட்டார்கள். ஆனால், எல்லா வம்பைப் பற்றியும் விளக்கமாக விலாவரியாக இங்கும் அங்குமாகப் போய் சொல்வார்கள். ஒரு கேள்வி கேட்டால் போதும் விதம் விதமாய் அபிப்பிராயங்களோடு கற்பனைகளோடு பதில் பேசுவார்கள்.

அந்த மாணவர்கள் சற்று கோழைகள். ஆனால் வம்பு என்றால், வாய் வலிக்கப் பேசுவார்கள்.

''உனக்குத் தெரியாதா.''

இன்னொரு பையன் ஆரம்பித்தான்.

''நம்ம வேணி இருக்கா இல்ல வேணி. அவளை நடராஜன் அவசரமா பார்க்கணும்னு சொல்லியிருக்கான். லெட்டர் எழுதி இங்க வா அப்படின்னு தோப்புக்குக் கூப்டிருக்கான். அவளும் போயிருக்கா. அங்க வந்து என்னை லவ் பண்ணுன்னு சொல்லி கால்ல விழுந்து அழுதிருக்கான். அவ அதெல்லாம் முடியாது. நீ வேற ஜாதின்னு சொல்லியிருக்காள். ஜாதி என்னடி ஜாதி, நான் ஆம்பள, நீ பொம்பளைடீன்னு சொல்லி மேல கை வச்சிருக்கான். அவ கத்தியிருக்கா. அவ கத்தினதைப் பார்த்து பயந்து அவளை அடிச்சு கீழ சாய்ச்சிருக்கான். அவளை அப்படியே புதருக்கு எடுத்துட்டுப் போயிருக்கான். என்ன பண்ணான்னு தெரியல.

யாரோ பார்த்துட்டு ஒரே கூச்சல் குழப்பம். பெரிய குரூப் வந்து நடராஜனைத் தேடிச்சு. நடராஜன் எங்கயிருக்கான்னு தெரியல. அவன் வீட்டுக்குள்ள புகுந்து அவங்கம்மாவையும், அவங்கப்பாவையும் அறை விட்டிருக்கு. அவங்க அம்மா அப்பாவை அடிச்சதுனால அவங்க ஜாதி ஆளுங்களெல்லாம்

ஒன்னா சேர்ந்து, வந்தவங்கள அடிச்சு நொறுக்கிட்டாங்க. இப்போ வேணியை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போயிருக்காங்க. ஒன்னும் ஆகலை, ரெண்டு மூணு இடத்துல பல்லு பதிஞ்சிருக்கு அப்படின்னு சொல்லியிருக்காங்க. ஐ திங்க் ஜாக்கெட்டை கழட்டி, ஏதோ பண்ணிட்டான்னு நினைக்கிறேன்.''

பையன் கற்பனையை விரிவடையச் செய்ய மனோகரன் சிரமப்பட்டு அந்த எண்ணத்தை விலக்கினான்.

''அவங்களெல்லாம் எங்க.''

ஆவலாகக் கேட்டான்.

''காயா மடம் போயிருக்காங்க. அங்க வச்சுதான் பஞ்சாயத்து.''

வண்டியை வேகமாகத் திருப்பினான்.

அப்பொழுது உள்ளே ஒரு பதட்டம் இருந்தது.

எதற்கு, உனக்கும் அதற்கும் என்ன சம்பந்தம் கூடவே கேள்வி எழுந்தது.

அந்த பையன்கள் அவன் வேகத்தைப் பார்த்துச் சிரிப்பதும் அவன் மனசுக்குள் பதிவாயிற்று.

வண்டியை எதற்கு வேகமாக மிதிக்கிறோம் என்று தெரியாமலேயே மிதித்துக் கொண்டு திரும்பினான். காயா மடம் வாசலில் இறங்கினான்.

பஞ்சாயத்து நடந்து கொண்டிருந்தபோது, ஒரு கும்பல் வேகமாகக் கத்தி, இந்த பஞ்சாயத்து சரியில்லை என்று சொல்லி இந்த பஞ்சாயத்தில் இருக்கிறவர்களை இழிவாகப் பேசி வெளியேறி விட்டதாகவும், அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த பெரியவர்கள் மறுபடியும் அவர்கள் வருவார்கள் என்று காத்திருப்பதாகவும் தகவல் சொல்ல, எந்த குழு வெளியேறிற்றோ அந்தக் குழு எங்கே இருக்கும் என்று தேடிக்

கொண்டு போகும் போது, அங்கு அவன் வீடு இருக்கும் தெருவில் போயிருப்பதாகத் தகவல் வந்தது.

அவன் தெருவில் அந்த இனத்தார்கள் அதிகம் இருந்தார்கள். அவன் சைக்கிளை நேரே வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய் உள்ளே வைத்தான். அவன் தாத்தா ரேழி கதவு தாண்டி திண்ணையில் அமர்ந்திருந்தார். முன்பு இந்தத் திண்ணை வருவோர் போவோருக்கு உபயோகப்படட்டும் என்று கட்டி வைக்கப்பட்டிருந்தது. தெருவில் பிச்சைக் காரர்கள் அதிகமாதலால் பலரும் வந்து படுத்துக் கொள்வ தால், உள்ளே இருக்கின்ற பெண்களுக்கு பாதுகாப்பாக இருக்கட்டும் என்று சொல்லி தாத்தாதான் திண்ணையைச் சுற்றி சுவர் எழுப்பி கம்பி கதவு போட்டுவிட்டார்.

இப்போது ரேழிக்கம்பிகளைத் தாண்டிதான் திண்ணை யைப் பார்க்க முடியும். திண்ணை கொஞ்சம் இருட்டா யிற்று. அதனாலென்ன மின்சார வெளிச்சம் இருக்கிறதே என்று சொல்லிவிட்டார்கள்.

தாத்தா திண்ணையில் உட்கார்ந்தபடி தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''என்னடா உங்க பசங்கதான் தகராறு பண்றாங்க போலிருக்கு'' என்று சிரித்த குரலில் விசாரித்தார்.

''ஆமாம் தாத்தா. எங்க க்ளாஸ் பையன்தான் நட ராஜன்.''

''நீ ஒன்னும் மாட்டலையே.''

''இல்லை தாத்தா. நான் அந்த வம்புக்கே போக மாட்டேன்.''

''அந்த பொண்ணு யாரு.''

''அதுவும் எங்க பள்ளிக்கூடத்துல படிக்கறதுதான்.''

தாத்தா கேட்க பேரன் விவரித்தான். பேரன் குதூகலமாக அந்தப் பெண் விவகாரத்தைச் சொல்வதைக் கண்டு தாத்தா மெல்லப் புன்னகை செய்தார்.

''மல்லாட்டைப் பயிரை வறுத்து மேஜையில வச்சா தின்னாத இருக்க முடியுமா? ஒன்னு ரெண்டு, ஒன்னு ரெண்டுன்னு மொத்தமும் தின்னு தீர்த்துப்புடுவோம். இன்னும் ஒரு மாசத்திற்கு அந்த பொண்ணு மல்லாட்டைப் பயிர்தான் போ...''

''நான் ஒன்னும் வம்பு பேசறதில்லை தாத்தா.''

அவன் சட்டென்று சுதாரித்துக்கொள்ள தாத்தா வாய் விட்டுச் சிரித்தார்.

''நீ பேசறபோதே தெரியுதே. இதைப்பத்தி எவ்வளோ யோசனை பண்ணியிருக்கேன்னு, பக்கத்திலே இருந்து பார்த்தாற்போல இல்ல சொல்ற.''

''அதை நான் சொல்லலை தாத்தா, எனக்கு சொன்னாங்க.''

''அவன் ஜாக்கெட் வரைக்கும் சொல்லிட்டான். நீ அடுத்த உடுப்புக்கு போவ. அவ்ளோதான்டா. மேலே மேலே போயி ஆறு பேரு ஒரு பொண்ணுன்னு முடியும். கொஞ்சம் யோசனை பண்ணிப்பாரு கண்ணு.''

அவனை உற்றுப் பார்த்த தாத்தா அமைதியாக இருந்தார். அவன் தாத்தாவையே ஆடாமல் அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''அது உங்க அக்காளா இருந்தா இவ்ளோ பேசுவோமா? நம்ம வீட்டுப் பொண்ணா இருந்தா, இத்தனை விவரமா விஷயம் சொல்லுவோமா? ஏதோ தப்பு நடந்து போச்சு. விடுங்க அப்படீன்னுதானே சொல்வோம். அப்படி இதைச் சொல்ல முடியாதா? மனசு அலையுது. நொறுக்குத் தீனிக்கு அலையுது. எதுனா அசைச்சுக்கிட்டே இருக்கணும் வாயை,

அது மாதிரி மனசை. மனசு சும்மா இருக்க முடியாம, அது அசைஞ்சுகிட்டே இருக்கும். இவ இவன் கூட ஓடினாள். அவ அவன்கூட ஓடினாள். இங்கே இவன் திருடினான். அங்கே அவன் பொய் சொன்னான். ஏதாவது மனசு வேர்க்கடலையைத் தின்னுகிட்டே இருக்கும். சும்மா இருக்க கத்துக்கோ. தப்போ ரைட்டோ நல்லவளோ கெட்டவளோ பொம்பளை சிக்கி சீரழிஞ்சது ரொம்ப கஷ்டம். அது அடிவாங்கி அழிஞ்சது நமக்குப் பாவம். நம்மால அது நடந்தது. நம்ம வீட்டுப் பொண்ணுங்க நிமிரமுடியாது. எதுவேணா பண்ணலாம் மனோகரா. பொம்பள பாவத்தக் கொட்டிகாத. பொம்பள அழ விடாத, நல்ல பொம்பளயாயிருந்து அழுத துன்னு வச்சுக்கோ நாலு நாள் தீச்சுடும்.

எனக்கு உலகத்துல பயம். குடி இல்லை, சூது இல்லை, காசுக்கு விக்கிற பொம்பளயோட படுக்கறது இல்ல. நல்ல பொம்பளயை தப்பா ஒரு வார்த்தை சொல்லிடக் கூடாதுன்னு நான் ரொம்ப இறுக்கமாய் இருப்பேன். அதுகளோட பேசமாட்டேன். அதுங்களப்பத்தி பேசமாட்டேன். அவங்க அழுகை ஆசிட் மாதிரி.''

வேணி நல்லவளா? கெட்டவளா? தொடர்ந்து சிந்தித்து மனோகரன் தடுமாறினான்.

தாத்தா சொன்னது அவனுக்குள் ஆழமாகப் பதிந்தது.

''வேண்டாம் நல்லவளாக இருக்கட்டும். கெட்டவளாக இருக்கட்டும். அவளைப் பற்றிப் பேசவேண்டாம்.''

சட்டென்று மனதை இறுக்கிக் கொண்டான். அந்த தெருமுனையில் இரண்டு இளைஞர்கள் பேசிய பேச்சுக்கள் அவனுள் மறுபடியும் காமம் கிளர்ந்து எழ அவன் அதை வெட்டித் தீர்த்தான். போ... போ... என்று விரட்டினான்.

அவங்க பார்க்கவே இல்லை. அவங்க பார்த்திருக்க மாட்டாங்க. அவங்க பார்க்கறதுக்குப் பயம். பார்த்தா

இத்தனை பேச மாட்டான். பார்க்காததுனாலதான் இவளோ பேசறாங்க.

வாசலில் பெரிய சத்தம் கேட்டது. பெண்குரல் அலறுவது போல் முதலில் இருந்தது. பிறகு பல பெண்குரல்கள் அலறும் சத்தம் கேட்டது. எகிறி குதித்து ரேழிக்கதவைத் திறந்து மனோகரன் வாசலுக்கு ஓடினாள். எதிர்ப்பக்கம் நான்கு வீடுகள் தள்ளி அந்த வேணியின் வீட்டிலிருந்து அழுகுரல்கள் வந்தன. வேணியின் குரல் இருந்தது. வேணியின் தாய்க்குரல் கேட்டது. யாரோ ஆண்கள் பெண்களைக் காட்டுத்தன மாகத் தாக்கிக் கொண்டிருந்தார்கள் என்பதாக அந்த அலறல் சத்தம் தெரிவித்தது. உள்ளேபோய் தடுப்பதா வேண்டாமா.

அவன் தடுமாறினான். வீட்டிற்கு அருகே ஓடினான். பிறகு விலகி ஓடிவந்தான். திரும்ப ரேழியில் நின்று திரும்ப தாத்தாவைப் பார்த்தான். ஆனால் தாத்தா அசையாமல் திண்ணையில் காலைத் தொங்க போட்டபடி தலையைக் கவிழ்த்தபடி உட்கார்ந்திருந்தார்.

என்னது இவ்வளவு பெரிய ரகளை கேட்கிறது. தெரு முழுக்கவும் வாசலில் குவிந்து நின்று அந்த வீட்டை வேடிக்கை பார்க்கின்றது. ஆனால் தாத்தா அசையாது உட் கார்ந்திருப்பது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

எப்படி இவரால் முடிகிறது என்ற எண்ணம் வந்தது. அவர் உட்கார்ந்த இருப்பை அவன் மறுபடியும் மனதில் தேக்கிக் கொண்டான். மெல்ல உள்ளே வந்து தாத்தாவுக்கு அருகே உட்கார்ந்து கொண்டான்.

தாத்தா அவனை நிமிர்ந்து பார்த்தார்.

"போ போய் என்ன நடக்குதுன்னு பாரு."

"நீ ஏன் தாத்தா பார்க்கலை."

"என்ன நடக்கும்னு தெரியும். அதனால பார்க்கலை. உனக்குத் தெரியாது போய் பாரு. பக்கத்துல போய் நின்னு என்ன நடக்குதுன்னு பாரு. உள்ளுக்குள்ள புகுந்துடாத."

"ஏன் தாத்தாபோய் பக்கத்துல பார்க்கணும்."

அப்போதான் அது என்னான்னு தெரியும். அங்கிருந்த படியே அதுக்குள்ள மாட்டாத. அதைப் பார்த்துட்டுத் திரும்பி வந்துடு."

"உள்ளுக்குள்ள மாட்டாதன்னா"

"எதுனா கலாட்டா நடக்கும். கலாட்டாவுக்கு பக்கத்துல நிக்கணும். மாட்டக்கூடாது."

அவன் அவரையே வினோதமாகப் பார்த்துக் கொண் டிருக்க, "போ போய்ப் பாரு" என்று மறுபடியும் கட்டளை யிட்டார்.

அவன் இப்போது நிதானமாக இறங்கினான். முன்பு துள்ளிக் குதித்து இறங்கியதற்கும், வேகமாய் ரேழிதாண்டி வாசலுக்கு ஓடியதற்கும், முன்னும் பின்னும் அலைந்த தற்கும் இப்போதைக்கும் மிகப் பெரிய வித்தியாசமிருந்தது. வாசற்கதவை மெல்ல சார்த்திக் கொண்டு நடந்தான். எதிர்ப்பக்கம் ஒரு ஓரமாக ஒரு வீட்டின் வாசலாக நின்று கொண்டான். உள்ளிருந்து இரண்டு பெண்கள் அலறியபடி ஓடி வந்தார்கள். அவர்களைத் துரத்திக் கொண்டு கையில் கழியோடு ஒரு மத்திமவயது ஆள் வந்தார்.

உற்றுப் பார்க்கையில் அது வேணியின் அப்பா என்று தெரிந்துவிட்டது.

வேணியையும், வேணியின் அம்மாவையும் அவர் அப்படி எகிறி எகிறி அடித்துக் கொண்டிருந்தார். வேறு யாரோ ஆண்கள் உள்ளே வந்து அவரைத் தடுத்து விலக்க, அவருக்கும் அடி விழுந்தது. அடி விழுந்தவர் சீற்றமானார். வேணியின் தந்தையை வேகமாகத் தாக்கத் துவங்கினார்.

அந்த தெருவின் வலது பக்கத்திலிருந்து சைக்கிளிலும், மோட்டார் சைக்கிளிலும் ஆட்கள் வந்து இறங்கினார்கள். கும்பலாக வேணியின் வீட்டருகே வண்டிகளை நிறுத்தி வேட்டியை மடித்துக் கொண்டு வேணியின் தந்தையை நெருங்கினார்கள்.

"என் வீட்டுப் பையனை அடிச்சியாமே என்ன யார் நீ அடிக்கறதுக்கு" என்று கேட்டார்கள்.

வேணியின் அப்பா உரத்த குரலில் கெட்ட வார்த்தைகளில் நடராஜனைப் பற்றி சட்டென்று உன் ஜாதி புத்தியைக் காண்பிச்சிட்டியா என்று கேட்டது ஒலித்தது. அதற்கு அந்த வீடு வேகமாக எதிரொலித்தது.

அடிபட்ட பெண்பிள்ளையும் அடித்த தன் கணவனுக்காக பரிந்து எகிறி கை ஆட்டிப் பேச, ஸ்கூட்டரில் வந்த இறங்கிய ஒரு நபர் அவனைப் பிடித்துத் தள்ளினார். புடவை தடுக்கி அந்தப் பெண்மணி கீழேவிழ வேறு யாரோ அவளை எட்டி உதைக்க, இன்னும் மோசமாக ஜாதி விஷயங்களை இழுத்தாள். பெண்களும் அவள் பேச்சை பின் தொடர்ந்தார்கள். வந்தவர்கள் அதற்காக வெறியாக கோபப்பட்டார்கள்.

அந்த வீட்டுப் பெண்களின், அந்த ஜாதிப் பெண்களின் கற்புபற்றி வேகமாக வார்த்தைகள் இறைத்தார்கள்.

மனோகரனுக்கு அந்தச் சண்டையைப் பார்க்கப் பார்க்க உள்ளே நடுங்கிற்று. அந்த வீட்டு வராண்டா கம்பிகளைப் பிடித்துக் கொண்டான். நெருங்கிப்போய் யாரையேனும் அடித்து வீழ்த்தலாமா என்று பல் கடித்தான்.

ஆனால் யாரை வீழ்த்துவது. யார் சரி, யார் தவறு அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

வெளியிலிருந்து வந்தவர்கள் வீட்டில் இருந்தவர்களைக் கடுமையாகத் தாக்க ஆரம்பித்தார்கள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து அதைத் தடுக்க முயற்சித்

தார்கள். அவர்களும் அடிபட்டார்கள். மனோகரன் நெற்றி புடைக்க கத்தினான். பல் கடித்தான். ஓடிப்போய் யாரை யாவது குத்திக் கொன்றுவிடலாமா என்று பரபரத்தான்.

எதனாலேயோ தாத்தாவின் முகம் ஞாபகம் வர, அவன் அமைதியாக தான் அந்த இடத்தைவிட்டு நகரக்கூடாது என்பது போல கம்பிகளை இறுக்கப் பிடித்துக் கொண்டு வேடிக்கை பார்த்தான்.

கூச்சல் இன்னும் அதிகமாகியது. அடுத்த தெருக்களிலிருந்து ஆட்கள் வந்தார்கள்.

அந்த வீதிகளில் இருந்த வேணியின் ஜாதி மனிதர்கள் உருளைக் கட்டையுடனும், கத்தியோடும், வேறுசில ஆயுதங்களோடும் இறங்கினார்கள். வந்தவர்களுடைய வாகனங்களை அடித்தார்கள். அவர்களைத் தாக்கினார்கள். வந்தவர்கள் வாகனங்களை எடுத்துக் கொண்டு ஓட, அவர்களைத் துரத்தித் துரத்தி அடித்து நொறுக்கினார்கள். தரையில் விழுந்த ஒருவனை முரட்டுத்தனமாகத் தாக்கினார்கள். இப்பொழுது வெளியிலிருந்து மறுபடியும் வேணிக்கு எதிரான நடராஜன் ஜாதி ஆட்கள் கும்பலாக உள்ளே நுழைந்தார்கள்.

அந்த தெருவிலுள்ள பலபேர் கதவுகளைச் சார்த்திக் கொண்டு கம்பிகளின் ஊடே நடப்பதை வேடிக்கை பார்க்கத் துவங்கினார்கள்.

அவன் தெருவில் நின்றபடி கம்பிகளைப் பிடித்தபடி வேடிக்கை பார்த்தான். கதவு திறந்து தாத்தா எட்டிப் பார்ப்பதும் மெல்ல அவனை நோக்கி நடந்து வருவதும் அவனுக்கு அருகே நிற்பதும் அவனுக்கு கனவு போல் தெரிந்தது. அவன் இடதும் வலதுமாக மற்றவர்களைப் பார்த்துக் கொண்டே தாத்தாவின் தோளைப் பிடித்துக் கொண்டான்.

"நான் பார்த்துக்கறேன். தாத்தா நான் பார்த்துக்கறேன்" என்று எந்தச் சம்மந்தமும் இல்லாமல் கூச்சலிட்டான்.

"யாரை யார் பார்த்துக்கறது. சண்டை பெருசாயிடும் போல இருக்கு. வீட்டுக்கு வந்து வேடிக்கை பார்க்கலாம் வா."

அது என்ன தந்திரம் என்று தெரியவில்லை. தாத்தாவிற்கு எப்படித் தெரிந்தது என்று தெரியவில்லை.

அவர்கள் வீட்டில் நுழைந்து தாழ்போட்ட அடுத்த வினாடியில் இருபதுபேர் கட்டைகளோடும், இரும்புக் கம்பி களோடும் சைக்கிள் செயின்களோடும் உள்ளே நுழைந் தார்கள். அந்தத் தெருவில் நடந்து கொண்டிருந்த, நின்று கொண்டிருந்த எல்லோரையும் தாக்க ஆரம்பித்தார்கள்.

வேணி ஜாதியின் மனிதர்கள் இருந்த வீட்டுக் கதவை அடித்து உடைத்தார்கள். உள்ளுக்குள் போன யாரையோ இழுத்து வந்து அடித்தார்கள். கதறிக் கொண்டு தடுக்கவந்த பெண்ணை தலைமயிரைப் பிடித்துக் கொண்டு அறைந்தார்கள்.

வேணியின் வீட்டிற்குள் இருபது இருபத்தைந்து பேர் புகுந்தார்கள். பெரிய அலறலாக சாமான்கள் உடைபடுவது மாகக் கேட்டன.

மனோகரன் வீட்டுக்கதவை யாரோ ஒருவன் எட்டி உதைத்து அரிவாளால் வெட்ட அவன் தாத்தா முன்னுக்குப் போய் என்ன வேணும் என்று கேட்டார்.

அவங்க நம்ம ஜாதிடா என்று யாரோ ஒருவன் தடுக்க, இவரு நம்ம ஜாதி இல்லை என்று இன்னொருவன் சொல்ல, அவங்க ஜாதியா என்று கேட்க அவர்கள் இல்லை என்று அவர்களாகவே பதில் சொல்ல, தாத்தா வெறுமே அவர் களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"பெருசு உள்ளபோயிடு வெட்டிருவோம்."

"நான் உள்ளப் போயிடறேன். பேப்பர்ல ஊர் நாறப் போகுது. யார் தடுக்க முடியும். மாசத்துக்கு ஒருதடவை அடிச்சுக்கறானுங்கடா அப்படின்னு தமிழ்நாட்டு ஜனமே தலையில அடிச்சுக்குது. போய் வெட்டு வேற யாரையாவது வெட்டு."

"ஏய்."

அவன் சீறி அரிவாளால் கதவைக் குத்தினான்.

வீடு அதிர்ந்தது.

தாத்தா அவனை ஊடுருவிப் பார்த்தார்.

"எல்லாரும் தப்பிச்சுக்கப் போறான். நீ மாட்டுவ போ."

அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்.

மனோகரன் பிரமிப்போடு தாத்தாவைப் பார்த்துக் கொண்டிருந்தான். வந்தவனுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அவன் அரிவாளை வெறுமே தொங்கலாய்ப் பிடித்தபடி அந்தத் தெருமுழுவதும் கத்திக்கொண்டு நடந்து போனான். அவன் உள்ளுக்குள் பயந்துவிட்டான். வெறுமே கத்திக் கொண்டிருக்கிறான் என்பது மனோகரனுக்குப் புரிந்தது. அவனைப் பற்றி கேலியான சிரிப்பு ஓடியது. ஆனால் தாத்தா சிரிக்கவில்லை. மிகக் கவலையாக அந்த எதிர்வீட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

முட்டாப்பசங்க அல்ப விஷயத்துக்காக அடிச்சுக்கறாங்க. அந்த வீட்டுப் பொம்பளைங்க நிமிர பத்துவருஷம் ஆகும். இவனுங்க ஒரு மணிநேரம் ரகளை பண்ணிட்டுப் போயிடு வாங்க. அந்தப் பொம்பளைக்கு பத்துவருஷம் ஆகும்."

திரும்பத் திரும்ப தாத்தா அதைச் சொல்லிக் கொண் டிருந்தார்.

அவன் என்ன சொல்கிறார் என்று மனோகரனுக்குப் புரியவில்லை. பத்து நிமிடத்தில் சண்டையின் உக்கிரம்

தணிந்துவிட்டது. அரைமணியில் அடங்கிவிட்டது. ஒரு மணிக்குப் பிறகு போலீஸ் பட்டாளம் உள்ளே வந்தது.

போலீஸ் உள்ளே வருவதைப் பார்த்தவுடன் தாத்தா மெல்ல துண்டை எடுத்துக் கொண்டு திண்ணையிலிருந்து இறங்கி வீட்டிற்குள் போனார்.

''ஏன் தாத்தா போலீஸ்தான் வந்துடுச்சே.''

''அவனுக்கு இவன்மேல் கோவம். இவனுக்கு அவன் மேல் கோவம். அடிச்ச தீர்த்துக்கறாங்க போலீஸ் என்ன தீர்க்கும். வெறுமனே துட்டு பார்க்கும். இந்த இடத்துல நாம ஏன் இருக்கணும் வா.''

''இல்ல தாத்தா நின்னு என்னன்னு பார்க்கலாமே.''

''உன்னையும் கேஸ்ல சேர்ப்பான். துட்டு கொடு விட்டுடறேன் அப்படின்னுவான். திமிர் பிடிச்சவனோட ஸ்நேகிதம் வச்சுக்கலாம். திருடனோட ஸ்நேகிதம் வச்சுக்க முடியாது. இங்க இருந்தா மாட்டுவோம் வந்திடு.''

தாத்தா சொன்னதுபோலவே ஆயிற்று.

''வாழ்க்கையின் அனுபவத்தைக் கரைத்து சாறாக்கிப் பருகித் தெளிந்தவர் என்று தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.

போலீஸ் வந்துவிட்டது என்று எட்டிபார்த்த பலபேரை அவர்கள் கைது செய்து விட்டார்கள்.

நூறு நூறுபேராய் அடித்துக் கொண்டதாக தகவல் வந்திருக்கிறது என்பதால், நாற்பது பேரையாவது கைது செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்கள். நாலுபேரைக் கைது செய்தால் கெட்டபெயர் என்று தங்களைக் காப்பாற்றிக்கொள்ள தேவையற்றவர்களை எல்லாம் வண்டியில் ஏற்றினார்கள்.

''எனக்குத் தெரியாதுங்க. எனக்குத் தெரியாது.''

எதிர்வீட்டில் இந்தச் சண்டையோடு சம்மந்தமில்லாதவர்கள் அலறுவதும், அவர் பெண்மணிகள் அழுவதும் காதில் கேட்டன. மாடி ஜன்னலிலிருந்து ஒளிந்து கேட்டபோது புரிந்தது.

வீட்டு வாசலை போலீஸ்காரன் தட்டியபோது, அம்மாவையும், பாட்டியையும் அனுப்பினார். இரண்டுபேரும் நின்று எங்களுக்கு எதுன்னு தெரியாதுங்க. சத்தம் கேட்டவுடனே உள்ளுக்குள்ள வந்து கதவைச் சாத்திட்டோம். நீங்க வந்தபிறகுதான் திறக்கறோம். எங்களையெல்லாம் கூப்பிடாதீங்க'' என்று காரசாரமாகச் சொல்லிவிட்டார்கள்.

''வீட்ல யாரு ஆம்பளை''

''யாரும் கிடையாது. நாங்கதான் கதவைப் பூட்டிக்கிட்டு இருக்கறோம்.''

''எதுனா சொல்ல விரும்பறீங்களா.''

''என்னத்த சொல்றது. நாங்க ஒன்னும் சொல்லலை'' என்று மட்டும் பேசிவிட்டுத் திரும்பிவிட்டார்கள்.

அவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியாது விட்டுவிட்டார்கள்.

மத்திம வயதுக்காரர்கள் மட்டுமல்லாமல் வாலிபர்களையும் போலீஸ் விலங்கு போட்டுக் கொண்டு இழுத்துப் போயிற்று. பல பெண்களும் வேனில் ஏற்றப்பட்டார்கள். அடுத்த ஒரு மணிநேரம் முதலில் நடந்த சண்டையைவிட மிகப்பெரிய ரகளையும், கூச்சலும் குழப்பமும் இருந்தன. பல்வேறு அதிகாரிகள் வரும்போதும் போலீஸ்காரர்கள் அதிகம் ஆடினார்கள்.

போலீஸ்காரர்கள் போனபிறகுதான் தெரிந்தது. வேணியின் அம்மாவை கூட்டம் புடவையை அவிழ்த்து அசிங்கப் படுத்திவிட்டது.

இப்படி எல்லாரும் நாலுபேரா சேர்ந்து அடிக்கறீங்களே. நீங்களெல்லாம் ஆம்பளைதானா. நீங்களெல்லாம் ஆம்பளைதானா என்று அவள் உரத்துக் கேட்டதாகவும், ஆம்பளைதான் என்று அவர்கள் நிரூபித்ததாகவும் சொல்லப் பட்டது.

தாத்தா முகம் பொத்திக் கொண்டார். மனோகரன் வெளியே ஓடினான். அந்த வீட்டின் எதிரேயுள்ள பையன் களிடம் போய் நின்றான்.

"என்னடா... ரொம்ப தப்பாகிப் போச்சு போலிருக்கு." வாசலில் நின்று விசாரித்தான்.

"போலீஸ்காரங்க வராங்க. போலீஸ்காரங்க வராங்க" யாரோ தெருவில் பதறியடித்துக் கொண்டு ஓடிவந்தார்கள்.

வீட்டிற்கு ஓட முற்படுகையில் போலீஸ்வேன் எதிரே வருவது தெரிந்தது.

சட்டென்று அந்த நண்பனின் வீட்டிற்குள் நுழைந்து விட்டான். கொல்லைப்புறம் ஓடினான். கொல்லைச்சுவரில் கால்வைத்து ஏறி அடுத்த வீட்டில் இறங்கி அதற்கும் அடுத்த வீட்டிற்கு இறங்கி மறுபடியும் இன்னொருவீட்டில் இறங்கி சுவரோரம் ஓடிப்போய் தன் வீட்டுக் கொல்லையில் குதித்தான். வீட்டிற்குள் ஓடிவந்தான்.

அவன் வருவதற்குள் தாத்தா பதறிப்போனார். போலீஸ் காரர்கள் உள்ளே நுழைந்தது பற்றிக் கவலைப்படாமல் கதவு திறந்து வாசலில் இறங்கினார்.

அம்மாவும், பாட்டியும் கத்திக் கொண்டிருந்தார்கள்.

தாத்தா அவன் எந்த வீடு நோக்கிப் போனானோ, அந்த வீடுநோக்கி குடுகுடுவென்று நடக்க, அவன் பின்னால் வந்து அம்மாவைத் துரத்தினான். அம்மா ஓடிப்போய் தாத்தாவைப் பிடித்து நிறுத்தினாள். அவன் வந்துவிட்டான் என்று சொன்னாள்.

தாத்தா நிதானமாக வீடு திரும்பினார். உள்ளே நுழைந் தார். கதவு சாத்தப்பட்டது. மனோகரன் ஒளிந்து கொண் டான்.

தாத்தா போலீஸ்காரரிடம் தனக்குக் கண்பார்வை சரியாக இல்லையென்றும் சத்தம் கேட்டு வந்ததாகவும் சொன்னார். போலீஸ்காரர் அவரை உற்றுப் பார்த்துவிட்டுப் போய் விட்டார்.

மேலும் பல கைதுகள் நடந்தன. அவனோடு பேசிக் கொண்டிருந்த பையனைத் தரதரவென்று தலையில் அடித்து இழுத்துக் கொண்டு போனார்கள். போலீஸ் போனதும் ஊர் உள்ளே நுழைந்தது.

என்னங்க என்ன இப்படி அநியாயம் பண்றீங்க, இந்த தெருவுல இருக்கற யாருக்கும் அறிவே கிடையாதா. சோறுதான் தின்றீங்களா இல்ல வேற ஏதாவது தின்றீங்களா? உங்களால் இந்த ஊருக்கே கெட்ட பேருப்பா."

"என்ன ஜாதி, பெரிய ஜாதி அடிச்சுக்கறதா இருந்தா எங்கயாவது தோப்புதொரவுல போய் அடிச்சுக்கோங்க."

"ஊரார் கும்பல் கும்பலாக வந்து கூச்சல்போட்டு விட்டுப் போனார்கள்.

தாத்தா வாசலில் சாய்வு நாற்காலி போட்டு உட்கார்ந்து கொண்டார். பெரிய மனிதர்கள் அவரைக் கடந்து போகும் போது வணக்கம் சொன்னார்கள்.

"என்னங்க இது நீங்க இங்க இருக்கீங்களே கேட்கக் கூடாதா?" என்று மரியாதை நிமித்தமாகப் பேசினர்.

"தாத்தா மௌனமாகப் பதில் சொல்லாது இருந்தார். மறுபடியும் வேறு யாரோ அவரைக் கேள்வி கேட்டார்கள்."

"சொத்துத் தகராறா இருந்தா உள்ள போய் தீர்வு சொல்லலாம். ஆம்பளை பொம்பளை சண்டையா இருந்தா சமாதானம் செய்து வைக்கலாம். கௌரவப் பிரச்சனையா

இருந்தாக்கூட ரெண்டு பேருக்கும் பொதுவா நீதி வழங்கலாம். ஜாதிப் பிரச்சினைக்குள்ள நுழையவே முடியாதுங்க. ஏன் சொல்லுங்க''

போலீஸ்காரங்க ஆர்வமாக அவர் பேசுவதைக் கேட்டார்கள்.

''தெரியலைங்களே''

ஒரு இளமையான எஸ்.ஐ கண்ணில் மரியாதை தும்ப தாத்தாவைப் பார்த்தான்.

''கடைசிமட்டும் அவர் ஜாதிதான் உயர்ந்த ஜாதின்னு அவர் பேசுவாரு. இவர் ஜாதிதான் உயர்ந்ததுன்னு இவரு பேசுவாரு. நான் எப்படி சமாதானம் பண்ணி வைக்க முடியும்.''

''நீங்க என்ன ஜாதி'' என்று எஸ்.ஐ. யைக் கேட்டார்.

அவர் தன் ஜாதியைச் சொன்னார்.

''உங்கஜாதி என் ஜாதியைவிட மட்டம் அப்படின்னு சொல்லட்டுமா. ஒத்துப்பீங்களா? கோபம் வருது இல்ல. அதுதான் பிரிஞ்சு பிரிஞ்சு அடிச்சுக்கறதே நமக்குப் பெரிய பொழுதுபோக்கு. ஒத்துமையா இருக்கறதுக்கு நமக்கு தெரியாது. இந்த ஜாதிக்காரன் வளர்ந்துட்டான். அந்த ஜாதிக்காரன் ஒழிஞ்சுட்டான். இந்த ஜாதியிலயே வடக்குத் தெரு. தெற்குத்தெருன்னு பிரிச்சுப்பாங்க. அடிச்சுப்பாங்க. நமக்கு அடிச்சுக்கறதுக்கு ஏதாவது ரீஸன் வேணும். ஜாதி நல்ல காரணம்'' கிட்டத்தட்ட போலீஸ்காரர்கள் கைதட்டினார்கள்.

வாரப்பத்திரிகை நிருபர் போலீஸ்காரர் கொடுத்த தகவலை வைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து கதவு தட்டி தாத்தாவை போட்டோ எடுத்து ஜாதி ஒழிய என்ன செய்ய வேண்டும் என்று கேள்வி கேட்டார்கள்.

தாத்தா மௌனமாக இருந்தார். எல்லோரும் அவர் பதிலுக்குக் காத்திருந்தார்கள்.

''இடதுகை, வலதுகை, இடதுகால், வலதுகால், இந்தக் கண், அந்தக்கண், மேல், கீழ், வெயில், நிழல், குளிர்காத்து, புழுக்கம், நீர், நெருப்பு இந்த உலகம் இரண்டானது. இரண்டாக இருப்பதற்காகவே பிறந்தது. ஒற்றுமையாய், ஒன்றாய் ஏகமாய் இந்த உலகத்தால் இயலாது. எனவே பிரிந்திருப்பதும், இரண்டாக இருப்பதுமே இந்த உலகத்தின் இயல்பு. ஜாதிகள் அழியாது. அழிக்கவே முடியாது. ஜாதியில்லாவிட்டால் நிறம். நிறம் இல்லாவிட்டால் மொழி. மொழியில்லாவிட்டால் மாகாணம் என்று, ஏதாவது சொல்லிச் சொல்லி பிரிந்து கொண்டுதான் இருப்போம். சவுக்கு நுனியில் இதை மௌனமாக வைக்கலாம். அப்படி வைத்த ஒரு கூட்டம் ஒன்று உண்டு. அதற்கு சோவியத் ரஷ்யா என்று பெயர். அது வெகுவேகமாகச் சிதறி சின்னா பின்னமாகப் போயிற்று. இன்னமும் அது பல துண்டுகளாக உடையும். ஏகமாய் எல்லாம் ஒன்று என்று நினைப்பவர்களுக்கு ஜாதி இருக்காது. அவர்களுக்கு இந்த உலகத்தோடு சம்மந்தம் இருக்காது. எனவே ஜாதியை ஒழிக்க முடியாது. ஒழிக்கும்படியாகப் பேசலாம். இருக்க வேண்டும் என்றும், இருக்கக்கூடாது என்றும் மறுபடியும் இரண்டாக பிரிவார்களே தவிர எதுவும் உருப்படியாக வராது.''

அந்த ரிப்போர்ட்டர் காலில் விழுந்து நமஸ்காரம் செய்து விட்டுப் போனார்.

''அப்போ என்னதான் தீர்வு தாத்தா ரெண்டா பிரியும்னா என்னதான் தீர்வு.''

மனோகரன் ஆவலாகக் கேட்டான்.

''முட்டாள் நான் சொன்ன பதில்லயே தீர்வு இருக்கேடா.''

"என்ன"

"இடதுகை வலதுகையோட சண்டைபோட முடியுமா. இடதுகண் வலதுகண்ணோட சண்டை போட முடியுமா. இடதுகால், வலதுகாலை எட்டி உதைக்க முடியுமா. உதைச்சா என்ன ஆகும். ரெண்டாத்தான் இருக்கும். ரெண்டாயிருந்தாலும் ஒத்துமையா இருக்கணும். ஒத்துமையா இருக்க முயற்சி பண்ணணும். இப்படி சண்டை வந்தாதான் ஒத்துமையா இருக்க முயற்சி பண்ணுவாங்க. சண்டை வரதும் நல்லதுதான்."

அன்று இரவு திண்ணையில் படுத்திருந்த தாத்தாவுக்கு அவன் கால் பிடித்துவிட்டான். தைலம் தடவினான்.

"சண்டை பார்த்தவுடனே பல்லு கடிச்சியா?"

"எந்த சண்டை."

"கார்த்தால சண்டையத்தான் சொல்றேன்"

"ஆமாம் தாத்தா"

"அடிச்சு உள்ள புகுந்து நாலுபேரைக் குத்திக்கொலை பண்ணணும்னு தோணுச்சா."

"ஆமாம் தாத்தா. வேணி அம்மாவைப் பிடிச்சு எவனோ அடிக்கறான். எனக்கு வெட்டிடணும்னு தோணுச்சு."

"வேணி அவங்கம்மா நீ ஆம்பளையாடான்னு கேட்டாங்களாமே. உள்ள நுழைஞ்சவன் அம்மாவ அசிங்கமா பேசினானாமே. எங்க நிலத்துல எரு அள்ளிப்போட்ட நாய் தான்டா நீ. அப்படின்னாளாமே. கூலி வேலை செய்ததைச் சுட்டிக்காட்டினாளாமே, குடிச்சுட்டு வந்தவன் அடிக்காத என்ன பண்ணுவான்."

"ஆமாம். அவங்க பேசினதும் தப்பாதான் இருந்தது."

"அப்போ நீ ஏன் பல்லை கடிச்ச"

"பொம்பளையை அடிக்கறாங்களேன்னு ஒரு கோபம் வந்தது."

"உலகத்துல எல்லாப் பொம்பளைங்களும் நல்லவங்கன்னு ஏதாவது சட்டம் இருக்கா."

"இல்லை தாத்தா"

"ஒரு சண்டையைப் பார்க்கும் போது அதைப் பார்த்து பல்லு கடிச்சின்னா, ஆத்திரப்பட்டின்னா அடுத்த நாளே நீ வேற சண்டையில இறங்கிடுவ. உள்ளுக்குள்ள ஒரு தடவை அந்தக் கோவம் எகிறி ரௌத்திரம் பரவுச்சின்னா எங்கேயாவது யார்கிட்டயாவது அந்தக் கோவம் பாய்ஞ்சிடும் அடிக்கத் தோணிடும்."

"நான் என்ன பண்ணனும் தாத்தா"

"ஒரு சண்டைய பார்க்கறபோது இது எவ்வளவு அசிங்கமா இருக்குன்னு பாரு. ஒரு பொம்பளை கேவலமா கத்தறது, அவன் அடிக்கறது. அவ அருவா எடுத்துட்டு வரது. அவன் தலைமயிரை பிடிச்சு முட்டறது. உடம்பு புடவைய இழுத்துடறது. அவ ஆம்பளையாடான்னு கேட்கறது. அவன் புடவையை இழுத்திடறது. பாவாடையும் கிழிஞ்ச ஜாக்கெட்டுமா அவ தெருவுக்கு வரது. இவங்க பத்துபேர் அவங்க பத்துபேர் பொத்துபொத்துனு அடிச்சுக்கறது. வீட்ல இருக்கற அத்தனை பொம்பளைங்களும் அழுவறது. ஒட்டுமொத்தமா போலீஸ் ஸ்டேஷன் போறது. யோசனை பண்ணிப்பாரு. இப்போ யோசனை பண்ணும் போது எப்படியிருக்கு."

"அசிங்கமாயிருக்கு."

"அதுல நீயும் ஒருத்தன்னு யோசனை பண்ணிப்பாரு."

"ரொம்பக் கேவலமா இருக்கு தாத்தா"

"மறுபடியும் உலகம் ரெண்டுவிதம் ஒன்னு பல்லுகடிச்சு கோவப்பட்டு நானும் ஜெயிலுக்குப் போறேன் அப்படின்றது. இன்னொன்னு இது அசிங்கம்னு நினைச்சு விலகி நிக்கறது.

எதுனா ஒரு வழியைத் தேர்ந்தெடுக்கற
வெட்டறதுல, ஜெயிலுக்குப் போறதுல எந்த லாபமும்
இல்லை. தப்பு பண்ணிட்டோம். தப்பு பண்ணிட்டோம்னு
அடுத்த நாள் உட்கார்ந்து வருத்தப்பட்டிகிட்டிருப்போம்.
கொஞ்சம் அமைதியாகி, இந்த அசிங்கத்துல நான் ஏன்
நிக்கணும் அப்படின்னா தப்பிச்சுக்கலாம்.

வந்து கூச்சல் போட்டவனை என்ன பண்றது.
அப்படின்னு கேள்வி வரும். அதிகார மமதையோட கூச்சல்
போட்டால் எவனாயிருந்தாலும் அடிவாங்கிச் சுருளாமல்
இருந்ததே இல்லை. யாரெல்லாம் அதிகாரமாகக் கூச்ச
லெடுத்துக் கத்துகிறார்களோ அவர்களை நோய் நிச்சயம்
தாக்கும். நோய்ப்பட்டு அந்த அதிகாரத்தை, அந்தக் கூச்ச
லைப் பிடுங்கி எறியும். அந்தக் கொதிப்பு உடம்புக்கு ஆகாது.
அவனை ஊர் தண்டிக்கலைன்னா என்ன? அவனை அவன்
உடம்பு தண்டிக்கும். நீ வெறும் குப்பை. புழு அப்படின்னு
அவன் உடம்பு அவனைச் சுட்டிக்காட்டும். அதுல வெட்டுப்
பட்டுச் சாவான். இல்லை நோய்பட்டு சாவான்.

ராத்திரி படுக்கப்போனாரு எழுந்திருக்கலை செத்துட்டா
ருன்னு எந்த அதிகார மமதையுள்ளவனுக்கும் நடந்ததே
இல்லை. பெரிய பெரிய மனுஷாளை யோசனை பண்ணிப்
பாரு. போலீஸ்காரனை, அரசியல்வாதியை, ரௌடியை,
பணக்காரனை யோசனைப் பண்ணிப்பாரு.

மகாகெட்டவன் நல்லபடியா செத்தான்னு உண்டா?
இல்லை, இருக்காது. எப்படியோ ஒரு துக்கம். இந்த அதிகார
மமதைக்காரனுக்கு வந்து நிக்கும். கலவரம் இருந்துகிட்டே
இருக்கும். இது வாழ்க்கை நியதி. இதுதான் இந்த உலகத்தின்
விதி.

ஒருநாளும் அடுத்தவங்க சண்டையைப் பார்த்து பல்லு
கடிக்காத. சினிமாவுல எல்லாம் அதான் நடக்குது. டி.வியில
சினிமா காட்டறான். பொங்கு பொங்குனு அடிக்கறதைப்

அடி
பத்தியா
ரோட்டுல
றது கூட ஒரு நியாயம். சினிமாவுல நட
பார்த்து பல்லு கடிக்கறது பைத்தியக்காரத்தன
பார்க்கணுமா. யோசனை பண்ணு. அவசியம்னா பாரு
தாத்தா நிதானமாகத் தொடர்ந்தார். பேச்சுக்கு நடுவே
அதிகம் இடைவெளிவிட்டார்.

''காதல் அல்லது காமம்... இதனால் தப்பு நடந்தா மன்னிச்
சுடலாம். அது ஒருவிதமான உடல் மன உபாதை. அதுல
தவறு நடக்கறது சகஜம். ஆனால் அடிதடி ரகளையில்
மாட்டிக்கிட்டு அசிங்கப்படறதும். அவமானப்படறதும்
மன்னிக்கத் தகுந்த விஷயமல்ல. அது தண்டிக்கத்தகுந்த
விஷயமல்ல. பொண்ணு கையப்பிடிச்சு இழுத்துட்டான்னா,
தம்பி இப்படிப் பண்ணாத, உங்க அக்கா கையைப் பிடிச்சு
இழுத்தா உனக்கு வலிக்காதா. உனக்குக் கஷ்டமா இருக்கா
தான்னு கேட்கலாம். ஆனா ரோட்டுல போறவங்க ரெண்டு
பேரை பளார் பளார் அறைஞ்சு தரையில உருட்டறான்னா,
அவனை நாலுபேர் சேர்ந்து மெறிச்சாதான் அடங்குவான்.
வன்முறை ரொம்பத் தப்பு. மனோகரா வன்முறைக்குத் தீர்வு
வன்முறைன்னுதான் வரும். இந்த வன்முறையைத் தீர்க்க
றேன்னு வந்து வன்முறை பண்றவன் இருக்கானே. அவனைத்
தீர்க்கறதுக்கு இன்னொரு வன்முறையாளன் வருவான்.
அவனைத் தீர்க்கறதுக்கு இன்னொரு வன்முறையாளன்
வருவான்.

ரௌடியை போலீஸ்காரன் அடிச்சான். போலீஸ்காரனை
விட்ருவாங்களா. போலீஸ்காரனை வேற எவனாவது அடிப்
பான். வன்முறைதான் வாழ்க்கை அப்படின்னு நினைக்கற

எதுனா ஒரு வழியைத் தேர்ந்தெடுக்கணும். பல்லை கடிச்சு வெட்டறதுல, ஜெயிலுக்குப் போறதுல எந்த லாபமும் இல்லை. தப்பு பண்ணிட்டோம். தப்பு பண்ணிட்டோம்னு அடுத்த நாள் உட்கார்ந்து வருத்தப்பட்டிகிட்டிருப்போம். கொஞ்சம் அமைதியாகி, இந்த அசிங்கத்துல நான் ஏன் நிக்கணும் அப்படின்னா தப்பிச்சுக்கலாம்.

வந்து கூச்சல் போட்டவனை என்ன பண்றது. அப்படின்னு கேள்வி வரும். அதிகார மமதையோட கூச்சல் போட்டால் எவனாயிருந்தாலும் அடிவாங்கிச் சுருளாமல் இருந்ததே இல்லை. யாரெல்லாம் அதிகாரமாகக் கூச்சலெடுத்துக் கத்துகிறார்களோ அவர்களை நோய் நிச்சயம் தாக்கும். நோய்ப்பட்டு அந்த அதிகாரத்தை, அந்தக் கூச்சலைப் பிடுங்கி எறியும். அந்தக் கொதிப்பு உடம்புக்கு ஆகாது. அவனை ஊர் தண்டிக்கலைன்னா என்ன? அவனை அவன் உடம்பு தண்டிக்கும். நீ வெறும் குப்பை. புழு அப்படின்னு அவன் உடம்பு அவனைச் சுட்டிக்காட்டும். அதுல வெட்டுப் பட்டுச் சாவான். இல்லை நோய்பட்டு சாவான்.

ராத்திரி படுக்கப்போனாரு எழுந்திருக்கலை செத்துட்டாருன்னு எந்த அதிகார மமதையுள்ளவனுக்கும் நடந்ததே இல்லை. பெரிய பெரிய மனுஷாளை யோசனை பண்ணிப் பாரு. போலீஸ்காரனை, அரசியல்வாதியை, ரௌடியை, பணக்காரனை யோசனைப் பண்ணிப்பாரு.

மகாகெட்டவன் நல்லபடியா செத்தான்னு உண்டா? இல்லை, இருக்காது. எப்படியோ ஒரு துக்கம். இந்த அதிகார மமதைக்காரனுக்கு வந்து நிக்கும். கலவரம் இருந்துகிட்டே இருக்கும். இது வாழ்க்கை நியதி. இதுதான் இந்த உலகத்தின் விதி.

ஒருநாளும் அடுத்தவங்க சண்டையைப் பார்த்து பல்லு கடிக்காத. சினிமாவுல எல்லாம் அதான் நடக்குது. டி.வியில சினிமா காட்டறான். பொங்கு பொங்குனு அடிக்கறதைப்

பார்த்துட்டு பலபேர் பல்லு கடிக்கறாங்க. உடம்பை முறுக்கறானுங்க வேஸ்ட்... சினிமாவுல நடிக்கற யாரும் அடிக்கறதுமில்லை. அடிவாங்கறதுமில்லை. உன்னைப் பைத்தியக்காரனா பண்றான்.

ரோட்டுல நடக்கற சண்டையைப் பார்த்து பல்லு கடிக்கறது கூட ஒரு நியாயம். சினிமாவுல நடக்கற சண்டையைப் பார்த்து பல்லு கடிக்கறது பைத்தியக்காரத்தனம். சினிமா பார்க்கணுமா. யோசனை பண்ணு. அவசியம்னா பாரு.

தாத்தா நிதானமாகத் தொடர்ந்தார். பேச்சுக்கு நடுவே அதிகம் இடைவெளிவிட்டார்.

"காதல் அல்லது காமம்... இதனால் தப்பு நடந்தா மன்னிச்சுடலாம். அது ஒருவிதமான உடல் மன உபாதை. அதுல தவறு நடக்கறது சகஜம். ஆனால் அடிதடி ரகளையில் மாட்டிக்கிட்டு அசிங்கப்படறதும். அவமானப்படறதும் மன்னிக்கத் தகுந்த விஷயமல்ல. அது தண்டிக்கத்தகுந்த விஷயமல்ல. பொண்ணு கையப்பிடிச்சு இழுத்துட்டான்னா, தம்பி இப்படிப் பண்ணாத. உங்க அக்கா கையைப் பிடிச்சு இழுத்தா உனக்கு வலிக்காதா. உனக்குக் கஷ்டமா இருக்கா தான்னு கேட்கலாம். ஆனா ரோட்டுல போறவங்க ரெண்டு பேரை பளார் பளார் அறைஞ்சு தரையில உருட்டறான்னா, அவனை நாலுபேர் சேர்ந்து மெறிச்சாதான் அடங்குவான். வன்முறை ரொம்பத் தப்பு. மனோகரா வன்முறைக்குத் தீர்வு வன்முறைன்னுதான் வரும். இந்த வன்முறையைத் தீர்க்க நேன்னு வந்து வன்முறை பண்றவன் இருக்காவே. அவனைத் தீர்க்கறதுக்கு இன்னொரு வன்முறையாளன் வருவான். அவனைத் தீர்க்கறதுக்கு இன்னொரு வன்முறையாளன் வருவான்.

ரௌடியை போலீஸ்காரன் அடிச்சான். போலீஸ்காரனை விட்ருவாங்களா. போலீஸ்காரனை வேற எவனாவது அடிப்பான். வன்முறைதான் வாழ்க்கை அப்படின்னு நினைக்கற

போலீஸ்காரன் நிம்மதியா தூங்கினதே இல்லை. வன்முறை தான் வாழ்க்கைன்னு நினைக்கற ரௌடி நிம்மதியா தூங்கினதேயில்லை.

பயம். இடைவிடாத பயம். கொலைநடுக்கம். தூங்கற போது தொப்புல ஒரு பல்லி விழுந்தாக்கூட எவனோ எதி குதிச்சுட்டான்னு துள்ளி எழுந்திருப்பாங்க. கத்தி அருவா னோட பதுங்கியிருக்கறதா தானா கற்பனை பண்ணிப் பாங்க.

வன்முறை பயமில்லாத தன்மைன்னு சொல்லப்படுதில்ல, வன்முறை மிகப் பெரிய பயம். பயத்தின் விளைவு. மனிதனுக்குப் பயம் இருக்கும் வரை வன்முறை இருக்கும். மனிதன் ஒட்டுமொத்தமாய் பூண்டோடு அழியும்வரை அவனுக்குள் பயம் இருக்கும். அவன் ஒட்டுமொத்தமாய் பூண்டோடு அழிய வன்முறை காரணமாக இருக்கும். அப்போ என்னதான் பண்றது."

தாத்தா மனோகரனைப் பார்த்துக் கேட்டார்.

மனோகரன் தாத்தாவே பதில் சொல்வார் என்று காத்திருந்தான்.

"வேடிக்கை பார்த்துகிட்டுதான் இருக்கணும். நாம மாட்டாத இருக்கணும். முடிஞ்சா சமாதானம் பண்ணணும். சமாதானம் பண்றது சண்டைய அதிகமாக்கும்னா சத்தம் போடாத போயிடணும். சண்டைபோட்டு சாவுன்னு சொல் விட்டுப் போயிடணும். ஏன்னா, இந்த உலகம் இப்படித்தான். வன்முறைதான் அதனுடைய இயல்பு.

சேற்றுக்கு நடுவுல செந்தாமரை, முட்களுக்கு நடுவே ரோஜாப்பூ, பாலைவனத்துக்கு நடுவில் நீரூற்று. சண்டைக் காரர்களுக்கு நடுவே சாதுக்கள். இந்த உலகம் சண்டையில் ஒரே முட்டா சாகவும் சாகாது. சண்டையில்லாது வாழவும் வாழாது. இதான் இந்த உலகத்தோட இயல்பு."

மனோகரனுக்கு வெகுநாள் தூக்கம் வரவில்லை. மறுபடி மறுபடி இந்த வார்த்தைகளையே அவன் நினைத்துக் கொண்டிருந்தான்.

தாத்தா சொன்னது எவ்வளவு நிஜம் என்பதை அவன் நேரடியாகப் புரிந்துகொண்டான்.

இந்தச் சண்டை காரணமாகவே அந்த ஊர் சபை கூடிற்று. சபையில் பல்வேறு விஷயங்கள் விவாதிக்கப்பட்டன.

தீர்க்க முடியாத பிரச்சினைகள் என்று நினைத்தவை வெகு எளிதாகத் தீர்ந்தன.

"வேற ஏதேதோ பேசறீங்களே, ஜாதி சண்டையைப் பேசுங்கப்பா" என்று ஒருவர் நினைவுபடுத்த, கூட்டம் மௌனமாக இருந்தது. யார் முதலில் சமாதானப் பேச்ச ஆரம்பிப்பது என்ற தயக்கம் இருந்தது.

தாத்தா தள்ளாடி எழுந்தார். கூட்டத்தின் நிலையை முற்றிலும் புரிந்து கொண்டவராய் சுற்றுமுற்றும் பார்த்தார்.

"யார் எழுந்து முதல்ல பேசறது அப்படின்னுதானே வெட்கப்படறீங்க. ரெண்டு பேரும் ஒரே நேரமா எழுந்து நில்லுங்க" என்று சொல்ல இரண்டு ஜாதிக்காரர்களும் ஒரே நேரத்தில் அவர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து எழுந்து நின்றார்கள். இரண்டு பேருக்குமே சமாதானமாகப் போக வேண்டும் என்ற ஆவலை, அந்தச் செய்கை உறுதிப் படுத்தியது. அதை வெளிப்படுத்திய தாத்தாவுக்கு ஊர் நன்றி சொல்லியது.

"நீ என் வீட்டுப் பொம்பளை மேல கைய வச்சதுனால தானே நான் உன்னை அடிக்கும்படியா ஆச்சு. இல்லைன்னா உன்னை அடிக்கணும்னு தலையெழுத்தா. எங்க வீட்டுப் பொட்டப் புள்ளைய உன் வீட்டு பையன் இழுத்துகிட்டு போயிட்டான். அதைக் கேட்டாக்க அசிங்கமா பேசற."

"என் புள்ளைதான் இழுத்துட்டு வந்தான் வாஸ்தவம். உன் பொண்ணுக்கு எங்க அறிவுபோச்சு."

"புஸ்தகம் படிக்கணும்னு மாந்தோப்புக்குக் கூப்பிட்டிருக்கான். இவளும் அப்பாவியா போயிருக்கா."

"பாடம் படிக்கறதுக்கு மாந்தோப்புக்கு அப்பாவியா போயிருக்கா. இந்த ஊர் நம்புமா இதை."

"இல்லைப்பா. பொம்பளைங்கள அவமானப்படுத்தாதீங்க. எத்தினி வயசானாலும் பொம்பளை அறியாதவதான். தப்பு செய்துட்டு முழிக்கறவதான்."

வேறொருவர் எழுந்து பேச, "நல்லாயிருக்குதே கதை. எல்லாம் சேர்ந்து பொம்பளைத் தலையில் மண்ணைப் போடறீங்களா."

நாலு பெண்கள் எழுந்து சத்தம் போட்டார்கள்.

"இவங்கல்லாம் அறிவுக் கொழுந்துங்க. நாமெல்லாம் அறிவு கெட்டவளுங்க. என்னா பேசறான் அவன்."

"இதோ பார் எங்க வீட்டு ஆம்பளையை அவன் இவன்னு சொன்ன கெட்ட கோபம் வந்துடும். இந்தப் பக்கத்திலிருந்தும் நான்கு பெண்கள் எழுந்தார்கள்."

"திரும்பி அடிச்சுக்கோங்க. நல்லா அடிச்சுக்கோங்க. நாலஞ்சுபேர் சாவறமாதிரி அடிச்சுக்கோங்க. அதான் நல்லது."

தாத்தா பொறுமலோடு பேசினார். ஒட்டுமொத்தமாய் கூட்டிட்டுப்போய் அறுவது எழுவது பேருக்கு ஆயுள் தண்டனை கொடுக்கணும். இந்த ஊர் நாறணும். இந்த ஊருக்குள்ளிருந்து மலைக்கோ, கோயிலுக்கோ எவனும் வரக்கூடாது. இந்த ஊர்ல பூ வியாபாரமோ, புண்ணாக்கு வியாபாரமோ, அரிசி வியாபாரமோ, மல்லாட்டை பயிரோ எதுவும் விக்கக்கூடாது. எதுவும் வாங்கக்கூடாது. ஐயோ இங்கப்போனா ரௌடிங்க இருப்பானுங்க வெட்டி

சாய்ச்சுடுவாங்கன்னு விலகி விலகிப் போகணும். இந்த ஊர் மார்க்கெட்டெல்லாம் வேற ஊருக்குப் போயிடணும். இந்த ஊர் மண்டியெல்லாம் வேற ஊருக்குப் போயிடணும். இந்த ஊர் மட்டும் சுடுகாடா இருக்கணும்."

தாத்தா உரத்துக் கத்த கூட்டம் அமைதியாயிற்று.

"அடிப்படையான விஷயம் பொருளாதாரம். இந்தப் பொருளாதாரம் சிதைஞ்சு போச்சுன்னா உங்க பேச்சு, திமிரு ஆட்டம்பாட்டம், கற்புநெறி, காதல் எல்லாமும் குப்பை. மல்லாட்டை பயிர்ல கூடுதல் கமிஷன் கிடைக்கறதுனாலேயே, அரிசி வியாபாரத்துல மூணாம் இடத்துல தமிழ்நாடு இருக்கறதுனாலேயே, எண்ணெய் ஆட்டி புண்ணாக்கு விக்கறதுவரைக்கும் பெரிசு பெரிசா சம்பதிக்கறதாலேயே உங்களுக்குள்ள அடிச்சிக்கறீங்க. நான் யார் தெரியுமான்னு நெஞ்சுல தட்டறீங்க. எது உங்க பலமோ அதுவே உங்க பலவீனம். நீங்க அழியப்போறீங்கன்றது நிச்சயம். அடிச்சுக்கோங்கோ."

தாத்தா எழுந்து போக, இரண்டு கோஷ்டியும் அவரை மறித்து மறுபடியும் உட்கார வைத்தன.

"அதிகமா பேசவேணாய்யா, என்வீட்டுப் பையன் தப்பு பண்ணான். அவனை நீங்க கூப்பிட்டு கண்டிச்சுக்கோங்க. நீங்க கூப்பிட்டு கண்டிக்காத ஒரு வார்த்தை என்கிட்ட வந்து உன் புள்ள இப்படிப் பண்ணிட்டானேன்னு சொல்லியிருந்தான்னா, நானும் பொண்ணு பெத்தவன். நீ படற வேதனை எனக்குத் தெரியும். நான் அவனை வெட்டி கூறுபோட்டு ஜெயிலுக்குப் போயிருப்பேன். நீ அடிச்சதாலே இந்தப் பிரச்சினை ஜாதிப் பிரச்சினையாயிடுச்சு."

"ஆமா தருமர் இவரு. நியாயம் சொல்வாரு"

யாரோ ஒரு பெண்பிள்ளை எழுந்து கத்த, அவர்கள் பக்கமே அவளை அடக்கி உட்கார வைத்தார்கள்.

"அடிச்சது தப்புதாம்பா. ஏமாத்தி ஒரு பெண்ணைக் கூட்டிகிட்டுப் போறானே. கணக்குப் பாடத்துல டவுட்டு சொல்லி உள்ளே தள்ளிக்கிட்டுப் போயி கண்ட இடத்துல கை வச்சிருக்கானே. இப்போ சொல்றேன். எப்படி கண்டிக்கப் போற. பெத்த அப்பனா வயிறு எரிஞ்சு கேட்கறேன். என் ஜாதியில எவனாவது இவளைச் சேண்டுவானா? எத்தனைபேருக்கு நீ படுத்தியோ அப்படின்னு கல்யாணம் கட்டினவன் கேட்கமாட்டான். அந்தக் கொடுமையை நான் சாதாரமட்டும் அனுபவிக்கணுமா"

பேசும்போதே பெண்ணைப் பெற்றவர் குரல் நடுங்கி அழுகையாய்ப் பொங்கிற்று. பிள்ளையைப் பெற்றவன் வேகமாக வெளியே போய் அவன் பையன் தலைமுடியைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு போய் சபை முன்னால் தள்ளினான்.

"வெட்டிக் கொன்னுக்கோ போ. அடிச்சு சாவடி. இவன் என் புள்ள இல்ல. உன் பெண்ணைக் கெடுத்தவன். இந்த இடத்திலயே அடி. உன்னை யாரும் ஒன்னும் பண்ண மாட்டாங்க. நான் பெத்த அப்பன் சொல்றேன். செருப்பைக் கழட்டிக்கிட்டு அடி.

"வேணாம்ப்பா. அடிச்சா எல்லாம் வந்திடுமா. போனது போனதுதான். இவனை அடிச்சு என்ன பண்றது. முப்பது வயசு ஆளாயிருந்தா அடிக்கலாம். வெட்டலாம். இவனோ பதினெட்டு வயசு தறுதலை. நல்லது தெரியுமா? கெட்டது தெரியுமா? சினிமா பார்த்து சினிமா பார்த்து ரோமிஞ்சுட்டான். நான் எங்க போய் முட்டிக்கறது. ஆத்திரத்துல அடிச்சிட்டேன். போலீஸ்கேஸ் ஆயிப்போச்சு."

"இரு... இரு..."

தாத்தா எழுந்தார்.

"என்ன பண்ணச் சொல்றீங்க. பெண்ணைப் பெத்தவன் அழுவறான். புள்ளைய பெத்தவன் என் புள்ளை வெட்டிக் கோங்கறான். நாம என்ன பண்ணலாம். முடிவு சொல்லுங்க."

"நீங்களே சொல்லுங்க தாத்தா"

கூட்டத்திலிருந்து ஒருவன் சொன்னான்.

"அவன்தான் தொட்டான். இன்னொருத்தன் கட்ட முடியாது. ஜாதி விட்டு ஜாதி கல்யாணம் பண்றது நமக்கு வழக்கம் இல்லை. ஆனாலும் தப்பு ஆயிபோச்சு. இந்தப் புள்ளைக்கு அந்தப் பெண்ண கட்டி வச்சடனும். அல்லோ தான் சொல்லுவேன்."

கசமுசா கசமுசா என்று பேச்சு எழுந்தது.

"அதெல்லாம் சரியா வராது."

யாரோ எழுந்தார்கள்.

"பொண்ணைப் பெத்தவன் பேசட்டும் உட்கார்."

தாத்தா அவனை அதட்டி அமர வைத்தார்.

எல்லோரும் அமைதியாய் பெண்ணைப் பெற்றவரைப் பார்த்தார்கள்.

"இதுதான் வழின்னா, எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை. இருந்தாலும் எங்க ஜாதி சனத்தைக் கேட்டு கிட்டு வந்துடறேன்."

"என்ன கேட்கறது. நீ சொன்னதுதானேப்பா. உன் வாயாலதானே சொன்ன, வேற எவன் கட்டுவான்னு. யாரும் கட்ட முடியாத பொண்ண வீட்ல வச்சுகிட்டு என்ன பண்ணப்போற. தொட்டவன் கட்டிக்கட்டுமப்பா. அவன் ஒன்னும் கேவலமானவன் இல்லை. அவங்கப்பன் நல்லா சம்பாதிக்கறவன்தான். சொத்து சுகத்தோட இருக்கறவன் தான். அவனும் இந்த ஊர்ல ரெண்டு வீடு வச்சருக்கான்.

மண்டி வச்சருக்கான். டிராக்டர் வச்சருக்கான். கார் வச்சருக்கான். பொண்ணு கொடுத்துடு."

"அவங்க வீட்டுப் பொம்பளைங்க ஒருத்தி வாயைத் திறக்கலியே. இவரு மட்டும் பேசிக்கிட்டிருக்காரே. இவரை நம்பி என் பொண்ண எப்படி அனுப்புவேன் நான்."

அந்தப் பெண்ணைப் பெற்றவர் எழுந்து நின்று இரண்டு கைகளாலும் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதார்.

பிள்ளை பெற்றவர் திரும்பி தன் வீட்டுப் பெண் பிள்ளையிடம் ஏதோ முணுமுணுத்தார். அந்தப் பெண்பிள்ளை முன்னேறி வந்தாள். அழுகின்ற பெண்பிள்ளையைத் தடுத்து நிறுத்தி கட்டிக் கொண்டாள். தலையைத் தடவினாள்.

"எனக்கு இன்னும் ரெண்டு பொண்ணு இருக்கு. இவனுக்கு அப்புறம் ரெண்டு பேரும் படிச்சுகிட்டு இருக்காங்க. இப்படி ஒரு கல்யாணம் ஆயிட்டு அதுங்க ரெண்டுத்தையும் நான் எப்படி கரையேத்தப் போறேன். எனக்குத் தெரியலை. ஆனாலும், நானும் ரெண்டு பொண்ணு வச்சுக்கிட்டிருக்கறதுனால உன் பொண்ண ஏத்துக்கறேன். வரச்சொல்லு. எங்க இருக்கா கூட்டிட்டு வா."

யாரோ ஓடினார்கள். அவளை அழைத்து வந்தார்கள். அவள் சபையில் அடிபட்ட மான்போல மிரண்டபடி தட்டுத் தடுமாறி உள்ளே நுழைந்தாள். தலைகுனிந்து கொண்டிருக்கின்ற பையனைப் பார்த்தாள்.

அவளுக்கு விவரங்கள் சொல்லியிருப்பார்கள் போலிருக்கிறது. மெல்ல நகர்ந்து அம்மாவுக்கு அருகேபோய் நின்று கொண்டாள்.

தாத்தா எழுந்து பல்தெரிய சிரித்தார்.

எல்லாரும் சொல்லணும். ஒட்டு மொத்தமாகச் சொல்லணும். இன்னிக்கு கல்யாணம் கட்டிவச்சுட்டு நாளைக்கு அவன் வீட்டு வாசல்ல நின்னு வழிச்சுகிட்டு சிரிக்கக்கூடாது.

அவன்தானே எனக்குத் தெரியாதான்னு எனக்காரம் பண்ணக் கூடாது. ஒரு தப்பு நடந்துபோச்சு அதை நேர் பண்றதுக்கு இதைக் கல்யாணமா செய்யணும். செய்யலாமா கூடாதா. செய்யக்கூடாதுன்றவங்க கை தூக்குங்க."

மனோகரன் மிகத் நிகைப்பாக தாத்தாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"இவர் ஞானியா, சமூக சிந்தித்தவாதியா, தத்துவவாதியா அல்லது அன்பின் வெளிச்சமா."

நினைத்தான்.

அவனுக்கு தாத்தாவை இன்னும் அதிகம் புரிந்ததுபோல் இருந்தது.

அதில் மூன்றுபேர் கூடாது என்று கைதூக்கினார்கள். பெண்ணைப் பெற்றவர் வீட்டுப் பங்காளிகள். சொத்தில் உரிமையுள்ளவர்கள்.

பெண்ணைப் பெற்றவர் ஓடிப்போய் அவர்கள் கைகளைப் பிடித்துக் கொண்டார். அந்த அம்மாவும் போய் பேசினாள். அவர் ஜாதிக்காரர்கள் எழுந்திருந்து சமாதானப் படுத்தினார்கள்.

அவர்கள் கைகளைக் கீழே இறக்கினார்கள்.

"மறுபடியும் சொல்லுங்க. கல்யாணம் வேணாங்கறவங்க யாரு"

யாரோ இரண்டு பேர் வெளியே போனார்கள்.

"போறாங்க போகட்டும். இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கறவங்க யாரு"

தாத்தா உரத்த குரலில் கேட்க, பலநூறு கைகள் உயரே எழுந்தன.

எங்கிருந்தோ வெற்றிலைப் பாக்கு வாங்கி தட்டில் வைத்து பெண்ணைப் பெற்றவர் பிள்ளையைப் பெற்ற

வருக்குக் கொடுத்தார். பிள்ளையைப் பெற்றவர் பெண்ணைப் பெற்றவருக்குக் கொடுத்தார்.

இரண்டுபேரும் தழுவிக் கொண்டார்கள். பெண்மணிகள் நெருங்கி நின்று பேசினார்கள்.

பெண்ணையும் பிள்ளையையும் பிரித்து வெவ்வேறு பக்கம் அழைத்துப் போனார்கள். கூட்டம் மிகச் சந்தோஷமாக அந்தக் காயாமடம் சத்திரத்தை விட்டு வெளியே வந்தது. வாயெல்லாம் பல்லாகச் சிரித்தது.

"சீர் செனத்தியெல்லாம் எப்படிப்பா."

யாரோ ஒருவர் மெல்ல ஆரம்பித்தார்.

"ஆரம்பிச்சிட்டானுங்கய்யா. மறுபடியும் காலைவிட்டு கலக்கறதுக்குக் கிளம்பிட்டானுங்க. பொத்திகிட்டுப் போயேன். உன் பொண்ணா, உன் புள்ளையா அவனுங்க பாத்துக்கறாங்க போ. வாயை மூடிகிட்டுப் போ."

யாரோ கிளறியவனைக் கண்டித்து அனுப்பினார்கள்.

திடீரென்று அந்த ஊர் ஒற்றுமையமாய் மாறிப்போயிற்று என்பதாய் மனோகரனுக்குத் தோன்றியது.

"போலீஸ் கேஸ் என்ன ஆகும்."

"புகார் கொடுத்தவன் வாபஸ் வாங்கிப்பான். ஆனா போலீஸ் விடாது. பொதுஜன அமைதிக்குக் குந்தகம் விளைவித்தாகன்னு ரெண்டுபேர் மேலயும் கேஸ் போடுவான். இந்தப் பக்கம் ஒரு ஆயிரம் ரூபா. அந்தப் பக்கம் ஒரு ஆயிரம் ரூபான்னு அபராதம் கட்டச் சொல்லுவாங்க. கட்டிட்டு வெளியே வந்து பிரியாணி சாப்பிடுவாங்க."

ஊர் முழுவதும் பல நாட்கள் இதுவே பேச்சாக இருந்தது.

திடீரென்று ஒருநாள் வாசலில் கொடிபோட்ட படகு காரில் அந்த ஊர் எம்.எல்.ஏ. இ ங்கி தாத்தாவை நோக்கி

வந்து, அவர் காலில் விழுந்து பணிந்து அவர் கைகளைப் பிடித்து கண்ணில் ஒற்றிக்கொண்டார்.

"ஊர் மானத்தைக் காப்பாத்தறதுல பெரும்பங்கு உங்களுக்கு இருக்குதுங்கய்யா. இந்த நேரம் பார்த்து நான் அமெரிக்காவுக்குப் போயிட்டேன். ஒரு திட்டப்பணிக்காக ஒரு குழுவா பத்தொன்பதுநாள் அமெரிக்காவைச் சுத்திப் பார்த்தது. மலையில் ஏறதுக்கு ரோப்கார் திட்டமெல்லாம் ப்ளூபிரிண்ட் வாங்கிட்டு வந்தேன். என் வீட்டைக் காண்பிச்சேன். இந்த மலையில இந்த மாதிரி ஆணி அடிச்சு கம்பு நட்டாக்க சாமி குத்தம்னு சொல்லிடுவான். எவனும் ரோப்கார்ல ஏறமாட்டேன்னுட்டாங்க. அதனால எதுவும் பண்ண முடியாத அச்சத்துல இருக்கறேன். அதுபத்தி உங்ககிட்ட தனியா பேசணும். ஆனா, ரெண்டு வீட்டுக்கு நடுவுல இருந்த ஜாதிச் சண்டையத் தடுத்து நிறுத்தி சுமூகமா பண்றதுக்காக விருந்து ஏற்பாடு பண்ணலாம்னு நினைச்சேன். இத்தனை சொல்லியும் விருந்து போட்டோம்னா எதிர்க்கட்சிக்காரன் லஞ்சம் கொடுக்கறான்னு சொல்லுவான். அதனால அதைச் சொல்லாத, அவங்க பண்ணது நிச்சயதார்த்தம்னு சொல்லி ரெண்டு பக்கத்து ஜனங்களையும் கூப்பிட்டு கறிசோறு போட்டுடலாம்னு நினைக்கறேன். ரெண்டாயிரம், மூவாயிரம் ஏன் நாலாயிரம் இலையா இருந்தாக்கூட பரவாயில்லை. சுத்துபத்து ஜனங்களைக்கூடக் கூப்பிடணும். நீங்கதான் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கணும்."

கரிமேட்டு மணி என்பவர் முன்வழுக்கை பளபளக்க வெள்ளைப் பல்லும், பெருங்குரலுமாய் பேச, தாத்தா தலைமை ஏற்க மறுத்துவிட்டார்.

"உடம்பு ஒரு மாதிரியா இருக்கு. வயசாயிடுச்சு. ஒருநாள் இருக்கற மாதிரி ஒருநாள் இல்லை. வர்றேன்னு சொல்லிட்டா வந்துடணும். பேர் போட்டுட்டு வரலைன்னா அது

உனக்கு அசிங்கம். நான் வரேன் பேர் போடாத. தலைமை, வாழ்த்துரை, ஏற்புரை இதுக்கெல்லாம் வெளியூர்லேர்ந்து ஆள் கொண்டா. அப்போ கூட்டம் கூடுதலா சாயும்.''

''யாரைக் கூப்புடறதுன்னு தெரியலையே.''

''பேசறதுக்கா குறைச்சல் இந்த தேசத்துல. பொளந்து கட்டிப் பேசறதுக்கு ஏகப்பட்ட பேர் இருக்காங்க. ஆனா நீ பட்டிமன்றம் கூட ஏற்பாடு பண்ணலாம். கண்ணகியா, மாதவியா, அவளா, இவளா, அந்தமாதிரி ஏதாவது ஏற்பாடு பண்ணு.''

நல்லாயிருக்குதே. நல்லாயிருக்குதே சரியான ஐடியா கொடுக்கறீங்களே.

அவர் துள்ளிக் குதித்தார்.

''அமெரிக்காவுக்கு பட்டிமன்ற ஆள் ஒருத்தர் வந்தாரு. அப்பவே சொன்னேன். உங்களை உபயோகப்படுத்திக் கறேன்னு. அவரையே இட்டாந்துடலாம். அவரே பார்ட்டி களையும் இட்டாந்துடுவாரு. அப்படியே ஒரு பரத நாட்டியம் போட்டுடலாமா.''

மனோகரன் எம்.எல்.ஏ.வைப் பார்க்கவேயில்லை. தாத்தாவையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். தாத்தா சட்டென்று தலை நிமிர்த்தி ஆழ ஊடுருவி அந்த எம்.எல்.ஏ. வையே பார்த்தார்.

''பொம்மனாட்டி நாட்டியமா?''

''ஆமா, வேணாங்கறீங்களா''

தாத்தா யோசித்தார்.

''போட்டுடலாமே. பரதநாட்டியம் ரொம்ப நல்லதாச்சே. ஆனா, நம்ப ஜனங்க ரசிக்குமான்னு தெரியலையே. ஆய்... உய்...ன்னு கத்தி விசிலடிச்சு ஏதாவது பண்ணிடுவாங் களோன்னு பயமா இருக்கு.''

''அப்போ வேணாமா. போடவேணாம். வேற ஏதாவது ஒரு ஆட்டம் போடணுமே, அதுக்காகத்தான் கேட்கறேன்.''

''இதெல்லாம் ஏன் எங்கிட்ட கேட்கறீங்க. விவரம் தெரிஞ்சவங்ககிட்ட கேளுங்க. எனக்கு இதைப்பத்தி ஒரு விவரமும் தெரியாது. எதுக்கும் ரிஸர்வ்போலீஸ் ஒரு நூறு நூத்தம்பது சொல்லிடுங்க.''

''ஏங்க... ஏன்''

எம்.எல்.ஏ. பதறினார்.

தாத்தா புன்னகை செய்தார்.

''ரெண்டு ஜாதிக்காரனைக் கூப்பிடறீங்களே. மறுபடியும் சின்ன விஷயத்துக்குக்கூட அடிச்சுப்பாங்களே. எனக்கு கிழிச இலை. அவனுக்கு பெரிய இலை. அப்படின்னு பொத்து பொத்துனு அடிச்சுகிட்டாங்கன்னா, அந்த நேரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் பண்ண முடியுமா. நூறுபேர் அடிச்சிக்கறாங்கன்னாக்க நம்ம போலீஸ்காரங்க உடனே வருவாங்களா. ரத்த ஆறு ஓடட்டும். மெல்ல வரேன்னு வாங்க. அதான் சொன்னேன்.''

தாத்தா மிகக் கூர்மையாக இருப்பதாய் அவர் கண்களி லும், மூக்கு நுனியிலும், உதட்டுத் துடிப்பிலும், விரல்கள் அசைவிலும் அவன் புரிந்து கொண்டான்.

''அடடா... போட்டீங்களே ஒருபோடு. சரியான ஐடியா. சரியான ஐடியா மறுபடியும் கலவரம் வரும்னு சொல்றீங்க.''

''எப்பவேணா.. எங்கவேணா... யார் இடத்துல வேணா லும் எதுக்காக வேணாலும் கலவரம் வரலாம். அஞ்சாயிரம் பேருக்கு சாப்பாடு போடறபோது நூத்தம்பது போலீஸ் காரர்களுக்கு போட்டா என்ன குறைஞ்சா போயிடப் போகுது. போலீஸ்காரங்களெல்லாம் நம்மூர்ல நல்லவங்க ஸார்.''

எம்.எல்.ஏ.வோட வந்தவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பெரியவரு பெரிய நக்கல் பார்ட்டிப்பா என்பதாய் சைகைகள் செய்தார்கள்.

"அப்போ நடனம் வேணாங்கறீங்க."

எம்.எல்.ஏ. கேட்க தாத்தா மௌனமாக இருந்தார். எம்.எல்.ஏ. எழுந்திருக்கும்போது "பரதநாட்டியமே இருக்கட்டும். அதான் நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்லது" என்று சொல்ல, அங்கிருந்தவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"இங்க வந்து ஆடப் போறாங்களே என்ன கல்லடிப் படப்போறாங்களோ தெரியலை."

கூடவந்தவர் சொல்ல மறுபடியும் கூட்டம் சிரித்தது.

"டேட் சொல்லி அனுப்பறேன். வந்துடுங்க விருந்துக்கு."

எம்.எல்.ஏ. கைகூப்பி சரட்டென்று வெளியேறினார்.

"தாத்தா எதுக்கு உங்களைத் தேடிகிட்டு வந்தாரு."

"ஊர்ல இருக்கற பெரிய மனுஷாள்கிட்ட கேட்டுட்டுதான் நடத்தினேன். அப்படின்னு ஏதாவது சொல்லணும், அதுக்காக"

"ஏன் திடீர்னு"

"என்னமோ தப்பா பண்ணப்போறான் அதான்"

"என்ன தப்பு"

"தெரியலயே. இவங்க எப்போ, எதுக்கு எங்க பாய்வாங்கன்னு யாராள கண்டுபிடிக்க முடியும். இன்னும் ஒரு வருஷத்துல தேர்தல் வருதுன்னா இப்படியெல்லாம் ஆடுவாங்க. வருதுபோலிருக்கே. அதான் வந்துட்டான் எம்.எல்.ஏ. கரிமேட்டுமணி. இரவும், பகலும் ஜாதி ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். அப்படின்னு இவனே ஆள்விட்டு எழுதிப் பான்.

"இவங்களெல்லாம் நல்லவங்களா, கெட்டவங்களா தாத்தா."

"பசுத்தோல் போர்த்திய புலி"

"கெட்டவங்கதானா"

"தெரியலை"

"ஏன் தாத்தா இப்படிச் சொல்றீங்க"

"என்னால முடியும். நான்தான் எல்லாம். என்னால முடியாதது எதுவும் இல்லை. நான் இப்படி திட்டுவேன். அப்படி மடக்குவேன். எனக்கு காலுக்கு கீழ்தான் அத்தனையும் நடக்குதுன்னு நினைக்கறவருக்கு யாரும் எதுவும் சொல்ல முடியாது. எது நல்லது, எது கெட்டதுன்னு நாம கத்துக்கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. அவங்க நல்லதுன்னு நினைக்கறதும், கெட்டதுன்னு நினைக்கறதும், சாமர்த்தியம்னு நினைக்கறதும் சரமாரியா பண்ணிகிட்டு போவாங்க. நாமளா கால் தடுக்கி விழுந்து அவங்களா மூட்டிக்கிட்டு நின்னாதான் உண்டு. அவங்களுக்குக் காது கேட்காது. சொல்றது புரியாது. பெரியவங்க யாரும் அந்த மாதிரி ஆளுங்களுக்கு போதனை பண்றதே இல்லை. காதுள்ளவன் கேட்கக்கடவன் அப்படின்னு பைபிள்ள சொல்லியிருக்கு. என்ன அர்த்தம் அதுக்கு. யாருக்குத் தெரிஞ்சுக்கணும்னு ஆசை இருக்கோ அவனுக்குத் தெரியவரும். எனக்குத் தெரியும்னு நினைச்சுக்கிட்டவன் முடிஞ்சிட்டான். அவனுக்கு எதுவுமே தெரிய வராது."

"விருந்துக்கு போவீங்களா தாத்தா"

"போய்த்தா ஆவணும். போகலைன்னா இடைஞ்சல் பண்ணுவான். ஜாதிக் கலவரத்தைத் தூண்டிவிட்ட சில பேர்கள் யாரென்று தெரியும்னு என் பேரைச் சொல்லிடுவான். அவன் சொன்னதை எழுதறதுக்கு பத்திரிகை இருக்கு. பத்திரிகையில் எழுதி பேர் வரும்படியா பண்றதுக்கு இவங்க

கிட்ட பணம் இருக்கு. நெருப்பைவிட்டுத் தள்ளிப்போயிடக் கூடாது. கிட்டயும் போய் நிக்கக்கூடாது.''

''அரசியல்வாதிங்கன்னா பயம் இல்ல உங்களுக்கு.''

''அஞ்சுவது அஞ்சாமை பேதைமை. இந்த ஊர்ல இந்த பூமியிலதானே இருக்கோம். இவங்கதானே நம்மள ஆட்சி பண்றாங்க. இவங்களுக்கு எதிரா நாம எப்படி இருக்கறது. இவங்ககிட்டேயிருந்து விலகி இருக்கலாம். தள்ளி நிற்கலாம். தூரத்துலேர்ந்து கும்பிடுபோட்டு ஓரமா கண்பார்வை படாம ஒதுங்கிக்கலாம். ஆனால் இவங்க வேணாம்னு இருக்க முடியாது.''

''ஏதாவது வேணும்னா இவங்ககிட்ட போகமுடியுமா தாத்தா.''

''அதுவும் செய்யக்கூடாது. என்ன கஷ்டம் இருந்தாலும், இவங்க இல்லாத தீர்த்துக்கறதுக்குத் தான் முயற்சி பண்ணணும்.''

பதினோரு மணி சாப்பாட்டிற்குக் காலை ஏழுமணியிலிருந்தே கூட்டம் கூடத் துவங்கிவிட்டது. சைக்கிள்களிலும், தள்ளுவண்டிகளிலும், காப்பிகடைகளும், டீக்கடைகளும் வந்து சேர்ந்தன. அருகேயிருந்த ஹோட்டல்களில் வியாபாரம் அற்புதமாய் நடந்தது.

சர்க்கரை வள்ளிக்கிழங்கும், காராமணி சுண்டலும் விற்றுத் தீர்ந்தன.

''இதெல்லாம் சாப்டாக்க அங்க அடைச்சுப் புடும். அங்க ஒன்னும் சாப்பிடாம இருக்கணும்.''

''அதெல்லாம் முடியாதுப்பா. அரைமணி நேரத்துக்கு ஒரு தடவை எனக்கு சாப்பிடணும். இதை சாப்டா அதை விட்ருவேனா. ருசியிலயே இழுத்துடமாட்டேன்.''

ஒருவர் நாக்கு சப்புக் கொட்டிப் பேச மற்றவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''எங்கப்பா சாப்டறத பார்க்கணும். சின்ன வயசுல பல தடவை எங்கப்பா சாப்பிடறத வேடிக்கை பார்த்திருக்கேன். கறிசோறுன்னா அப்படி ஒரு ஆவலா தின்னுவான். நம்மள மாதிரி சப்பளாங்கால கட்டி உட்காரதோ, மேஜையில உட்காரதோ இல்லை. ஒரு கால் மடக்கி, ஒரு கால்நீட்டி உட்காருவான். கடைஞ்சு எடுத்து நாலு விரலையும் வாய்விட்டு சாப்பிடுவான். அரைக்கிலோ கறி, ரெண்டு லெக்பீஸ், மூணு மீன் துண்டு, ரெண்டு முட்டை, ரெண்டு டபுள் ஆம்லெட், ரத்த வறுவல், மீன் துவையல்னு சாப்பிடுவான். குழம்பு ரசம்னு சாப்டுட்டு எழுந்து பத்துவெத்தலை போடுவான். அப்படியே வெத்தலை சாறு ஒழுக தூங்கிப் போயிடுவான். என்ன உதை. என்ன கிள்ளு எழுந்திருக்க மாட்டான்.''

அவன் விவரிக்க விவரிக்க, மற்றவர்கள் அது ஒரு ஆனந்த மான வாழ்க்கை என்பதாக அவனை உற்சாகப்படுத் தினார்கள்.

அந்தப் பேச்சு நீண்டு வளர்ந்து விதவிதமான சாப்பாடு பற்றி மாறி மாறி பேசிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கூட்டத்திற்கு நடுவே நின்றவண்ணம் மனோகரன் அசையாது, அவர்கள் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந் தான். இந்த மாதிரிப் பேச்சுக்கு தாத்தா என்ன சொல்வார் என்று யோசித்தான். தாத்தா ஒருநாளும் சாப்பாடு பற்றிப் பேசியதில்லையே என்று ஆச்சரியப்பட்டான்.

''ரொம்ப கூட்டமா என்ன. எதுவும் கலாட்டா இல்லாத இருக்கா. அப்படின்னு பார்த்திட்டு வந்து சொல்லு. அதுக் கேத்தபடி நான் வந்துடறேன்.''

கூட்டம் அதிகமாகத்தான் இருந்தது. எப்போது தோட்டக் கதவைத் திறப்பார்கள் என்று அருகிலேயே முண்டியடித்துக் கொண்டிருந்தது. உள்ளிருந்து சமையல் வாசனை பலமாக

வீசிக்கொண்டிருந்தது. ஒருஆள் நிற்பதைவிட உயரமாக முட்டைகள் அடுக்கப்பட்டு உள்ளே போயின.''

அவர்கள் ஆவலாக அதைப் பார்த்தார்கள்.

மினிவேனில் மொத்தமும் குளிரூட்டப்பட்டு ஐஸ்கிரீம் பெட்டிகள் இறக்கப்பட்டன.

''ஐஸ்க்ரீம்ப்பா.''

''அட கடைசில ஐஸ்க்ரீம்கூட கொடுக்கறாங்க போலிருக்கு.''

''ஏம்பா என்ன ஐஸ்க்ரீம்.''

''கப் ஐஸ்க்ரீம்''

''வெண்ணிலாவா பிஸ்தாவா''

''எல்லாம் இருக்கு.''

''நல்லா காரமா கறிசோறு சாப்டுட்டு ஐஸ்க்ரீம் சாப்பிடற மாதிரி சுகம் எதுவும் கிடையாது'' என்று சொல்ல, சொன்ன வரை எல்லோரும் சுற்றிக் கொண்டார்கள். மறுபடியும் அவன் என்ன சொல்வான் என்று பார்த்தார்கள்.

கூட்டம் அதிகமாக இருக்கிறது என்று சொல்ல வேண்டு மென்ற நினைப்பில் மனோகரன் அந்தத் தோட்டக் கதவு தாண்டினான். எம்.எல்.ஏ. வின் வீட்டுக்கதவைத் தாண்டுகிற போது சட்டென்று உள்ளே ஏதோவொரு எண்ணம் ஓடியது.''

''தாத்தா எப்ப வரலாம்னு கேட்கறார்னு எம்.எல்.ஏ. வையே கேட்டா என்ன.''

அவன் அந்தக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான். செக்யூரிட்டி யார் என்று மடக்க, எம்.எல்.ஏ. வெள்ளைவேட்டியும் வெறும் மார்புமாய் வெளியே வந்தார். தாத்தாவின் பெயரைச் சொன்னதும் அருகே வரச் சொன்னார்.

''உன்னைப் பார்த்திருக்கறேன். அவரு பேரனா நீ. அந்த வீட்ல நின்னுட்டிருந்தே இல்ல. என்ன வேணும்'' என்று கேட்டார்.

''தாத்தா எப்போ வரணும்னு கேட்கச் சொன்னாரு. எங்க வரணும்னு கேட்கச் சொன்னாரு.''

''அவங்க வீட்லதாம்ப்பா விருந்து''

''அங்க ரொம்ப கூட்டமா இருந்தா வரணுமான்னு கேட்கச் சொன்னாரு.''

''கண்டிப்பா வந்தே ஆகணும். அவரு ஏன் அங்க போகணும். நம்ம வீட்டுக்குள்ள வந்துடச் சொல்லு. பதினோரு மணிக்கே வந்துடச் சொல்லு. பன்னெண்டு மணிக்கு இலை போட்டுடலாம்''

பதினோரு மணிக்கு இலை போடுவதாகச் சொன்னார் களே என்று முதலில் வியந்தான். சரி என்று தலையசைத் தான். தாத்தாவிடம் வந்து பேசினான்.

தாத்தாவும் பேரனும் பதினொன்றரை மணிக்குக் கிளம்பி எம்.எல்.ஏ வீட்டு வாசலுக்குப் போனார்கள்.

இப்பொழுது எம்.எல்.ஏ. இருக்கின்ற தெருப் பக்கமே போகமுடியவில்லை. கூட்டம் அடர்த்தியாக எட்டி எட்டி எம்.எல்.ஏ வின் வீட்டைப் பார்த்துக் கொண்டிருந்தது.

கதவு இன்னும் திறக்கவில்லையாம். திறந்துவிட்டால் கூட்டம் வடிந்துவிடுமாம்.

மனோகரன் வழிவிடச் சொல்லி உரக்கக்கத்த தாத்தாவை மெல்ல மெல்ல அழைத்துக் கொண்டு போனான்.

ஒரு ஆள் திடீரென்று முன்னே வந்தான்.

''பெரியவர் வராரு வழி விடுங்க. பெரியவர் வராரு வழி விடுங்க'' என்று பிடித்து தள்ளி ஜனங்களோடு ரகளை செய்து கூட்டிக்கொண்டு போனான்.

"நீ ஏம்ப்பா கஷ்டப்படற. விட்டுடு நான் போய்க் கறேன்."

"இந்த ஜனம் நகராதுங்க. இப்படி தள்ளினாதான் நகரும்."

ஆனால் அந்த ஜனங்கள் எவ்வளவு தள்ளினாலும் கோபப்படாமல் வெறுமே வெறித்துப் பார்த்தார்கள்.

ஒசியில் சோறு போடறானே, என்ன தள்ளினாலும் கோச்சுக்க முடியுமா என்பது போல் பரிதாபமாகப் பார்த்தார்கள்.

ஆனால் நடுவே புகுந்து தாத்தாவை அழைத்துப் போவன் தந்திரம் மிக்கவனாகவும் திமிர் பிடித்தவனாகவும் இருந்தான்.

"ஏன் தள்ற" என்று யாரோ கேட்டதற்கு "அஞ்சு நிமிச்சத்துல பெரியவரை உள்ள கொண்டுபோய் சேர்க்கணும். நீ கொண்டுபோய் சேர்த்துடறியா" பதிலுக்கு அதட்டினான்.

கேட்டவன் வாய் திறப்பதற்குள் அவனையும் தள்ளி விட்டு முன்னேறினான்.

பத்து நிமிடத்தில் அவர்கள் எம்.எல்.ஏ.வின் வாசலை அடைந்தார்கள். அந்தக் கதவு சங்கிலியால் பூட்டப் பட்டிருந்தது.

யாரோ அசைத்து, திறக்க முயல, திறக்கக்கூடாது என்று அந்த வாசலில் இருந்த காவல்காரன் உரத்துக் கத்தினான்.

"தமிழ்நாட்டு கவர்னரே வந்தாக்கூட நான் கதவு திறக்க மாட்டேன். கதவு திறக்கக்கூடாதுன்னு எனக்கு உத்தரவு" என்று உரத்த குரலில் அலட்டலாகக் கடுப்படித்தான்.

தாத்தா நிலைகொள்ளாமல் தவித்தார். திரும்பிப் போய்விடலாம் என்றார், வருத்தத்தில் முகம் வாடினார்.

"இங்கேயே இரு."

வேகமாக மனோகரன் நகர்ந்து சுவர் ஏறிக் குதித்தான்.

காவல்காரனை இன்னும் சிலபேர் பாய்ந்து அடிக்கத் துவங்கினார்கள். வேகமாக அவர்களை விலக்கிவிட்டு படியேறி எம்.எல்.ஏ. இருக்கின்ற அறைக்குப் போய் தாத்தா வந்திருப்பதை கிழிந்த சட்டையோடு சொல்ல எம்.எல்.ஏ வெளியே வந்து காவற்காரனை அதட்டினார்.

"கதவைத் திறந்து விடேம்ப்பா" என்று கத்தினார்.

காவல்காரனும் இன்னும் சிலபேரும் கதவு சங்கிலியைத் திறந்து மெல்ல மிகச் சிறிய இடைவெளியை கம்பிக் கதவில் விட கூட்டம் பின்னாலிருந்து நெருக்கித் தள்ளியும், "நாங்களும் அவங்ககூடத்தான் வந்துகிட்டிருக்கோம்" என்று இரண்டு மூன்று பேர் அருகே ஒட்டிக்கொண்டார்கள்."

"அவரு கூட வேற யாரும் வரலை... அவரு கூட வேறு யாரும் வரலை" என்று மனோகரன் கத்தினான்.

வேறு யார் யாரோ என்னென்னோவோ கத்தினார்கள்.

"சாப்டறதுக்கு கூப்டுட்டு என்னப்பா கம்பி கதவெல்லாம் போட்டுகிட்டு ஆட்டம் போடறீங்க. யோவ் எம்.எல்.ஏ. சோறு போடப்போறியா இல்லையா."

"அமைதியா இருங்கப்பா சோறு இல்லைன்னு யாரும் சொல்லமாட்டாங்க, நிச்சயமா சோறு உண்டு. உள்ள இருக்கற அத்தினி பேரும் சாப்பிடாத நான் சாப்பிட மாட்டேன்ப்பா. உங்களுக்கு நான் எழுதித்தரேன். நான் சோத்துல கைவைக்க மாட்டேன்" என்று சொல்ல கூட்டம் அமைதியாயிற்று."

இடுக்கு வழியாகத் தாத்தா முதுகுதேய உள்ளே போனார்.

மனோகரன் ஓடிவந்து கைபிடித்துக் கொண்டான்.

தாத்தா அதிகம் வெட்கப்பட்டு மனம் குன்றியவர்போல் இருந்தார். ஒன்றிரண்டு முறை என்ன தாத்தா என்று கேட்டதற்கு அவர் பதிலே சொல்லவில்லை.

வாசலில் கூட்டம் இன்னும் அதிகரித்தது.

வெளியூர் ஆட்கள் வந்து இறங்கி விட்டார்கள் என்று சொன்னார்கள்.

ஒரு தனியார் பேருந்து கம்பெனியிலிருந்து எம்.எல்.ஏ. விற்கு போன் வந்தது.

நூறுபேர் கொண்ட கும்பல் உள்ளே ஏறியதால் ஒருவர் கூட டிக்கெட் வாங்கவில்லையாம். அவர்கள் எம்.எல்.ஏ. வீட்டு தெருவரை கொண்டு போய் விடச் சொன்னார்கள். அப்படியே இறங்கிப் போய்விட்டார்களாம்.

''ஹலோ... மைக்டெஸ்டிங்'' என்று மைக் அலற ஆரம்பித்தது.

''ஏங்க இருக்கற கூட்டத்துக்கு பேசிக்கிசி எதுவும் பண்ண முடியாது. கதவு திறந்துவிட்டு இலை போடறதுக்குத்தான் சரியா இருக்கும். ''இலையைப் போட்டு கதவைத் திறங்கடா.''

யாரோ உத்தரவு போட என்ன செய்வது என்று எல்லோரும் எம்.எல்.ஏ. முகத்தைப் பார்த்தார்கள்.

''சோறு தின்ன வந்திருக்காளுங்க. பேச்சை கேட்கவா வந்திருக்காளுங்க. சோறு சாப்பிடட்டும். இலை போட்டுட்டீங்களா. இலை போட்டு தண்ணியை வைங்க.''

மடமடவென்று இலை போடப்பட்டது.

''அந்தப் பெரியவரைக் கொண்டுபோய் முன்னாடி உட்கார வை''

எம்.எல்.ஏ.வைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் முன்னே போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

தாத்தாவுக்கும், மனோகரனுக்கும் சற்று உயரமான இடத்தில் இலைபோடப்பட்டது.

அதில் எம்.எல்.ஏவிற்கு இடம் விடப்பட்டது. எம்.எல்.ஏ. வின் உறவுகளும் அந்த வரிசையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

''எனக்கு என்னத்துக்குடா இவ்ளோ மரியாதை.'' தாத்தா கேட்டார்.

''கழட்டிவிட்டா நல்லாயிருக்காது. இந்த ஊர்ல நீ பெரிய மனுஷன். ஜாதிச் சண்டை உங்க தெருவுல நடந்திருக்கு. நீங்க எதையும் பெரிசு பண்ணிக்கக்கூடாது. பத்திரிகையில எதுவும் எழுதிடக்கூடாது அப்படின்னு ஒரு பாதுகாப்பா இருக்கலாம்.''

''ஆமா. காரணமில்லாம இவங்க எதுவுமே பண்ண மாட்டாங்க. உபயோகமில்லைன்னா உள்ள சேர்க்க மாட்டாங்க.''

''ஆனாலும் இப்படி வந்து ஒரு விருந்து சாப்பிடணு மான்னு ஒரு கூசப்பு இருக்கத்தான் செய்யும்.''

''வந்துட்டோமில்ல சாப்பிடு.''

மாமிசம் பரிமாற முயலும் போதும் தாத்தா வேண்டா மென்று சொன்னார். மோர்சாதம் ஊறுகாய் போதும் என்று சொல்ல.

''இது விருந்துங்க விருந்து'' என்று எதிரே இருந்தவன் கை ஆட்டி பேசினான்.

''விருந்துதான்யா விருந்து. இதைச் சாப்பிடற யோக்கி யதை எனக்கு இல்லையே. செரிமானம் ஆகமாட்டேங்குது.''

சுற்றியுள்ளவர்கள் வற்புறுத்திய போது தாத்தா திடமாக மறுத்துவிட்டார்.

''ஆம்லெட்டாவது போட்டுக்கோங்க.''

''ஐயோ அதான் பெரிய கெடுதல். ஜீரணமே ஆகாது.''

"குழந்தைங்களுக்கே கொடுக்கறோம். அதுங்களுக்கு ஜீரணமாகுது. உனக்கு ஆகாதா."

"அதுங்க ஒடி ஆடும். நான் எங்க ஓடறது. எங்க ஆடறது."

"விட்ருங்கப்பா. ஒன்னு கிடக்க ஒன்னு ஆகப்போகுது."

மனோகரன் இலையில் கோழிக்கறியை வைத்தார்கள்.

தாத்தாவுக்குக் கொண்டு வந்ததையும் அவன் இலையில் வைத்தார்கள்.

அவன் இலையில் கால்பகுதி வைக்கப்படுவதை மற்றவர்கள் பொறாமையோடு பார்த்தார்கள். அவித்த முட்டையை வைத்தார்கள்.

"அவிட்ச முட்டையாவது சாப்டுவீங்களா மாட்டீங்களா."

"மாட்டேன். அவனுக்கு வை"

தனக்கு வந்த முட்டையை அவர் அவன் பக்கம் திருப்பினார்.

"எதுக்குத் தாத்தா."

"சாப்பிடுடா. அப்புறம் தூக்கிப் போட்டுடலாம்."

"என்ன தாத்தா சொல்றீங்க."

"அப்புறம் சொல்றேன்."

குழம்பு ஊற்றப்பட்டது. நன்றாக விரும்பி ரசித்து மனோகரன் உண்டான்.

தாத்தா இலையில் வெறும் சோறு மட்டுமே இருந்தது. இரண்டுமுறை அதைத் தொட்டுப் பார்த்துவிட்டு தாத்தா மௌனமாக இருந்தார்.

"ஏங்க இவருக்கு மோர் ஊத்துங்க."

எதிரே இருந்தவர் உரத்த குரலில் கேட்க, "எங்களுக்கு மோர் ஊத்தற வழக்கமில்லையே."

என்று யாரோ சொன்னார்கள்.

தங்களுக்குள் குசுகுசுவென்று பேசிக் கொண்டார்கள்.

தாத்தா திரும்பி அவனைப் பார்த்துச் சிரித்தார்.

"என்ன தாத்தா"

"மோர் இருக்காது போலிருக்கே"

"ரசம் இருக்கு ஊத்திக்கறீங்களா"

யாரோ கேட்க வேண்டாமென்று தலையசைத்து விட்டார்.

"ஏன் தாத்தா ரசம் ஊத்திக்கோயேன்."

"அப்புறம் ரசமும் ஊத்தறேன்னுவான் மோரும் ஊத்தறேன்னுவான். ரெண்டு சோறு தின்னணும் எனக்கு ஒரு சோறு போதும்."

"இல்லைன்னா என்ன பண்ணுவ"

"கொஞ்சம்போல வெறும் சோறு சாப்டுட்டு எழுந்துடுவேன்."

தாத்தா எந்தவித சலனமில்லாமல் சொன்னார்.

"நீ சாப்பிடாம இருக்கறது எனக்குக் கஷ்டமா இருக்கு."

"இருக்கக்கூடாது. உன் வயித்தை நீ பார். என் வயித்தை நான் பார்க்கறேன். எனக்காக நீ குறைக்கறதோ, உனக்காக நான் சாப்பிடறதோ நமக்குத் தப்பா வரும்."

அங்கு நாலுறுபேர் வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்தார்கள். வெளியே நாலுறுக்கும் மேற்பட்டவர்கள் கதவுகளை அசைத்துக் கொண்டிருந்தார்கள்.

"கொஞ்சம் கறிபோடுப்பா."

"குழம்பு சாப்பிட்டுவிட்டு, ரசம் சாப்பிட்டு விட்டு மறுபடியும் குழம்புக்கு ஒருவர் கேட்டார்."

''இல்லீங்க அடுத்தபடி வெளிய ஜனங்க இருக்கு. அவங்களுக்குப் போட வேணாம்.''

''நீ ஏன்யா மாட்டேன்ற. போடறது எம்.எல்.ஏ. அந்தாள் போட்டுத்தான் ஆகணும். அந்தாளுக்கு பெரிய பீஸா வச்சுருக்கற கோழி, எங்களுக்கு வைக்கக்கூடாதா.''

''ஆமாப்பா... சின்னப் பசங்களுக்கெல்லாம் லெக்பீஸ் வைக்கறானுங்க. நாம வந்து எம்.எல்.ஏ. வுக்காக உழைக்கறோம். நமக்கு வைக்கமாட்டேன்றாங்க.''

''போங்க. போட்டதைச் சாப்டுட்டு போங்க.''

''எப்படிடா போறது. போட்டதைச் சாப்டுட்டு என்ன பிச்சைசோறா போடறீங்க. எங்களால தாண்டா அவரு எம்.எல்.ஏ. எங்களாலதாண்டா அவரு சம்பாதிக்கறாரு. நாங்க உழைக்காட்டி எம்.எல்.ஏ. வா அவரு வந்துடுவாராடா.''

''யோவ் எச்சக் கையை ஆட்டி பேசாத மேலெல்லாம் தெறிக்குது.''

''என்ன தெறிச்சா என்ன செத்துடுவியா.''

''சரியான காட்டுப் பசங்க.''

''யாரைப் பார்த்து காட்டுப் பசங்கன்ற.''

''யார்ரா அவன் நம்மள காட்டுப் பசங்கன்றது.''

நாலைந்து பேர்கள் எழுந்திருந்தார்கள்.

தாத்தா வெறும் சோறு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

''ஏங்க அவருக்கு மோர் ஊத்துங்க.''

மறுபடியும் யாரோ கத்தினார்கள்.

தாத்தா தொடர்ந்து வெறும் சோறு சாப்பிட்டார்.

அந்தத் துவையல் இந்தத் துவையல் என்று ஒரு பெரிய கிண்ணத்தில் கொண்டு எல்லார் இலையிலும் வைத்தார்கள்.

''ரசத்துக்கு நெத்திலி துவையல் நல்லாப் போகும்'' என்றார்கள்.

''ப்பா மேல இருக்கறவங்களுக்கு மட்டும் ஆம்லெட் ஊத்திப் போடச் சொன்னார்கள். ஆம்லெட் இருக்காது யாருக்குப் போட, எல்லாருக்கும் போட்டுப் கட்டுப்படி யாகாது.''

நெத்திலி துவையலுக்குப் பக்கத்தில் ஒரு டபுள் ஆம்லெட் வைக்கப்பட்டது. இன்னும் வை என்று கை உதறிப் பேசியவன் தட்டைப் பிடித்து இழுத்தான்.

''தொடற வேலை வச்சிகிட்டா அசிங்கமாயிடும் சொல்லிட்டேன்.''

பரிமாறுபவன் பேச, ''பரவாயில்லப்பா ஒன்னு போடுப்பா'' என்று கெஞ்சினான்

இன்னொரு ஆம்லெட் போடப்பட்டது.

''ஏன் நான் துன்ன மாட்டேனா''

இன்னொரு ஆள் கேட்க, அவன் எல்லாருக்கும் ஒவ்வொரு ஆம்லெட் வைத்துக் கொண்டு போனான்.

''அந்த எம்.எல்.ஏ. எனக்குச் சொந்தம் ஆகணும்பா, எனக்குன்னு ஸ்பெஷலா கவனிப்பாங்க.''

''நீ கேட்டா கொடுத்துடுவாங்களா''

''நீ குரலு கொடுத்தே வேலையை முடிச்சிக்கற''

''குரலு கொடுத்தாத்தான் ஜெயிக்க முடியும்.''

சாப்பிட்டுக் கொண்டே பேசினான்.

வாயில் ரசம் வழிந்தது.

பார்க்க அருவருப்பாக இருந்தது.

''கொஞ்சம் மோர் கொடுங்கப்பா''

மறுபடியும் கத்தினார்கள்.

யாரோ ஒரு சிறிய டம்ளரில் முக்கால் டம்ளர் மோர் எடுத்துக் கொண்டு வந்தான்.

''நம்மகிட்ட இல்லீங்களே எதிர்வீட்டுக்குப் போய் வாங்கிட்டு வரேன்''

யாருடைய அனுமதியும் இல்லாமல் தாத்தாவின் இலையில் மோரைக் கவிழ்த்தான். லேசான புளித்த வாசனையுடன் மோர் சுற்றி ஓடியது.

தாத்தா பிசைந்து கொண்டார்.

''நெத்திலி தொகையல் போடட்டுமா''

''வேணாம்''

''கவுச்ச சாப்பிட மாட்டீங்களா''

''இப்போ சாப்பிடறதில்லை. ஜீரணம் ஆறதில்லை.''

''அப்ப என்னதான் தொட்டுப்பீங்க''

''ஊறுகாய் இருக்காதா''

''இருக்கு. இருக்கு ஊறுகாய் இருக்கு''

''அப்போ ஊறுகாய் போடு''

தாத்தா ஊறுகாயைத் தொட்டுக் கொண்டு மோர்சாதம் சாப்பிட்டார்.

அங்கங்கே மோர் உண்டா என்று குரல் வர இதோடு முடிந்தது என்று விஷயம் சொல்லப்பட எல்லோரும் இலைவிட்டு எழுந்திருந்தார்கள்.

வாசல் கூட்டம் பரபரப்பாயிற்று.

''போறவங்களெல்லாம் அந்த கேட் வழியா போயிடணும். வரவங்க இந்த கேட் வழியா வரணும்.''

''ஏம்ப்பா... சாப்ட்ட பிறகு எல்லாத்தையும் சுத்தம் பண்ணுங்க. அப்புறம் அடுத்தது பெரிய கேட்டை திறங்க.''

எம்.எல்.ஏ. உத்தரவு போட்டார். சாப்பிட்டவர்கள் சிறிய சந்தின் வழியாக முந்தி அடித்துக் கொண்டு வெளியே வந்தார்கள். தாத்தாவுக்கு வழி விட்டார்கள்.

''எம்.எல்.ஏ. கிட்ட சொல்லலையேடா.''

''அதெல்லாம் அப்புறம் சொல்லிக்கலாம் தாத்தா. வாங்க.''

அவரை கூட்டத்தைவிட்டு அப்புறப் படுத்தினான்.

''ஒரு மணிநேரத்துல இன்னும் மூணாம்பந்தி போடு வாங்க. அந்தப் பந்திக்கு போய் உட்கார்ந்துக் கலாமா.''

யாரோ ஒருவர் உரத்த குரலில் கேட்க, இரண்டு மூன்றுபேர் நான் தயார் என்று சொன்னார்கள்.

கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது.

அவர்களைத் தாண்டி வரும்போது வாசற்கதவு திறக்கப் பட்டு கும்பல் அந்த எம்.எல்.ஏ. வீட்டிற்குள் ஓடுவது தெரிந்தது.

தாத்தாவை இடித்துவிடுவார்கள் என்பதால் அவன் சுவரோரம் தாத்தாவை நிற்கவைத்து அவரை மறைப்பாக இழுத்துக் கொண்டான். கிட்டத்தட்ட ஒரு அறுநூறு ஏழு நூறு பேர்கள் ஓடினார்கள். அப்போது அவர்களோடு சாப் பிட்டவனும் அவர்களோடு கலந்து கதவு நோக்கி ஓடினான்.

''பசியெடுத்து சாப்பிடணும். பல்லுல பரபரப்பு ஏற்பட்டு சாப்பிடக்கூடாது. சாப்டுகிட்டே இருக்கறதுல ஆசை வந்துடுச்சுன்னா ரொம்ப கஷ்டம்.''

தாத்தா மிருதுவாகச் சொன்னார்.

அவனுக்கு அவர் பேசியது விளங்கவில்லை. மெல்ல தாத்தாவை அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் வந்தான்.

தாத்தா வெகுதூரம் ஓடிவந்தவர் போல் சுருண்டு படுத்துக் கொண்டார். அயர்ந்து தூங்கினார்.

அங்கு சைக்கிள்கள் முன்னும், பின்னும் பறந்தன. என்ன என்று தடுத்து விசாரித்த போது எம்.எல்.ஏ வீட்டில் சாப்பாடு இல்லை என்று சொன்னதால் நானூறு பேருக்கு மேல் கலவரத்தில் ஈடுபட்டதாகவும், அவர்களை வரிசையில் நிற்கவைத்து ஆளுக்கு ஐம்பது ரூபாய் தருகிறேன் என்று எம்.எல்.ஏ. சொன்னதாகவும், அப்படி ஐம்பது ரூபாய் வாங்க, சாப்பிட்டவர்களும் முன் வந்ததாகவும் யாரோ காட்டிக் கொடுக்க அடிதடி ரகளை ஏற்பட்டதாகவும், உள்ளங்கையை முகர்ந்து பார்த்துட்டு ஐம்பது ரூபாய் தரப்பட்டதாகவும் சொன்னார்கள்.

அடிதடி ரகளை நடந்தாலும் இரண்டுபேருக்கு தையல் போடும்படியான காயம் ஏற்பட்டாலும் எதுவும் போலீஸில் புகார் செய்யப்படவில்லை என்றும், எல்லோரும் கலைந்து போய்விட்டார்கள் என்றும் சொல்லப்பட்டது.

தினப்பத்திரிகையில் அமோகமான விருந்து நடந்தது என்றும், அமைதியாக ஆறாயிரம் பேர் சாப்பிட்டார்கள் என்றும் கணக்குச் சொல்லப்பட்டிருந்தது.

''ஆறாயிரம் பேர் சாப்டாங்களாம் பெரிய புண்ணிய மில்ல தாத்தா.''

மனோகரன் கேட்டான்.

''பசிக்கு சோறுபோட்டா புண்ணியம். ருசிக்கு போட்டா. சோறு இத்தினி ருசியா சாப்பிட்டவன் நாளைக்கு பழையதுதானே சாப்பிடணும். போய் கோயில்ல உண்டைகட்டி வாங்கித்தானே சாப்பிடணும். சோளக் கஞ்சியைத் தானே குடிக்கணும். அவன் மனசுல எவ்வளவு ஏக்கமிருக்கும். இது பாவமா, புண்ணியமா, அப்போ தெரியும். இத்தினி அடிதடி நடந்ததே பாவமா, புண்ணியமா பின்னால தெரியும்.''

''அவரு என்ன பண்ணுவாரு தாத்தா. எம்.எல்.ஏ. மேலயா தப்பு. இவங்களும் முட்டாள்தனமா அடிச்சுகிட்டாங்க.''

''மிருகத்தைத் தின்னா மிருகம்தானே வெளியில் வரும். கர்வத்துக்கு சோறு போட்டீங்க. திங்கறவனும் கர்வம் பிடிச்சு ஆடுவான். நல்ல இடத்துல சாப்பிடணும். நல்ல கையால சாப்பிடணும். அப்போதான் நல்ல புத்தியா இருக்க முடியும்.

சாப்பாடு ரொம்ப பெரிய விஷயம் மனோகரா. உள்ள போறது பெரிய விடியற்காலை மலமாவோ, சிறுநீராகவோ வரதில்லை. புத்தியாகவும் வெளிய வருது. பேச்சாகவும் வெளிய வருது. பேச்சு மிருகத்தனமா இருந்தா சாப்பிடறவன் மட்டும் பாதிக்கப்படலை. சாப்பிடாத யாரோ சாதுக்களும் பாதிக்கப்படறாங்க.

மனோகரா இனிமேல் மாமிசம் சாப்பிடாத. ஓடி ஆடி உழைக்கறவன் உடம்புல இருக்கற நெருப்பு அந்த மாமிசத் தைப் பொசுக்கும். உட்கார்ந்து வேலை செய்யறவனுக்கு இத்தினி கொழுப்பு எதுக்கு. வயித்துல இருக்கற நெருப்பு மாமிசத்தை எரிக்க முடியாத வெளிய வந்து கக்கும்.

மரம் வெட்டறவன், பளு தூக்கறவன், ஏர் உழுறவன், கல்லு உடைக்கறவன் மாமிசம் சாப்பிடலாம். ஆபீஸ் கணக்கு எழுதறவன், கமிஷன் ஏஜன்ட் மாமிசம் சாப்பிட்டா தப்புதான் நடக்கும். உணவு சரிமானம் ஆகலைன்னா அது விஷம். அது கைகாலை மட்டும் உடைக்காது. மனசை உடைக்கும். புத்தியைச் சிதறடிக்கும். கைகால் நசுங்கினா உன்னோட போச்சு. புத்தி சிதறினா சுத்தியிருக்கறவங்க எல் லோருக்கும் கஷ்டம். ஒரு ஆள் கோபம் பலபேரைத் துடிக்க வைக்கும். இன்னிக்கு உலகம் தின்னுத்தின்னு துடிச்சு கிட்டிருக்கு.

கஞ்சி வெள்ளம்னு மலையாளத்தான் சாப்பிடுவான். பழையதுன்னு நாம சாப்பிடுவோம். மோர்கலந்த பழையது.

கிச்சிலி ஊறுகாய். நீராகாரமா இருக்கறதுனால வயிறும் நிறையும். ஜீரணமும் ஆகும். காலையில ஆறு மணிக்கு எழுப்பி பல் தேய்ச்சபிறகு கொடுப்பாங்க. எட்டு மணிக்குள்ள பரபரன்னு வயிறு சுத்தமாயிடும். ஒன்பது மணிக்குக் குளிச்சுட்டு இட்லியோ, தோசையோ சாப்டுட்டு பத்து மணிக்கு பள்ளிக்கூடம் போவோம். வாரத்துக்கு ஒருவாட்டி மாமிசம். ஞாயித்துக்கிழமை மட்டும் மாமிசம் சாப்பிட்டா வயலுக்குப் போகணும். இல்ல மலை ஏறணும். என்னென்னமோ சாப்பிடறீங்களேடா, போஷாக்கு போஷாக்குன்னு உட்கார்ந்திருக்கீங்க.

பொண்ணுங்களெல்லாம் ரொம்ப பிரமாண்டமா இருக்கு. பத்துப் பொண்ணுக்கு ஒரு பொண்ணு குண்டா இருக்கும். இப்போ பத்துப் பொண்ணுக்கு எட்டுப் பொண்ணு குண்டா இருக்கு. நல்லதில்லையே.''

தாத்தா தொடர்ந்து பேசிக்கொண்டே போனார். சிறிது நேரம் கவனித்து அவர் எழுந்திருந்தார்.

''உனக்கு என்னத்துக்கு இப்போ. நீ போய் உன் வேலையைக் கவனி. எப்போ காலேஜ் போகணும்.''

''இன்னும் ஒரு மாசம் இருக்கு தாத்தா ஆரம்பிக்கறபோது ஸ்ட்ரைக் வரும்னு சொல்றாங்க.''

''நீ கேட்ட படிப்பு கிடைச்சுதா''

''கிடைச்சிருக்கு தாத்தா''

''என்ன கேட்ட''

''ஆங்கில இலக்கியம்.''

''எதுக்கு இதைப் படிக்கற''

''பட்டணத்து பசங்களெல்லாம் நம்மூர் பசங்களுக்கு இங்கிலீஷ் தெரியாது அப்படின்னு அடிக்கடி நினைக்கறாங்க. எனக்கு ரொம்ப வருத்தம்.''

''இங்கிலீஷ் தெரியலைன்னா வருத்தப்படணுமா.''

''இல்லை தாத்தா. இங்கிலீஷ் தெரிஞ்சுக்கறது நல்லதுன்னு எனக்குத் தெரியும்.''

''அப்படிச் சொல்லு, இது நல்லாயிருக்கு. யாரோ நம்மள குறை சொல்றாங்கன்னு செய்ய முடியுமா. எதுக்கு இங்கிலீஷ் படிக்கணும்.''

''நிறைய புஸ்தகங்கள் இருக்கு தாத்தா. படிக்கறதுக்கு நிறைய இருக்கு.''

தாத்தா வாய்விட்டுச் சிரித்தார். அணைத்து கொண்டார்.

''நிறையப் படிச்சு என்ன பண்ணப்போற''

''படிக்க வேணாங்கறியா''

''இல்லை. படி... படி... ஒரு நிலையில போதும் படிச்சதுன்னு உனக்கே தோணும். அப்போ நீயா கீழ போட்டுடுவ. எதுக்கு நான் சொல்லணும். சும்மா என் கூடயே சுத்திக் கிட்டிருக்காத. போ வெளிய போய் உன் ஸ்நேகிதக் காரங்களோட பேசு''

வெளியே போய் பையன்களோட பேசியபோது விதம்விதமான காதற்கதைகள் பேசினார்கள்.

நடராஜையும், வேணியையும் இன்னும் அதிகம் கதைகள் கட்டிவிட்டார்கள். ஆறாம் வகுப்பிலிருந்தே அவர்களுக்கு காதல் ஆரம்பித்து விட்டது என்று ஒருபையன் சொல்ல, உண்மையா என்று மனோகரன் உலுக்கிக் கேட்க. இருக்கலாம். இருந்திருக்கக்கூடும் என்று அவன் பதில் சொன்னான்.

இதேமாதிரி மெட்ராஸ்ல ரெண்டு லவ்வர்ஸ். என்று வெறொருவன் ஆரம்பிக்க மாணவர் கூட்டம் அப்படியே தலைதிருப்பி அவனைப் பார்த்தது.

''உங்க அக்காவைப் பத்தி பேசலாமா'' என்று ஆர்வம் காட்டிய ஒரு மாணவனைத் தடுத்து நிறுத்தி விசாரிக்க

வேண்டுமென்ற வேகம் மனோகரனுக்கு எழுந்தது. அடக்கிக் கொண்டான்.

"கம்ப்யூட்டர் கத்துக்கடா."

"எதுக்கு"

"நிறைய செக்ஸ்படம் பார்க்கலாம்" என்பதுதான் இவர்களிடையே பேச்சாக இருந்தது.

செக்ஸெல்லாம் வேண்டாம் என்ற மாணவர்கள் வன்முறைக்கு இலக்கானார்கள்.

"செக்ஸ் படம் பார்க்காம இருந்தாதான் பாடி டைட்டா இருக்கும். இழுத்துப் பத்துக்கிலோ தோள்ள போட்டுகிட்டு ஸ்காட் பண்ணுவேன். இருவத்தஞ்சு ஸ்காட் பண்ணுவேன். தைஸ் எப்படியிருக்கு பார்த்தியா திரும்பத் திரும்ப புஜங்களையும், தொடைகளையும் முறுக்கி, முறுக்கி காட்டுவார்கள். முஷ்டியை மடக்கிக் கொண்டு சுவரில் குத்துவார்கள்.

ஒருவன் பெயர் ராமன். இன்னொருவன் பெயர் சத்தியமூர்த்தி. அந்த இரண்டுபேரும் ஒரே வகுப்பில் முதன்மையாக வருவதற்கு அவர்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டிருப்பவர்கள். தங்களுடைய மதிப் பெண்களுக்கும் மற்றவர் மதிப்பெண்களுக்கும் மிகப்பெரிய வித்தியாசம் இருந்தது. அந்த இரண்டுபேரும் அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் அல்ல. உத்தியோக நிமித்தம் அவர்களுடைய தகப்பனார்கள் அங்கு மாற்றல் செய்யப்பட அந்தப் பள்ளியில் இரண்டு வருடங்களுக்கு முன்பு வந்து சேர்ந்து பள்ளியிறுதியை முடித்து இப்போது கல்லூரிக்கு மனுபோட்டு காத்திருக்கிறார்கள். நிச்சயமாக கல்லூரிகளில் அவர்களுக்கு இடம் கிடைக்கும்.

சற்று முன்னேறிய ஜாதி என்பதால் அவர்கள் வாங்கிய மதிப்பெண்ணிற்கு பொறியியல் கல்லூரியிலோ, மருத்துவ

கல்லூரியிலோ இடம் கிடைக்காது. ஆனால் கலைக் கல்லூரியில் கூப்பிட்டு வைத்து மரியாதை கொடுப்பார்கள். கலைக்கல்லூரியில் படிப்பதைத் தவிர அந்த ஊரில் புதிதாக ஆரம்பித்திருந்த கம்ப்யூட்டர் கல்லூரியிலும் சேர்ந்து தங்களை அவர்கள் பலப்படுத்திக் கொள்ள துடித்துக் கொண்டிருந்தார்கள்.

சத்தியமூர்த்தி வீட்டில், சென்னையிலுள்ள அவன் மாமாவின் வீட்டிலிருந்து எடுத்து வந்த பழைய கம்ப்யூட்டர் ஒன்று இருந்தது. அதற்கு இன்டர்நெட் கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருந்தது. அதை வைத்துக் கொண்டு பல்வேறு விஷயங்களை அவர்கள் தெரிந்து கொண்டிருந்தார்கள். அதை எப்பொழுதுதெல்லாம் ஒரு சபையில் போட்டு மற்ற மாணவர்களைத் திகைக்க வைக்க முடியுமோ, திகைக்க வைத்துக் கொண்டிருந்தார்கள். எப்போது அந்த மாதிரி விஷயங்கள் சபை ஏறாதோ அப்பொழுது வாயை மூடிக் கொண்டிருந்தார்கள்.

மெட்ராஸ்லேர்ந்து டில்லிக்கு டிக்கெட் இருக்கான்னு தெரியணும்டா. எங்க அக்காவைப் பார்க்க எங்கம்மா போகணும்னு சொல்றாங்க. நான் மெட்ராஸுக்கு போய் டிக்கெட் இருக்கான்னு பார்த்துட்டு அப்புறம் எங்கம்மாவுக்கு போன் பண்ணி வரவழைச்சு என்று, ஒரு பையன் சொல்லிக் கொண்டிருந்தபோதே இதுக்கு ஏன் நீ மெட்ராஸ் போகணும். நான் பார்த்துச் சொல்றேன். எந்த வண்டிக்குப் போகணும் என்று அவன் சொல்லி இந்தெந்த வண்டியில, இன்னென்ன தேதியில் இடம் இருக்கிறது என்று சொல்லி, சென்னையிலுள்ள டிராவல் ஏஜென்டிற்கு தொடர்பு கொண்டு டிக்கெட் எடுக்கச் சொல்லி பையன், தகப்பார், தாயார் என்று மூவருக்கும் பயணச் சீட்டு வாங்க ஏற்பாடு செய்தான்.

பையனின் வீடு சந்தோஷப்பட்டது. காசோடு பையனை அனுப்பியது.

சத்தியமூர்த்தியும் உடன் போனான். டிராவல் ஏஜென்ட்டிடம் அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"எங்கள் ஊரிலிருந்து நான்தான் பயணச்சீட்டிற்கு ஏற்பாடு செய்தேன். இது என் விலாசம். ஒருமுறை வந்து போகவும், வியாபாரத் தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்தால் எனக்குக் குறிப்பிட்ட கமிஷன் கொடுத்துவிடவும் என்று சொல்ல டிராவல் ஏஜென்ட் ஒத்துக் கொண்டார்.

கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு இருபது இருபத்தைந்து பயணச்சீட்டுக்கள் அவன் முன்பதிவு செய்ய ஏற்பாடு செய்தான். விமானப் பயணத்தைக்கூட அவனால் ஏற்பாடு செய்ய முடிந்தது. ஒரு நாளைக்கு முன்னூறு நானூறு ரூபாய் காசு கிடைத்தது.

அவன் வீடு சந்தோஷப்பட்டது.

சத்தியமூர்த்தி வீட்டில் உட்கார்ந்து இந்த ஏற்பாடுகள் செய்ய, ராமன் வெளியே போய் அக்கம் பக்கத்திலுள்ள கிராமங்களுக்கு இந்த வசதியைப் பற்றி எடுத்துச் சொல்லி விமானப் பயணச்சீட்டு ஏற்பாடு செய்ய, கூடுதலாகவே காசு கிடைத்தது. அவர்கள் மேலும் கம்ப்யூட்டர் பற்றிப் படிக்க வாரத்திற்கு இரண்டுநாள் சென்னை போய் வந்தார்கள்.

ராமன் ஒரு வங்கியைப் பார்த்துத் தங்களைப் பற்றி விவரித்து புதிய கணினிக்கு கடன் வாங்கினான். பழைய கணினியையும் விலைக்கு வாங்கி வந்தான். கணினி பயிற்சி மையம் துவங்கினான். ஆறு, ஏழு பேர்கள் சேர்ந்தார்கள். காலை ஏழு மணியிலிருந்து ஒன்பது மணிவரை பிற்பகல் மூன்றிலிருந்து ஆறுவரை என்றுதான் வகுப்பு இருக்கும். அந்த வகுப்புகள் கடன் அடையவும், கை காசு வைத்துக் கொள்ளவும் சௌகரியமாக இருந்தது. ஆனால் அவர்கள்

தங்களை மாணவர்களாக காட்டிக்கொள்ளாமல் சட் டென்று தங்கள் உடைகளை வித்தியாசப் படுத்தினார்கள். முழுக்கை சட்டையும் போட்டு நல்ல பேண்ட் உடுத்தி ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிற இளைஞன் போல தோற்றம் காண்பித்தார்கள். ஆச்சரியமாக மனோகரன் அவர்களைப் பார்த்து, "ஏன்டா ஏன் டிரஸ் மாத்திட்டீங்க" என்று கேட்டான்.

மற்ற மாணவர்கள் இருக்கும்போது அவர்கள் பதில் சொல்லவில்லை. அருகேயிருந்த மாணவர்கள் விலகி வேறு எதற்காகவோ போக மனோகரனைத் தடுத்து நிறுத் தினார்கள்.

"அப்போதுதான் எங்களை பையனுங்கன்னு நினைக்க மாட்டாங்க. டீச்சர்ஸ் நினைப்பாங்க. ட்ரெஸ் ரொம்ப முக்கியம் மனோகரா. கன்னாபின்னான்னு ட்ரெஸ் பண்ணக்கூடாது. காலேஜுக்கு நாங்க இந்த ட்ரெஸ்லதான் வருவோம். அப்போதான் மத்தப் பசங்க மரியாதையா பேசு வாங்க. இல்லைன்னா, வாடா, போடான்னு பேசுவாங்க. அவங்க பாஷையில பேசுவாங்க எங்ககிட்ட பாடம் சொல்லித்தர எங்ககிட்ட அப்படிப் பேசறதுக்கு நாங்க விட மாட்டோம். அதேநேரம் எப்பவும் நாங்க இப்படியே இருக்க மாட்டோம்.

சாயந்தரமானா டீ ஷர்ட், ஜீன்ஸ்ன்னு மாறுவோம். எல்லாரும் ஆவலா பார்ப்பாங்க. ஏய் காலையில ஃப்புல் ஷர்ட் பேண்டுல இருந்தான். இப்ப இவ்ளோ ஜாலியா இருக்கானே, பார்க்கறதுக்கு சூர்யா மாதிரியே இருக்கான். அப்படின்னு நினைச்சுக்கும் என்று சொல்லிவிட்டு வாய்விட்டுச் சிரித்தார்கள்.

மனோகரன் திகைப்போடு அவர்களைப் பார்த்தான்.

"அப்படி நினைச்சுகிட்டு மேல என்ன ஆகும்"

''நினைச்சுகிட்டா போதும். மேல ஒன்னும் ஆக வேண்டாம். ஆகக்கூடாது.''

அவர்கள் இரண்டு பேரும் திட்டவட்டமாக ஒரே குரலில் பேசினார்கள்.

''அப்போ எதுக்காக டி-ஷர்ட் போட்டுக்கணும். அவங்களைக் கவர்வதனுடைய நோக்கம் என்ன''

''வெறும் கவர்ச்சி அவளோதான். நாங்க யாரையும் காதலிக்க முடியாது. காதலிச்சு கல்யாணம் பண்ணிக்க முடியாது. இதோ மாட்டிகிட்டு முழிக்கிறானுங்களே லவ்லவ்வுனு அந்தமாதிரி தப்பு நாங்க பண்ணமாட்டோம்.''

''ஏன் லவ் பண்ணா தப்பா''

மனோகரன் வேகமாகக் கேட்டான்.

''தப்பில்லை. முட்டாள்தனம். பி.எஸ்.ஸி. கம்ப்யூட்டர் ஸயின்ஸீன்னு ஒரு சர்டிபிகேட் வாங்கிப்போம். எனக்குத் தெரியும். நம்ம காலேஜ்ல இருக்கற பேராசிரியருக்கு ஒன்னும் கத்துக் கொடுக்கத் தெரியாதுன்னு சொல்லி இங்க நாங்க கத்துக் கொடுப்போம்.''

ராமன் நெஞ்சு நிமிர்த்திப் பேசினான்.

''உங்களுக்குக் கத்துக்கொடுக்கறதுக்கு முதல்ல நாங்க கத்துக்க வேணாமா, அடுத்த மாசம் பத்துநாள் லீவு போட்டுட்டு பெங்களூர் போறோம். அந்த பத்துநாளும் கடுமையான பயிற்சி. க்ராஷ்கோர்ஸ்.''

''சர்டிபிகேட் தருவாங்களா''

''அது கொடுத்தா கொடுக்கறான் கொடுக்காட்டி போறான். இப்போவெல்லாம் சர்டிபிகேட் முக்கியமில்லை. உனக்கு இந்த வேலை தெரியுமா. எனக்குத் தெரியும். செய்து காமி. செய்து காமிக்கறேன். செய்து காட்டினா உடனே வேலை தருவான். அதே மாதிரி பி.எஸ்.ஸி. கம்ப்யூட்டர் சயின்ஸ் முடிச்சு வெளியே இறங்கினதும் குறைஞ்ச பட்சம் பனிரெண்டாயிரம் ரூபா காசு.''

''எவ்ளோ''

''பன்னெண்டாயிரம் சம்பளம்''

மனோகரனுக்கு மூச்சு அடைத்தது. அந்த இரண்டு நண்பர்களையும் விழிவிரியப் பார்த்தான். உள்ளே பொறாமை கனன்று எரிவது தெரிந்தது.

சரி நிறுத்து. அது இவன் பிறந்த வேளை. இவன் சாமர்த்தியம். இவனுக்கு சொல்லிக் கொடுக்கப் பட்ட விதம் என்று அடக்கிக் கொண்டான்.

மல்லாட்டை பயிரும் அரிசி கமிஷன் ஏஜன்ஸியும் மிகப் பெரிய வியாபாரமாக மற்றவர்கள் நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில், இந்த இளைஞர்கள் வேறு விதமாக வாணவேடிக்கை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், இவர்களுக்கு அருகேபோய் என்ன விதமான வேடிக்கை. என்ன விதமான வாணம் என்று பார்ப்பதற்குக்கூட அந்த ஊர் இளைஞர்களுக்குத் தெரியவில்லை.

இந்தமுறை அறுபதாயிரம் ரூபாயா. நாப்பதாயிரம் ரூபா கடன் வாங்கினோமா. இருபதாயிரம்ரூபா கையிலேர்ந்து போட்டோமா நாப்பதாயிரம் ரூபாய்க்கு ஒரு மாச வட்டியே ரெண்டாயிரம் ரூபாயா, இருவதாயிரம் ரூபா காசுக்கு வட்டியே ஒரு ஐநூறு ரூபா வச்சுக்கோ, மொத்தம் ரெண்டாயிரத்து ஐநூறு ரூபா.

''நாப்பது ரூபாய்க்கு வாங்கினதை எண்பது ரூபாய்க்கு தள்ளினோம்னா நல்ல காசு. எழுவத்தஞ்சுக்கு தள்ளினோம்னா தப்பில்லை. எழுவது ரூபாய்க்கு குறையக்கூடாது. மல்லாட்டை பயிறு வாங்கி அடுக்கி வச்சிடணும். எலி தின்னாத பார்த்துக்கணும், உள்ள பயிறு வரத்து ஜாஸ்தியா இருந்ததுன்னு வச்சுக்கோங்க டப்புனு பார்ட்டிய மடக்கிப்

பிடிச்சு கொடுத்துடணும். பார்ட்டி வரலை. வரத்துக்கு பதினைஞ்நாள் ஆகும்னா வாங்க முடியாத விலை சொல்லணும். சீஸன் முடிஞ்சுபோச்சு, இதான் மல்லாட்டை பயிறு. வேணும்னா எடுத்துகிட்டுப் போ. இனிமே மல்லாட்டை பயிறு வராது, அப்படின்னு உதாறு விடணும்.

மல்லாட்டை பயிறு வருமா? வராதா? எப்படித் தெரிஞ்சுக்கறது.

மோட்டார் சைக்கிள் எடுத்துகிட்டு சுத்துப் பத்து கிராமம் முழுக்கச் சுத்தணும். என்ன மாணிக்கம் எப்போ அறுக்கற, என்ன செல்வராஜ் எப்போ எடுக்கற. அப்படின்னு பயிறு பண்றவங்களா பார்த்து கேட்டுகிட்டிருக்கணும். எங்கே யாவது நிறுத்தி செடியைப் பிடுங்கி பயிறு பார்க்கணும். பிஞ்சா இருந்ததுன்னா இப்போதைக்கு இல்லை. அடுத்த வாரத்துல மிஞ்சிமிஞ்சிப் போச்சுன்னா இருநூறு மூட்டை தான் வரும் அப்படின்னு இருந்தா கொண்டாட்டம். அப்படியே போய் செல்வராஜ் பயிறு எப்படி வருது என்னான்னு தெரியலை, இருந்தாலும் வச்சுக்கோ. பத்தாயிரம் கையில் வச்சுக்கோ. மொத்தமும் எனக்குத்தான். இந்தா அட்வான்ஸ் வாங்கு. எனக்குக் கொடுத்துடு அப்படின்னு போய் ஆளை மடக்கி வீட்ல வெத்தலை பாக்கு குங்குமம் மஞ்சளோட கொடுத்துட்டு வந்துடணும், அது ஒரு டாட்டிக்ஸ் வீட்டுக்கு வரத ஏன் வேணாங்கற அப்படின்னு பொம்பளை சொல்லுவா. காசு வாங்கிட்டான் இல்ல அப்புறம் பார்த்துக்க வேண்டியதுதான். மீறி கேட்கறதுக்கும் ஆளில்லை. ஆந்திரா பயிறு வந்துடுச்சி, உங்ககிட்ட பயிறு வாங்கி அடுத்த வருஷம் தான் விக்கப்போறேன். சும்மா நசநசன்னு கூவாத. அப்படின்னு அவராண்ட பேசிப்பேசி சரி ஒழி எடுத்துட்டு போ அப்படின்ற மாதிரி மல்லாட்டை எடுக்கச் சொல்ல காசு கொடுத்து பயிறு எடுக்கும் போது

நின்னு மூட்டையா கட்டி ஏத்தி கொண்டாந்து போட்டுட ணும். வீட்டுப் பொம்பளைங்களை வச்சு ரகம் பிரிக்கணும்.

என் தம்பி விழுப்புரம் பக்கம் கரும்புபோட்டு வெல்லம் காய்ச்சுவான். அந்த வெல்லத்தைக் கோணி மூட்டையில் கொண்ணாந்துடணும். தனியா வைக்கணும், வெல்லமும் வந்துடுச்சு, வேர்க்கடலை வந்துடுச்சு, என்ன பண்ணலாம் சொல்லு. என் தம்பி ஒருத்தன் ப்ளஸ்டூ படிக்கறான். அவன் பேர்ல கம்பெனி ஆரம்பிச்சு வேர்க்கடலை வறுத்து பாகு காய்ச்சி பர்பி அடிச்சிடுவோம். நூறுமிட்டாய் பொட்டலம் கட்டி நாப்பது ரூபாய் நிக்கும். எண்பது ரூபாய்க்கு வித்து டணும். இத்தினியும் காலேஜ்போய் பாடம் படிச்சுகிட்டே செய்யலாம், என்ன ஒன்னு நல்ல படியான மோட்டார் சைக்கிள் இருக்கணும். ரெண்டு மணி நேரத்துல ஒரு லட்சரூபா கடன் கொடுக்கறதுக்கு ஆள் தயாரா இருக்கணும் அல்லது நாமளே வச்சுகிட்டிருக்கணும்.

எங்களுக்கு தாய்மாமா மூணுபேர். அதுல ரெண்டு பேருக்கு பொண்ணு இருக்கு. எனக்குப் அதுங்களுக்கும் ஏழு வயசு வித்தியாசம். எந்த மாமன் துட்டு தரானோ. அந்தப் பொண்ணக் கட்டிக்கப்போறேன். ஒருமாமன் கெட்டிக் காரன் பர்பி போடறது பெரியபாடுன்னு வறுத்த வேர்க் கடலையில மசாலா கலந்து ஒரு பொட்டலம் ரெண்டு ரூபாய் அடக்கம் ஆகுது. மூணு ரூபாய்க்கு கொடுக்கறாரு. அஞ்சு ரூபாய்க்கு வெளிய விக்கறான். பாம்பேல ஒரு பார்ட்டி சாக்லேட்டுல வேர்க்கடலைய வறுத்து விக்கறான். அதுலயே பாதாம் பிஸ்தா போட்டுடறான். அட்டையில பண்ணி பதினஞ்சு ரூபாய்க்கு கொடுக்கறான். இருவது ரூபாய்க்கு விக்கறாங்க. பேய்த்தனமா விக்கறான். இங்க செய்யலாமா. செய்தா போகுமா. பாம்பேல இருபது ரூபா கொடுத்து வாங்குவாங்க. நம்மாளுங்க இருவது ரூபா கொடுத்து வாங்குவானா. இட்லி சாம்பார் தோசை

தின்னுடலாம்னு பார்ப்பான். எங்க மாமா என்ன பண்றாரு. கோனா செய்யாத வெண்ணிலா கப் மாதிரி கொஞ்சம் தட்டை கப்பா பண்றாரு. அது சாதா வேர்க்கடலை மாதிரி போகலை. ஆனா பத்திக்கும்னு தோணுது. பட்டாணிக்கு இங்கிலீஷ்ல பீநட்டுன்னு பேராம். வெள்ளைக்காரனுக்கு வேற பேரா கிடைக்கலை. சொல்றதுக்கே கஷ்டமா இருக்கு.''

வேறு சில நண்பர்கள் காலை ஆட்டிக்கொண்டு நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சட்டையைப் பின்னுக்குத் தள்ளி. தங்கச் சங்கிலியைக் காட்டிக் கொண்டு பேச, அவர்களையும் மனோகரன் வியப்போடு பார்த்திருக்கிறான்.

''டேய் மனோகரா, அந்த சத்தியமூர்த்தி, ராமன் ரெண்டு பேரும் உனக்குப் ஃப்ரெண்டுதானே''

திடீரென்று வேர்க்கடலை மைனர் கேள்வி கேட்டார்.

''ஆமா. என்ன சமாச்சாரம்.''

''கம்யூட்டர்ல கெட்ட படம் பார்க்கறானுங்கடா, ரொம்ப பச்சைபச்சையா பார்க்கறானுங்கடா. இன்டர் நெட்டுல துட்டு கட்டிட்டா நானூறு படம் பார்க்கலாம். ஆனா காட்டமாட்டேன்றானுங்க, இவன் மட்டும் இருநூறு ரூபா கொடுத்து பார்த்துட்டு வந்திருக்கறானுங்க. மூஞ்சி சிவந்து போச்சு. இவனுக்கு பேச்சே வரலை போயேன். எப்படியாவது ஏற்பாடு பண்றா. ஒரு அரைமணிநேரம் டூ ஹண்ட்ரட் ரூபீஸ் தரேன்''

முகத்துக்கு நேரே ஒரு கேவலமான வேலை வந்து நின்றது. அந்தப் பேச்சே மனதிற்கு படபடப்பைக் கொடுக் கிறது. உடம்பில் ஒரு முறுகலைக் கொடுக்கிறது. பார்த்தால் எவ்வளவு மோசமான விளைவுகள் ஏற்படும். ஆனால், இவர்களெல்லாம் ஏதோ சாதாரணமாகப் பேசுகிறார்கள். எனக்குத்தான் சட்டென்று வியர்வை பொங்கிவிடுகிறது.

மனோகரன் ஏதோ வேலை இருப்பதுபோல நகர்ந்து போனான். அவனோடு படித்த இன்னொரு நண்பனைச் சந்தித்தான்.

''நான் கரெஸ்ல படிக்கறேண்டா. காலேஜெல்லாம் சரியா வராது. எனக்கு வேற தொழில் இருக்கு.''

''மல்லாட்டை பயிறுதானே. இவங்களெல்லாம் செய்து கிட்டுதானே. படிக்கறாங்க. மல்லாட்டை பயிறுல நல்ல லாபம்ப்பா.''

''உனக்குத் தெரிஞ்சது அவ்ளோதான். அஞ்சுரூபாய்க்கு வாங்கி பத்து ரூபாய்க்கு வித்தோம்னா ஏதாவது சொல்லு வானுங்க. நான் நம்பமாட்டேன். பத்துக்கு நாலு லாபம் கிடைச்சா ஊர்ல இருக்கறவனெல்லாம் வேற தொழில் பண்ணுவானா. பத்து ரூபாய்க்கு ஏழு ரூபாய்க்கு விக்கறதே நாக்கு தள்ளிப்போயிடும். வட்டி கிட்டி போச்சின்னா எட்டணா மிஞ்சும். நம்ம தொழில்தான் உத்தமம் நோவாத நோம்பு நோக்கலாம்.''

''என்ன தொழில்''

''தினம் உதவி செய்யறதுதான்''

''உதவி செய்யறது தொழிலா''

''உதவி செய்துட்டு உதவி வாங்கிக்கறதுதான்''

''என்ன உதவி''

''ஊர் சுத்தி எத்தினி ரோடு போடறான். எத்தனி பைப் அடிக்கறான். எத்தினி போஸ்ட் அடிக்கறான். இதெல்லாம் யார் செய்யறது. கவர்மெண்ட் தானே. காண்ட்ராக்டர் தானே. கவர்மெண்ட்ல ஆள் இருந்தா இந்தமாதிரி காண்ட் ராக்டரைப் பிடிச்சுக்கலாம்.''

''எனக்கு கவர்மெண்ட்ல அதிகாரிங்களைத் தெரியும். ஆனா, அதிகாரிங்களுக்கு என்ன தெரியும். எழுந்திருன்னா

அவன் அலுப்போடு சொன்னான். மனோகரனுக்கு தலைசுற்றியது. தான் எதற்கும் லாயக்கில்லாத தண்டமோ என்ற பயம் ஏற்பட்டது. வெறும் கல்லூரி படிப்பு போதாதோ என்ற கலவரம் வந்தது.

"கம்ப்யூட்டர்ல கெட்டபடம் பார்க்கறாங்க" என்று அந்த கட்சிப் பிரமுகர்களின் நண்பரிடம் சொல்லிப் பார்த்தான்.

"எதுக்குக் கருமாந்தரம் கம்ப்யூட்டர்ல பார்க்கணும். நேரா பார்க்கலாம் வறியா."

மனோகரன் மிரண்டான்.

"போலீஸ் பயமா. அதெல்லாம் நம்மள ஒன்னும் பண்ணாது."

அவன் சந்தித்த பெண்களைப் பற்றி அவன் உரக்க விவரிக்க ஆரம்பிக்க மனோகரன் காது, மனம் இரண்டையும் இறுக்க மூடிக்கொண்டான். நல்ல வேளையாக அவனுக்கு அவசரமாக ஒரு தொலைபேசி அழைப்பு வர, அவன் வேறு பக்கம் திரும்ப, இதுதான் சாக்கு என்று வீட்டிற்கு வந்து உட்கார்ந்து கொண்டான்.

எதற்கு இப்படி பயப்படுகிறேன் என்று தனக்குத்தானே கேள்வி கேட்டுக்கொண்டான்.

உனக்கும் உங்க தாத்தாவைத் தவிர வேற ஒன்னும் தெரியாது. எந்த ஸ்நேகிதனோடும் பழகறது கிடையாது. எது பத்தியும் பேசறது கிடையாது. எப்போவும் தாத்தாவோடயே சுத்திக்கிட்டிருந்தாக்க எப்படி ஜெயிக்க முடியும். எப்போ விஷயம் தெரிஞ்சுக்க முடியும். என்னிக்கு ஃபுல் கை சட்டை போடுவ, அவனா துட்டு சேர்த்து அவனா துணி வாங்கறான். நீ அம்மாவைக் கெஞ்சி, அப்பாவைக் கெஞ்சி சட்டை வாங்கணும். தீபாவளி, பொங்கலுக்குத்தான் துணி எடுத்துத் தராங்க.

இங்கேர்ந்து திடீர்னு கடைக்குப் போறான். ஏ...க்ளாஸ் ரெண்டு டீ-ஷர்ட் எடுக்கறான். உங்கிட்ட ஒரு டீ-சர்ட் கூட கிடையாது. ஒன்னுமே தெரியலை. அப்புறம் எப்படி முன்னேறது. பேசத் தெரியலை அப்புறம் எப்படி புரிஞ்சுக்கறது. கம்ப்யூட்டர் கத்துக்கலாம்னு போய் நிக்கலாமில்ல. அப்பாகிட்ட போய் காசு கேட்கலாமில்ல.

ஒன்று மலையசுத்தவ, இல்ல கோயிலைச் சுத்துவ, இல்ல இந்த ஸ்நேகிதக்காரன்னு மாத்தி மாத்திப்போய் நிப்ப, வெறுமன நின்னு பேந்தப்பேந்த முழிச்சுகிட்டிருப்ப, ஒரு மூட்டை மல்லாட்டை பயிறு வாங்கி விற்க முடியுமா? முடியாது.

அந்த அரசியல்வாதி ஜகதலப்பிரதாபனா இருக்கான். அவனதுல பாதி சாமர்த்தியம் உண்டா. முடியாது. அப்போ... என்ன பண்ணுவ. பி.ஏ. படிச்சுட்டு கவர்மென்ட் வேலை கிடைக்குமான்னு அலைஞ்சு இங்க பத்துநாள் வேலை. அங்க பத்துநாள் வேலைன்னு பொய்யா திரிஞ்சு கிட்டிருப்ப, நீ முன்னேறதுக்குப் பிறந்தவனில்லை, வெறுமன கிடக்கறதுக்குப் பிறந்தவன்.

மனோகரன் முகத்தில் பயம் அப்பியது. கண்களில் கலவரம் தங்கியது.

தாத்தா அவனை ஒருநாள் உற்றுப் பார்த்துவிட்டு என்ன என்று கேட்டார்.

இவரிடம் சொல்ல வேண்டாம் என்று உடனடியாக தீர்மானம் வந்தது.

"ஒன்றுமில்லை" என்று சொன்னான்.

"காலேஜ் திறந்துடுச்சா"

"அடுத்தவாரம் திறக்குது."

"அப்போ நேரம் இருக்கு. மலைக்குப் போய் ஒரு ரெண்டு நாள் தங்கறியா."

"எங்க தாத்தா"

"முனிவர் குகையாண்ட போய் உட்கார்ந்துக்க, நான் எதுனா அனுப்பறேன்."

"எதுக்கு தாத்தா"

"அப்புறம் காலேஜ் போயிட்டோம்னா இங்கெல்லாம் போகமுடியாது. சும்மா போய் இரேன். எதுக்கும் முடியு தான்னு பாரு."

"கம்ப்யூட்டர் கத்துக்கலாம்னு இருக்கேன் தாத்தா, காசு தறியா."

"கம்ப்யூட்டர்தானே கத்துக்கலாம். முதல்ல மலைக்குப் போய் ரெண்டுநாள் இருக்கக் கத்துக்கோ."

"அதனால் என்ன லாபம்"

"போனாதானே தெரியும்"

"நீ போயிருக்கல்ல நீ சொல்லு"

"கம்யூட்டர் கத்துக்கலாமா, வேணாமான்னு அங்க முடிவு பண்ணேன்."

"நான் முடிவு பண்ணிட்டேன். கம்ப்யூட்டர் கத்துகிட்டே ஆகணும்னு"

"ஒன்னும் தப்பில்லை. இன்னொரு தடவை யோசனை பண்ணி, அப்புறமா முடிவு பண்ணலாம். முடிவு பண்ணதையே ரெண்டாந்தரமா யோசனை பண்ணலாம். அதுல ஒன்னும் தப்பில்லை."

"ஏன் தாத்தா."

"என்ன நேரா கம்ப்யூட்டர் கம்பெனிக்கா போகப் போறே. இல்லையே. ரெண்டு வாரம் மூணுவாரம் ஆகுமில்லையா."

"ஆமாம். எப்போ சேரணும்னு கேட்டுக்கலாம். மொள்ள தான் சேர்த்துப்பாங்கன்னா அப்புறம் போகலாம்.. காசு தறியா."

"கேட்டுக்கிட்டு வா, தரேன்"

பேஸிக் கற்றுக்கொடுப்பதற்கு அறுநூறு ரூபாய் என்றும் இதில் அவன் நாற்பது மணிநேரம் கம்ப்யூட்டரோடு செலவழிக்கலாம் என்றும் சொன்னார்கள்.

ஏற்கெனவே ஆரம்பித்த வகுப்பு இருப்பதால் அவைகள் முடிவதற்கு இன்னும் பத்துநாள் ஆக வேண்டும். பத்து நாளைக்குப் பிறகு அவனும் அவனைச் சார்ந்த மூன்று பேரும் புதியதாய் சேர்ந்து கொள்ளலாம் என்று ராமனும், சத்தியமூர்த்தியும் உரத்தகுரலில் கைகால் ஆட்டிக்கொண்டு பேச, அவன் பவ்யமாய் கேட்டுக் கொண்டான். காசோடு மறுநாள் வருவதாகச் சொன்னான்.

"வேண்டாம் சேரும்போது கொடுத்தால் போதும்."

அவர்கள் அலட்சிலயமாகச் சொன்னார்கள்.

அவர்கள் பேச்சில் காசு பற்றி எந்தக் கவலையும் இல்லை என்பதான திமிர் இருந்தது. அதாவது ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்றால், மெல்லக்கொடு என்று சொல் கிறார்கள் என்று ஆச்சரியப்பட்டான்.

தாத்தாவிடம் கம்ப்யூட்டர் கோர்ஸ் பற்றித் தெரிவித் தான்.

தாத்தா சிரித்துக் கொண்டே தலையையாட்டினார்.

"அப்போ காலையில கிளம்பிடு. டிபன் சாப்டுட்டுப் போ. போட்டுக்கிட்டிருக்கற சட்டை வேட்டி போறும். அங்கயே தோய்ச்சு அங்கயே உலர்த்திக்கலாம்."

கிளம்புகிற நேரத்தில் போகவேண்டாமோ என்று தோன்றியது. வேர்க்கடலை வாங்கி விற்கின்ற நண்பர்

களிடம் போனால் மோட்டார் சைக்கிளில் அழைத்துப் போவார்கள். பல்வேறு கிராமங்களுக்கு அழைத்துப் போவார்கள். பல்வேறு கிராமங்களில் வேர்க்கடலை எப்படி விளைந்திருக்கிறது என்று பார்க்கலாம். பார்த்து என்ன... என்ற கேள்வி வந்தது.

அரசியல்வாதியைப் போய் பார்க்கலாமா?

வேண்டாம். அந்தப் பையன் மிகவும் பச்சையாக இருக்கிறான். அவனோடு பேசுவதே பயமாக இருக்கிறது. அடிதடி ரகளையில் ஆர்வமாக இருக்கிறான். அவன் கோபம் நம்மீது திரும்பினால் நம்மால் தாங்க முடியாது. அவனைத் தொலைவிலிருந்துதான் வேடிக்கை பார்க்க வேண்டும். அதையும் ஒதுக்கினான்.

கோயிலுக்குப் போய் பிரதோஷவிழா குழுவில் சேர்ந்து உழவாரப்பணி செய்யலாம். ஆனால் நான் நீ என்று போட்டிப் போட்டு விடுகிறார்கள். புறங்கூறித் திரிகிறார்கள். ஆனால் கோயிலைச் சுத்தம் செய்கிற பணி இரண்டு மணி நேரத்திற்கு மேல் எதுவுமில்லை. கல்லூரிப் படிப்பை முடித்து என்ன செய்ய, வெறும் கல்லூரிப் படிப்பிற்கு என்னபயன். பயனில்லாமல் எதற்கு ஒரு படிப்பு.

ஒருவேளை அரசாங்க உத்தியோகம் கிடைத்தால் வாழ்க்கை அத்தோடு முடிந்துவிடும். ஆள்மாற்றி பொய்க் கணக்கு எழுதி, லஞ்சம் வாங்கி என்று அநியாயம் செய்வதற்கு மனம் அலையத் துவங்கிவிடும். அப்படிச் செய்யாத போது பிழைக்கத் தெரியாதவன் என்ற கேலிக்கு ஆளாக நேரிடும். ஆறாயிரம் ரூபாய் சம்பளம் மிகப் பெரிய காசாக சுற்றியுள்ளோர் சொல்வார்கள்.

உனக்கென்ன, வீட்டு வாடகையா, குழாய் தண்ணி வாங்கணுமா எதுவும் இல்லையே? ஒழுங்கா வீட்ல கொடுத்தா சமைச்சுப் போடறாங்க. மேல வாடகை கட்டினா வரி கட்டறதுக்கு மராமத்துக்கு ஆச்சு. கீழ நீ

குடியிருந்துடு. இதையும் சொன்னார்கள். ஆனால் எந்த மாற்றமும் இல்லாமல் கோயிலில் நடக்கிற பிரம்மோற்சவம் மட்டுமே பரபரப்பாக வாழ்க்கையின் மிகப்பெரிய முக்கியமான அம்சமாகப் போய்விடும்.

திருமணம் என்கிற விஷயம்தான் பரபரத்துக் கொட்டும். பிறகு குழந்தை பிறப்பது என்பது பற்றிக் கவலைப்படுவார்கள். பிறகு குழந்தையைப்பற்றிக் கவலைப்படுவார்கள். என்ன... என்ன... என்ன... என்று பார்க்கிறோமே அது நின்று போகும். என்னமோ நடக்குது. என்னான்னு தெரியலை என்று எல்லா விஷயம் பற்றியும் எந்தவித அணுகல் முயற்சியில்லாமல் உள்ளே அடங்கிப்போகும். அது கிட்ட தட்ட மரணம்.

மறுநாள் காலை மலைமீது ஏறி உட்கார்ந்ததும் பார்வை ஊர்மீது போகவில்லை. தொலைதூரம் போய் பரவியது. வானத்தின் எல்லையைக் கண்கள் தொட்டபடி இருந்தன.

இந்த உலகம் பெரியது. மிகப்பெரியது என்று தோன்றியது. வழக்கமான மலைமீது ஏறியதும் நான் பெரியவன் என் காலின் கீழ் உலகம் என்று இருக்கும். இப்போது வேறுவித மாக உலகம் மிகப்பெரியது. மிகப் பிரமாண்டமானது. இந்த மலையைத் தாண்டி ஒரு சமவெளி. அந்தச் சமவெளி தாண்டி மலை, மலை தாண்டி மறுபடியும் புல்வெளி என்று மலையின் பிரமாண்டம் தெரிந்தது. மலை முடிந்து கடல், கடல் முடிந்து மலை என்று ஒரு பெரிய கோளம் சுற்றிக் கொண்டிருப்பதை உணரமுடிந்தது.

எல்லா இடத்திலும் மனிதர்கள் இருக்கிறார்கள். ஏதேனும் செய்து கொண்டிருக்கிறார்கள். உயர்ந்து, தாழ்ந்து, முன்னடைந்து, பின்னடங்கி என்று பலவிதமாக காரியங்கள் செய்கிறார்கள்.

அங்கிருந்து இங்கு வருகிறார்கள். இங்கிருந்து வெறெங்கோ போகிறார்கள். அப்படி நகர்வதைத் தேடல் என்கிறார்கள். இந்த ஊரில் அமெரிக்கர்களும் பல வருடங்களாக குடியிருக்கிறார்கள். ஊருக்குப் போய் மறுபடியும் வந்து இந்த இடத்தில் இருப்பதை மிகப்பெரிய ஆனந்தமாக நினைக்கிறார்கள். உலகத்தில் எங்குமில்லாத நிம்மதி இந்த ஊரில் இருக்கிறது என்று கைகால்களை ஆட்டிப் பேசுகிறார்கள்.

நம்ம ஊரைப் பத்தி நமக்குத் தெரியுமா? ஒரு வெள்ளைக்காரன் எவ்ளோ தெரிஞ்சு வச்சிருக்கான் பார். மலையைப் பத்தி ஆராய்ச்சி பண்ணி ஏகப்பட்ட தகவல் செய்யலாம். நாம மலைலேர்ந்து கல்லு எடுத்து வீடு கட்டிகிட்டிருக்கோம். மேல ஒரு பெரியவர் இருக்காரு. ஒரு கல்லு கூட மலைலேர்ந்து எடுக்கக்கூடாதுன்றாரு. ஆனா யார் கேட்கறாங்க. பேர்பாதி மலை ஊர்ல வீடா இருக்கு.

ஒருநாள் முழுவதும் படபடப்பாக, பரபரப்பாக மனம் எங்கேயும் நில்லாது திரும்பத் திரும்ப விதம்விதமான விஷயங்களை யோசிப்பதாகவே போயிற்று. மலையிலிருந்து இறங்கிவிட வேண்டுமென்ற எண்ணம் மறுபடி மறுபடி எழுந்தது. இங்கு உட்கார்ந்து என்ன செய்யப் போகிறோம். இது வீண் வேலை என்று ஒரு கோபம் பிறந்தது. இந்தக் கிழவன் நம்மைத் தேவையற்ற விஷயங்களில் ஈடுபடுத்துகிறான் என்ற ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

சிறிது நேரம் எந்த உணர்வும் இல்லாமல் ஒரு அரைத் தூக்கமாய் கிடந்தான். மெல்ல அந்த அரைத்தூக்கத்தை கவனிக்கத் துவங்கினான். அவனையும் மீறி ஒரு புத்தி அவனிடமிருந்து கிளம்பி அவனுடைய அரைத்தூக்கத்தைக் கவனிக்க ஆரம்பித்தது. உடம்பும், மனசும் சோர்வாக இருப்பதை அவன் உற்றுக் கவனித்தான். உடம்பு துவண்டிருக்க, மனம் மெல்ல விழித்துக் கொண்டது. அரைத்தூக்கத்திலிருந்து விடுபட்டது.

என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று யோசிக்க ஆரம்பித்தது. இந்த மலையில் உட்கார்ந்து கொண்டிருப்பது வீணா, வெட்டி வேலையா எந்தக் காரணமும் இன்றியா தாத்தா மலைக்குப் போய் அமர்ந்து கொள் என்று சொல்வார். அவர் பெரியவர். மிக ரகசியமானவர். அவரை அறிவது கடினம். ஆனால் அவருடைய சொற்களும், செயல்களும் கனம் மிகுந்தவை. மலைக்குப்போ... மலைக்குப்போ... என்று ஏன் சொல்கிறார்.

இதோ இப்படி எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்த மனதை உற்றுப் பார்த்து அது என்ன செய்கிறது என்று கண்டுகொள்ள மலைக்கு அனுப்பியிருக்கிறார்.

இது நன்றாக இருக்கிறது. மற்றவர்களுடைய அடி ஆழ அலட்டல்கள் தெரிகின்றன. அதனுடைய உத்தேசங்கள் புரிகின்றன. மனம் எதற்கு எங்கு அலைகிறது என்று யோசித்துப் பார்த்தால் பிடித்துவிடலாம். எந்த நடமாட்டமுமில்லாத அந்த இடத்திலிருந்து வெறுமே எதிரே இருந்த வான் வெளியைப் பார்த்தபடி அவன் உள்ளுக்குள் தன் மனம் என்ன செய்கிறது என்று பார்க்கத் துவங்கினான்.

வான்வெளி கண்ணுக்குப் பட்டதே தவிர அது வேறு எந்த செய்தியும் சொல்லவில்லை. சற்று கண்களைத் தாழ்த்த ஊர் கண்ணுக்குப்பட்டது. ஆனால் ஊர்பற்றி எந்த விவரமும் உள்ளுக்குள் எழவில்லை.

மனம் உற்று மனதையே பார்த்துக் கொண்டிருந்தது. துண்டு துண்டாக ஏதேதோ விஷயங்கள் யோசிப்பில் வந்தன. தாத்தாவின் முகம் வந்தது. அம்மாவைப் பற்றிச் சிறிது நேரம் யோசித்தான். பிறகு அடுத்தபடி என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க ஆரம்பித்து, சட்டென்று அந்த நூலும் அறுந்தது.

இப்போது என்ன செய்ய வேண்டுமோ? அதை மட்டும் செய். எப்போதோ, என்னமோ, ஏதோ செய்ய வேண்டும் என்பதை இப்போது ஏன் யோசிக்கிறாய்.

இப்போது உன் மனம் என்ன செய்கிறது. அதை யோசி என்று மனதிற்குக் கட்டளையிட்டான். மனம் கடந்த காலத்தை அறுத்தது. எதிர்காலத்தையும் அறுத்தது. நிகழ் காலத்தில் அமைதியாய் அமர்ந்து கொண்டது.

அவன் உடம்பினுடைய இருப்பையும், தலையினுடைய அசைவையும், காற்று வேகமாக வீசுவதையும் உணர்ந்தான். இத்தனை நேரம் உட்கார்ந்திருக்கிறோம். காற்று வீசுவது இப்போது தான் உறைக்கிறது. காற்று வீசுவதைப் பற்றிய கவனமே என்னுள் இல்லை வேறு எங்கெங்கோ சிதறிப் போகிறேன்.

இந்த நேரத்தை நழுவ விட்டுவிட்டு ஒன்று இறந்த காலத்தில் உழல்கிறேன். அல்லது எதிர்காலத்தைப் பற்றி ஏங்குகிறேன். இப்போது என்ன நிலையில் இருக்கிறேன் என்று உறுதியாகத் தெரிந்தால்தானே, நான் எது பற்றியும் சரியாக யோசிக்க முடியும். அவன் காற்று வீசுவதை முழுமை யாக உணர்ந்தான். சிரித்தான்.

வேறு யோசி. என்ன யோசிக்க வேண்டும். இப்போது யோசி. மனதிற்குக் கட்டளையிட்டான். மனம் மலங்க மலங்க விழித்தது. எந்த யோசனையுமில்லாமல் மௌனமாக இருந்தது. மனம் வார்த்தைகளாகச் சிந்திப்பதை நிறுத்தியது. ஆனால், மனதிலிருந்து விதம் விதமாக சித்திரங்கள் தோன்றின. கலைடாஸ்கோப் போல கோலங்களை மனம் போட்டது. அந்த விஷயம் இந்த விஷயம். அது, இது என்று யோசிக்காமல் வெறும் சித்திரங்களாக மனம் எகிறி எகிறி வீசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

இது உள்மனம். இது பேசாது. வார்த்தைகளோடு சம்மந்த மில்லாதது. ஆனால், வெறும் சித்திரங்களாக, வடிவங்களாக

எதையோ இறைத்துக் கொண்டிருக்கிறோம். அதையும், ஆழ்ந்து உற்றுப்பார்க்க, அந்தச் சித்திரங்கள் தோன்றுவதும் நின்றன. வெறுமே மெல்லியதாய் ஒரு ஒளிவட்டம் மட்டுமே நின்று கொண்டிருந்தது. அந்த இடமும் அகன்றது. அவன் கண்திறந்து கொண்டே கடும் இருட்டில் மூழ்கிப் போனான்.

ஒரு குரங்கு சட்டென்று எகிறிக் குதித்து முன்னே ஓட அவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான். இருட்டு அகன்றது. கண்கள் உயிர்பெற்றன. பார்வை எல்லாவற்றிலும் பதிந்து இது இது இன்னது என்று வார்த்தைகளாக மறுபடியும் வந்தது.

எதற்கு குரங்கு ஓடுகிறது என்று அவன் நினைத்துக் கொண்டான். அந்த குரங்கைத் துரத்திக்கொண்டு இன் னொரு குரங்கு ஓடிற்று. துரத்திக்கொண்டு ஓடிய குரங்கு கொஞ்சம் நொண்டியபடி ஓடியது. சட்டென்று தாத்தா அந்த குரங்கைப் பற்றிச் சொன்னது ஞாபகம் வந்தது.

இந்தக்குரங்கு தான் இங்கே அரசன். பல மனைவி களோடும், குழந்தைகளோடும், மற்ற உறவுகளோடும் இந்த நொண்டிக் குரங்கு சந்தோஷமாக வாழ்ந்து வந்தது. ஆனால், உள்ளுக்குள் ஒரு புதிய இளம் குரங்கு தலைமைப் பதவியைப் பறிப்பதற்குக் கடும் சண்டையிட்டது. நொண்டிக்குரங்கை அடித்து உதைத்துத் துரத்திவிட்டது.

அந்த நொண்டிக்குரங்கு எங்கே தெரியவில்லையே என்று தாத்தா கவலைப்படுவார். எந்தக்குரங்கு அசைந்தாலும் அது நொண்டிக்குரங்கா என்று பார்ப்பார். இல்லையென்று உதடு பிதுக்குவார். சட்டென்று நொண்டிக்குரங்கு ஓடியதைப் பார்த்ததும் தாத்தா அதைச் சுட்டிக்காட்டியது ஞாபகம் வந்தது. தாத்தாவிடம் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

குரங்குகள் ஏராளமாக கூச்சலைக் கிளப்பின. அந்த மேட்டுச் சரிவில் பெரிய அலறல் போல பல குரங்குகளின்

கூச்சல் கேட்டது. அவன் எழுந்து நின்று கூச்சல் கேட்ட இடம் நோக்கிப் போனான்.

இரண்டாள் ஆழத்தில் அந்த இரண்டு குரங்குகளும் சண்டை போடுவது தெரிந்தது. கிட்டத்தட்ட கட்டிப்புரளும் சண்டை. கையாலும், பற்களாலும் கடித்துப் பிராண்டிக் கொள்கிற சண்டை. ஏதோ ஒரு குரங்கு நிச்சயம் மடியப்போகிற சண்டை.

இந்தச் சண்டையைப் பார்த்து பெண்குரங்குகளும் மற்ற குரங்குகளும் தலையில் அடித்துக் கொண்டும், புரண்டும் எகிறி எகிறிக் குதித்தும் தங்கள் வேதனையைத் தெரிவித்தன. ஆனால் எது பற்றியும் லட்சியம் செய்யாது சண்டை தொடர்ந்தது.

நொண்டிக் குரங்கு மூர்க்கத்தனமாகத் தாக்குவது தெரிந்தது. இளம் குரங்கு ஓட, நொண்டிக்குரங்கு துரத்திக் கொண்டு ஓடிற்று. அந்த இளம் குரங்கு ஊரை நோக்கி சரிவில் இறங்கி ஓடத்துவங்கியது. அருகிலுள்ள கோயில் மதில் சுவரில் ஏறி கோபுரத்தில் பதுங்கிக்கொள்ள, மலை விளிம்பில் நொண்டிக் குரங்கு நின்றது.

நொண்டிக்குரங்கு கம்பீரமாக மலையேறி வந்தது. தன் கூட்டத்திற்கு நடுவே கொஞ்சம் மேடை போலிருந்த பாறையில் அமர்ந்து கொண்டது. சற்று நேரம் விலகியிருந்த அந்தக் கூட்டத்தினர் மெல்ல மெல்ல அருகே வந்தார்கள்.

ஒரு பெண் குரங்கு அருகே வந்து அதன் காயங்களைத் தொட்டுத் தொட்டு நக்குவதும், தடவி விடுவதுமாக இருக்க, அந்த உபசாரத்தை நொண்டிக் குரங்கு ஏற்றுக் கொண்டது. மற்ற குரங்குகளும் அருகே வந்தன.

"என்னடா ஒரே குரங்கு சத்தமா கேட்டுது."

தாத்தா தடி ஊன்றி மலையேறி வந்தார். அவர் கையில் சோற்றுப்பாத்திரம் இருந்தது. நடந்ததை விவரித்தான்.

துரத்தித் துரத்தி அடித்ததைச் சொன்னான். கோயிலுக்குள் அடைக்கலம் புகுந்த இளம் குரங்கைப் பற்றி விவரித்தான்.

"எனக்குத் தெரியும். எனக்குத் தெரியும். இந்த நொண்டிக் குரங்கு வரும்னு தெரியும். அதனோட கண்ணுல ஒரு வேகம் இருந்தது. ஆனா, காணமே எங்கனா. ஏதாவது ஆயிடுச் சோன்னு கவலைப்பட்டேன். இதுதான் இதுதான் மறுபடியும் வந்துடிச்சி பார். எத்தினி மாசம் இருக்கும்டா மூணு மாசம் இருக்குமா."

தாத்தா யோசனை செய்து பேசினார்.

"மேலயே இருக்கும், மூணுமாசம் எங்கயோ தனியா போய் உட்கார்ந்துட்டு திருப்பி வந்து அடிச்சு துரத்திடுச்சு. இதுக்கு பலம் கிடைச்சதுக்குக் காரணமே போஷாக்கான உணவு. அல்ல மறுபடியும் வாலிபம் திரும்ப வராது. அந்தத் தனிமை. அது தனக்குத்தானே விதித்துக் கொண்ட கடும் நிபந்தனை அதை பலமாக்கிடுச்சு. தனியே உட்கார உட்கார உள்ளுக்குள்ள அதனோட கோபம் அடர்த்தியாகியிருக்கும். அது என்ன செய்யணும்னு தெளிவாயிட்டிருக்கும். எப்படி சண்டை போடணும்னு முடிவாயிட்டிருக்கும். ஒரு குரங்கு மூணுமாசம் தனியா இருந்து மறுபடியும் இடம் பிடிச்சுருச்சி பார். இனிமே இதுகிட்ட எதுவும் வரமுடியாது."

தாத்தா சொல்லிக் கொண்டிருக்க, அந்தக் கிழக்குரங்கு எழுந்து நின்று மற்ற குரங்குகளோடு ஆட்டம் ஆட ஆரம் பித்தது. துரத்தி ஓடியது. செல்லமாய் கடித்தது. கால்களை தடவிக் கொடுத்தது. இறுக்கிக் கொடுத்தது. முதுகில் ஏற்றிக் கொண்டது.

மறுபடியும் ராஜ்ஜியத்தைக் கைப்பற்றிய பெருமை, அதன் ஒவ்வொரு அசைவிலும் தெரிந்தது.

சோற்று டப்பாவை அவனிடம் கொடுத்து விட்டு இடுப்பி லிருந்து வேர்க்கடலை உருண்டை பொட்டலம் எடுத்து தாத்தா பாறைமீது அடுக்கி வைத்தார்.

குரங்குகள் பார்த்துக் கொண்டிருந்தன. குட்டிக் குரங்குகள் அருகே வர பெண்குரங்குகள் தடுத்தன. கிழக் குரங்கு வந்து நின்று வேர்க்கடலையை முகர்ந்து பார்த்தது. வாயிலிட்டுக் கொண்டது. திரும்பி மற்ற பெண் குரங்கு களைப் பார்க்க அவைகள் ஓடிவந்து வேர்க்கடலை உருண்டைகளை எடுத்துக் கொண்டு வாயில் அதக்கி அரைத்தபடியே அந்தக் கிழக்குரங்கு போக மற்ற குரங்குகள் இவர்களைத் திரும்பி பார்த்துவிட்டுப் போயின.

டப்பாவைத் திறந்து சாப்பிட முடியாமல் மனோகரன் திகைத்துக் கிடந்தான்.

மூன்று மாதம் தனிமையில் இருந்தால் இழந்த பதவியைப் பிடித்துவிடலாமா. மறுபடியும் ஜெயிக்கலாமா. எத்தனை வயதானாலும் விரட்டி விரட்டி சண்டை போட்டு மீண்டும் பதவிக்கு வந்துவிடலாமா. என்ன ஆச்சரியம் இது. அப்படி யானால் தனிமை மகத்தான விஷயமா, தனிமை பலம் கொடுக்கும் என்பது உண்மைதானா. என்ன விதமான பலம் அது கூட்டமாய் வாழும்போது என்ன குழப்பம் ஏற்படுகிறது. சாப்பிட்டுவிட்டு அவன் சுருண்டு படுத்துக் கொண்டான்.

தாத்தா எதுவும் சொல்லாமல் உணவு டப்பாவோடு மலை இறங்கினார்.

அன்று மேகமூட்டத்தால் இருட்டு அதிகமாக இருந்தது. இருட்டு அதிகமாவதற்கு முன்பு ஒரு பாறையில் ஏறி அமர்ந்து கொண்டான்.

மலையில் பயங்கர மிருகங்கள் எதுவுமில்லை. எனினும் ஊர்ந்து போகின்ற விஷயங்கள் ஏதேனும் தொந்தரவு செய்யக்கூடும் என்று பயந்தான். ஆனால் கைதட்டினால்

அவைகள் விலகி விடுகின்றன. சட்டென்று ஒரு கோதுமை வாசனை அடித்தது. இது பாம்பின் வாசனை என்று தாத்தா சொல்லிக் கொடுத்திருக்கிறார். அந்த நெடி கனமாக இருந் தது. சட்டென்று ஒரு தவளையின் தீனமான குரல் கேட்டது. தூர இருந்து பாம்பு ஒரு தவளையை விழுங்குவதை உணரமுடிந்தது. வேறு எந்த வேலையும் இல்லாததால் அந்தத் தவளை மெல்ல மெல்ல மரணமடைவதை அதன் ஒலி வழியாக அவன் கவனித்துக் கொண்டிருந்தான்.

சட்டென்று வெளிச்சம் வந்தபோது இரை விழுங்கிய ஒரு நாகம் அசையாது கிடப்பதும் கைதட்டியபோதும் சின்ன சலனம் தவிர வேறு எதுவும் காட்டாமல் படுத்துக்கிடந்ததும் கவனிக்க முடிந்தது.

அன்று முழுவதும் அமைதியாய் உட்கார்ந்திருந்துவிட்டு மாலைநேரம் மெல்ல இருள் கவ்வ அவன் மலையைவிட்டுக் கீழிறங்கினான்.

உள்ளே விவரித்துச் சொல்லமுடியாத ஒரு அமைதியில் மனம் மூழ்கிக் கிடந்தது. எது குறித்தும் எந்த ஆவலும் இல்லை. ஆவல் இல்லாத விஷயம் குறித்து ஒரு ஆச்சரியம் மட்டும் இருந்தது.

வீட்டிற்குள் நுழைந்ததும் அம்மாவும் பாட்டியும் கத்த ஆரம்பித்தார்கள்.

இந்தப் பாழாப்போன கிழவனோட சேர்ந்து அழிஞ்சு போவாத என்று பாட்டி சீறினாள். அம்மா அழுதபடியே ஏதோ புலம்பினாள்.

"என்னத்துக்கு இது உனக்கு, என்னத்துக்கு இது உனக்கு"

அப்பா உரத்த குரலில் சொன்னார்.

"இப்படித்தான் இருக்கணும்னா ஏன் அப்போ காலேஜ் போற. எதுக்கு காசை வீணடிக்கிற. நிறுத்திடு. என்னால முடிஞ்ச அளவுக்கு சோறுபோடறேன். சாப்டு... சாப்டு

கத்திகிட்டு வா. கம்யூட்டருக்குத் துட்டு கட்டிட்டு மலையில போய் உட்கார்ந்துகிட்டிருக்க. பைத்தியக்காரத்தனமா இல்ல.''

அவன் ஆம் என்று சொன்னான்.

''இப்போ என்ன பண்ணப்போற.''

அப்பா பதிலுக்குக் கேட்டார்.

அவரை உறுத்துப் பார்த்தவன் சீக்கிரமே ஒரு முடிவு சொல்றேன் என்று நிதானமாகப் பேசினான்.

''அவர் வயசானவர்டா, அவர் காலம் முடிஞ்சுப்போச்சு. உன் வயசுல அவர் என்ன ஆட்டம் ஆடினாரு தெரியுமா. போய் பாட்டியைக் கேட்டுப்பார். பாட்டியை விட்டுவிட்டு மெட்ராஸுக்குப் போயிட்டாரு. தனியா என்னென்னமோ செய்துட்டு கடைசியில ஒன்னும் முடியாத இங்கு வந்து வேர்க்கடலை வியாபாரம் பண்ண ஆரம்பிச்சாரு. இப்போ உன்னைத் துரத்திக்கிட்டிருக்காரா. இந்த மலையில் போய் இருன்னு சொல்றியே. பெங்களூர் லட்சுமியம்மா யாரு அப்படின்னு தாத்தாவைக் கேளு.''

அப்பா விஷமப் புன்னகையோடு சொன்னார். அவர் முகம் ஆபாசமாக இருந்தது. மிக மோசமான ஒரு காம விகாரத்தைப் பேசுவதுபோல ஒரு விகாரம் உண்டாயிற்று. அவன் அமைதியாக அதைப் பார்த்துவிட்டு சரி என்று தலையசைத்துவிட்டுத் தன் அறைக்குப்போய் உட்கார்ந்து கொண்டான்.

அம்மா சோறுபோட குழம்பும், ரசமும் சாப்பிட்டான்.

''என்னாடா... மெட்ராஸ் போயிருந்தியா ரெண்டு நாளா ஆளைக் காணோம்.''

ஒரு பள்ளிக்கூட நண்பன் சைக்கிளில் அமர்ந்தபடி வீட்டு வாசற்படியில் கால்வைத்தபடி அவனை விசாரித்தான். அவனை வீட்டிற்குள் அழைத்தான்.

''இல்லை. வெளிய வா போகலாம்.''

அவன் சைக்கிளை உந்தித்தள்ள ஊர்சுற்றி வந்தபடி காலில் செருப்பு மாட்டிக்கொண்டு கேரியரில் கோணலாக உட்கார்ந்து கொள்ள, வண்டி கிளம்பி தெருமுனையில் இருக்கின்ற டீக்கடையில் நின்றது.

''டீ சாப்பிடலாமா.''

''எங்கிட்ட காசு இல்லையே.''

''உங்கிட்ட காசு இருக்கும்னு நினைச்சேன் கூட்டிகிட்டு வந்தேன்.''

அந்த நண்பன் சொன்னான்.

''கொஞ்சம் இரு. யாராவது வாங்கிக் கொடுப்பாங்க.''

அவன் காத்திருந்தான். அவனுக்கு டீ குடிக்க வேண்டும் போல ஒரு எண்ணம் ஏற்பட்டது. மோட்டார் சைக்கிளில் வேர்க்கடலை கமிஷன் ஏஜண்ட் நண்பர்கள் வந்தார்கள். ரெண்டு டீ என்று சொன்னார்கள். இவர்கள் நிற்பதைப் பார்த்துவிட்டு கை உயர்த்தி அருகே வந்தார்கள்.

''எங்களுக்கும் சேர்த்து சொல்லுங்களேன்'' என்று சைக்கிள்காரர நண்பன் சொல்ல, ''அப்படியா... சாப்பிட றியா. சாப்டு முடிச்சிட்டீங்கன்னு நினைச்சேன். நாலு டீ என்று தடாலடியாக ஆர்டர் செய்தார்கள்.

''டீ போறுமா, இல்ல வேற ஏதாவது சாப்படறீங்களா.''

ஒரு நியூஸ் பேப்பரில் மசால் வடைகளை எடுத்துக் கொண்டு வந்து நின்றார்கள். ஆளுக்கொரு மசால்வடை எடுத்துக்கொள்ள, சைக்கிள் பையன் இரண்டு மசால்வடை எடுத்துக் கொண்டான். மசால் வடையைப் பிய்த்துச் சாப்பிட்டான்.

சினிமாவைப்பற்றி, அரசியலைப்பற்றி, பயிர் விளைச்சல் பற்றி, வேர்க்கடலை ஆந்திராவிலிருந்தும், மத்தியப்

பிரதேசத்திலிருந்தும் உள்ளுக்குள் வருவது பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"நீ வடை சாப்பிடலை."

சட்டென்று மனோகரனைப் பார்த்து ஒரு நண்பன் கேட்டான்.

"இல்லை. சாப்பிடலை"

"இந்தா..." என்று சொல்லி வாங்கிக் கொடுத்த பையனுக்கே கையிலிருந்த மசால்வடையை மனோகரன் கொடுத்தான். நெருங்கி அதை வாங்கி ஆவலாக உண்டான். டீ வந்தது.

"இதைக் குடி" என்று சொல்லியபடியே டீயை மனோகரனிடம் நீட்ட மனோகரன் டீயை உறிஞ்சிக் குடித்தான்.

என்ன வேண்டுமோ அது தானாக வருகிறது. என்ன வேண்டுமோ அதை விலக்குவதற்கும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். நன்றாக உண்டபிறகு இந்த வடை எதற்கு. கொடுத்து விட்டார்கள் என்பதற்காக தின்ன வேண்டும். ருசியாக இருக்கும் என்பதால் தின்ன வேண்டும். அது இல்லாமல் வெறுமே வைத்திருந்தால் கையிலிருந்த வடை எவருக்கு வேண்டுமோ, எவருக்குப் பசிக்கிறதோ அவருக்குப் போய்விடும்.

இப்போதைக்கு இந்த டீ போதும். இந்த டீயைக்கூட வேறு எவரேனும் கேட்டால் கொடுத்து விடமுடியும். அப்போது டம்ளரில் பாதி டீ இருந்தது.

சட்டென்று நாய் ஒன்று நடுவே புகுந்து வாலாட்டி நின்றதால் நாயைப் பார்த்துவிட்டு மசால்வடையை வேகமாக எதிரே இருந்த பையன் வாயில் போட்டுக்கொண்டான். நாய் சற்றுநேரம் அவனைப் பார்த்துவிட்டு இனி இங்கு உண்ண உணவு இல்லை என்றபடி நகர, மனோகரன் நாயை அழைத்தான். அருகிலிருந்த சிமெண்ட் பலகையை வாயால்

ஊதி சுத்தம் செய்து மீதமிருந்த டீயை ஊற்றினான். நாய் வேகமாக வாலை ஆட்டியது. அவனைப் பார்த்தது. அந்தத் டீயை நக்கிக் குடித்தது.

"மனோகரா... உனக்கு வேணாமா. சொல்லியிருந்தா எனக்கு மட்டும் ஆர்டர் பண்ணியிருப்பேன் இல்லை."

"இல்லை, எனக்கு டீ வேணும்."

"கீழ ஊத்திட்ட"

"இல்ல ஷேர் பண்ணிக்கிட்டோம்." என்று நாயைப் பார்த்துச் சொல்ல, அங்குள்ளவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

அந்தச் சிரிப்புக்குக் கீழே எல்லோர் மனதிலும் ஒரு வியப்பு இருந்ததை அவனால் உணர முடிந்தது.

உலகத்தில் அன்பாக இருந்தாலும், நட்பாக இருந்தாலும், என்ன உண்மையாக இருந்தாலும் மக்கள் வியக்கிறார்கள். நீ எப்படி நட்பாக இருக்கிறாய் என்று கேள்வி கேட்கிறார்கள். அதுதான் மனிதனுடைய இயல்பு என்றால், நம்ப மறுக்கிறார்கள்.

இன்னொரு மோட்டார் சைக்கிள் வேகமாகத் தாண்டிப் போயிற்று. சட்டென்று தடைபோட்டு நின்றது. சுற்றி வந்தது. அந்த ஊர் பையன்களை வட்டமடித்தது.

அவர்களை நோக்கி வந்தது.

"உங்களுக்கு ஏதாவது நியூஸ் தெரியுமா" என்று கேட்டான்.

"என்ன" என்று ஆவலாக அவர் கேட்க "வேணி தூக்குப் போட்டுகிச்சு"

"எந்த வேணிடா" கத்தினார்கள்.

"நடராஜனைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னாளே அந்த வேணி"

"எங்க"

"அவங்க வீட்டுக்குள்ளேயே"

"என்னாச்சு."

யாரோ கேட்டார்கள்.

ஆனால் மனோகரன் கதை கேட்கத் தயாராக இல்லை. அவன் வண்டியை எடுத்துக் கொண்டு போக பரபரத்தான். போகலாமா என்று அந்த சைக்கிள் நண்பனிடம் கேட்டான்.

சைக்கிள் நண்பன் கதை கேட்பதில் குறியாக இருக்க, வேகமாக அவர்களை விட்டு நடந்தான். தெரு தாண்டினான்.

"டேய்... வேணி தூக்கு போட்டுகிச்சாண்டா."

அரசியல்வாதி நண்பன் ஸ்கூட்டரில் அவனைத் தாண்டினான். நின்று கத்தினான்.

"அங்கதான் போயிகிட்டிருக்கேன்"

மனோகரன் பரபரப்பாகச் சொல்ல, "ஏறு... ஏறு" என்று கத்தினான்.

அவனை ஏற்றிக்கொண்டு வண்டி வேணியின் வீடு நோக்கிப் போனது.

"நீ எப்படி, அங்க எதுக்குப் போற. நீ எங்க பள்ளிக்கூடம் கூட இல்லையே."

"அது எங்க சொந்தக்காரங்கடா. எனக்கு ஒரு விதத்துல முறைப்பொண்ணு. ஆனா, அவங்க வயசு வித்தியாசம்னு சொல்லி கொடுக்க மாட்டேன்டாங்க. அப்புறம்தான் நான் வேற பொண்ண கல்யாணம் பண்ணிக்கிட்டேன் பொண்ணு கொடுக்கமாட்டேன்னு சொல்லிட்டாங்கன் ஒரே கோவம். போக்குவரத்தை நிறுத்திட்டாங்க.

வேணி நடராஜன்கிட்ட மாட்டிகிச்சுன்னு கேள்விப்ப போய் நின்னு. நடராஜன் வீட்ல நியாயம் கேட்டே

அவன் கல்யாணம் பண்ணிக்கறான்னு சொன்னதும் விட்டுட்டோம். இப்போ வேற என்னமோ தகராறு ஒடிகிட்டிருக்குன்னு சொன்னாங்க. இது தூக்குப் போட்டுக்கப்போற அளவுக்கு ஆகும்னு தெரியலை."

"என்ன தகராறு. கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிட்டானா"

"அதெப்படி பண்ணிக்கறேன்னு சொன்னானே"

"இருநூறு சவரன் நகை கேட்கறானாப்பா. சீர் செனத்தி ஒன்னும் குறையக்கூடாது. அப்படின்னு அவங்க ஆத்தா சொல்லி அனுப்பறாங்களாம்."

இந்தப்புடவை வேணும், அந்தப்புடவை வேணும், கட்டில் வேணும், பீரோ வேணும்னு லவ்வுன்னு பண்ணிட்டு அப்புறம் சீருன்னு கேட்கறது என்ன நியாயம்னு கேட்டாங்க. அப்புறம் நீங்க கட்டின புடவையோட அதுக்காக அனுப்பிடுவீங்களான்னு அவங்க ஆத்தா கேட்கறாங்க. மறுபடியும் சண்டை ஆயிப்போச்சாம்.

என்ன இவ்ளோ மோசமா பேசறாங்களே அப்படின்னு எங்க சொந்தக்காரங்க வீட்ல ரொம்ப வருத்தம். ஊர் பஞ்சாயத்து நடந்து என்ன சீர் கேட்கறாங்களோ அதைக் கொடுத்தே ஆகணும் அப்படின்றா மாதிரி வந்தது. லவ் பண்றதுனால எதையும் குறைச்சுக்க முடியாது அப்படின்ற மாதிரி அவங்க வீட்ல கட் அண்ட் ரைட்டா சொல்லிட்டாங்க. சீர் செய்யலாம் ஆனா, கேட்கற முறை தப்பா இருக்கு. திரும்பத் திரும்ப கேட்கமாட்டாங்களா? எதுக்காக இவங்களுக்குச் செய்யறது. அப்படின்னு இந்தப் பக்கம் பேச்சு, கடைசியில இதுல வெறுத்துப்போய் தூக்குப் போட்டுக் கிட்டாள்னுநினைக்கறேன்."

"இவ்ளோ சீக்கிரம் உனக்கு யார் சொன்னா."

அவன் பள்ளிக்கூட நண்பன் பெயரைச் சொன்னான்.

"அவனும் ஒரு சொந்தக்காரன் தான். எனக்கு போன் வந்தது போயிக்கிட்டிருக்கேன்."

அவர்கள் போலீஸ் வருவதற்கு முன்பு போய் சேர்ந்துவிட் டார்கள். இறங்கினார்கள். வீட்டிற்குள்ளிலிருந்து பெரிதாக அலறல் சத்தம் கேட்டது.

அவன் வாசலிலேயே நின்றான். உள்ளுக்குள் போக பயமாக இருந்தது. அதற்குள் அரசியல் நண்பன் வேகமாக உள்ளுக்குள் போனான். அவன் அழும்குரல் கேட்டது.

மெல்ல நகர்ந்து நடையோரம் நிற்க. முதுகுக்கு பின்னே மூடிய ஜன்னல் கதவு இருந்தது. ஜன்னல் கதவைத் திறப்ப தற்கு மெல்ல விரல்வைத்து அழுத்தி திறந்தான். ஜன்னல் கதவு வெகுநாளாக மூடப்பட்ட கதவுபோலும் கொஞ்சம் சிரமத்தோடு திறந்தது. குனிந்து இருட்டில் பார்க்க, எதிர்ப் பக்க கதவை யாரோ திறந்தார்கள்.

அந்த வெளிச்சத்தில் அந்த ஜன்னலுக்கு மிக அருகில் அவள் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்ததை அவன் பார்த் தான். சிவந்த இரண்டு பாதங்களும், கொலுசும், தெள்ளத் தெளிவாகத் தெரிந்தன. நீலநிறப் பாவாடையும் அதே நிறத்து புடவையும், கொழுத்த கால்களும் பிருஷ்டமும், இடுப்பும், மார்பும், இழுபட்ட கழுத்தும் பிடரியும் தெரிந்தது. கயிறு நல்ல உறுதியான நைலான் கயிறு. உத்திரத்தில் வீசப்பட்ட கயிறு. இறுக்கப் பற்றியிருந்தது.

அவன் கதவு மூடினான். மெல்ல சரிந்து நடைபாதையில் உட்கார்ந்தான். கண்களிலிருந்து நீர் பொங்கி வந்தது.

வேணிக்காக அவன் அழத்துவங்கினான். அந்த அழகு, அந்த அலட்டல், அந்த கம்பீரம், அந்த கர்வம் எல்லாம் உடைந்து போயிற்று.

அடிப் பொண்ணுங்களா பவுடர் போடாதீங்கடி. நாட்டுப் புறத்துப் பொண்ணுங்கதான் பவுடர் போடும். மெட்ராஸ்ல

இருக்கற பொண்ணுங்க யாரும் பவுடர் போடறதில்ல. அடிக்கடி முகம் அலம்பிகிட்டு காலையும் சாயந்தரமும் ஸ்க்ரப் போட்டு கழுவிகிட்டா போதும். முகம் நல்லாயிருக் கும். மாசத்துக்கு ஒரு தடவை நாமே ப்ளீச் பண்ணிக்கலாம்.

அவள் பேச ஒரு பெரிய குழு உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கும்.

எல்லா ஒப்பனைகளும் கலைந்து போய் இப்போது கயிற்றில் தொங்குகிறது. கழுத்து இழுபட்டு அறுந்து விடுவேன் என்பது போல் கிடக்கிறது.

தீப்பிடிக்க தீப்பிடிக்க என்னைத் தொடுடா...

கதவு சார்த்திவிட்டு அவள் நடனமாடுவாள் என்று மற்ற பெண்கள் பையன்களிடம் சொல்ல, அந்தப் பையன்கள் ஆவலோடு அவள் நடனமாடுவதைப் பற்றி விவரிக்க இவன் கேட்டிருக்கிறான்.

இப்போது உண்மையிலேயே அந்த உடம்பு தீப்பிடிக்கப் போகிறது. சிதையில் அடுக்கிக் கொளுத்தப் போகிறார்கள்.

கல்யாணமாலை என்ற புத்தகத்தை வாங்கி வந்து அவர்கள் சமூகத்துப் பையன்களாக டிக் செய்து நான் இந்த டாக்டரைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன் என்று ஒரு போட்டோவைக் காட்டி அவனுக்குப் போன் செய்து, பேசி சிரித்து அதை இங்கு வந்து தோழிகளிடம் சொல்லி டாக்டர்... டாக்டர் ஊசி போடுங்க டாக்டர் என்று நடித்து அதை ஆபாசமாக. மாற்றி சிரித்தது நின்று போயிற்று.

கல்யாண மாலைக்குப் பதிலாக இந்த ஊரின் சாமந்தி மாலை விழப்போகிறது. வழியெல்லாம் மாலையைப் பிய்த்துப்பிய்த்து உதறி எடுத்துக் கொண்டு போகப் போகிறார்கள்.

இவளுக்கு இப்படி நேர்ந்தால் நடராஜன் என்ன ஆவான். நிச்சயமாக மறுபடியும் ஜாதிச்சண்டை வரும். அடிதடி ரகளை வரும்.

இங்கு இருப்பது நல்லதில்லையே, தடக்கென்று அவனுக்கு யோசனை வந்தது. எழுந்துநின்றான். உடம்பு சூடாயிற்று. அரசியல் நண்பனைக் கூப்பிடலாமா என்று நினைத்தான்.

அவன் வரப்போவதில்லை. அவனாலேயே பிரச்சினைகள் பெரிதாகவும் ஆகலாம். என்ன செய்வது. இந்த இடம்விட்டு நகர்ந்துவிடு என்று உள்ளுக்குள் கட்டளை வந்தது.

அவன் சட்டென்று நகர்ந்தான். அவன் தெரு திரும்பி பால் கடைக்குள் நுழைந்தான். மிக மோசமான ஒரு தாகம். எது குடித்தாலும் அடங்காத ஒரு தாகம் அவனில் இருந்தது. பால் கடையிலிருந்து தண்ணீர் குடித்தான். பிறகு, பாலுக்கு காசு கொடுத்தான். வந்தவுடன் குடிக்கத் துவங்க தெருவிலிருந்து ஆறேழு மோட்டார் சைக்கிளில் மும்மூன்று பேராக கையில் உருட்டு கட்டையுடன், அரிவாளுடன் கிளம்பிக் கொண்டிருப்பது தெரிந்தது. அந்தத் தெருப்பக்கம் உள்ளவர்கள் பதறினார்கள். சில கடைகள் வேகமாக மூடப்பட்டன.

"யோவ் குடிச்சிட்டுப் போயா. போன மாசமே அடிச்சு நாசம் பண்ணிட்டாங்க. இந்தத் தடவை தாங்க மாட்டேன் நான்."

கடைக்காரர் அவனை வெளியே தள்ள, "நான் பால் குடிக்கலைங்க"

"போ, குடிச்சுகிட்டே போ"

"டம்ளர் வேணாங்களா"

"எனக்கு ஒரு எழவும் வேணாம்" என்று சொல்ல, அவன் டம்ளரோடு மீதி பாலை கல்லாவில் வைத்துவிட்டுக் கீழே இறங்கினான்.

பால் அவமரியாதையான பால், அதைக் குடிக்கக்கூடாது என்று அவனுக்குத் தோன்றியது.

அந்த ஊரின் வெவ்வேறு பகுதியில் ரகளைகள் நடந்தன. அடிதடிகள் நடந்தன.

கண்மூடிக்கொள்ள, மறுபடி மறுபடி வேணியின் முகமே மனதில் வந்து நின்றது. தாயாலும், தந்தையாலும் பெற்ற அந்த உடற்கட்டு வனப்பை அவள் மேலும் மெருகுபடுத்திக் காட்டினாள்.

அவர்களை அயர வைப்பதையே குறிக்கோளாக வைத்துக் கொண்டாள்.

"இங்கிலீஷுகும் தெரியலை. தமிழும் புரியலை, கணக்கும் வராது. நீ எதுக்குடி படிக்க வந்த."

டீச்சர் மிக அலுப்போடு அவளைப் பார்த்துக் கேட்க, அவள் மௌனமாக நின்றாள்.

"சொல்லு, ஏன் படிக்க வந்த"

"சும்மாதான் டீச்சர்" என்று அவள் பதில் சொல்ல வகுப்பு பெரிய அலை சிதறியது போல சிரித்தது.

ஆசிரியைக்குச் சட்டென்று எதிரே பேசுகின்ற பெண்ணின் மனோநிலை புரிந்தது. பிறகு அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டு அப்போ சீக்கிரம் கல்யாணம் கட்டி குழந்தை குட்டின்னு பெத்து குடும்பத் தலைவி ஆயிடுவியா."

"ஆமா டீச்சர், அதைவிட வேற என்ன வேலை இருக்கு ஒரு பொம்பளை செய்யறதுக்கு" என்று சொல்ல, அதன் நியாயமும் ஆசிரியைக்குப் புரிந்தது.

"இதுக்கு எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் படிக்கணுமா"

"தேவையில்லைதான். வெறுமன வீட்ல இருந்தா தின்னு தின்னு குண்டாயிடுவேன். அப்புறம் கல்யாணமாகறது கஷ்டம். புள்ளப் பொறப்பும் கஷ்டம். இப்படியே பள்ளிக்கூடம்

போயிட்டு வந்தா ஸ்நேகிதிங்களோட நிறைய பேசலாம். மனசும் சந்தோஷமா இருக்கும். பொழுது போனப் போல வும் இருக்கும். இங்க கேம்ஸ் நல்லா சொல்லித் தாராங்க டீச்சர். அதுக்காகத்தான் வரேன்.''

அவள் நாறுமீட்டர் பந்தயத்தில் ஓடிவருவதும், வாலி பாலில் எகிறி அடிப்பதும், இறகுப் பந்து ஆடுகின்ற சூட்சம மும் கண்கொள்ளா காட்சிகள். பள்ளிக் குழுக்களிடையே போட்டி நடக்கிறபோது, அவள் ஆடுகிறாள் என்று தெரிந் தால் அடுத்த கிராமத்து பள்ளிக்கூடத்து பையன்களெல்லாம் வந்து நிற்பார்கள். பார்த்துவிட்டு சில சினிமா நடிகைகளின் பெயர் சொல்வார்கள்.

''இந்த மாதிரி பொண்ணு பள்ளிக்கூடத்துக்கு ஒன்னு இருக்கணும்டா.''

அவள் கடந்து போகும் போது இடைவிடாமல் அவளையே வெறித்துப் பார்ப்பார்கள்.

அவளுக்கு இந்தப் பார்வையும், பேச்சுக்களும் தெரிந்து தான் இருந்தன. அவள் இதை ரசித்தாள். பல சமயங்களில் வரவேற்றாள். வேண்டுமென்றே. பள்ளிக்கூட மாணவர் களுக்கு அருகேபோய் ''ஏங்க நான் நல்லா ஆடறேனா'' என்று கேட்பாள்.

''ரொம்ப நல்லா ஆடறீங்க''

பையன்கள் அவளுக்குப் பதில் சொல்லிவிட்டு மெல்லப் பின்னடைவார்கள்.

தொலைவே தனியாக ஒரு குழுவாக நின்று ஆட்டமா... ஆட்டமா அது. சாவடிக்கிறியேடி சண்டாளி என்று தங்களுக் குள் பொருமுவார்கள். பொருமிச் சிரிப்பார்கள்.

அந்த ஆட்டம் நின்று போயிற்று. கயிற்றில் தொங்குகிறது. யாரோ அந்த உடம்பைத் திருப்ப இவனை நோக்கித் திரும் பிய அந்த முகம் இன்னமும் மனசில் இருக்கிறது. இரண்டு

விழிகளும் பிதுங்கி வாயில் நாக்குத் துருத்தி வாய்ஓரம் ரத்தம் வழிந்து நெஞ்சு நனைந்து தரையெல்லாம் சிதறி, மூத்திர நாற்றத்தோடு தொங்குகிறது.

கடவுளே... கடவுளே... அவன் தவித்தான்.

ஏன் இந்த ஆட்டம் நின்றுபோயிற்று. என்ன பாபம் செய்தாள் இவள். கழுத்தை கயிறு இறுக்கும் போது வலியில் துடித்திருப்பாளே.

கல்யாணம் கட்டி குடித்தனம் பண்றதுக்குத் தான் பொறந்திருக்கேன் என்று சொன்ன பெண் கயிற்றில் தொங்கி விட்டாளே. எதற்கு இந்தப் பெண்ணைப் ஏமாற்றினார்கள். ஏன் துன்புறுத்தினார்கள். ஏன் மனம் நோக வைத்தார்கள். எதற்கு அலறடித்தார்கள். ஏன் தூக்கில் தொங்க வைத் தார்கள். போலீஸ் விரைந்து வந்தது.

பத்திரிகை போட்டோ கிராபர்கள் ஓடி வந்தார்கள். தெருவில் மிகப் பெரிய கும்பல் கூடியது.

அவன் எழுந்து அந்தத் தெருவை விட்டு வெளியே போனான். அங்கங்கே சிதறியிருந்த அவன் நண்பர்கள் ஒன்றானார்கள்.

''என்ன நடந்தது தெரியுமா உனக்கு''

ஒரு பையன் ஆவேசமாகக் கேட்டான்.

''தெரியலையே.''

அவன் உதடு பிதுக்கினான்.

''நான்தான் கல்யாணம் கட்டிக்கப் போறேனே வா அப்படீன்னு சினிமாக்குக் கூட்டிட்டு போயிருக்கான். மேல கை வச்சுருக்கான். சின்னதா சில்மிஷம் பண்ணியிருக்கான். அப்புறம் ப்ரெண்ட் வீடு இருக்கு வான்னு சொல்லி அங்க கூட்டிட்டுப் போயிருக்கான். அவங்க வீட்ல யாரும் இல்லை. நாமதான் கல்யாணம் பண்ணப் போறவங்

களாச்சே, கூட இரேன்னு சொல்லி இங்க தொட்டு அங்க தொட்டு இதை அவுத்து, அதை அவுத்து டீ வாங்கிக் கொடுத்து டீயில் தூக்க மாத்திரை போட்டு அவளைப் படுக்க வச்சு போட்டோ எடுத்துட்டான். அதைக் கொண்டுபோய் காட்டி, நான் எதுக்கு உன்னை கல்யாணம் பண்ணிக்கணும். நீ எவன்கூடயோ படுத்ததா சொல்லப் போறேன். அப்படின்னு சொல்லியிருக்கான். அவ அழுது கால்ல விழுந்து கெஞ்சிக் கூத்தாடி என்னென்னமோ பண்ணியிருக்கறா. ஒரு ஸ்டேஜ்ல பயந்துபோய் அவ வீட்ல சொல்லியிருக்கா. அவங்க வந்து சத்தம்போடச் சொல்ல போட்டோ காமிச்சிருக்கான். பயந்துபோயிட்டாங்க. அடிக்க வந்திருக்காங்க. லெட்டர் காமிச்சிருக்கான்.''

''லெட்டர்னா''

''ஜெராக்ஸ் எடுத்த லெட்டர் இவ கையெழுத்திலேயே வேற ஒரு பையனுக்கு எழுதியிருக்கான்.''

''அவ அப்படிப்பட்ட பொண்ணா இல்லையே.''

''எல்லாம் கிராஃபிக் வித்தை. எப்பவோ எழுதின லெட்டர்ல சில எழுத்துக்களை மாத்தி கையெழுத்து இவமாதிரி ஏதோ ஒன்னு போட்டு, வந்த ஜனத்துக்கு திசை புரியலை. கிராஃபிக் தெரியாது. இவளைப் போட்டு அடிச்சுருக்கு. எத்தினிபேருடி வேணும். எத்தினி பேர் வேணும்னு. தொங்கிட்டா.''

''ஏன்... ஏன் இந்த அநியாயம்.''

அவன் பதறினான்.

''ஒரு ஆசையில பழகிட்டோம். ஆனா, இவளை வச்சு குடித்தனம் பண்ண முடியுமான்னு தெரியலை. பயந்துட்டான். இவங்களை விட சொந்தக்காரங்களே பொண்ணு தரப்போது இவங்க என்னத்துக்குன்னு தோணிப்போச்சு,

எப்படியாவது கழட்டி விடணும். கெட்டப்பேரு உண்டாக்கிட்டான்.

''ஒன்னுமே பண்ண முடியாதா''

''ஒரு சாட்சி கிடைக்கலை ஸார், ஒன்னும் பண்ண முடியாது. இதைத்தவிர போலீஸ் அவங்க பக்கம்பா.''

''ஏன் அவங்கபக்கம். நடுநாயகமா இருக்கணுமில்லை.''

''இல்லை, போலீஸ் இன்ஸ்பெக்டர் அவங்க ஜாதி. விட்டுக் கொடுப்பானா.''

''இதுல ஜாதி எங்கேர்ந்து வந்ததுங்க.''

அவன் அடிக்குரலிலிருந்து கத்தினான்.

''உனக்கு உலகம் புரியலை தம்பி. நம்ம ஊர் ஜாதிக் கட்டுமானம் தான். இந்த ஊர்ல கொலை நடந்து போச்சுன்னா கொலை பண்ணவன் என்ன ஜாதி, கொலை யானவன் என்ன ஜாதி, அதை வச்சுகிட்டுதான் மேற் கொண்டு பேச்சு, கொலை பண்ணவன் என் ஜாதின்னா அவரு உத்தமரு. ஒரு ஈ, எறும்புக்குத் தொந்தரவு பண்ண மாட்டாரு. என்ன குத்தம் சொன்னாலும் காதுல போட்டுக்க மாட்டான்.

''சொந்த ஜாதிக்குள்ளேயே அடிதடி சண்டை நடந்துன்னா'' இன்னொருவன் கேள்வி கேட்டான்.

''அப்போ போலீஸ் போகமாட்டோம். பஞ்சாயத்துக்குப் போவோம் எங்க தலைக்கட்டு பெரியவங்களே இருக்கற இடத்துக்குப் போயிடுவோம். எதுனா சமாதானம் பேசி அனுப்பிடுவாங்க.

பச்சைக்கொலை, அரிவாளைத் தூக்கி வெட்டி வெட்டி கொன்னான். ரெண்டுபேரும் ஒரே ஜாதி ஆளு. நாங்க மாத்திட்டோமே. அரிவாளை கையில் வச்சுட்டிருந்தாரு. தள்ளுமுள்ளு நடந்தது. தெரியாத்தனமா தடுக்கி விழுந்

துட்டாரு. வெட்டு விழுந்து ரத்தப்போக்குல செத்துப் போயிட்டாரு. வெட்டனுங்கற எண்ணமேயில்லை. ஒரு வருஷத்துக்கு கடுங்காவல், ஆறுமாசம் பத்துநாள்ல வெளிய கொண்டு வந்துட்டாங்க.

வெளிய வந்தவனை அப்படியே கொண்டு போய் செத்த வன் வீட்ல நிக்கவச்சு அவனுக்கு சோறுபோடச் சொல்லி அவனை சாப்பிடவச்சு பாதி சாப்பாட்ல ஐயோ, அப்ப டின்னு அவனை நெஞ்சுல அடிச்சு அழவச்சு, யாரு வெட் டினானோ அவன் பொண்டாட்டி, செத்தவன் பொண் டாட்டிகிட்ட போய் எப்படி உனக்கு தாலி இல்லையோ அதே மாதிரி நானும் தாலி கட்டமாட்டேன். அவுத்துடு வேன்னு சொல்லி அவ முன்னாடி அவுத்துட்டா. இன்னிக்கு வரைக்கும் வெறும் சங்கிலியைத்தான் போட்டுகிட்டிருக் காங்க.

செத்தவன் வீட்டுக்கு சங்கம்உதவி செய்யுது. வெட்டின வனும் தன் சொத்துல ஒன்னுல மூணு பங்கு பிரிச்சு செத்தவன் புள்ளைக்கு எழுதிட்டான். இப்போ சண்டை தொடருமா. எங்கப்பனை வெட்டினியே உன்னை வெட்ட றேன்னு பையன் வருவானா. வரமாட்டான். நின்னு போச்சு. எப்பேர்ப்பட்ட கட்டுமானம் இருக்கறது நம்ம ஜாதி.

இந்தப் பொம்பளை சமாச்சாரத்துல விட்டுக் கொடுத்துடு வாங்களா? நாங்க பார்த்துக்கறோம் விட்ருங்கன்னு போலீஸாண்ட சொல்லுவாங்க. போலீஸ் விடாது. இழுக்கும் எம்.எல்.ஏ. விட்டு எம்.பி. கிட்ட சொல்லி, எம்.பி. மந்திரி கிட்ட சொல்லி, மந்திரி கலெக்டர்கிட்ட சொல்லி கலெக்டர் கமிஷனர்கிட்ட சொல்லி கைது பண்ண ஆளை மொள்ள வெளிய கொண்டு வந்து கறிசோறு போடுவாங்க.

ஏன் அப்படி பண்ணிட்ட அப்படின்னு எவன் தப்பு பண்ணானோ அவனைக் கன்னாபின்னான்னு கேட்பாங்க.

ஆத்தாளை, அப்பனை, உடன் பொறந்தவனை, மாமனை, மச்சானை எல்லாரையும் திட்டுவாங்க. எல்லாரும் மன்னிப்பு கேட்டாகணும் நாலுநாள் திட்டி தானாக ஓயும். இதுவொரு சைகாலஜி ட்ராமா வண்டை வண்டையா கேட்டுட்டோம் கறதுலயே பாதி கோவம் குறைஞ்சுடும். மீதி கோவத்தை துட்டால் அடிச்சுடும்.''

''உயிரோட இருக்கறவங்களைப் பத்திப் பேசலைடா. செத்துப்போன வேணியைப் பத்திப் பேசு. அவ எவ்ளோ துடிச்சுருப்பா.''

''முட்டா...''

''மிகக்கேவலமான ஒரு கெட்டவார்த்தையைச் சொன்னான்.''

''அது அறிவுகெட்ட முண்டம். என்ன நடந்து போச்சு. அவளைக் கட்டிக்கறதுக்கு ஆளா இல்லாத போயிட்டான். இந்தமாதிரி பொண்ணுங்கள வச்சுக்கறதுக்கு போட்டி போடுவாங்க தெரியுமா.''

ஒருவன் சொல்ல உள்ளுக்குள்ளே அவன் மனமுடைந்து கதறினான். ஒரு பெண் தான் உயிர்விட தயாரானாள் என்றால், எத்தனை வேதனைப்பட்டிருக்கும். அந்த வேதனை குறித்து இவர்கள் ஒரு வார்த்தை கூட சொல்ல மாட்டேன் என்கிறார்களே என்று மருகினான். மெல்ல அந்த கூட்டத்தை விட்டு நடந்தான். ஒரு கயிறு வாங்கி தன் கழுத்தில் சுருக்கிட்டுப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. எனவே, ஜுரம்போல ஒரு வேதனை படர்ந்தது. மண்டபத்தில் போய் சாய்ந்துகொண்டான்.

உயிரின் இழப்பு அவ்வளவு எளிதா? ஒரு மனதின் துடிப்பு அத்தனை எளிதா? இன்னொருவரை வேதனைப்படுத்தி விட்டு ஒன்றுமறியாதவன் போல் நிற்க முடியுமா? சிரிக்க முடியுமா? தொடர்ந்து வாழமுடியுமா? மற்றவரை அலற

வைத்துவிட்டு, கதறவைத்துவிட்டு சோறு பிசைந்து இன்னும் கொஞ்சம் கறிபோடு என்று கேட்டு, பல்லால் கடித்து இழுத்து சுவைத்து உண்ண முடியுமா? கெட்டவனுக்கு தண்டனையே இல்லையா? இறந்தவர் கோபப்பட்டு தண்டிக்க மாட்டாரா?

சட்டத்தை வளைத்து, தனக்கு சாதகமாக்கி தன்னுடைய கூட்டத்திமிரால், பண பலத்தால் ஜெயித்துவிட முடியுமா? இதுதான் வாழ்க்கையா? இப்படித்தான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறதா? சரி, சட்டத்தை ஏமாற்றிவிடலாம். மனிதர்களை முட்டாளாக்கி விடலாம். ஆனால் சம்மந்தப் பட்ட உயிர் உன்னை விட்டுவிடுமா? சம்மந்தப்பட்டவரின் வேதனை. வயிற்றெரிச்சல் பொங்கி எழுந்த அந்தக் கோபம் ஒரு சக்தி இல்லையா? அது தாக்காது போகுமா?

என்ன நடக்கிறது இந்த உலகத்தில். என்ன விதி இந்த உலகத்தில். பணபலமும் அதிகாரபலமும் தொடர்ந்து ஜெயிக்குமென்றால் நியாயம், தர்மம், சத்தியம், கடவுள், கோயில், யாகம், எல்லாம் பொய்யல்லவா. நாத்திகம் சரியல்லவா. கடவுள் இல்லையோ. வெறும் பயமுறுத்தலோ.

உண்மையில் கடவுள் இருக்கிறாரா. சகலமும் பார்த்துக் கொண்டிருக்கிறாரா. மேலே ஒருவன் இருக்கிறான் என்ற பாடல்களெல்லாம் வருகின்றனவே. மேலே யார் இருக் கிறார்கள்.

என்ன அருமையான பெண். எவ்வளவு குதூகலம். எவ்வளவு உரத்த குரல் எவ்வளவு ஆட்டம். அவளுடைய தவறு என்ன கட்டுமஸ்தாய் அழகாய் இருந்ததுதானே. பள்ளிக்கூடத்துக்கு கோப்பை வாங்கித் தரவேண்டுமென்று படபடத்ததுதானே. அழகான விஷயம் எதைப் பார்த்தாலும் பிடுங்கிவிட வேண்டுமா. அவன் செய்தது தவறே இல்லையா.

சுற்றி நாற்பதுபேர் நின்று அவனைத் திட்டிவிட்டு கதையை முடித்துவிடுவார்களா. அவன் தண்டிக்கப்பட்ட வேண்டாமா. அவள் தூக்கில் தொங்கியது போல் அந்த வேதனையைப்போல இவன் அனுபவிக்க வேண்டாமா.

மறுபடி கேள்வி வந்தது. கடவுள் இருக்கிறாரா இல்லையா. அது உண்மையா. பொய்யா?

தாத்தாவைக் கேட்கலாமா. தாத்தாவைக் கேட்டால் இருக்கிறார் என்று தான் பதில் சொல்வார். கடவுள் இருக் கிறாரா என்று? இன்னொருவரை ஏன் கேட்க வேண்டும். நான் கேட்கிறேன்.

கடவுள் இருக்கிறாரா?

இல்லை. இருந்தால் இந்த அநியாயம் நடந்திருக்காது. கடவுள் என்று ஒருவரும் இல்லை. இல்லவே இல்லை. அவன் திரும்பத் திரும்ப கேள்வி கேட்டான். மறுபடிமறுபடி இல்லை. இல்லை, இல்லவே இல்லை என்று தான் பதில் வந்தது.

அவன் சந்தோஷமானான். நிமிர்ந்து நின்றான். அவனிருந்த மண்டபத்தின் மறுபுறத்திலிருந்து ஒரு மனிதர் வெளிப்பட்டார். நீண்ட ஜிப்பாவும், பஞ்சகச்ச வேட்டியும், பச்சைத் தலைப்பாகையுமாய் இருந்தார். படியிறங்கினார். திரும்பி அவனைப் பார்த்தார். மண்டபத்திலிருந்த கடவுள் சிலையைப் பார்த்தார். கைகூப்பினார்.

"கடவுளே காப்பாத்து" என்று தமிழில் கொச்சையாய் கூவினார். இறங்கி நடந்தார்.

இவர் எதற்காக கூவுகிறார். கடவுளே காப்பாத்து என்று இத்தனை வயதான பிறகும் ஏன் கேட்கிறார். கடவுள் எதிரே இருப்பதுபோல இத்தனை வயசுக்குப்பிறகு ஏன் நம்புகிறார். இவர் ஆராயவே இல்லையா. கடவுளே காப்பாத்து... யாரைக் காப்பாற்ற வேண்டும். இவரையா... இவருக்கு

என்ன கேடு. எங்கேனும் பிச்சை எடுத்து சாப்பிடுகிறார். கோயிலில் மதிய உணவு சாப்பிடுகிறார். இவர் கடவுளே காப்பாற்று என்று எதற்காகக் கேட்கிறார். ஏன் கேட்கிறார். உள்ளே சிந்தனை ஓடிற்று.

திரும்பத் திரும்ப அவர் குரலே அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. அது கூர்மையான குரல். தெளிவான அழைப்பு. நிச்சயமான வேண்டுதல் என்பதுபோல் அழுத்தம் திருத்தமான த்வனி அதில் இருந்தது.

இல்லை என்பதை எப்படி அறிவது. இருக்கிறது என்று நம்பி செயல்பட்டு சரியாக வரவில்லையெனில் இல்லை என்று சொல்லலாம். நான் வெறுமே இல்லை என்று எப்படிச் சொல்கிறேன்.

முதலில் கடவுள் இருக்கிறார் என்று எனக்குச் சொல்லிக் கொடுத்த விஷயத்தை நம்புவோம். கடவுளே காப்பாற்று என்று இவர் சொன்னாரல்லவா. அதேபோல் நாமும் கடவுளே காப்பாற்று என்று கேட்போம். அப்பொழுது காப் பாற்றவில்லையெனில் கடவுள் இல்லையென்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்துவிடும். அதுதானே நியாயமான தேடல்.

அரசாங்க ஆஸ்பத்திரியிலிருந்து பிணத்தை வெளியே கொண்டு வந்து விட்டார்கள். முகத்தையும் மூடி இறுகத் தைத்து நீண்ட தலையணையாய் வேணியைக் கொண்டுவந்து கொடுக்க ஒரு ஓரமாய் நின்றிருந்த பெண்கள் கூட்டம் நெஞ்சில் அடித்துக்கொண்டு அழுதது.

ஆண்கள் கூட ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு கதறினார்கள். கூட்டத்தை வேடிக்கை பார்க்க வந்தவர் களுக்கும் கண்களில் நீர் வழிந்தது. அவன் வெறுத்துப்போய் அந்தத் துணிமூட்டையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"லவ் ஆல்"

வாலிபாலை மேலேதூக்கிப்போட்டு எகிறி அடிக்க, அவள் இளமை குலுங்குவதை எத்தனை பேர் ரசித்தார்கள். இப்போது அவள் வெறும் துணிமூட்டை, சவம், பிணம், பிரேதம்.

"உள்ள வச்சிக்கக்கூடாது. கழுவமுடியாது. என்னத்துக்கு இதை வீட்டுக்குள்ள எடுத்துட்டுப் போறீங்கன்னே எனக்குத் தெரியலை."

உறவுகள் உரக்கக் கத்தின. ஆனாலும், வீட்டுக்கு எடுத்துப் போய் கூடத்தில் கிடத்தி வாய்விட்டு அலறி பிறகு உடனடி யாக திண்ணையில் படுக்கவைத்து மூங்கில் ஏணியில் ஏற்றி இறுக்கக்கட்டி தூக்கினார்கள்.

ஒரு கோழியை உயிரோடு தலைகீழாகக் கட்டி முன் பக்கம் தொங்கவிட்டார்கள். தாரைதப்பட்டை முழங்க நிதானமாகப் போய், பிறகு வெகுவிரைவாக சுடுகாட்டிற்குப் போனார்கள். அவனும் தொடர்ந்து போனான்.

நான் கொள்ளி வைக்கமாட்டேன். நான் கொள்ளி வைக்கமாட்டேன். என்று கதறிய தகப்பனை இழுத்து வந்து அவர் கையில் தீப்பந்தம் கொடுத்து, பிறகு வாங்கி வேறொரு வர் தீ வைக்க தீ குபீரென்று பற்றி எரிந்தது. சீக்கிரம் சாம்பலாக வேண்டுமென்று கெரசின் ஊற்றியிருப்பார்கள் போலிருக்கு. வாசனை அதிகமாக இருந்தது. புகை எழுந்தது. கட்டையைப் பற்றிக் கொண்டு தகதகத்து எரிந்தது.

அவன் அந்தத் தழலையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஏன், வேணி சும்மாயிருக்க, நீ ஏன் சும்மாயிருக்க. ஏதாவது பண்ணு. நடராஜனை அழி."

அவன் ஆத்திரத்தோடு பல் கடித்தான்.

"போங்க" என்று எல்லோரையும் சுடுகாட்டைச் சேர்ந்த வர்கள் விலக்க அவன் மெல்ல வெளியேறினான்.

கோயிலுக்கு வெளியே இருந்த குளத்தில் கைகால் அலம்பிக் கொண்டான். வீடு ஒட்டிய சந்தில் நடந்துபோய் வீட்டுக் கொல்லைப்புறம் தட்டி அம்மா திறக்க துணிகளை அவிழ்த்துப் போட்டு கிணற்றடியில் உட்கார்ந்து கொண்டான்.

அம்மா தண்ணீர் இறைத்தபடியே அந்த நடராஜனைச் சபித்தாள். தண்ணீர்வாளி சிரமப் பட்டு மேலே வருவதும் ஒவ்வொரு இழுவைக்கும் அம்மா அவனை அழிந்து போகும்படி சபிப்பதும் அவனுள் ஒருகிளர்ச்சியை ஏற்படுத்தின.

என் தலையில் இப்பொழுது சில்லென்று தண்ணீர் விழப் போகிறது. என் தலையில் தண்ணீர் விழுவது போல அந்த நடராஜனை மரணம் தழுவட்டும். அவன்மீது மரணம் கவியட்டும்.

அவனை மரணம் விழுங்கி சாகடிக்கட்டும். இவளைக் காட்டிலும் வேதனையோடு அவன் மரணமடையட்டும் என்று உள்ளுக்குள் ஆத்திரத்தோடு பொங்கினான். அவன் தலையிர் தண்ணீர் ஊற்றப்பட்டது. குபீரென்று ஒரு சூடு வெளியே பறந்தது. நீர்திவலைகளுக்கு நடுவே நீலப் புடவையில் வேணி நின்று அவனைப் பார்த்துச் சிரிப்பது தெரிந்தது.

அவன் பயந்து தலை விலக்கினான். கொடியில் போட்டிருந்த அம்மாவின் புடவைதான் பெண்ணின் உருவமாகத் தெரிகிறது என்பது தெரிந்து போயிற்று. மறுபடியும் அம்மா சபித்துக்கொண்டே நீர் இறைத்தாள். மீண்டும் அவள் தண்ணீர் எடுத்துக் கொட்ட அவன் ஆவலோடு பார்க்க மறுபடியும் வேணி எதிரே நின்றாள்.

இது பிரமையா, நிஜமா.

அவன் யோசித்தான்.

''போறுமாடா'' அம்மா கேட்டாள்.

''இன்னும் ஒரு வாளி ஊத்திடு''

அம்மா தடேரென்று வாளியைத் தண்ணீருக்குள் இறக்கினாள்.

அவன் அசையாது காத்திருந்தான்.

''அந்த நாசமாப்போறவன் நல்லா இருக்கக்கூடாது.''

மறுபடியும் அம்மா வாளியை நீரோடு மேலே இழுத்தாள். ஒருகை மாற்றல்களுக்கும் அவனைச் சபித்தாள்.

இந்த முறையும், இந்தமுறையும் வேணி வருவாளா. இது பிரமையா. நிஜமா.

மறுபடியும் தலையில் தண்ணீர் கொட்டப் பட்டது.

அவன் விழிகளை விரித்து வேணியைத் தேடினான். வேணி மிக அருகே மிக அருகே அவன் எதிரே முகத்தை வைத்துக் கொண்டிருந்தாள். பறந்துபோய் அம்மா என்று கத்தினான்.

அவனுக்கு உடம்பு உதறிப்போட்டது. தண்ணீரை வழித்துப் பார்க்க அது வேணியில்லை. அம்மாவின் புடவையில் இருக்கிற பழுப்புநிற பூவும், வெள்ளைப்பாவாடையும் கலந்து ஒருபெண் சிரிப்பதாய் ஒரு தோற்றம் வந்து விட்டது.

''என்னடா... என்ன''

அம்மா அவன் தோளை இறுக்கப் பிடித்துக் கொண்டாள்.

அவன் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது.

''ஒ... ஒ... ஒண்ணுமில்லை'' என்று இழுத்தாற் போல தடுமாறிச் சொன்னான்.

''ஏன் இவ்ளோ பயப்படற'' என்று அம்மா கேட்க, அவன் கண்மூடி அமர்ந்திருந்தான். வேணியை நமஸ்கரித்தான். அவளையே நினைத்துக் கொண்டிருந்ததால் என் மனதில் ஏற்பட்ட நினைவுதான் இந்தத் தோற்றம்.

மனம் அவளைக் கொண்டு வந்து என் அருகே நிறுத்துகிறது. மனம் அவள் படத்தை மிக அருகே கொண்டுவந்து

காட்டுகிறது. மனம் விசித்திரமானது. மனம் எல்லாமும் செய்யும். மனம் படம்போடும். மனம் இறந்தவர்களைக் கொண்டு வந்து காட்டும், மனம் அவ்வித கற்பனை சக்தி உடையது. மனம் தன்னைச் சுற்றி ஒரு உலகத்தை ஸ்தாபித்துக் கொள்ளும். அது உறங்கும் போது கனவு என்றும் விழித்துக் கொண்டிருக்கும்போது கற்பனை என்றும் சொல்லப்படுகிறது.

மனம் ஏதோ ஒரு குறிப்பு காட்டுகிறதென்றால் இந்த மாதிரி நினைவில் தோன்றும் கற்பனையும் ஏதோ ஒரு குறிப்பு காட்டுகிறது. உண்மைதானே.

வேணி அருகே வந்து சிரித்துவிட்டுப் போயிருக்கிறாள் என்பது நிஜம் தானே.

'போதும், உளறாதே'

அவன் தன் மனதை அதட்டினான்.

ஆனால் எவ்வளவு தெளிவாக அந்த முகம் தெரிந்தது. எப்படி இப்படி ஒரு பயமும், நடுக்கமும் ஏற்பட்டது. எப்படித் தூக்கிவாரிப் போட்டது.

அம்மா தோளை அழுத்திப் பிடித்திருக்கா விட்டால் நான் தடுமாறி சாய்ந்திருப்பேன். அந்த நடுக்கம் அப்போது பொய்யா. நடுக்கத்திற்கான காரணம் பொய். இது இருட்டில் கயிற்றை பாம்பு என்று நினைத்துக் கொண்டிருந்த கற்பனை. வெளிச்சம் வரும்வரை கயிற்றை பாம்பென்று மனம் நிச்சயம் நம்புகிறது. அலறுகிறது. பயந்து பின்வாங்குகிறது. வெளிச்சம் வந்து கயிறுக்கு அருகேபோய் அது வெறும் கயிறு என்று தெரிந்த அடுத்த கணம் மனம் பாம்பை மறந்து விடுகிறது. கயிறா... பாம்பா...

கடவுள் உண்டா... இல்லையா... ஆவிகள் நிஜமா, பொய்யா? வெளிச்சம் வரும்வரை குழப்பம்தான். எது வெளிச்சம்.

அவன் தலை துவட்டிக் கொண்டான். வேறு வேட்டி உடுத்திக் கொண்டான். வேறு சட்டை போட்டுக் கொண்டான்.

"எது வெளிச்சம்."

மறுபடியும் கேட்டான்.

குருதான் வெளிச்சம்.

யார் குரு.

இதை எப்படித் தேடுவது என்று சொல்லித்தருபவர்தான் குரு.

குரு என்பவர் மனிதரா.

மனிதராகவும் இருக்கலாம். கழுதையாகவும் இருக்கலாம். வெட்டவெளியாகவும் இருக்கலாம். இருட்டைக் கிழித்து எறிபவர்தான் குரு. அறியாமை என்கிற இருட்டை விலக்குபவர்தான் குரு. அவர்தான் வெளிச்சம்.

அப்படியானால் ஒருவன் என்ன செய்ய வேண்டும்.

முதலில் குருவைத் தேட வேண்டும்.

யார் குரு.

தெரியாது.

எங்கிருக்கிறார் குரு.

தெரியாது.

எல்லாம் தெரியும் என்று அறியாமை இருட்டுக்குள் மூழ்கிக்கிடக்காமல் என்ன... எது.. யார்... எங்கே... எப்படி... என்று கேள்வி கேட்டுக் கொண்டிரு.

எவரால் இந்த விளக்கம் தரமுடியும் என்று கேள்வி கேட்டுக்கொண்டிரு.

யார் உனக்கு இதைக் கற்பிப்பார் என்று கேள்வி கேட்டுக் கொண்டிரு.

குருவை எங்கேபோய் தேட வேண்டும். குருவைத் தேடிக் கொண்டு எங்கேனும் போனால் கல்லூரிப்படிப்பு என்ன ஆவது.

அது இன்னொரு அறியாமை. படித்தால் தானே வேலை கிடைக்கும்.

ஆமாம். அது இன்னொரு அறியாமை. வேலை கிடைத்தால் தானே திருமணம் செய்து கொள்ள முடியும்.

ஆமாம். அது மிகப்பெரிய அறியாமை. குடும்பம் இருந்தால் தானே குழந்தைகள் பெற்று சௌகரியமாக சந்தோஷமாக வாழலாம்.

ஆமாம். இது அறியாமையின் உச்சகட்டம்.

ஏன் இவைகளை அறியாமை என்று சொல்கிறாய்?

கடவுள் என்பதை அறிய வேண்டும் எனில், அறியாமைகளிலிருந்து வெளியே வரவேண்டும்.

என்ன சொல்கிறாய். கல்லூரிப்படிப்பு வேண்டாமா?

அவன் மனம் மௌனமாக இருந்தது.

கல்யாணம் வேண்டாமா?

அவன் மனம் சுருங்கத் துவங்கியது.

திருமணம் சந்தோஷமில்லையா. பெண் சுகமில்லையா. கௌரவம் இல்லையா?

அவன் மனம் வாய்விட்டுச் சிரித்தது.

கடவுள் என்பதை அறிய வேண்டுமெனில், கடவுள் இருக்கிறாரா, இல்லையா என்பது தெரியவேண்டும்.

சும்மாயிரடா.. தெரிந்து கொண்டு என்ன செய்யப் போகிறாய். தெரிந்தவனும் செத்துப் போகிறான். தெரியாதவனும் செத்துப்போகிறான்.

ஆமாம். வேணி அவமானப்பட்டு சுருங்கி தவித்துச் செத்துப் போனாள்.

நடராஜன் இடைவிடாது பிராந்தி குடித்து பயத்தால் செத்துக் கொண்டிருக்கிறான். வேணியைப் பெற்றவர்கள் துக்கத்தால் செத்துக் கொண்டிருக்கிறார்கள். நடராஜனைப் பெற்றவர்கள் அவமானத்தால் செத்துக்கொண்டிருக்கிறார்கள். சில பேர் கோபத்தால் செத்துக் கொண்டிருக்கிறார்கள். சில பேர் வெறுப்பில் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மரணம் இயல்பு. மரணம் ஒரு மாற்றமென்று மரணத்தை வரவேற்று, நான் போய்வருகிறேன் என்று கைகூப்பிச் செத்துப் போவதல்லவா சந்தோஷம்.

இவ்விதம் சாக முடியுமா?

முடியும்.

தெளிவுள்ளவர் அப்படித்தான் இறப்பார். அந்த மாதிரி தெளிவுள்ளவர்களுக்கு ஞானி என்று பெயர். கடவுளைத் தேடி தெளிவானவருக்கு மரணம் பற்றிய தெளிவும் இருக்கும்.

சுவற்றில் சாய்ந்தபடி அவன் துவண்டு உட்கார்ந்திருந்தான். அறையிலிருந்து கதவு திறந்து தாத்தா அவனைப் பார்த்தார். அவனும் தாத்தாவைக் கவனித்தான்.

தாத்தா மெல்ல கதவு சார்த்திக் கொண்டார். கட்டில் ஓசையிட்டது. அவர் படுத்துக் கொள்கிறார் என்பதை அவனுக்குச் சொல்லியது. எழுந்து அவருக்கு அருகேபோய் அமர்ந்து கொண்டான். அவர் கால்களைத் தடவிவிட்டான். மெல்ல விரல்களைப் பிடித்துவிட்டான். உள்ளங்காலை அழுத்திவிட்டான். முழங்கால்களை இதமாகப் பிடித்து விட்டான். அவர் காலை வருடியபடியே அவர் அருகிலே உட்கார்ந்து கொண்டான்.

மனம் எந்தக் கேள்வியுமற்று. எந்தப் பேச்சுமற்று அமைதியாய் இருந்தது.

அவர் தலையணைக்குக் கீழிருந்து ஒரு காகிதத்தை நீட்டினார். காகிதத்தில் நீல நிறத்தில் ஏதோ அச்சடிக்கப் பட்டிருந்தது. அந்த ஊரிலுள்ள ஒரு சங்கம் தைப்பூசத்திற்கு அழைப்பு அனுப்பியிருந்தது. உதவி செய்யும்படி வேண்டு கோள் விட்டிருந்தது. அதன் ஆரம்பத்தில் ஒரு பாடல் இருந்தது.

''ஒருமையுடன் உனது திருவடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
மதி வேண்டும்
நின்கருணை நிதிவேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும்...''

என்று பாடல் தொடர்ந்தது.

நல்லவரின் உறவு வேண்டுமென்றால் கெட்டவரின் உறவு கலவாமை வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் நட்பு வேண்டாம். ஒருமையுடன் நினைக்கின்ற உத்தமர் வேண்டும்.

அந்த பாட்டு அவனை மென்று தின்றது.

உத்தமர் வேண்டும் என்றும், பொறாமை பிடித்தவர் வேண்டாமென்றும் சொல்லுகின்ற மதி வேண்டும். இது தான் மிக முக்கியம். அந்த மதி எப்படிக் கிடைக்கும். உத்தமரோடு மட்டுமே உறவு வேண்டும் என்ற மதி எப்பொழுது கிடைக்கும். நின் கருணை நிதி வேண்டும். அவனுடைய கருணை இல்லாமல் இந்தப் புத்தி கிடைக்காது. இந்தப் புத்தி

கிடைக்காமல், பொறாமை பிடித்தவரை விலக்க முடியாது. உத்தமரோடு சேரமுடியாது.

அதுவே தன்னைக் காட்டினாலொழிய, அதைப் புரிந்து கொள்ள முடியாது. அதை அறிந்துகொள்ள அதன் உதவி தேவை. நின் கருணை நிதி வேண்டும். இப்படித் தெரிந்து கொள்வதற்கு ஒரு நல்ல நிலைமை வேண்டும். என்ன நிலைமை. நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும். உடம்பும் நோயற்று, மனதிலும் நோயற்று மிகத் தெளிவாக இருக்க வேண்டும்.

வேணிக்கு நோய். அலட்டல்நோய், நடராஜனுக்கு நோய் அகங்கார நோய். கிராஃபிக் இளைஞர்களுக்கு நோய் பண நோய். வேர்க்கடலை, அரிசி, கமிஷன் பண்ணுகிறவர் களுக்கு குலம் என்கிற நோய் ஜாதி என்கிற நோய். தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்தில் திகழும் கந்தவேளே...

கண்மூடி அமர்ந்து கொண்டான்.

கண்முன்னே வேல் பளபளத்தது. மிகத் தெளிவாகத் தெரிந்தது. வேணியின் முகம் தெரிந்தது போல, மிக அகலமாக அரச இலைபோல கூர்மையாக வேல் தெரிந்தது. வேலை எடுத்து வீசினான். நடராஜன் மீது விழட்டும் என்று ஆத்திரப்பட்டான். பல் கடித்தான். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் என்று அவனைச் சபித்தான்.

எங்கே இருக்கிறான் அவன். எப்படி சந்தோஷமாக இருக்க முடியும். உதறி எழுந்து வேகமாக வெளியேறினான்.

எங்கே நடராஜன் இருப்பான் என்ற எண்ணத்தோடு அவன் வீடு நோக்கிப் போனான். நண்பர்கள் குழுவாக நின்றி ருந்தார்கள். அவன் போய் நின்று கொண்டதும், வந்துட் டாண்டா என்று சொன்னார்கள்.

''என்ன''

"நடராஜன் தண்ணிபோட்டு உளர்றாண்டா, உன் பேர் சொல்றான். மனோகரா... மனோகரான்னு சொல்றான். அவன் வீட்ல கேட்டாங்க. யாரு மனோகரன்னு. நான் சொன்னேன். அந்தப்புள்ள பேசவே பேசாதே. இவன் ஏன் அவன் பேரைக் கூப்பிடறான். அப்படின்னாங்க. நீ எதுனா சொன்னியா."

"இல்லை"

"நீ எதுனா பண்ணியா."

"இல்லை, நான் என்னடா பண்ணேன்."

அவன் பயந்துபோய் மனோகரா... மனோகரான்னு கத்தறத பார்த்தா அவன் உன் காலைப் பிடிச்சுக்கணும் மாதிரி கத்தறான். அவன் தூணைப் பிடிச்சுகிட்டு மனோகரான்னு கத்தறான். ஜன்னலைப் பிடிச்சுகிட்டு மனோகரான்னு கத்தறான்.

"எனக்கு ஒன்னும் புரியலைடா. வேறெந்த மனோகரனாவது இருக்குமோ"

அவன் அப்பாவியாய் கேட்டான்.

"இல்லை. அவன் பயந்து போய் கத்தறான்."

"என்னன்னு ஒரளவு எனக்குப் புரியுது"

ஒருபையன் பேசினான்.

"என்ன" மற்றவர்கள் அவனை ஆவலோடு திரும்பிப் பார்த்தார்கள்.

"நம்ம குரூப்லயே மனோகரன்தான் நல்லவன். ஒரு கெட்ட பழக்கமும் அவங்கிட்ட கிடையாது. எந்தவித தப்புத் தண்டாவுக்கும் போகமாட்டான். தப்புத் தண்டாவுக்குப் போன நடராஜனுக்கு மனோகரன் மாதிரி ஆகணும்னு ஆசை. இனிமே முடியுமா?

இப்போதான் அவன் கண்ணுக்கு மனோகரன் பளபளன்னு தெரியறான். அதனாலதான் மனோகரனைக் கூப்பிடறான். புத்தி தன் வசம் இல்லை. போதையில் ஆடுது. போதையில யோசனை பண்றபோது யார் நல்லவன்னு தேடி மனோகரனைப் பிடிச்சுகிட்டு மனோகரா... மனோகரா.. நான் உன்னை மாதிரி ஆவணும்டா மனோகரா. என்னைக் காப்பாத்துடா மனோகரான்றான். இப்போ அவனை நல்லவன்தான் காப்பாத்துவான். அவ்ளோ கெட்டவான இருக்கரோம்னு உறுத்தி ரொம்ப நல்லவனான மனோகரனைக் கூப்பிடுது. என்ன நான் சொல்றது சரியா."

நண்பர்கள் கைதட்டினார்கள். மனோகரன் அந்த இடம் விட்டு விலகினான்.

ஒருமையுடன் நினது திருவடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்.

மிகச்சத்தியமான மனதுதான் இப்படிக்கேட்கும். கடவுளை அறிய வேண்டும் என்ற உண்மையான தாபம் தான் இப்படிக் கேட்கும். அப்படிக் கிடைப்பதற்கு வேறொன்றை விலக்க வேண்டும் என்று ஆதங்கப்படும்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்.

ப்பா... இந்த உலகம் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவரால்தான் கவிழ்த்துப் போடப்படுகிறது. நல்லவர்களுக்கு மிகப் பெரிய சோதனை முன்னே ஒரு பேச்சும், பின்னை ஒரு பேச்சும் பேசுகின்ற சண்டாள அரக்கர்களால் தான் வருகிறது. கடவுளைத் தேட வேண்டும் எனில், இந்த சண்டாள அரக்கர்களோடு வெட்டிக் கொண்டு போக வேண்டும். எல்லாம் தனக்குத் தெரியும் என்று இறுமாப்பாய் அலைபவர்களிடமிருந்து நகரவேண்டும்.

நடராஜன் இறுமாப்பு மிக்கவன். திமிர் பிடித்தவன். கேவலமானவன்.

உள்ளே குமுறிற்று.

"நடராஜன் என்னங்க பண்றான்"

"ராத்திரி முழுக்க தண்ணிபோட்டு ஒரே அலம்பல். அம்மாவை அடிச்சு. தங்கச்சிய அடிச்சு. கண்ணாடி ஒடச்சு, கண்ணாடி பீஸை எடுத்து கையைக் கிழிச்சுகிட்டான் மூஞ்சிய கிழிச்சுகிட்டான். ரகசியமா டாக்டரைக் கூட்டிட்டு வந்து வைத்தியம் பண்றோம். டாக்டர் ஊசி போடறாரு. எற்கெனவே தண்ணி, தூங்கறதுக்கு வேற ஊசி போட்டிருக்காரு. திரும்பியும் தண்ணி கொடுன்றான். டாக்டர் வேணாங்கறாரு. கொடுக்கலைன்னா ரகளை. ரூம்ல கட்டிப் போட்டு சாத்தியிருக்காங்க.

கொன்னது தப்புதானே அது குத்துது. குடையுது என்ன துட்டை வச்சு அழுதிட்டாலும், என்னதான் சமாதானம் பேசிமடக்கிட்டாலும் பண்ண பாவம் போகுமா? துரத்தி கிட்டு வருமே. என்ன பண்ணுவான். பாவம் பண்ணாத நல்லவன் கால்ல போய் விழுவான்.

உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசுபவர்கள் ஒருநாள் இல்லையெனிலும் ஒருநாள் ஒருமையுடன் நினது திருவடி நினைக்கின்ற உத்தமரைத் தேடி வரத்தான் செய்வார்கள்.

நான் உத்தமனா?

மனோகரன் தன்னை உற்றுப்பார்த்துக் கொண்டான்.

என்ன தவறு செய்திருக்கிறோம் என்று யோசித்தான்.

தாத்தா காப்பாற்றியிருக்கிறார். தாத்தா கைதூக்கி விட்டிருக்கிறார். தாத்தா கட்டிப்போட்டு வைத்திருக்கிறார். தாத்தா விவரம் சொல்லி அடக்கி வைத்திருக்கிறார். இது தாத்தா கொடுத்தா தனம்.

ஒவ்வொரு விஷயத்தையும் அவர் பார்க்கச் சொல்லிக் கொடுத்தார். எப்படிப் பார்க்க வேண்டும் என்பதை அவர் தெளிவுபடுத்தினார். கோபத்தை, சண்டையை, ஆத்திரத்தை, காமத்தை, காதலை, பாசத்தை எப்படிப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொடுத்திருக்கிறார். மலைக்கு வா. மலைக்கு வா. மலையிலிருந்து பார் என்று பார்வையைத் திசைமாற்றி விட்டிருக்கிறார். அதனால்தான் மற்றவர் கண்ணுக்கு நல்லவராகத் தெரிகிறோம்.

எங்கேனும் நல்லது கெட்டதோடு சண்டை நடக்கும் போது தாத்தாவிடம் சொல்லி அழுதிருக்கிறான். கலங்கு கிறதே.. கலங்குகிறதே.. என்று தவித்திருக்கிறான்.

கலங்கியதே தெளியும். குழம்பியதே சரியாகும். அர்ஜுனனுக்கு எவ்வளவு பெரிய குழப்பம் வந்தது. போரில் ஈடுபடும் முன்னே எத்தனை பயம் வந்தது. எனக்கு எதுவும் வேண்டாம். அநியாயம் ஜெயிக்கட்டும், அரக்கத்தனம் வளரட்டும். என்னை விட்டுவிடுங்கள் என்று எப்படி உதறினான். ஏதோ ஒரு அரக்கனைக் கொல்ல என் குருவை, என் மாமனை, தாத்தாவை நான் கொல்ல வேண்டுமா என்று அலறினான். எவ்வளவு பெரிய கலக்கம் இது.

கலக்கம்தான் யோகம். விஷாதயோகம். கலங்கியதுதான் தெளியும்.

நான் ஏன் நடராஜனைத் தேடித்தேடி ஓடுகிறேன் என்று தெரியவில்லை. எனக்கு ஆத்திரமா, அன்பா அவனால் எப்படி இதைச் செய்ய முடிந்தது. செய்து முடித்துவிட்டு அமைதியாக இருக்க முடிகிறது என்கிற ஆவலா அல்லது உண்மை என்ன? எது என் மனது. என்ன தேடுகிறேன் நான்.

நடராஜன் வீட்டு வாசலில் உள்ள மோட்டார் சைக்கிளில் பிருஷ்டத்தை வைத்து கொஞ்சம் கோணலாக நின்றபடி யோசித்தபோது மோட்டார் சைக்கிள் நெளிவது போல் இருந்தது. சரிவது போல இருந்தது.

சட்டென்று வந்து மோட்டார் சைக்கிளைத் தாங்கிப் பிடித்த போது பின்பக்கமிருந்த டப்பாவின் மூடி தடக் கென்று திறந்து கொண்டது. இந்த அசைவுக்கு ஏன் டப்பா திறந்து கொள்கிறது. இதற்கு பூட்டுப்பிடிமானம் சரியாக இல்லையோ மறுபடியும் அழுத்திமூட டப்பா இப்போது வேகமாக வாய் திறந்துகொண்டது. உள்ளுக்குள் சில காகிதங்கள் இருந்தன.

இப்போதைக்கு இவன் எடுக்கப்போறது கிடையாது. உள்ளுக்குள் இருக்கிற காகிதத்தை இங்கேயே வச்சாக்க, என்ன பேப்பரோ அது தெரியலையே.

அவன் கைவிட்டு அந்தக் காகிதங்களை எடுத்தான். அந்தக் காகிதங்கள் முழுக்க வேணி, வேணி. உங்கள் அன்புள்ள வேணி என்று கையெழுத்துப் போட அவன் பழகியிருப்பது தெரிந்தது. இன்னும் திறந்து உள்ளே பார்க்க உள்ளே ஒரு புகைப்படம் இருந்தது. புகைப் படத்தில் வேணி சிரித்துக் கொண்டிருந்தாள். புகைப்படத்தின் பின்னே உங்கள் அன்புள்ள வேணி என்று கையெழுத்திட்டிருந்தது.

அவளிடம் புகைப்படம் வாங்கி, கையெழுத்தை வாங்கி அந்தக் கையெழுத்தைத்தான் இவன் தானே போட முயற்சித் திருக்கிறான் என்பது தெரியவந்தது. என்ன அயோக்கியத் தனம் இது என்று ஒரு சீற்றம் பொங்கியது.

மறுபடியும் கண்முன் வேல் தோன்றியது. அவன் பல் கடித்தான். சட்டென்று வேல் காணாமல் போனது.

நீ பிரயோகம் செய்ய வேண்டாம். நானாகப் போய் குத்திக் கொன்றுவிட்டு வருகிறேன் என்ற எண்ணம் வந்தது.

என்ன இது கற்பனையா நிஜமா?

அவன் தவித்தான்.

சட்டென்று ஒரு பெருங்குரல் எழுந்தது. அது நடராஜ னுடைய குரலாக இருந்தது. நடராஜன் குடிப்பதற்கு மது

வேண்டுமென்று உரத்தகுரலில் பெற்றவர்களோடு சண்டை போட்டுக் கொண்டிருக்கிறான். யாரையோ அடித்து, யாரோ பெண்குரல் அழுவது தெரிந்தது. திடீரென்று நடராஜன் மேல் மாடியில் தோன்றினான். குனிந்து பார்த்தான்.

மனோகரா.. மனோகரா.. என்று இவனைப் பார்த்துக் கத்தினான். இவன் விலகிநிற்க அவன் வீட்டிலிருந்த ஜனங்கள் வெளியில் வந்து "நீங்க... போயிடுங்க, நீங்க போயிடுங்க. அவன் உங்களைத்தான் தேடறான். நீங்க போயிடுங்க" என்று சொல்ல மனோகரன் வேகமாக நடக்க, மேல்மாடியின் முனைக்கு வந்து நின்று உரத்த குரலில் மனோகரனை நோக்கி மனோகரா.. மனோகரா.. என்று நடராஜன் கத்தினான்.

டேய்.. எதுனா வாங்கிட்டு வாடா என்று மொட்டை மாடி சுவர் விளிம்பில் ஏறி நின்றான்.

டேய்.. டேய் என்று இரண்டு கைகளையும் விரித்து நின்றான். கீழே உள்ளவர்கள். நடந்து போனவர்கள் திகைத்து அவனைப் பார்த்தார்கள். அவனுக்கு நேர்கீழே இருந்தவர் பயந்து போய் விலகி கொண்டார். அவர்பயம் நிதர்சனமாயிற்று.

மாடியிலிருந்து தரையில் நடப்பதுபோல் கால்தாவி மனோகரனை நோக்கி இரண்டு எட்டு எடுத்துவைக்க, அவன் நெட்டுக்குத்தலாக தரைக்கு வந்து விழுந்தான். அடி பட்டான். ரத்தம் நாலடி தொலைவிற்குச் சிதறியது.

அவன் விழுந்த அதிர்ச்சி தாங்காமல் மோட்டார் சைக்கிள் தடேரென்று விழுந்தது. அவன் வீட்டி லிருந்த ஜனங்கள் ஓடிவந்து அவனை வாரி எடுத்துக் கொண்டார்கள். தூக்கும்போதே தலை தொங்கிவிட்டது. கழுத்து ஒடிந்து விட்டது என்று தெரிந்துவிட்டது.

திகைப்போடு ஒரு வீட்டின் சுவற்றில் சாய்ந்தபடி மனோகரன் இருந்தான்.

ஐயோ... ஐயோ... என்று அந்த வீட்டுப் பெண்மணிகள் தலையில் அடித்துக் கொண்டார்கள். ஒரு ஆண் தவறு செய்கிறபோது, பெண்கள் தான் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அவன் கண்முன்னே பார்த்தான். நண்பர்கள் இருக்கும் இடம் நோக்கி வேகமாக நடந்தான்.

''என்னடா'' அவன் வருவதைப் பார்த்து வியந்தார்கள்.

அவன் என்ன சொல்வது என்று தெரியாது இருந்தான்.

''உனக்கு ஒரு நியூஸ் தெரியுமா'' அந்த நண்பர்கள் சொன்னார்கள்.

''நம்ம கிராஃபிக் கணேசன் இல்ல. அவன் செல்போனை ப்ளக்லேர்ந்து எடுக்காதயே காதுல வச்சான். பளார்னு வெடிச்சிடுச்சு. தான் பெரிய இன்ஜினீயர்னு அவனுக்கு நினைப்பு. சும்மா செல்போனைக் கழட்டி நோண்டி ரிப்பேர் பண்ணிகிட்டிருந்தான். உள்ள என்னத்த தப்பா தொட்டானோ, என்ன ஷார்ட் சர்க்யூட் ஆச்சோ. காது கிழிஞ்சு, கண்ணுல அடிபட்டு மூஞ்சியெல்லாம் ரத்தம். நாங்க இப்போதான் ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வரோம். உயிருக்கு ஒன்னுமில்லை. ஆனா காதுபோச்சு, இந்த செல்போனெல்லாம் வாங்கவே கூடாதுன்னு இதுக்குத்தான் சொல்றது.''

அவர்களைப் பார்த்து நிதானமான குரலில் நடராஜனுக்கு நடந்ததைச் சொல்ல, அவன் மேற்கொண்ட விவரத்திற்கு காரணமில்லாமல், தேவையில்லாமல் அவர்கள் மருத்துவமனை நோக்கி ஓடினார்கள்.

அவன் வீடு நோக்கி ஓடினான். திண்ணையில் உட்கார்ந்து கொண்டான். சுருண்டு படுத்தான். எழுந்து உட்கார்ந்தான். முன்னும் பின்னும் அலைந்தான். கிணற்றடிக்குப் போய் கைகால் கழுவிக் கொண்டான். மறுபடியும் பின்பக்கமாக வெளியேறி வீட்டு வாசலுக்கு வந்தான்.

கதவைத் தட்டினான். தாத்தா திறந்து விட்டார். எதிர்த்திண்ணையில் உட்கார்ந்து கொண்டார்.

தாத்தாவிற்கு எதிரே அவனும் உட்கார்ந்து கொண்டான். தாத்தா அவனை ஏறெடுத்துப் பார்க்காமல் தரையை வெறித்துக் கொண்டிருந்தார்.

''ஏதோ பண்ணு, என்னமோ செய். நீயாதான் உருப்படணும். நான் ஒன்னும் பண்ணமுடியாது'' என்று அறுத்து போல் உட்கார்ந்திருந்தார்.

''எம்.எல்.ஏ. வீட்ல ரைய்டுப்பா. உள்ளுக்குள்ள இன்கம் டாக்ஸ் ஆளுங்க புகுந்துட்டாங்க. இத்தினி பேருக்கு சோறு போட்டியே, இது எப்படி அப்படின்னு கேட்கறாங்க. சாப்டது நாலாயிரம் பேர்தான். பத்தாயிரம் பேருன்னு பேப்பர்ல இவரா பீத்திகிட்டு கொடுத்தாரு. வந்துட்டான்.

இந்த வீடு, கிராமத்து வீடு, கடை, கொடவுன் எல்லாம் பிடிச்சிட்டானுங்க. நம்ம நண்பர் இல்ல காண்ட்ராக்டர், அவன் எழுதிப்போட்டான். எம்.எல்.ஏ.கிட்ட துட்டு கொடுங்க கொடுங்கன்னு கேட்டானாம். போடா மயிருன்னு சொல்லிட்டாராம். அந்தக் கோபம் விதம் விதமா மாட்டாவச்சிட்டான்.

தாத்தாவிடம் வந்து ஒரு மத்திமவயது ஆள் சொல்ல, அவர்கள் இரண்டு பேரும் தலையாட்டிக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''கடவுள் தேடணும்னா என்ன பண்ணணும்''

நிதானமாக தாத்தாவைப் பார்த்து பேரன் கேட்டான்.

''தனியா இருக்கணும்''

''தாத்தா பதில் சொன்னார்.''

"தனியா இருக்கணும்னா என்ன பண்ணணும்."

மறுபடியும் பேரன் கேட்டான்.

"எங்க சேர்ந்து சார்ந்து இருக்கமோ அதை அறுக்கணும்."

"யார் சோறு போடுவா"

"கடவுள் நாம தேடிகிட்டு போற கடவுள் சோறு போடுவாரு."

"அப்படிச் சோறு போடலைன்னா"

"திரும்ப வீட்டுக்கு வந்துடு."

"வீட்டுக்கு வந்துட்டு..."

"கடவுள் இல்லைன்னு சொல்லிகிட்டு திரி"

"என்ன அர்த்தம்"

"கடவுள் உன் கண்ணுக்கு ஆப்டலை. உன்னை அவர் பார்க்க விரும்பலைன்னு அர்த்தம்."

"கடவுள் இருக்காரா. இல்லையா."

"தேடு"

"தேடறதுக்கு என்ன வழி"

"தனியா இரு"

"தனியா இருக்கறதுன்னா"

"சேர்ந்து இருக்கறத, சார்ந்து இருக்கறதை அறுத்துடு."

சட்டென்று உதறி எழுந்து நின்றான்.

தாத்தா அவனை உற்றுப் பார்த்தார். அவன் அவரை நோக்கிக் கைகூப்பினான். தாத்தா சிரித்தார். அவனை நோக்கி எழுந்து நின்று அவரும் கைகூப்பினார்.

அவன் இறங்கி கதவு திறந்து வெளியே நடந்தான். அவன் போனபிறகு கதவுகள் திறந்தேயிருந்தன. அவன் மலை நோக்கி நடந்தான்.

அவன் நடப்பதை வெளியே வந்து தாத்தா பார்த்தார். திரும்பி உள்ளே நுழைந்து கதவைத் தாழ்ப்போட்டார்.

அவன் மலைமீது ஏறி நின்று அந்த ஊரைப்பார்த்தான். அந்த ஊர் முன்னும் பின்னும் அலைந்து கொண்டிருந்தது. சின்னச் சின்ன உருவங்களாக மனிதர்கள் நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

வண்டிகள் நகர்ந்து கொண்டிருந்தன. அவன் சிறிது நேரம் ஊரைப்பார்த்துவிட்டு மலையின் மறுபக்கமாக இறங்கி அவன் நடக்கத் துவங்கினான்.

அவன் நடந்த திசையில் சென்னை இருந்தது. அது தருமமிகு சென்னை. தருமமிகு சென்னை கந்தகோட்டத்தில் உறையும் கந்தவேளே.

அவன் உள்ளுக்குள் பாடினான்.

"ஒருமையுடன் உனது திருவடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
மதி வேண்டும்
நின்கருணை நிதிவேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும்...
தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள்..."

அவனால்பாட முடியவில்லை. கைகூப்பினான்.

கைகூப்பியபடியே சென்னையை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

அவன் அடுத்த இலக்கு சென்னை.

கடைசி இலக்கு கடவுள்.

அவன் பார்வை பக்குவப்பட்டு விட்டது. அவன் கண்களுக்குச் சரியான இலக்கு தெரிந்துவிட்டது. இலக்கை தாத்தா காட்டிக் கொடுத்துவிட்டார். துணையாகவும் வருகிறார். விழிக்குத்துணை. விழித்துணை.

அவன் பயணப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டான்.

❖ ❖ ❖